
www.padippakam.com

# காலச்சுவடு

நவம்பர் 2004 மாத இதழ் ரூ.15 இதழ் 59



ழாக் தெரிதா
அஞ்சலி



ஒருத்தி
திரைப்பட விமர்சனம்



தேவதச்சன்
கவிதைகள்

## சிறப்புப் பகுதி:
# தொல்லியல்



நேர்காணல்
கல்வெட்டியல் அறிஞர் எ. சுப்பராயலு

படிப்பகம்

www.padippakam.com

# இந்தியாவின் இணையற்ற சீட்டு நிதிச் சிகரம் ஸ்ரீராம் சிட்ஸ்

3000 ஆண்டுகளுக்கு முன்னரே, இந்திய மக்களின் அனுபவ அறிவில் உதயமானது சீட்டு சேமிப்பு திட்டம். சமுதாய மக்கள் ஒருங்கிணைந்து, சிறுகச் சிறுகச் சேமிக்கவும், தேவைப் படும்போது அச்சேமிப்பில் இருந்தே கடன் பெறவும் உதவி செய்வதே சீட்டுச் சேமிப்பு திட்டத்தின் சிறப்பு அம்சம்.

### இருவழிப் பயன்:

குடும்ப வளமைக்காகத் தொடர்ந்து சேமிக்கவும், அவசரத் தேவைகளையும், திட்டமிட்ட செலவுகளையும் எதிர் கொள்ளவும் உதவும் இருவழிச் சாதனம் சீட்டு சேமிப்பு திட்டம்.

### வளரும் வளமை:

சீட்டு சேமிப்பு திட்டத்தில், சேமிக்கும் தொகை, சேமிக்கும் காலம், கடன் பெறும் தொகை, வட்டி விகிதம், யாவும் உறுப்பினர்களாலேயே தீர்மானிக்கப் படுகிறது. மேலும், மாதந்தோறும் வருவாய் உயரும் வாய்ப்பு, உறுப்பினர் அனைவரும் சமமாக லாபம் பெறும் வாய்ப்பு ஆகியவை இதன் தனிச்சிறப்பு அம்சங்கள்.

இந்தியாவின் நெ.1 சீட்டு நிறுவனம்
1
ஸ்ரீராம் சிட்ஸ்

### உயரும் வருவாய்:

வங்கிச் சேமிப்பு, அஞ்சலகச் சேமிப்பு, சிறுசேமிப்பு, ஆகிய முதலீடுகள் மீதான வருவாய் சரிந்து விட்டது. ஆனால் சீட்டுத் திட்டங்களில் ஏல உச்ச வரம்பு 40%ஆக உயர்த்தப் பட்டுள்ளதால், உறுப்பினர்களின் கசறுத்தொகை (Dividend) கணிசமாக உயரும். ஏலத்தில் போட்டியின் கடுமை குறைந்து, உடனடியாக ஏலம் எடுக்கும் வாய்ப்பு உயர்ந்துள்ளது.

### நிகரற்ற ஸ்ரீராம் சிட்ஸ்

ஸ்ரீராம் சிட்ஸ் 29 ஆண்டுகளுக்கு மேலாக பல லட்சம் குடும்பங்களின் வளமைக்கு வழிகாட்டி வருகிறது. நேரடியாகவும், மறைமுகமாகவும் பலருக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளது. சீட்டுத் தொகையாக ரூ.10,500 கோடிக்கு மேல் பட்டுவாடா செய்துள்ளது.

உங்கள் அருகிலுள்ள ஸ்ரீராம் சிட்ஸ் கிளைக்கு இன்றே வாருங்கள். நலமும் வளமும் வளரத் தேவையான திட்டங்களில் சேர்ந்து சீரும் சிறப்புமாய் வாழுங்கள்.

**ஸ்ரீராம் சிட்ஸ்**
தமிழ்நாடு (பி) லிமிடெட்

சுப்ரமணியன் பில்டிங், 1, கிளப் ஹவுஸ் ரோடு, சென்னை 600 002.
போன்: 52011833. www.shriramchits.com

WORDCRAFTS

படிப்பகம்

www.padippakam.com

# காலச்சுவடு




12 நேர்காணல்
சுப்பராயலு




28 அகழாய்வு
ஆதிச்சநல்லூர்



33 ரவிக்குமார்
அருகன் குப்பம்
பிரம்ம ரிஷி



36 பல்லவர் காலக் காசுகள்



53 கவிதைகள்
தேவதச்சன்



40 சிறுகதை
பெருமாள்முருகன்



71 ஆளுமை
லால்குடி – 75



7 ஒருத்தி
திரைப்பட விமர்சனம்



62 அஞ்சலி
ழாக் தெரிதா



64 அஞ்சலி
முல்க் ராஜ் ஆனந்த்

கடிதங்கள் தலையங்கம் பத்திகள்
பதிவுகள் விவாதம் மதிப்புரைகள்


நவம்பர் 2004 இதழ் 59

படிப்பகம்

www.padippakam.com



பல்கலைக்கழகங்கள் வழங்கும் கௌரவ பட்டம் குறித்து வே. முத்துக்குமார் 'திறந்தவெளி'யில் எழுதியிருந்தது சரியே. பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற மாணவர்கள் வரிசையில் நிற்கும்போது அதிகாரத்தில் இருப்பவர்களுக்குக் குறிப்பாக முதல்வருக்கு 'பட்டம்' தரப் பல்கலைக்கழகங்கள் வரிசையாய் நிற்பது கேவலம். பட்டம், பல்கலைக்கழகம் இரண்டுமே மதிப்பிழந்துவிட்டன.

'இன்றைய தலித் எழுத்தாளர்கள் தலித் மக்களுடைய வாழ்க்கையின் ஒரு முகத்தை மட்டுமே பதிவு செய்கிறார்கள்' என 'இமையம்' எழுதியுள்ளது ஏற்புடையது அல்ல. அவரவர் சார்ந்த அனுபவங்களை எழுதியே வருகிறார்கள். அதில் பலவிதப் பிரச்சினைகள் இருக்கவே செய்கின்றன.

சோரகவி மரபு – 3இல் பெருமாள் முருகன் 'யார் இந்தத் துரை. தண்டபாணி' என 'ஓர் இலக்கியக் கள்வரை' அடையாளம் காட்டியுள்ளார். இனி அந்தத் துரை. தண்டபாணி தன்னை யாரென அடையாளம் காட்டிக்கொள்வாரா?

பொன். குமார்
சேலம் 636 006

'ஒடுக்கு முறையின் அவதாரங்கள்' என்ற தலையங்கம் வாசகரை சிந்திக்கத் தூண்டும் சிறந்தொரு தலையங்கமாகும். வெளிப்படையான விவாதங்களும் திறந்த மனதுடன் கூடிய பரிசீலனைகளுமே இன்றைய முக்கியத் தேவை. அதை மேற்கொள்ளாமல் எடுக்கப்படும் அவசரமான இந்த ரத்து நடவடிக்கை ஒரு நீண்டகாலத் தீர்வாக இருக்காது என்ற கருத்து ஏற்றுக்கொள்ளக்கூடியதே.

இரா. நந்தகுமார்
நாமக்கல் மாவட்டம் 637 013

ஒடுக்குமுறைச் சட்டங்கள் இன்று நேற்றல்ல. கடந்த 50 ஆண்டுகளாகப் பல வடிவங்களில் அமுலில் உள்ளன. இச்சட்டங்களைக் கொண்டுவந்து அமல்படுத்தியதில் பா.ஜ. கவிலிருந்து மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிவரை அனைவரின் பங்கும் உண்டு. ஆகவே மைய அரசின் பொடோ சட்ட ரத்து வெறும் கண்துடைப்பே. அதற்குப் பதிலாக அரசு கொண்டுவரவிருக்கும் சட்டம் போலீஸிற்கு அதிக அதிகாரங்கள் கொடுத்துள்ளன.

இமையத்தின் "நானும் என் எழுத்தும்" என்ற கட்டுரை அவரது அறிவு முதிர்ச்சியையும், லிபரல் எண்ணங்களையும் கோடிட்டுக் காட்டுகின்றன. சிங்கப்பூரில் காலச்சுவடு பற்றிய விவாதம் இலங்கை, ஒலிம்பிக் பற்றிய கட்டுரைகள் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியவை.

கே. எஸ். சுந்தரம்
பெங்களூர் 560060

ஓர் எழுத்தாளன் வாழுங்காலத்திலேயே அவனது பால்ய காலச் சூழலைப் பதிவுசெய்யும் காலச்சுவடின் பணி பாராட்டக்கூடியது. இமையம் அவர்கள் தன் ஊரினைக் குறிப்பிட்டாரே ஒழிய அது எந்த மாவட்டத்தில் உள்ளது எனக் குறிப்பிடவில்லை.

நாஞ்சில் நாடனின் சலனங்கள் உண்மையில் இன்று எங்கும் காணக்கூடிய அவலமே எங்கும் மிஞ்சியிருக்கிறது. அன்றைய படித்த சமூகம் இன்று வளர்ச்சி பெற்றுள்ளவர்களுக்காகச் சிந்தித்தது. ஆனால் அவ்வாறு வளர்ச்சி பெற்ற சமூகம், அதுபோல எதிர்காலச் சமூகத்திற் காகச் சிந்திக்கிறதா? எல்லாம் நமக்கென்ன என ஒதுங்கிக்கொள்ளும் மனப்பாங்கிலே உள்ளன. எப்போது மாற்றம் வரும்?

புயல் ஒலி
அரூர் 635 305

கண்டுபிடிப்புகளும் அவற்றின் மூலங்களும் அருமையான அங்கதம். 'ஒவ்வொன்றாய்க் கண்டு பிடித்துவிடுவார்கள் – பாலங்கள் தகர்கிறபோது' அரசின் வருமுன் காக்கும் திறனுக்குக் கிடைத்திருக்கும் நற்சான்று. பாவம் மக்கள்!

செ. சத்தியசீலன் M. A., M.Ed.
திருநெல்வேலி மாவட்டம் 627 117

'விதிகள் புரிந்தன; விளையாடத் தொடங்குவோம்' என்ற அறிவியல் கட்டுரை மனிதனின் ஆற்றலைப் பறை

## வளர்ச்சிப் பணிகளுக்கான விலை

காலச்சுவடு அக்டோபர் இதழில் சக்கரியா எழுதிய 'ஒரு மலையாள துயரக் கதை' என்ற கட்டுரையை படித்தேன். அதிலுள்ள "நல்ல சாலைகள் இதுவரை எந்த ஒழுக்கத்தையும் நாசமாக்கியதாகத் தெரியவில்லை." என்ற அவரது ஒரு கூற்றை மட்டும் எதிர்கொள்ளவே இக்கடிதம். (கேரள தெற்கு–வடக்கு நெடுஞ்சாலை பற்றிய விவரம் என்னிடம் இல்லை.)

சாலை என்பது நாசத்தையும் விளைவிக்கக்கூடும். ஆக்ரமிப்பிற்காக, போருக்கு முன்நடவடிக்கையாக சாலைகள் பாவப்படலாம். கரக்கோரம் கணவாய் வழியாக சீனா ஒரு நெடுஞ்சாலை போட்டதும், அதை எதிர்த்து எழுந்த சொல்லாடலையும் நாம் இங்கு நினைவு கூற வேண்டும்.. சென்ற நூற்றாண்டில் காலனி நாடுகள் பலவற்றில் அந்நாட்டின் மூலவளத்தை சுரண்ட வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் சாலைகள் பல பாவப்பட்டன. சாம்பியா நாட்டில் கனிமப் பொருட்களை எடுத்துச் செல்லச் சாலைகள் போடப்பட்டன. இச்சாலைகள் கனிமச் சுரங்கங்களருகே முடிவடைந்தன. காமரூன் நாட்டின் மழைக் காட்டிலிருந்த ராட்சத மரங்களை வெட்டி, ஐரோப்பாவிற்குக் கொண்டுசெல்ல, பிரஞ்சு அரசு, துறைமுகத்திலிருந்து மழைக் காடுகள்வரை சாலைகள் போட்டு, காடுகளை ஒட்டச் சிரைத்துவிட்டது. இந்நாடுகளின் இயற்கை வளம் திருத்த முடியாதபடி அழிக்கப்பட்டது.

காட்டின் வழியே சாலைகள் போடப்பட்டால், காட்டுயிர்களின் வாழிடம் துண்டாடப்படுகிறது. வலசைத் தடங்களில் சாலைகள் குறுக்கீடுகளாக அமைகின்றன. திருட்டு வேட்டைக்காரார்களுக்கும், மரங்களைக் கள்ளத்தனமாகக் கடத்துபவர்களுக்கும் (timber mafia) உதவுகின்றது. ஊழிக் காலங்களாக மனிதர் அண்ட முடியாதிருந்த காடுகளைச் சாலை ஊடுருவுகின்றது. கால்நடைகளிருந்து தொற்று நோய்கள், இயற்கையில் தடுப்பு சக்தியில்லாத காட்டுயிர்களுக்குத் தொற்றி, அவைகள் மடியும். இது நடந்திருக்கின்றது. "சாலைகள் மூலம் பன்னாட்டு வணிக நிறுவனங்களின் ஆக்டோபஸ் தும்பிக்கைகள் நம் காடுகளுக்குள் நீண்டிருப்பதை நான் வருத்தத்துடன காண்கிறேன்' என்கிறார் உயிரியிலாளர் உல்லாஸ் கரந்த். இக்காரணங்களைக் கருத்தில்கொண்டு தான் பாபநாசம் – திருவனந்தபுரத்தை இணைக்கும் சாலைத் திட்டம் கைவிடப் பட்டது. (கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.)

ஒரு இடத்தின் இயற்கை எழிலை குலைக்க வேண்டுமென்றால் அங்கு ஒரு சாலை போட்டுவிட்டால் போதும். கோயம்புத்தூர் அருகேயுள்ள சிறுவாணி அருவியை, அங்குப் போகச் சாலையில்லாத சமயத்தில், நடந்துபோய்ப் பார்த்திருக்கின்றேன். சாலை போடப்பட்டபின் இன்று அந்த இடம் சீரழிந்து கிடக்கிறது. ஆஸ்தி ரேலியாவில் காட்டுயிர் சரணாலயங்களுக்கு உள்ளே போகச் சாலைகள் கிடையாது. ஒற்றையடிப் பாதைகள் தாம். நடந்து அல்லது குதிரை சவாரி செய்து மட்டுமே போகலாம். அவசரத்திற்கு மோட்டார் பைக் அல்லது ஹெலிகாப்டர் பயன்படுத்தப்படுகின்றது.

சாலை பாவுவது மட்டுமல்ல. இயற்கை ரீதியில், ஒவ்வொரு செயலுக்கும் ஒரு எதிர்வினை உண்டு. எதற்கும் நாம் ஒரு விலை கொடுத்தாக வேண்டும். சேது சமுத்திரத் திட்டமானாலும் சரி, நதிகள் இணைப்புத் திட்டமானாலும் சரி, இவ்விலையைத் தர ஒரு சமூகம் தயாராக இருக்கிறதா என்பதைத் தீர்க்கமான சொல்லாடலுக்குப்பின், அந்த விலையின் பரிமாணங்களைப் புரிந்துகொண்ட பின் தான் தீர்மானிக்க வேண்டும்.

சு. தியடோர் பாஸ்கரன்
சென்னை 600 041



படிப்பகம்

www.padippakam.com



சாற்றுகிறது. உலகின் இருவேறு இயக்கங்கள் நமக்கு விளங்குகின்றன. ஒன்று இயற்பியல் இயக்கம்; பிறிதொன்று உயிரியல் இயக்கம்; சூரியன் என்ற விண்மீனைச் சுற்றி நம் புவி முதலான கோள்கள் சுற்றுகின்றன. எனினும் இவை, தாம் சுற்றுவதை உணரும் ஆற்றல் கொண்டவை அல்ல. அவ்வாறே பல உயிர்களும். நாய் முதலானவை உயிர் ஆற்றலுடன் இயங்குவன; தன் இருப்பை அறியும் அவை தன் நிலைப்பாட்டை – நாய் என்ற நிலைப்பாட்டை – உணருமா என்பது தெரியவில்லை. மனித உடல் இயக்கமும் இயந்திரகதியிலேயே, ஒழுங்கமைவுக்கு உட்பட்டே இயங்குகிறது. மனித மூளை, மிகவும் புதுமையும் ஆற்றலும் வாய்ந்த கணினியினும் மேம்பட்டது. மனித மனம் மூளையின் செயலியக்கம். மனித மூளை மற்றும் அதன் செயல் திறனான மன வியக்கம் பற்றிய ஆய்வு இன்னும் தொடக்க நிலையிலேயே உள்ளது. இயந்திர ஒழுங்கமைவுக்கு உட்பட்ட உயிர்மையான மனிதனிடம் 'மூதறிவு' (Intelligence) எங்ஙனம் விளங்குகிறது? "நான் இருக்கிறேன்; நான் மனிதன்" என்ற உணர்வு சார்ந்த நிலைப்பாடு விளங்குவதற்கான மூலக்கூறு யாது? ஏனைய கோள்கள் போன்ற உயிர்மையற்ற ஆனால் இயங்கும் தன்மை கொண்ட பொருள்களிடம் இம் 'மூதறிவு' விளங்காதது ஏன்? என்பன போன்ற ஆய்வுகளும்கூட எதிர்காலத்தில் நிகழக்கூடும். ஜே. கிருஷ்ணமூர்த்தி போன்ற மெய்யுணர்வாளர்கள் இதற்குப் பாதை அமைத்துச் சென்றுள்ளனர்.

இரா. சத்தியமூர்த்தி
பாண்டிச்சேரி 605 008

என். ஸ்ரீராம் எழுதியிருந்த 'வெளிவாங்கும் காலம்' சிறுகதை ஆரம்பத்தில் சாதாரணமான கதை சொல்லலில் தொடங்கி வாசகனை ஈர்த்து, கதையோடு அவனையும் அழைத்துச் செல்கிறது. வட்டார வழக்குச் சொற்கள் அளவாகவும் கவனமாகவும் கையாளப்பட்டு ஒரு அபாரமான மொழி நடையில் செல்கிறது. ஸ்ரீராமுக்குப் பாராட்டுக்கள்.

இமையம் முன்வைக்கும் பல கருத்துகள் ஏற்புடையவைதாம். இமையம் போன்ற படைப்பாளிகள் தலித் மக்களுடைய வாழ்க்கையின் சகல பகுதிகளையும், தங்களது இயல்பான கதை சொல்லும் திறனால், வெற்றிகரமாகச் சாத்தியமாக்க முடியும் என்று நம்புகிறேன். 'கோவேறு கழுதைகள்' நாவலில் இமையம் அப்படிப்பட்ட போக்கைத்தான் கையாண்டிருந்தார்.

கே. இரவிச்சந்திரன்
திருச்சி 1

கடந்த மூன்று திங்களாகக் காலச்சுவட்டில் வெளிவரும் சிறுகதைகள் நவீன இலக்கியம் எனும் போர்வையில் பாலியலை மையப்படுத்தும் சிற்றிலக்கியமாய் வெளிவருவது மனதை மிகவும் சங்கடப்படுத்துகிறது. மனித உறவுகளை மேம்படுத்தும் பல்வேறு உயர்குணங்களைச் சித்தரிப்பதை விட்டுவிட்டு வெறும் உடலியல் சார்ந்த உளறல் நிகழ்வுகளுக்குக் கதைகளை அமைத்து வெளியிடுவதைச் சற்றே ஒத்திவைப்பீர்களாக!

தொ. ந. கலைநஞ்சுண்டன்
கிருஷ்ணகிரி 635 001

## சோரகவி மரபு - உமா பதிப்பகத்தின் எதிர்வினை

எங்கள் பதிப்பகம் 1983 முதல் செயல்பட்டுவருகிறது. சிறந்த ஆசிரியர்களின் நூல்களைப் பதிப்பித்துவருவதே எங்கள் நோக்கம். கடந்த 1991ஆம் ஆண்டு திரு. தணிகை உலகநாதன், திரு. வெள்ளையாம்பட்டு சுந்தரம் அவர்களின் மூலமாக அறிமுகம் ஆனவர் து. தண்டபாணி என்கிற துரை. தண்டபாணி. வித்வான் பட்டம் பெற்ற துரை. தண்டபாணி, அரசு உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றி ஓய்வுபெற்றவர். ஆசிரியர் நூற் பதிப்புக் கழகத்திலும், பிராக்ர்ஸிவ் அச்சகத்திலும் சிலகாலம் பணியாற்றியவர். இவருடைய நூல்களை புக்ஸ் இண்டியா, மல்லிகைப் பதிப்பகம், அருணா பப்ளிகேஷன்ஸ் போன்ற பதிப்பகங்கள் வெளியிட்டுள்ளன. இவருடைய புத்தகங்கள் தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் ஆரம்பிப்பதற்கு முன்பாகவே பள்ளிப் பாடத்திட்டத்தில் இடம் பெற்றுள்ளன. ஆசிரியர்களின் நேர்மையை நம்பித்தான் பதிப்பாளர்கள் புத்தகங்களை வெளியிட முடியும். நல்ல ஆசிரியர் என்கிற முறையில் தொடர்பு வைத்திருந்தோம். அவர் செய்த தவறைத் திரு. அங்கமங்கலம் குப்பு, திரு. சந்திரசேகர் ஆகியோர் சுட்டிக்காட்டியபின் அவரைக் கூப்பிட்டு விசாரித்தோம். அதற்குப் பிறகு அவருடன் எங்களுக்குத் தொடர்பில்லை. அவருடைய வீட்டு முகவரி: துரை. தண்டபாணி, பழைய எண். 14, ஆற்காடு சாலை, சாலிக்கிராமம், சென்னை 600 093

தவறைச் சுட்டிக் காட்டியமைக்கு நன்றி. இதுபோன்ற தவறுகள் இனிமேல் நேராது என்பதை உமா பதிப்பகத்தின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறோம்.

இராம. லெட்சுமணன்
உரிமையாளர், உமா பதிப்பகம்

**தனது நூல்களில் ஏற்பட்ட தவறுக்கான விளக்கத்தை உரிய முறையில் முன்வைத்திருக்கும் உமா பதிப்பகத்தாரின் நேர்மை மிகுந்த பாராட்டுக்குரியது. மிகவும் அரிதான நேர்மை இது. தமிழ்ப் பதிப்புத்துறையில் அறிந்தும் அறியாமலும் நேர்ந்துவிடும் பிழைகளைச் சுட்டிக்காட்டுவதே, அப்பிழைகள் நீக்கப்பட்டுச் செம்மையான பதிப்புகள் வர வேண்டும் என்ற அக்கறை யினால்தான். ஆக்கபூர்வமான கண்ணோட்டத்துடன் விமர்சனத்தை அணுகியுள்ள உமா பதிப்பகம், இவ்விஷயத்தை நியாயமான முறையில் எதிர்கொண்டுள்ளது.**

**ஆசிரியர் குழு**

'பெண்களுக்கு எதிரான மதங்கள்' என்ற கட்டுரையில் நியாயமான காரணங்கள் ஏதுமின்றி புனித போப் ஆண்டவர் மீது பாய்ந்திருக்கிறார் கட்டுரையாளர். தெளிவாகவே சொல்கிறேன். பெண்கள் மத குருவாக (priest) வருவதை கத்தோலிக்கக் கிறிஸ்துவச் சமூகம் வன்மையாக எதிர்க்கிறது. காரணம், பெண்களுக்கும் ஆண்களுக்குமிடையிலான உடல் ரீதியான இயற்கை மாற்றங்கள் மட்டுமேயல்ல...

பெண்ணுக்கு ஒட்டுமொத்த ஒரு சமூகத்தை ஆளுவதற்கான மன பலமும் உடல் பலமும் நிச்சயமாக இல்லை அல்லது போதாது என்பதே... பெண்ணிடம் மேலோங்கியிருக்கும் கவர்ச்சி, ஆளுகைக்குத் தோதுவானதல்ல என்பதுவும் ஒரு காரணமே...

'ஆண்களுக்கு மாத விலக்கு ஏற்பட்டால்...' 'பெண்களுக்கு மீசை முளைத்தால்' என்றெல்லாம் விநோதமாகச் சிந்திப்பது இயற்கையை அவமதிப்பதாகும். படைப்பின் மகத்துவத்தைப் பரிகசிப்பதாகும்.

பானுமதி பாஸ்கோ
கோயம்புத்தூர் 641 035

சக்கரியாவின், 'ஒரு மலையாளத் துயரக் கதை' கட்டுரை புதிய நோக்கில் எழுதப்பட்டுள்ளது. மலையாளிகளின் இன்னல்களைக் கூறியுள்ள பாங்கு சிந்தனையைத் தூண்டுவதாக அமைந்திருந்தது. மலையாளத் தேசத்தின் துன்பியல் வரலாற்றிற்கு முற்போக்குச் சிந்தனையாளர்கள் காரணமாக இருக்கின்றனர் என்பது சககரியாவின் பத்தியின் மூலம் புலப்படுகிறது.

ம. எட்வின் பிரகாஷ்
ஆசாரிபள்ளம்

ஒரு மலையாளத் துயரக்கதை அருமை. மொழியாக்கமும் நன்றாக உள்ளது. இலங்கை பற்றிய விக்னேஸ்வரனின் கட்டுரையில் இன்றைய இலங்கையின் சூழலைத் தெளிவாகக் காண முடிகிறது. ஸ்ரீராமின் கதை, படிக்க நன்கு உள்ளது. ஆனால் கதையே இல்லை. கவிதைகள் நிறைய உள்ளன. ஆனால் எதுவும் புரியவில்லை.

எஸ். எஸ். ஆர். லிங்கம்
விருதுநகர் மாவட்டம் 626 125




**இலக்கிய வெளி**
**(கட்டுரைத் தொகுப்பு)**
**சுகதேவ்**

விலை ரூ. 90

சுகதேவ் என்ற புனைபெயரில் எழுதிவரும் ப. இளைய பெருமாள் கடந்த 16 ஆண்டுகளாக தினமணி நாளிதழில் பணியாற்றிவருகிறார். அவர் எடுத்த பேட்டிகள், எழுதிய கட்டுரைகளின் இத்தொகுப்பு, இலக்கிய உலகின் நீள அகலங்களைக் காட்டக்கூடியது.

**மருதா**
226 (188), பாரதி சாலை,
ராயப்பேட்டை, சென்னை 600 014.

விளம்பரம்




படிப்பகம்

www.padippakam.com



# ஒரு 'சகாப்த'த்தின் முடிவும் 'மகத்தான' சாதனையும்

கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாகத் தமிழக மற்றும் கர்நாடக அரசுகளுக்குப் பெரும் சவாலாக இருந்துவந்த சந்தனக் கடத்தல் வீரப்பன் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறான். வீரப்பனின் இந்த முடிவு பலராலும் எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான். புகைப்படங்களில் காணப்படும் வீரப்பனின் உருக்குலைந்த சடலம் பல சந்தேகங்களை எழுப்புகிறது. மோதல்கள் குறித்த போலீஸின் பல கட்டுக் கதைகள் இந்தத் தருணத்தில் நினைவுக்கு வருவதைத் தவிர்க்க முடியவில்லை. கடத்தல்காரன் என்பதையும் தாண்டிய பல 'பரிமாணங்கள்' வீரப்பனுக்கு உண்டு. அவனுடைய 'வீரம்', 'அன்பு', 'கருணை', 'கொடை மாண்பு', 'தார்மீகப் பண்பு' போன்றவை மட்டுமல்லாமல் 'கலை' ஈடுபாடும் 'அரசியல்' சார்ந்த அக்கறைகளும்கூட சர்வதேசக் கவனம் பெற்றவை. வீரப்பன் ஒரு காவிய நாயகனாகவேகூடச் சில ஊடகங்களால் சித்தரிக்கப்பட்டதுமுண்டு. வீரப்பனுக்குப் பல பெரும்புள்ளிகளோடு தொடர்பு இருந்ததாகவும் அரசியல் மற்றும் அதிகார மட்டத்தில் செல்வாக்கு மிகுந்த பலர் அவனுடைய குற்றங்களுக்கு உறுதுணையாக இருந்ததாகவும் எண்ணற்ற செய்திக் கட்டுரைகள் வெளிவந்திருக்கின்றன.

வீரப்பன் உயிரோடு பிடிபட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டிருந்தால் அவைபற்றிய பல உண்மைகள் வெளிச்சத்திற்கு வந்திருக்கக்கூடும். இந்தக் கொலை அவற்றுக்கு முற்றுப்புள்ளி வைத்திருக்கிறது. வீரப்பனைத் தேடும் வேட்டையில் பழங்குடி மக்கள்மீது தமிழக, கர்நாடக அதிரப்படையினர் கட்டவிழ்த்துவிட்ட ஒடுக்குமுறைகளும், மனித உரிமை மீறல்களும் இனியாவது நிறுத்தப்படுமா அல்லது புதிய வடிவில் தொடருமா என்பது அனுமானங்களுக்கு அப்பாற்பட்டதாகவே இருக்கிறது. நூற்றுக்கணக்கான அப்பாவி மக்கள் விசாரணை என்ற பெயரால் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு நிரந்தரமாக ஊனமாக்கப்பட்டுள்ளனர். வீரப்பனுக்கு உணவு மற்றும் ஆயுதம் வழங்கியதாகப் பொய் வழக்குப் போடப்பட்ட அப்பாவி மக்களின் அலைக்கழிக்கப்படும் வாழ்வில் இந்தக் கொலைகள் என்ன மாற்றத்தைக் கொண்டுவரக்கூடும்? அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு அரசு என்ன நிவாரணம் காணப்போகிறது? இதுபோன்ற கேள்விகளும் வீரப்பன் விவகாரத்தோடு இணைந்தவைதான். முதல்வர் ஜெயலலிதா தனது அரசின் 'மகத்தான சாதனை'யாக இதைச் சித்திரித்து, அரசியல் துருப்புச்சீட்டாக இதைப் பயன்படுத்தத் தொடங்கியிருக்கிறார். இந்நிலையில் இக்கேள்விகளுக்கு ஏதாவது அர்த்தமிருக்குமா எனத் தெரியவில்லை.

□

# எதிர்ப்பின் அதிகாரம்

இந்திய அறிவுச் சூழலில் 'பாசிசம்' குறித்த கவலை இப்போது தீர்ந்துவிட்டது. பா.ஜ.க. கூட்டணி ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டதோடு பாசிச அபாயம் முடிவுக்கு வந்துவிட்டதாக நமது 'அறிவுஜீவிகள்' தீர்மானித்துவிட்டனர்.

மத அடிப்படைவாதத்தில் பாசிசத்தின் கூறுகள் நிறைந்திருப்பது உண்மைதான். ஆனால் இந்தியாவில் அது மட்டுமே பாசிசத்தின் ஊற்றுக்கண் அல்ல.

சமூகத்தில் உள்ள ஒவ்வொரு பிரிவின் செயல்பாடுகளிலும் அது கசிந்துகொண்டிருக்கிறது. சிவில் சமூகத்தின் உறுப்புகளில் உயிர்த்துக்கொண்டிருக்கும் அதனை ஒரு தேர்தல் முடிவால் ஒழித்துவிட முடியாது.

அதிகாரம் என்பதை அரசு என்பதோடு மட்டும் இணைத்துப் புரிந்துகொள்வது ஒரு கொச்சையான அணுகுமுறை. அதைவிடத் தவறானது அதை அரசாங்கம் என்பதோடு மட்டும் இணைத்துப் பார்ப்பது. ஒடுக்குமுறைசார் அரசு சாதனத்தைவிடக் கருத்தியல்சார் அரசு சாதனங்களையே பாசிசம் அதிகம் சார்ந்திருக்கிறது. எனவே அதை எதிர்த்த போராட்டம் மிகவும் நுண்ணிய தளங்களிலும் நடத்தப்பட்டாக வேண்டும்.

ஆசிரியர் குழு
ஆதவன்
அரவிந்தன்
நஞ்சுண்டன்
இணை ஆசிரியர்
பெ. அய்யனார்

ஆலோசனைக் குழு
தமிழ்நாடு:
ஆ. இரா. வேங்கடாசலபதி
ப்ரசன்னா ராமஸ்வாமி
களந்தை பீர் முகம்மது
இலங்கை: எம்.ஏ. நுஃமான்
இங்கிலாந்து: பத்மநாப அய்யர்

அமெரிக்கா: கோகுலக் கண்ணன்
சிங்கப்பூர்: கனகலதா, மு. ந. மூர்த்தி
மலேசியா: சை. பீர் முகமது

கலை
சந்தோஷ்

பதிப்பாளர் – ஆசிரியர்
எஸ். ஆர். சுந்தரம்
(கண்ணன்)

தலைமை அலுவலகம்: 669, கே.பி. சாலை, நாகர்கோவில் 629 001, தொலைபேசி: 04652 278525 / தொலைநகல்: 04652 231160, மின்னஞ்சல்: kalachuvadu@sancharnet.in ■ சென்னை அலுவலகம்: 9/4, முசாபர் ஜங் சாலை, சென்னை 600 005, தொலைபேசி: 28481662, மின்னஞ்சல்: kalachuvadu@yahoo.com


படிப்பகம்

www.padippakam.com



மேலிருந்து செலுத்தப்படும் ஆதிக்கத்தின் அதிகாரம் வெகுமக்களின் ஆதரவைப் பெற்றிருப்பதில்லை. ஆனால் கீழிருந்து தரப்படும் அதிகாரத்தில் தங்கியிருக்கும் பாசிசமானது பெரும்பான்மை ஆதரவைத் தன்வசம் ஈர்த்துக்கொள்கிறது. எதிர்ப்பின் வெளிப்பாடாகத் தன்னைக் காட்டிக்கொள்வதன் மூலமே இதனை அது சாத்தியப்படுத்துகிறது. இதற்காக, தானே சில எதிரிகளை சிருஷ்டித்து அவற்றை வன்மையாக எதிர்ப்பதுபோல அது நடிக்கும். அந்தப் போலி எதிர்ப்பில் மக்களை மயங்கவைக்கும்.

அதிகாரத்தை முழுமையாகக் கைப்பற்றுவதற்கு முன்னர் பாசிசம் தன்னை ஒரு கலகத் தத்துவமாகவே முன்வைத்துக்கொள்ளும். ஆனால் இந்தக் கலகம் ஒழுங்கின்மைக்கு எதிரான ஒழுங்கின் கலகம். இதற்காக வெகுமக்களின் பொதுப்புத்தியில் படிந்துள்ள நம்பிக்கைகளையே அது கையாளும். அறிவுபூர்வமான விவாதத்தை, விமர்சனத்தை அது அனுமதிக்காது. மாறாக, உணர்வை அது உசுப்பிவிடும். இப்படியான எதிர்ப்பின் அதிகாரத்தை ஒரு சர்வாதிகாரி அல்லது ஒரு கட்சி மட்டுமே கைக்கொள்ள முடியும் என்பதல்ல. இதை ஒரு சிறு குழு, ஒரு தனி நபர்கூடச் செயல்படுத்த முடியும்.

தமிழ்நாட்டில் சமீப காலமாகத் தென்பட்டுவரும் அறிகுறிகள் இந்த அபாயத்தையே நமக்குப் புலப்படுத்துகின்றன. தமது சுயநலத்துக்காக எந்தவொரு பொய்யையும் கூறத் தயங்காத சில நபர்கள் தம்மைக் கலகக்காரர்களாகக் காட்டிக்கொள்ளப் புதிய எதிரிகளை உருவாக்குகிறார்கள். ஹிட்லரைப் போலவே இவர்களும் எதிர்ப்பின் மொழியைப் பயன்படுத்துகிறார்கள். தங்களை மாபெரும் கலகக்காரர்களாகக் காட்டிக்கொள்ள இதுகாறும் இவர்கள் பயன்படுத்திய விமர்சன ஆயுதங்களைப் பரணில் மூட்டை கட்டி வைத்துவிட்டு வெறுப்பும் வசையுமாக வீதிகளில் இறங்குகிறார்கள். கவனமாகப் பார்த்தால், எந்தப் பாசிசத்தை இவர்கள் எதிர்ப்பதாகச் சொன்னார்களோ அதே பாசிசத்தின் வடிவங்களாக அவர்கள் இருப்பதை நாம் உணரலாம். தமது அத்தனை நடவடிக்கைகளிலும் ஜனநாயக மறுப்பையே வெளிப்படுத்தும் இவர்கள் எதை எதிர்க்க முடியும்?

'சிந்தனையாளர்' என்ற சொல் சுதந்திரத்தோடு தொடர்புடையது. அது சாதக பாதகங்களைக் கவனத்தில் கொள்ளாது. 'பொய்களை உண்மைகள் போலவும், கொலைகளை மதிக்கத்தக்கதாகவும்' மாற்றுகிற அரசியல் சூதாடிகள் சிந்தனையாளர்களாக இருக்க முடியாது. அவர்களால் அதிகாரத்தை எதிர்க்கவும் முடியாது.

'அதிகாரத்துக்கு எதிராக உண்மையைப் பேசுவதையே' அறிவுஜீவியின் பணியாக நாம் கருதுகிறோம். ஆதிக்கத்தின் அதிகாரத்தை மட்டுமல்ல, எதிர்ப்பின் அதிகாரத்தையும் சேர்த்தே எதிர்கொள்வோம்.


## காலச்சுவடு பதிப்பகத்தின் 2004 நவம்பர் வெளியீடுகள்

**ஆளுமைகள் மதிப்பீடுகள்**
கட்டுரைகளின் முழுத்தொகுப்பு
சுந்தர ராமசாமி

**இரண்டாம் ஜாமங்களின் கதை** (நாவல்)
சல்மா

**கடலோர கிராமத்தின் கதை** (நாவல்)
தோப்பில் முகம்மது மீரான்

**மீஸான் கற்கள்** (நாவல்)
புனத்தில் குஞ்ஞப்துல்லா
தமிழில்: குளச்சல் மு. யூசுப்

**சித்தன் போக்கு**
பிரபஞ்சன் சிறுகதைகள்

**க. அயோத்திதாசரின் ஆராய்ச்சிகள்**
ராஜ் கௌதமன்

### காலச்சுவடு மாத இதழ் விளம்பரக் கட்டணம்

| | ரூ. |
|---|---|
| பின் அட்டை (multi colour): | 10000 |
| உள் அட்டை (multi colour): | 5000 |
| முழுப் பக்கம் : | 2500 |
| அரைப் பக்கம் : | 1250 |
| ஒரு பத்தி (1/3 பக்கம்) : | 750 |
| கால் பக்கம் : | 650 |

புத்தக விளம்பரங்களுக்கு 25% தள்ளுபடி உண்டு.

ஒரு வருடம் (12 இதழ்கள்) தொடர்ந்து வரும் விளம்பரங்களுக்கு 50% தள்ளுபடி.

### புத்தக (சிறு) விளம்பரம்

நூலின் முக்கிய விவரங்கள் தவிர சிறு குறிப்பும் (25 வார்த்தைகள்) இடம்பெறும். விளம்பரக் கட்டணம் ஒரு நூலுக்கு ரூ.125 மட்டுமே. அதே பதிப்பகத்தின் அதிகப்படியான ஒவ்வொரு நூலுக்கும் ரூ.75.




படிப்பகம்

## காலச்சுவடு பதிப்பகத்தின் 2004 வெளியீடுகள் (அக்டோபர் வரை)

வரலாற்றை அறிதல்
**புழுதிக்குள் சில சித்திரங்கள்**
தேவிபாரதி; ரூ.50 (வி.பி.பி.யில் ரூ.55)

**முச்சந்தி இலக்கியம்**
ஆ.இரா. வேங்கடாசலபதி; ரூ.140
(வி.பி.பி.யில் ரூ.140)

**ஆங்! உதயன் கார்ட்டூன்ஸ்**
உதயன் ரூ.200 (வி.பி.பி.யில் ரூ.200)

**சித்திரம் பேசுதடி**
தமிழ்த் திரை பற்றிய காலப் பதிவுகள்
(தொ-ர்) சு. தியடோர் பாஸ்கரன்
ரூ.175 (வி.பி.பி.யில் ரூ.175)

**காலச்சுவடு கவிதைகள்**
1994 முதல் 2003 வரை காலச்சுவடில் வெளியான கவிதைகளின் தொகுப்பு
(தொ-ர்) சிபிச்செல்வன்
ரூ.140 (வி.பி.பி.யில் ரூ.140)

**பாரதியின் கடிதங்கள்**
(தொ-ர்) ரா.அ. பத்மநாபன்
ரூ.50 (வி.பி.பி.யில் ரூ.60)

**புதிய சலனங்கள்**
**இளம் படைப்பாளிகளின் சிறுகதைகள்**
(தொ-ர்) அரவிந்தன்
ரூ.75 (வி.பி.பி.யில் ரூ.80)

**துயரமும் துயர நிமித்தமும்**
கட்டுரைகள்
பெருமாள் முருகன்
ரூ.75 (வி.பி.பி.யில் ரூ.80)

## காலச்சுவடு – தமிழியல் வெளியீடு

**மீண்டும் வரும் நாட்கள்** (கவிதைகள்)
மு. புஷ்பராஜன் ரூ.60

**வர்ணங்கள் கரைந்த வெளி** (கவிதைகள்)
தா. பாலகணேசன் ரூ.50

### முன் பணம் அனுப்புவோர்க்கு

- ரூ.50க்கு மேற்படும் நூல்களின் விலையை முன் பணமாக அனுப்பினால் புத்தகங்கள் எங்கள் செலவில் கூரியர் /பதிவுத் தபாலில் அனுப்பப்படும்.
- ரூ.50க்குக் குறைவான நூல்கள் வேண்டுவோர் நூலின் விலையுடன் ரூ.10 சேர்த்து அனுப்புக.

## 2004 மறுபதிப்புகள்

**தமிழகத்தில் கல்வி**
(வே. வசந்தி தேவியுடன் உரையாடல்)
சந்திப்பு: சுந்தர ராமசாமி; ரூ.90 (வி.பி.பி.யில் ரூ.95)

**மகாராஜாவின் ரயில் வண்டி** (சிறுகதைகள்)
அ. முத்துலிங்கம்; ரூ.75 (வி.பி.பி.யில் ரூ.80)

**பிறப்பு** (கன்னட நாவல்)
யு.ஆர். அனந்தமூர்த்தி, தமிழில்: நஞ்சுண்டன்;
ரூ.50 (வி.பி.பி.யில் ரூ.55)

**ஒரு நாள் கழிந்தது** (சிறுகதைகள்)
புதுமைப்பித்தன்; ரூ.80 (வி.பி.பி.யில் ரூ.85)

**காலச்சுவடு கதைகள்**
(தொ-ர்) மனுஷ்ய புத்திரன்; ரூ.140
(வி.பி.பி.யில் ரூ.140)

**இல்லாத ஒன்று** (சிறுகதைகள்)
சுந்தர ராமசாமி; ரூ.90 (வி.பி.பி.யில் ரூ.95)

**பண்பாட்டு அசைவுகள்** (கட்டுரைகள்)
தொ. பரமசிவன்; ரூ.100 (வி.பி.பி.யில் ரூ.100)

**ஜே.ஜே: சில குறிப்புகள்** (நாவல்)
சுந்தர ராமசாமி; ரூ.90 (வி.பி.பி.யில் ரூ.95)

**காகங்கள்** (சிறுகதைகள்)
சுந்தர ராமசாமி; ரூ.325 (வி.பி.பி.யில் ரூ.325)

**புதுமைப்பித்தன் கட்டுரைகள்**
(ப-ர்.): ஆ.இரா. வேங்கடாசலபதி; ரூ.275
(வி.பி.பி.யில் ரூ.275)

**என் வீட்டின் வரைபடம்** (சிறுகதைகள்)
ஜே.பி. சாணக்யா; ரூ.75 (வி.பி.பி.யில் ரூ.80)

**மழைக்காலமும் குயிலோசையும்**
(மா. கிருஷ்ணனின் இயற்கையியல் கட்டுரைகள்)
(தொ-ர்.): தியடோர் பாஸ்கரன்; ரூ.100
(வி.பி.பி.யில் ரூ.100)

**குமரி நிலநீட்சி**
சு.கி. ஜெயகரன்; ரூ.100 (வி.பி.பி.யில் ரூ.100)

**ஒளிவிலகல்** (சிறுகதைகள்)
யுவன் சந்திரசேகர்; ரூ.100 (வி.பி.பி.யில் ரூ.100)

**ஆட்டுக்குட்டிகள் அளிக்கும் தண்டனை**
(சிறுகதைகள்)
ஃபெர்னான்டோ ஸோரன்டினோ
தமிழில்: எம்.எஸ்.; ரூ.40 (வி.பி.பி.யில் ரூ.50)

**ஜானு**
(ஸி.கே. ஜானுவின் வாழ்க்கை வரலாறு
பாஸ்கரன்; தமிழில்: எம்.எஸ்.;

www.padippakam.com





# தமிழின் ஒரு மாறுபட்ட திரைப்படம்

## ஒருத்தி

தயாரிப்பு: தாரா, கோபால் ராஜாராம், இசை: எல். வைத்தியநாதன்,
மூலக்கதை: கி. ராஜநாராயணன், திரைக்கதை, வசனம், இயக்கம்: அம்ஷன் குமார்

### வெளி ரெங்கராஜன்

சினிமா என்பது பெரிதும் வர்த்தகமான நிலையிலும் எந்த மொழியிலும் ஒரு கணிசமான அளவு அது அந்த மொழியின் அழகியல் உணர்வுகளுடனும், அந்த மக்களின் வாழ்க்கை யதார்த்தத்துடனும் ஏதாவது விதத்தில் தொடர்புகொண்டதாகவே இருக்கிறது. அந்நிலையிலேயே அது தனக்கான மதிப்பையும் நம்பகத் தன்மையையும் பெறுகிறது. சத்யஜித் ராயின் 'பதேர் பாஞ்சாலி' படத்தை இன்று பார்க்கும்போதும் அதில் தென்படும் வாழ்க்கையின் அண்மையும், உருக்கமும் நெகிழ்வூட்டுவதாக உள்ளன. உலக அளவிலும், இந்திய அளவிலும் தமது சூழலின் நிலவெளி சார்ந்தும், வாழ்க்கை நிலை சார்ந்தும் பல திரைப்படங்கள் கணிசமான மக்கள் வரவேற்புடன் தொடர்ந்து எடுக்கப்பட்டுவருகின்றன.

ஆனால் தமிழில் அப்படிப்பட்ட சித்தரிப்புகளுக்கான இடம் என்பது முற்றிலும் வெற்றிடமாக இருக்கிறது. தமிழ் சினிமாவில் சித்தரிக்கப்படும் வாழ்க்கை என்பது முற்றிலும் போலித்தனமாகவும், அழகியல் தன்மைக்கும் வாழ்க்கை யதார்த்தத்துக்கும் மாறுபட்டதாகவும் வாழ்க்கை மதிப்பீடுகளின் ஒரு கேலிக்கூத்தாகவும் இருக்கிறது. அடிமட்ட உணர்வுகளுக்கு இரை போடும் வர்த்தக உத்திகளே இங்கு ஆதிக்கம் செலுத்துவதால் அழகுணர்வும் சமூக உணர்வும் கொண்ட கலைஞர்கள் இங்குச் செயல்படுவது இயலாததாகவே இருக்கிறது. மிகவும் போராடி எடுக்கப்படும் ஒன்றிரண்டு படங்களைக் கூட இங்குள்ள வர்த்தகச் சூழல் பரவலான பார்வைக்கும் கவனத்துக்கும் வரவிடாமல் செய்து விடுகிறது. அன்று ஜனாதிபதி பரிசு பெற்ற 'உன்னைப் போல் ஒருவன்' படத்துக்கு விநியோகஸ்தர்கள் இன்றித் திரைப்படச் சுருளைத் தானே கையில் எடுத்துக்கொண்டு ஜெயகாந்தன் அலைந்த நிலைமையானது, கல்வியும் தொழில் நுட்பமும் பெருகிய இன்றும்கூடத் தொடர்ந்து நீடிக்கிறது. எந்த மொழியிலும் இல்லாத இதுபோன்ற அழகியல் உணர்வுக்கும், ரசனைக்கும் எதிரான சூழல் பெரிதும் கண்டிக்கத்தக்கது.

இந்நிலையில் இலக்கியப் பின்னணியும், திரைப்பட நுட்பமும் அறிந்த அம்ஷன் குமார் நம்முடைய சூழலின் பிரத்யேக வாழ்க்கை நிலை மற்றும் நிலவெளி குறித்த உணர்வுடன் உருவாக்கியுள்ள 'ஒருத்தி' திரைப்படம் ஜெயகாந்தனின் 'உன்னைப் போல் ஒருவன்', நிமாய் கோஷின் 'பாதை தெரியுது பார்', பூமணியின் 'கருவேலம் பூக்கள்' ஆகிய படங்களின் வரிசையில் வைத்துச் சொல்லப்பட வேண்டிய ஒரு முக்கியமான முயற்சி. நம்முடைய சமூகச் சூழல் பற்றிய புரிதலுடன் தெளிவாகவும் நேர்த்தியாகவும் சொல்லப்பட்டுள்ள இந்தப் படம் மனித நிலைமைகள் குறித்த சிறப்பான வெளிப்பாடு. பிரச்சினைகளை ஆர்ப்பாட்டமின்றி அமைதியாகவும் ஆழமாகவும் தொட்டுச்செல்லும் விதம் இந்தப் படத்துக்கு ஒரு பிரத்யேகமான மதிப்பையும், நெகிழ்ச்சியையும் வழங்குகிறது. சாகித்ய அக்காதெமி பரிசுபெற்ற கரிசல் காட்டு எழுத்தாளர் கி. ராஜநாராயணின் 'கிடை' குறுநாவலைத் தழுவி அமைந்த இந்தப் படம் அந்த நாவலின் வட்டாரத் தன்மையை உள்வாங்கியதாகவும் அதே சமயம் அந்தப் பாத்திரங்கள் மூலமாக மனித நிலைமைகள் குறித்த ஆழ்ந்த கோரிக்கைகளை முன்வைப்பதாகவும் இருக்கிறது.

19ஆம் நூற்றாண்டின் இறுதியில் பிரிட்டிஷ் காலத்திய சமூகச் சூழலில் நிகழும் இக்கதை ஆலம்பட்டி என்னும் கரிசல் கிராமத்தைக் களனாகக் கொண்டிருக்கிறது. இந்தக் கதை முழுவதும் செவனி என்னும் தலித் பெண்ணின் மன உணர்வுகளை முன்வைத்தே சொல்லப்பட்டிருந்தாலும் ஒட்டுமொத்த கிராமிய மனநிலை குறித்த பார்வையை இப்படம் கொண்டுள்ளது. ஆடு மேய்க்கும் தலித் பெண் செவனியும் மேல் ஜாதிக்கார எல்லப்பனும் காதல் வயப்பட்ட நிலையில் அவர்களது ஆடுகள் ராக்காயி என்ற பெண்ணின் நிலத்திலுள்ள பருத்திப் பயிர்களை மேய்ந்துவிடுகின்றன. கிராமிய வழக்கப்படி அப்பெண் ஆடுகள் அடைபடும் கிடையை மறித்து நீதி கேட்கிறாள். பஞ்சாயத்து கூடி அவளுக்கு நிவாரணம் வழங்குகிறது. அதற்கான தொகையை யாரிடம் வசூலிப்பது என்கிற விசாரணையில் ஊர்ப் பெரியவர் சுப்பையாவுக்குச் செவனி – எல்லப்பன் விவகாரம் தெரிந்துவிடுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

வரி வசூல் விஷயமாக ஆலம்பட்டிக்கு வரும் ஆங்கிலேய ரெவினியூ ஆபீஸர் வில்லியம்ஸின் கண் வலிக்கு எளிய சிகிச்சை அளித்துச் செவனி அவரின் நல்லெண்ணத்தைப் பெறுகிறாள். அவள் மூலமாக அவர் அந்த கிராம மக்களைச் சந்தித்து அவர்களது வறிய நிலையையும், நியாயமான கோரிக்கைகளையும் புரிந்துகொள்கிறார். ஜமீன்தாரின் கொடுஞ்செயல் களையும் அவர் நேரில் அறிய நேர்கிறது. இனி மக்கள் தங்கள் நிலத்துக்குத் தாங்களே உரிமையுடையவர்களாய் அரசாங்கத்துக்கு நேரிடையாகப் பழைய வரியையே செலுத்தலாம் என்கிற உத்தரவைப் பிறப்பிக்கிறார். இதற்காக மக்கள் செவனிக்கு நன்றி பாராட்டினாலும் தான் விரும்பும் எல்லப்பனுக்குத் தன்னை மணமுடிக் கும்படி அவள் கிடையை மறித்து நீதி கேட்கும்போது அவர்களது ஜாதி நடைமுறை அதை ஏற்க மறுக்கிறது. பஞ்சாயத்து கூடி இதற்கு ஒரே தீர்வாக அவர்கள் கிராமத்தை விட்டு வெளியேறி சேர்ந்து வாழலாம் என்று முடிவு சொல்கிறது. செவனிக்குத் தன்னுடைய கிராமத்தையும் மக்களையும் ஆடுகளையும் விட்டுப் பிரிவது என்பது இயலாதது. அவள் திருமணத்தை நிராகரித்துத் தன்னுடைய கிராமத்திலேயே வாழ முடிவெடுக்கிறாள். கல்வியில் நாட்டமுள்ள அவள் மனம் ஆங்கிலேய அதிகாரி விட்டுச் சென்ற இறகுப் பேனாவைக் கையிலெடுத்துக் கற்பனையில் ஆழ்கிறது.

சினிமா என்கிற உணர்வின்றி ஒரு வாழ்க்கை நிகழ்வு திரையில் விரிவடைகிறது. கிராமியக் களன் அதன் இயல்பான தன்மைகளுடனும், பிரச்சினைகளு டனும் உயிர்ப்புக் கொண்டிருக்கிறது. பாத்திரங்கள் இயல்பான மனிதர்களாய் சுதந்திரத்துடன் உலவுகின் றனர். முக்கியமாகச் செவனியாக நடித்த அந்த இளம் பெண் அந்தப் பாத்திரத்திற்குரிய கபடற்ற வெளிப் படைத் தன்மையும், ஓர் இயல்பான துணிச்சலும் கொண்டு ஒரு புத்துணர்வை வெளிப்படுத்துகிறார். கீதாரி என்றழைக்கப்படும் கிடைக்காவலரும், ஊர்ப் பெரியவரான சுப்பையாவும் மற்றவர்களும் கண்ணிய மான தோற்றம் கொள்கின்றனர். இன்னும் குறி சொல்லும் பூசாரிகளும், வில்லுப்பாட்டு இசைக்கும் பாடகர்களும், கதை சொல்லிகளும், கள்வர்களும் பேய்க் கதைகளும் எனக் கிராமம் வேறுபட்ட கூறுகளால் நிரம்பியிருக் கிறது. பாத்திரங்கள் சௌகரியப்படி குறுக்கப்படுவதும், தேவையற்ற romantisationனும் தவிர்க்கப்பட்டுள்ளன. உதாரணமாக, பிரிட்டிஷ் அதிகாரி கொடுங்கோலராகக் காட்டப்படவில்லை. அவர் இங்குள்ள மக்களின் துயரங்களைப் புரிந்துகொள்பவராக இருக்கிறார். மக்களின் பழக்க வழக்கங்களையும் ஒதுக்கப்பட்ட மக்களின் கடவுள் வடிவங்களையும்கூட ரசிப்பவராக இருக்கிறார். இந்தப் பெண்ணும் காதலுக்காகக் கிராமத்தை விட்டு ஓடும் சினிமாப் பெண்ணாக இல்லை. தன்னுடைய கிராமமும் தன்னுடைய ஆடுகளும் தன்னுடைய சுதந்திரமான இயக்கமுமே மேலானவை என்று அவள் இயல்பான, சாத்தியமான ஒரு முடிவை எடுக்கிறாள். பல நோய்க் கூறான நம்பிக்கைகளுக்குள் கிராம மக்கள் ஆழ்ந்திருந்தாலும் கிராமிய வாழ்வில் தென் படும் நிதானத்தையும், நல்லெண்ணத்தையும், யதார்த்

## அம்ஷன்குமாருடன் ஒரு சந்திப்பு

# திரைப்படம் பல கலைகளின் ஒருமிப்பு



**தேவிபாரதி:** திரைப்பட விமர்சகராகவும் விவரணப்பட இயக்குநராகவும் அறியப்பட்ட நீங்கள் இத்திரைப்படத்தின் மூலம் ஒரு கதைப்பட இயக்குநராகவும் உருவெடுத்திருக் கிறீர்கள். இது உங்கள் நீண்ட கால கனவா?

**அம்ஷன் குமார்:** ஒரு வாசகன் பார்வையாளன் என்கிற வகையில் இலக்கியம் திரைப்படம் ஆகியவற்றின் மீது எப்பொழுதுமே எனக்கு மாறாத ஈர்ப்பு இருந்துவந்துள்ளது. இதுதான் எனது எழுத்திற்கும் திரைப்பட முயற்சிகளுக்கும் அடிப்படை. முதலில் எழுதத் தொடங்கினேன். இலக்கியம், இசை, ஓவியம் போன்ற கலைகளில் ஏதாவது ஒன்றின் மீது நீங்கள் கொள்ளும் ஈடுபாடு உங்களைத் திரைப்படத்திற்கு இட்டுச் செல்லக்கூடும். திரைப்படம் என்பது பல்கலைகளின் ஒருமிப்பு என்பதால் இது சாத்தியம்தான். இவையெல்லாம் படிப்படியாக எனக்கு நடந்துள்ளதாகக் கருதுகிறேன்.

**தேவிபாரதி:** ஆனால் அதன் தொழில்நுட்பம் சார்ந்த கூறுகளை நீங்கள் யாரிடமாவது கற்றுக்கொண்டீர்களா?

**அம்ஷன் குமார்:** 1991இலிருந்து தொடங்கி நான் பல விளம்பரப் படங்களைத் தயாரித்தேன். விளம்பரப் படங்களை எடுக்க முதல் தரமான தொழில் திறமை தேவைப்படுகிறது. நான் அதை வளர்த்துக்கொண்டேன். பல சிறந்த தொழில் நுட்பக் கலைஞர்களுடன் பணியாற்றுகிற வாய்ப்பும் கிடைத் தது. மும்பையின் சிறந்த ஒளிப்பதி வாளர்களுடன் பணியாற்றியிருக் கிறேன். ஆனால் இதுதான் உலகி லேயே சிறந்த சாக் லேட், சிறந்த சிமெண்ட் என்றெல் லாம் சொல்வதில் எனக்கு விரைவி லேயே சலிப்பு உண்டாகியது. நான் டாகுமெண்டரிப் படங்களை எடுக்க ஆரம்பித்தேன்.


**தேவிபாரதி:** எப்போழுதிலிருந்து விவரணப் படங்களின் மீது ஆர்வம் செலுத்தத் தொடங்கினீர்கள்?

**அம்ஷன் குமார்:** 1995இல் 'மூன்றாம் தியேட்டர்' டாகுமெண் டரிப் படத்தை எடுத்தேன்.

கலை இலக்கிய ரசிகர்களின் கவனத்தைப் பெற்ற அது ஆங்கிலப்படம். 1998இல் சுப்பிரமணிய பாரதி படம் வெளி வந்தது. இதன் மூலம் உலகெங்கிலுமுள்ள தமிழர்களுக்கு

www.padippakam.com





தத்தை உடனடியாகக் கிரகிக்கும் ஆற்றலையும் கோடிட்டுக் காட்டுவதாக இப்படம் அமைந்துள்ளது. இங்குள்ள புல்வெளிகளும் மரங்களும் பாதைகளும் மனிதர்களின் சந்தோஷங்களையும் துயரங்களையும் ரகசியங்களையும் சிறுமைகளையும் பகிர்ந்தபடி உள்ளன.

பொதுவாகத் தமிழ் சினிமாவில் திறமையான இயக்குநர்கள்கூட இலக்கியப் படைப்புகளைப் படமாக்க முனைவதில்லை. முனைந்தாலும் வெற்றி அடைவதில்லை. ஏனென்றால் தமிழில் புழங்கிவரும் சினிமா சூத்திரத்துக்குள் இயல்புணர்ச்சி கொண்ட இலக்கியத்தின் தன்மைகளை நுழைக்கும் தெளிவையும் நம்பிக்கையையும் அவர்கள் பெறுவதில்லை. சில சமரசங்களுடன் அவர்கள் செய்யும் முயற்சிகள் சினிமாவாகவோ, இலக்கியமாகவோ இல்லாமல் ஒரு தொய்வான நிலையிலேயே உள்ளன. ஆனால் இந்தப் படம் கதையின் இலக்கியத் தன்மை குறித்த பார்வையுடன், அதை சினிமாவுக்காக எப்படி உருமாற்றுவது என்னும் தெளிவுடன் அதற்கான சுதந்திரத்தை எடுத்துக் கொண்டுள்ளது. கிராமிய வாழ்வின் சுய மதிப்பும் கௌரவமும் அதே சமயம் அதன் நோய்க் கூறான தீண்டாமை மனநிலையும் படத்தில் உரிய கவனமும் அழுத்தமும் பெற்றுள்ளன. எதுவும் வலிந்து சொல்லப் படாமல் படம் ஒரு சீரான குரலில் சொல்லப்படுகிறது. ஆனால் அந்த நிதானமும், சீரான தன்மையும் சில இடங்களில் நெருடலாக உள்ளன. பேச்சின் கொச்சைத்தன்மை பல இடங்களில் மீறப்பட்டுள்ளது. ஆனால் மனதைத் தொட்டுச் செல்லும் ஒருவித நெகிழ்வுத்தன்மை படம் முழுவதும் பரவலாகக் காணப்படுகிறது.

இது போன்ற படங்கள் பரவலான மக்கள் பார்வைக்கும் கவனத்துக்கும் வந்து விவாதங்கள் எழுப்பப்படுவது தமிழ் சினிமாவின் தரத்தை மேம்படுத்தவும் புதிய முயற்சிகளுக்கு வரவேற்பை உருவாக்கவும் உதவும். ■

---

நன்கு அறிமுகமானேன். பின்னர் பல படங்கள். அவற்றில் அசோகமித்திரன் டாகுமெண்டரி முக்கியமானது.

**தேவிபாரதி:** ஒரு கதைப்படம் செய்வதற்கான சூழல் உருவான போது நீங்கள் கிடையை ஏன் தேர்வு செய்தீர்கள்?

**அம்ஷன் குமார்:** ஒரு இலக்கியப் படைப்பைத் தழுவி படமெடுக்க வேண்டும் என்று நினைத்தேன். ஏனென்றால் ஏற்கனவே ஒரு கட்டுக்கோப்பான கதை நமக்குக் கிடைத்து விடுகிறது. மேலும் அது பற்றிய விமர்சனங்கள் கருத்துகள் ஆகியனவும்கூட அப்படைப்பைத் திரைப்படமாகச் செழுமைப்படுத்த உதவுகின்றன. அசோகமித்திரனின் '18ஆவது அட்சக்கோடு' நாவலுக்குத் திரைக்கதை எழுதி தேசியத் திரைப்பட வளர்ச்சிக் கழகத்தின் நிதியுதவி கோரியிருந்தேன். அப்பொழுது அவர்கள் பல சிக்கல்களிலிருந்தார்கள். முதலில் உற்சாகமாக வரவேற்றவர்கள், பின்னர் கை விரித்தனர். தி. ஜானகிராமனின் 'அம்மா வந்தாள்', ஜெயகாந்தனின் ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம்' சுந்தர ராமசாமியின் 'ஒரு புளிய மரத்தின் கதை' நான் மனதில் வைத்திருந்த பிற கதைகள். புளிய மரத்தின் கதையை ஓவியர் கிருஷ்ணமூர்த்தி படமாக எடுக்கவிருக்கிறார் என்பது தெரிந்தவுடன் அத்திட்டத்தைக் கைவிட்டேன். கி.ராவின் 'கிடை' நான் தேர்வுசெய்த மற்றுமொரு கதை. பலத்த பரிசீலனைக்குப் பிறகு அதை முதலாவதாகச் செய்ய நண்பர் கோபால் ராஜாராமும் நானும் முடிவு செய்தோம். கி.ரா. வேண்டிய மாற்றங்களைச் செய்துகொள்ளலாம் என்று பெருந்தன்மையுடன் கூறினார். என்னைப் பொறுத்தவரை தமிழ் எழுத்தாளர்கள் தொட்டாற்சிணுங்கிகள் அல்ல.

**தேவி பாரதி:** காலனியக் காலத்தைப் பின்புலமாக எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். இதற்குத் தனித்த நோக்கங்கள் இருக்கின்றனவா?

**அம்ஷன் குமார்:** 'கிடை' காலனிய ஆதிக்கம் நடைபெற்ற காலத்தின் கதைதான். அதன் காலத்தை 1920க்குச் சமீபமாக நாம் உணர முடியும். 20ஆம் நூற்றாண்டின் துவக்கத்திலேயே அரசியல் விழிப்புணர்வு, சுதந்திரம் பற்றிய சிந்தனைகள் ஆகியவை பரவலாகக் கவனம் பெறத் தொடங்கி விட்டன. எனவே அவற்றையெல்லாம் பற்றிக் குறிப்பிடாமல் அக்காலகட்டத்தைப் படமெடுக்க முடியாது. நான் 'கிடை' கதையில் பார்த்த முரண்கள் வேறானவை. அவற்றை முதன்மைப்படுத்துகிற வேளையில் சமீபத்திய சரித்திரம் பற்றிய நினைவைப் படம் ஏற்படுத்தக் கூடாது. அதன் மூலம் காலம் காலமாக அவை நம்மிடையே உள்ளன என்கிற உணர்வு குறைந்துபோக நேரிடலாம். எனவேதான் படத்தின் காலத்தை நான் மேலும் பின்னுக்குத் தள்ளினேன்.

**தேவிபாரதி:** அப்படியானால் நீங்கள் உங்களுடைய திரைப் படத்தின் வழியே சாதிய ஒடுக்குமுறையைப் பற்றி விவாதிப்பதை முக்கியமாக ஒன்றாகக் கருதியிருக்கிறீர்கள் இல்லையா?

**அம்ஷன் குமார்:** சாதியம் பற்றி ஒரு விவரணப்படம் எடுக்க விரும்பினேன். ஆனால் அது பார்வையாளர்கள் மனதில் ஒரு ஆவேசத்தை விளைவித்துவிடுமோ என்று தயங்கினேன். எத்தனையோ திரைப்படங்களும் அவ்வாறு எடுக்கப் பட்டுவிட்டன. சாதியம் பற்றிப் பேசும் பொழுது நாம் மற்றவர்களைக் குற்றம்சாட்டித் தப்பித்துக்கொள்கிறோம். ஆனால் அது நம் எல்லோரிடமும் புரையோடியுள்ள விஷயம். அதை உணர்ச்சிகரமாகப் பார்க்காது புத்திபூர்வமாக அணுக வேண்டும். அதுவே சுய விமர்சனத்திற்கு நம்மை இட்டுச் செல்லும். இதைத்தான் ஒருத்தியில் நான் செய்ய முயன்றுள்ளேன்.

**தேவிபாரதி:** உங்களுடைய திரைப்படத்தில் காலனிய அரசமைப்பு குறித்து ஒரு பரிவான அணுகுமுறை தென்படுகிறதே? படத்தில் வரும் ஆங்கில அரசு அதிகாரி பாத்திரத்தை நீங்கள் romanticise செய்திருக்கிறீர்கள். அது காலனிய ஆதிக்க வர்க்கம் பற்றிய தவறான சித்திரத்தைத் தராதா?



படிப்பகம்

**அம்ஷன் குமார்:** இந்தியாவிற்குச் சுதந்திரம் வந்து 57 வருடங்கள் ஆகிவிட்டன. ஆனால் இன்னமும் காலனிய ஆங்கிலேயனை நாம் ஒரு வெள்ளை நிற வில்லனாகவே மீடியாவில் சித்தரிக்கிறோம். 1857இல் நடைபெற்ற சிப்பாய் புரட்சிக்குப் பிறகு நம்மை ஆளவந்த ஆங்கிலேயர்களில் பலர் சிறந்த நிர்வாகிகளாகவும் கல்விமான்களாகவும் விளங்கினர். மக்கள் அவர்களை விரும்பி மதித்த தருணங் களும் உண்டு. ஜமீன்தார்களை உருவாக்கியவர்கள் ஆங்கி லேயர்கள். ஆனால் ஜமீன்தார்கள் கட்டற்று இருந்தபொழுது வரிவிதிப்பை ஆங்கிலேயர்கள் சீர்திருத்தவும் செய்தார்கள். இது வில்லியம் பெண்டிங் பிரபு காலத்தில் துவங்கியது. தங்களுடைய நலனுக்காகத்தான் பிரிட்டிஷ் அரசு ஒவ்வொரு காரியத்தையும் செய்தது என்றாலும் சில சமயங்களில் அதன் பலன் மக்களையும் அடைந்தது. அவ்வாறான ஒரு தருணம் படத்தில் வருகிறது. படத்தில் வரும் ஆங்கிலேய அரசு அதிகாரியும் தன் அரசாங்கத்தின் நலன் பற்றிய அக்கறை உள்ளவன்தான். ஆனால் அவன் இனிய சுபாவம் கொண்டிருக்கிறான். அவ்வாறு ஓர் அதிகாரியைச் சித்தரிப்பதில் ஏதும் தவறு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆங்கிலேயர் ஆட்சியில் தொல்லைக்குள்ளாகாத கிராமப்புற மக்களைக் கி. ராவின் கதைகளிலும் காணலாம்.

**தேவிபாரதி:** செவனி அந்த ஆங்கிலேயரிடம் அதிக உரிமை எடுத்துக்கொள்கிறாள். அவளுக்கு அவர்பால் எந்த அச்ச உணர்வும் இல்லை. அவர் விட்டுச் செல்லும் இறகுப் பேனாவை எடுத்துப் பத்திரப்படுத்திக்கொள்கிறாள். இவை போன்ற காட்சித் தொடர்களின் வாயிலாக நீங்கள் ஏதாவது சொல்ல முயல்கிறீர்களா?

**அம்ஷன் குமார்:** நீங்கள் உங்களைப் பற்றி என்ன நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதற்கும் உங்களை மற்றவர்கள் எவ்வாறு உருவகப்படுத்துகிறார்கள் என்பதற்கும் உள்ள வித்தியாசம்தான் செவனி கதாபாத்திரம். அவள் தன்னை ஒரு கீழ்ஜாதிப் பெண்ணாக உணர்வதேயில்லை. அவள் இயல்பாகவே முற்போக்கானவள். இத்தகைய மனிதர்களை நாம் சந்தித்துக்கொண்டிருக்கிறோம். ரிச்சர்ட் ரைட்டின் சுயசரிதையான Black Boy சட்டென்று என் ஞாபகத்திற்கு வருகிறது. முடிவில் ஒரு கட்டத்தில்தான் அவள் தப்பித்துப் போக முடியாத தனது நிலையை உணர்கிறாள். அதுவரை அவளது கனவுகள், தேடல்கள் மேல்ஜாதிக் காரர்களின் வாழ்க்கைமுறையை ஒட்டியதாக உள்ளன. எனவே அவள் யாரைக் கண்டும் பயப்படுவதில்லை. இறகுப் பேனா ஒரு visual metaphor. அதைப் பற்றி படத்தில் ஒரு வசனம்கூடக் கிடையாது. அந்தக் கிராம மக்களின் வாழ்வே மாறிப்போகக் காரணமான ஒரு பேனாவை அவள் பத்திரப்படுத்துகிறாள். செவனி கல்வியின் மீது கொண் டுள்ள ஈடுபாடு ஆங்காங்கே படத்தில் வெளிவருகிறது.

**தேவிபாரதி:** படத்தின் காலனியக் காலப் பின்புலம் சார்ந்து நீங்கள் அதிகம் சிரமப்பட்டிருக்க வேண்டுமே? செயற்கை யான படப்பிடிப்புத் தளங்களை உருவாக்குவதற்கு உங்களு டைய பொருளாதாரம் இடமளித்திருக்காது அல்லவா?

**அம்ஷன் குமார்:** படப்பிடிப்புக்காகக் கிராமங்களுக்குப் போனபோது எல்லாத் தெருக்களிலும் மின்விளக்குக் கம்பங்கள் தடையாக இருந்தன. அவை படச்சுருளுக்குள் வந்துவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டியதாயிற்று. பிறகு கிராமத்தின் தெருக்களில் எங்கும் தென்பட்ட பிளாஸ்டிக் கழிவுகள். எங்கள் படப்பிடிப்புக் குழுவினர் ஓயாமல் அவற்றை அப்புறப்படுத்திக்கொண்டே இருந்தார்கள். 'ஒருத்தி' மிக இறுக்கமான பட்ஜெட்டில் உருவான படம். எனவே செட் என்பது நினைத்துக்கூடப் பார்க்க முடியாத ஒன்று. படத்தில் வரும் வீடு இன்றுவரை மின்சாரத் தொடர்பு இல்லாதது; நூற்றைம்பது வருடத்தியது. நான் அந்தக் கிராமங்களில் சந்தித்த மனிதர்களும் மிகப் பழமையானவர்கள். ■

கிழக்கு பதிப்பகம்

**16. கற்பகாம்பாள் நகர், மயிலாப்பூர், சென்னை-4.**
Ph : 52009601/02 Web : www.newhorizonmedia.co.in
email : sales@newhorizonmedia.co.in

**நம்பிக்கை தரும் இளம் படைப்பாளிகளின் சிறுகதைத் தொகுப்புகளைக் கிழக்கு பதிப்பகம் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது. சிறுகதை வாசிப்பின் மகிழ்ச்சியை மீட்டெடுக்கும் புதிய தொகுப்புகள் இவை.**

| | | |
|---|---|---|
| சைக்கிள் முனி | (இரா. முருகன்) | - ரூ. 60 |
| வாத்தியார் | (மா.வே.சிவகுமார்) | - ரூ. 75 |
| வடக்கந்தரையில் அம்மாவின் பரம்பரை வீடு | (ஷாராஜ்) | - ரூ. 60 |
| கோபுரம் தாங்கி | (சுதேசமித்திரன்) | - ரூ. 60 |
| குதிரைகளின் கதை | (பா. ராகவன்) | - ரூ. 35 |
| மனதில் உனது ஆதிக்கம் | (சித்ரன்) | - ரூ. 50 |
| மழைருசி | (புதுவை ரா. ரஜனி) | - ரூ. 60 |
| என் நிலைக்கண்ணாடியில் உன் முகம் | (என். சொக்கன்) | - ரூ. 60 |
| சதுரங்கச் சிப்பாய்கள் | (முத்துராமன்) | - ரூ. 35 |
| இவற்றுடன் | | |
| மாலன் சிறுகதைகள் | (முழுத்தொகுப்பு) | -ரூ.180 |

நூலின் விலையை மட்டும் New Horizon Media Private Limited என்ற பெயருக்குப் பணவிடை / சென்னையில் மாற்றத் தக்க காசோலை / வரைவோலையாக அனுப்பவும். தமிழ்நாட்டுக்குள் தபால்செலவு முற்றிலும் இலவசம். வெளிமாநில வாசகர்கள் ரூ.20 சேர்த்து அனுப்பவும். கண்டிப்பாக விபிபி கிடையாது.

## தலித் இதழியல் வரலாற்றரங்கு
## தாய் மண் இதழாய்வு

இடம்

தமிழ்நாடு ஹோட்டல்
அழகர் கோயில் சாலை, மதுரை

நாள்

13, நவம்பர் 2004
சனிக்கிழமை மாலை 3 மணி

கருத்தாளர்கள்

இந்திரன், ரவிக்குமார், அழகரசன்,
அ. ராமசாமி, பொ. வேல்சாமி,
பஞ்சாங்கம், பாரி. செழியன்,
இரா. ஸ்டாலின், ஹவி

ஏற்பாடு

அம்பேத்கர் படிப்பு வட்டம், மதுரை

தொடர்புக்கு
04543 245847, 0452 2680650

www.padippakam.com




With Best Compliments
from

தினமலர்

தேசியத் தமிழ் நாளிதழ்

**DINAMALAR**


National Tamil Newspaper

*Printed simultaneously at*

Chennai ✧ Vellore ✧ Pondicherry
Erode ✧ Salem ✧ Coimbatore
Tiruchi ✧ Madurai
Tirunelveli ✧ Nagercoil

விளம்பரம்


படிப்பகம்



# நேர்காணல்

# எ. சுப்பராயலு

சந்திப்பு:

ஆ. இரா. வேங்கடாசலபதி

மற்றும்

ரவிக்குமார்

கல்வெட்டியல் அறிஞர் எ. சுப்பராயலு (1940) அனைத்துலக அளவில் மதிக்கப்படும் விரல் விட்டு எண்ணக்கூடிய தமிழக வரலாற்றாசிரியர்களில் ஒருவர். தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வுபெற்றிருக்கும் சுப்பராயலு, ஜப்பான் தோக்கியோ பல்கலைக்கழகத்தில் பல ஆண்டுகள் வருகைப் பேராசிரியராகப் பணியாற்றியிருக்கிறார். நொபோரு கராஷிமாவுடன் இணைந்து இவர் செய்திருக்கும் ஆய்வுகளும் நிறைவேற்றியுள்ள ஆய்வுத் திட்டங்களும் சோழர் காலம் பற்றிய ஆய்வில் ஒரு திருப்புமுனை என்பது புலமையுலகின் ஒருமித்த கருத்து. The Political Geography of the Chola Country (1973) என்ற இவரது முதல் நூல் கே. ஏ. நீலகண்ட சாஸ்திரிக்குப் பிறகான புதிய ஆய்வுகளுக்குக் கால்கோளிட்டது; பர்ட்டன் ஸ்டெயினின் Peasant State and Society in South Inida நூலின் ஓர் இயலில் மட்டும் இருபதுக்கும் மேற்பட்ட முறை குறிப்பிடப்பட்ட நூல் இது. வல்லம், கொடுமணல், பெரியபட்டிணம் ஆகிய இடங்களில் இவர் அகழ்வாய்வுகளைச் செய்துள்ளார். இலங்கையிலும் தென் கிழக்காசியாவிலும் தொல்லியல் கள ஆய்வுக் குழுக்களில் பங்காற்றியிருக்கிறார். இவருடைய பிற நூல்கள் Studies in Chola History; A Concordance of the Names in Chola Inscriptions (இணையாசிரியர்); தமிழ்க் கல்வெட்டுச் சொல்லகராதி.

2003ஆம் ஆண்டு சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்தில் (Madras Institute of Development Studies) மால்கம் ஆதிசேஷையா வருகைப் பேராசிரியராக எ. சுப்பராயலு விளங்கியபோது அவரை ரவிக்குமாரும், ஆ. இரா. வேங்கடாசலபதியும் சந்தித்து உரையாடினர்.

எ. சுப்பராயலுவோடு உரையாடும்போது நிறைகுடம் என்ற உருவகம் தோன்றும். இவருடைய முதல் நேர்காணல் இது.

**ஆ. இரா. வேங்கடாசலபதி**: நீங்கள் எப்படி கல்வெட்டியல் துறைக்கு வந்தீர்கள்? உங்கள் பிறப்பு, வளர்ப்பு படிப்பு சூழல் ஆகியவற்றைப் பற்றியும் சொல்லுங்கள்.



படிப்பகம்

www.padippakam.com



நான் பிறந்து வளர்ந்தது பழனிக்குப் பக்கத்தில் உள்ள ஒரு சிறு விவசாயக் குடும்பத்தில். பழனி முனிசிபல் ஹைஸ் கூலில்தான் படிப்பு. கோவையில் பி.யூ.சி படிப்புக்குப் பிறகு பி.எஸ்சி. (பௌதிகம்) மதுரை தியாகராயர் கல்லூரியில் படித்தேன். அப்போது அங்கு நிறைய அரசியல் கூட்டங் களும், நிகழ்ச்சிகளும் நடந்துகொண்டே இருக்கும். பெரியார், அண்ணா ஆகியோரின் நூல்களைப் படிப்பேன். அப்போது பெ. சீனிவாசன் (காமராஜரைத் தோற்கடித்தவர்) மாணவர் சங்கத்தில் தீவிரமாகச் செயல்பட்டவர்களில் ஒருவர். கா. காளிமுத்து, நா. காமராசன் போன்றவர்கள் என் இளவல்கள்.

சங்க இலக்கியத்தில் ஈடுபாடு வந்தது. அவ்வை துரைசாமிப் பிள்ளை, மா. ராசமாணிக்கம், அ.கி. பரந்தாமன், இலக்குவனார் போன்ற பெரியபெரிய பேராசிரியர்கள் இருந்தார்கள். அவ்வை நடராசன் சிறிது காலம் பயிற்று நராகப் பணியாற்றினார். இராம. சுந்தரம் போன்றோரும் இருந்தனர். வலுவான தமிழ்ச் சூழல் அங்கு இருந்தது. அரசியல் சூழலும் இருந்தது.

ஏ.எம்.ஐ.இ. படிப்பதற்காகத்தான் சென்னை வந்தேன். ஆறு மாதத்திற்கு மேல் எனக்கு அந்தப் படிப்புப் பிடிக்க வில்லை. ஊருக்குத் திரும்பிவிட்டேன். தெலுங்கு மொழியை எழுதப் படிக்கக் கற்றுக்கொண் டேன். அடுத்த ஆண்டு எம்.ஏ. படிக்க முடிவு செய்தேன். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அப்பொழுது தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் மொழியியல்துறைத் தலைவர். அங்கு எனக்கு மொழியியல் படிக்க இடம் கிடைத்தது. சென்னைப் பல்கலைக்கழகத்திலும் தொல்லியல் படிப்புக்கு விண்ணப் பித்திருந்தேன். அங்கு சென்று பார்த்தபோது அறிவிப்புப் பலகையில் தேர்வுசெய்யப்பட்டோரின் பட்டியலில் என் பெயரும் இருந்தது. சேர்க்கைத் தேதி முடிந்த நிலையில் பேராசிரியர் டி.வி. மகாலிங்கத்தைச் சென்று பார்த்தேன். அவருடைய ஆலோசனையின் பேரில் பதிவாளரின் அனுமதி பெற்றுத் தொல்லியல் படிப்பில் சேர்ந்தேன்.

**சலபதி:** அப்போதே சென்னைப் பல்கலைக் கழக வரலாற்றுத்துறை இரண்டு பிரிவுகளாக இருந்ததல்லவா?

1962இல் நான் சேர்வதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே வரலாற்றுத்துறையை இரண்டாகப் பிரித்திருந்தனர். ஒன்று இந்திய வரலாற்றுத்துறை. அதற்கு கே. கே. பிள்ளை தலைவராக இருந்தார். அதிலிருந்து பண்டைய வரலாறு மற்றும் தொல்லியலைத் தனியாகப் பிரித்து அதற்கு டி. வி. மகாலிங்கத்தைத் துறைத் தலைவராக நியமித்தனர்.

**சலபதி:** அப்பொழுது யாரெல்லாம் ஆசிரியர்களாக இருந்தார்கள்?

துறைத்தலைவர் மகாலிங்கம். அதற்கு அடுத்த நிலையில் கிருஷ்ணமூர்த்தி, குருராஜராவ், ஆர். செண்பக லட்சுமி ஆகியோர். மைசூரிலிருந்து கல்வெட்டிற்காக வந்த சுந்தரம் என்பவர் சிறிது காலம் இருந்துவிட்டுச் சென்றுவிட்டார். கிருஷ்ணமூர்த்தி, குருராஜராவ் இருவரும் தொல்லியல் துறையில் இருந்து வந்தவர்கள். செண்பகலட்சுமி வரலாற்றுத் துறையிலிருந்து வந்தவர்.

**சலபதி:** நீலகண்ட சாஸ்திரி உங்களுக்குப் பாடம் எடுத்திருக்கிறாரா?

அவர் நீண்ட நாட்களுக்கு முன்பே ஓய்வு பெற்று விட்டதால் அந்த வாய்ப்புக் கிட்டவில்லை. கூட்டங் களில் சில பேச்சுக்களைக் கேட்டதோடு சரி. நீலகண்ட சாஸ்திரியோடு நேராகப் பேசியதே இல்லையென்று சொல்லலாம். கே. கே.பிள்ளை, எம். ஆரோக்கியசாமி ஆகியோருடன் நல்ல தொடர்பு இருந்தது.

எம்.ஏ. முடித்த பிறகு ஆராய்ச்சிப் படிப்பைத் தொடர்ந் தேன். அப்பொழுதெல்லாம் எம். லிட் பண்ணி விட்டுதான் பி. எச்டி. பண்ண முடியும். தலைப்பு "Political Geography" என்று டி. வி. மகாலிங்கமே கொடுத்தார். கல்வெட்டுகளில் வரும் இடங்களின், நாடுகளின் பெயர்களை முதலில் தொகுக்கச் சொன்னார்; தொகுத்துக்கொண்டிருந்தேன். அதற்குப் பிறகு கல்வெட்டு ஆண்டறிக்கைகளை எல்லாம் வாசித்துக்கொண்டு இருப்போம்.

எம். லிட் முடிகிற சமயத்தில் (1966) "Topographic List of Inscriptions of Tamilnadu & Kerala" என்ற பெரிய யூ. ஜி. சி திட்டம் வந்தது. டி. வி. மகாலிங்கம் தலைவர். அதுவரை கிடைத்த கல்வெட்டுகளை வட்டம், மாவட்டம் வாரியாகப் பிரித்துத் தொகுப்பதுதான் திட்டம். எங்களுடைய பணி தமிழ்நாடு, கேரளாவில் உள்ள கல்வெட்டுகளைத் தொகுப்ப தோடு தமிழ்நாட்டில் இருக்கும் தெலுங்கு மற்றும் கன்னடக் கல்வெட்டுகள் பற்றிய குறிப்புகளை மைசூர் மையத்திற்குத் தரவேண்டும். கர்நாடகத்திலும், ஆந்திராவிலும் இருக்கும் தமிழ் கல்வெட்டுகளைத் தொகுத்து மைசூர் மையம் எங்களுக்கு வழங்கவேண்டும்.

13ஆம் நூற்றாண்டுவரை உள்ள கல்வெட்டுகளை ஊர்வாரியாகப் பிரித்துத் தொகுக்கும் பணியைச் செய்து முடித்தோம். அதனைப் பின்னர் 10 தொகுப்பாக ICHR வெளியிட்டது. இது எனக்கொரு நல்ல அனுபவமாக இருந்தது. கல்வெட்டுகளைத் திரும்பத்திரும்ப படிப்பது, பாடங்களைப் படித்து அதற்கு ஆங்கிலத்தில் விளக்கக் குறிப்புகள் எழுதுவது போன்றவற்றால் எனது அனுபவம் விரிவடைந்தது. எம். லிட்டுக்கான தரவுகளையும் தொகுத்து முடித்திருந்தேன். நிலப்படம் வரைவது மட்டும் எஞ்சி இருந்தது. மாலை 5 முதல் 7 மணிவரை பல்கலைக்கழக

**காலத்திற்குக் காலம் இடத்திற்கு இடம் செய்திகள் மாறிக்கொண்டேயிருப்பதைப் பார்க்க முடிந்தது. நில உரிமைக்கும் பிராமணர்களுக்கும் நிறைய தொடர்பு இருந்ததும் தெரிந்தது. பிராமணர்களுக்கும் அரசர்களுக்கும் உள்ள தொடர்பை அறிவதற்கும் இது மிகப் பயன்படுகிறது.**




அரங்கிலேயே வைத்து அந்தப் படங்களை வரைந்து முடித் தேன். 1967இல் பர்ட்டன் ஸ்டெய்ன் இங்கு வந்தார். அவர் Hartshorne எழுதிய Geography அடிப்படைக் கொள்கைகள் பற்றிய ஒரு நூலைக் கொடுத்து அதைப் படிக்கும்படி கூறினார். தான் எழுதிய கட்டுரையினை வரைவு நிலை யிலேயே பலபேரிடம் கொடுத்து அது சரியா என்று பார்க்கச் சொல்லுவார். இந்த வகையில் அவர் அடிக்கடி வருவது பயனுள்ளதாக இருந்தது.

**சலபதி:** அவருடைய "Peasant State" என்ற புத்தகத்தில் 'நாடு' பற்றிய இயலை முழுவதும் உங்க ளுடைய Political Geography நூலைத் தழுவித்தான் எழுதியிருக் கிறார். அந்த ஆய்வேடு நூலாக வந்த பிறகுதான் அவர்



படிப்பகம்

www.padippakam.com



பார்த்தாரா? அல்லது எழுதப்படும்போதே பார்த்தாரா?

என் ஆய்வுக்காக முதல் கட்டத்தில் நான் தமிழ்நாடு முழுக்க இருக்கிற நாட்டுப்பிரிவுகளைப் பற்றி செய்திகளைத் தொகுத்தேன். 'Political Geography of the Chola Country' என்ற தலைப்பாக இருந்தாலும்கூடத் தரவுகளைப் பொறுத்தவரை கல்வெட்டு ஆண்டறிக்கைகளில் பிரித்துப் பார்க்க இயலாது. எல்லாம் சேர்ந்துதான் இருக்கும். ஏனெனில் கல்வெட்டுகளை முறையாகத் தொகுக்கவில்லை. எந்தந்தெந்த ஊர்களுக்குப் போகிறார்களோ அங்கே எல்லாம் இருப்பதைக்கொண்டு அந்தந்த ஆண்டுக்குரிய அறிக்கையை வெளியிடுவார்கள். Index எதுவும் கிடையாது. எல்லா ஊர்ப் பெயர்களையும் அப்போது வந்ததுவரை எடுத்து வைத்திருந்தேன். அதை ஓரளவுக்கு முறைப்படுத்தி ஒவ்வொரு நாட்டிற்குக் கீழேயும் இத்தனை ஊர்கள், இன்றைக்கு இருக்கக்கூடிய புதுஊர் (நிகரான ஊர்), ஆதாரம், வேறு சில குறிப்புகள் என எல்லாவற்றையும் அட்டவணையாக்கி இருந்தேன். தமிழ்நாடு முழுக்க மண்டலமாகப் பிரித்து வைத்திருந்தேன். பர்ட்டன் ஸ்டெய்ன் வந்த நேரத்தில் அதைத் தட்டச்சுச் செய்து கொண்டிருந்தேன். அவர் அதைப் பார்த்துவிட்டு தனக்கு மிகவும் பயன்படும் என்றார். ஆய் வேடு எழுதுவதற்கு முன்பே அதை அவரிடம் கொடுத்தேன்.

அப்போதுதான் (1968) சென்னையில் உலகத் தமிழ் மாநாடு நடந்தது. அதற்காக நொபொரு கராஷிமா வந்தார். அதுவரை அவரோடு எனக்குத் தொடர்பு கிடையாது. கராஷிமாவும் இந்தப் பட்டியலைப் பார்த்து விட்டுத் தனக்கும் வேண்டும் என்று கேட்டார். அவருக்கும் கொடுத்தேன். இந்த வகையில்தான் அவர்களோடு தொடர்பு ஏற்பட்டது. அதன் பிறகுதான் ஆய்வேடு எழுதினேன். எழுதும்போது ஸ்டெயினிடம் பேசினது எனக்கு ஓரளவு பயனாக இருந்தது. இருப்பினும் அவர் நினைக்கும் அளவிற்கு எனக்குப் பயிற்சி இல்லை. Sociology போன்றதை அப்போது படித்ததே கிடையாது. ஆய்வேடு எழுதி முடித்ததும் ஒரு நகல் அனுப்பி வைத்தேன். அதைப்பற்றி நிறைய Comments எழுதி அனுப்பினார். ஆனால் சில செய்திகளில் அவருக்கு உடன்பாடு இல்லை. அதாவது மையப்படுத்தப்பட்ட அரசுக்கு அனுசரணையாக என் ஆய்வில் இருந்த தொனி அவருடைய ஆய்வுக்கு மாறாக இருந்தது.

**சலபதி:** கராஷிமாவுடனான உறவு பற்றிச் சொன்னீர்கள்? அவருடனான ஆய்வு சார்ந்த உறவு எப்படி இருந்தது?

71 இல் மேலூர் அரசினர் கல்லூரியில் பணியில் சேர்ந்த பிறகுதான் மதுரைப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்ட ஆய்வுக்காகப் பதிவுசெய்தேன். எம். லிட் முடித்திருந்ததால் முனைவர் பட்டப்படிப்புக்கு நெறியாளர் தேவையில்லை என்றிருந்தது. கராஷிமா சொன்னதன் பேரில்தான் Chola State என்ற தலைப்பை எடுத்துக்கொண்டேன்.

இரண்டு ஆண்டுகள் மேலூரில் பணிபுரிந்தேன். தமிழ் வளர்ச்சி இயக்கத்தில் தமிழ் நாட்டு வரலாற்றுக்கென்று மு. வரதராசனார் தலைமையில் ஒரு குழு அமைத்தார்கள். மயிலை சீனி. வேங்கடசாமி, சாத்தான் குளம் ராகவன், சி. ஈ. ராமச்சந்திரன், கே. கே. பிள்ளை, இரா. நாகசாமி ஆகியோர் அந்தக் குழுவில் இருந்தனர். முதல் தொகுதி கொண்டுவர முடிவுசெய்திருந்த நேரத்தில் அந்தப் பணியை வேறு யாரிடமும் கொடுக்காமல் குழு உறுப்பினர்களிடமே வழங்குவது என முடிவு செய்தார்கள். சாத்தான்குளம் ராகவன், சி. ஈ. ராமச்சந்திரன், இரா. நாகசாமி என்று ஒவ்வொருவரிடமும் ஒரு அத்தியாயம் எழுதச் சொன்னார்கள். க. த. திருநாவுக்கரசு பழம் இனங்கள் குறித்து எழுதினார். அப்பொழுதுதான் மு.வரதராசனார் இப்பணிக்கென்று தனி அலுவலகமும் உதவியாளரும் தேவையென்று விரும்பியிருக்கிறார். தமிழ் வளர்ச்சித் துறையிலேயே ஒரு அலுவலகம் ஏற்படுத்தப்பட்டு இரண்டு ஆராய்ச்சி உதவியாளர்களை தமிழ்த் துறையிலிருந்தும் வரலாற்றுத் துறையிலிருந்தும் அமர்த்தினார்கள். வரலாற்றுத் துறைக்கு நான். முனைவர் பட்ட ஆய்வையும் தொடர்ந்தேன். தமிழுக்குச் செங்கை பொதுவன் என்பவரை நியமித்தார்கள்.

**சலபதி:** ஒரு நான்கைந்து தொகுதிகள் வந்தன இல்லையா? வந்தவரைக்கும் அவை எப்படியிருந்தன?

முதல் தொகுதிக்கான பணி நடைபெறும்போது நான் இருந்தேன். இரண்டாவது தொகுதியைப் பிரித்துக் கொடுக்க வேண்டும் என்று சொன்னேன். அனுபவம் மிக்க பேராசிரியர்கள் முப்பது பேரின் பெயர்களைப் பட்டியலிட்டு அவர்களிடம் அப்பணியைப் பிரித்தளித்து, பிறகு அவர்கள் எழுதித் தருவனவற்றைத் தொகுத்துக்கொள்ளலாம் என்று சொன்னேன். பட்டியலைக் கொடுத்தவுடன் மு. வ. அதை ஏற்றுக் கொள்ளவில்லை. அது நடக்காது என்று ஒரே வார்த்தையில் மறுத்துவிட்டார். அதனால் இரண்டாம் தொகுதியின் உருவாக்கத்தில் என்னால் எதுவும் செய்ய இயலவில்லை. சாத்தான்குளம் ராகவன் மட்டும் ஒரு தனித்தொகுதியாகப் போடும் அளவுக்கு சிந்து வெளி நாகரிகத்தைப் பற்றி ஒரு பெரிய ஆய்வுரை எழுதியிருந்தார். ஆனால் ஆழ்ந்து பரிசீலித்தபொழுது அதில் புதிதாக எதுவுமில்லை. மற்றவர்கள் எழுதிக் கொடுத்திருந்ததை மட்டும் பல மாற்றங்களுக்குட்படுத்தி திருத்தி அளித்தேன்.

எழுதியதில் நிறைய மாற்றங்கள் செய்துதான் வெளியிட்டேன். அவைகூட அவர்கள் பெயரில்தான் வந்திருக்குமே தவிர என் பெயரில் வந்திருக்காது. ஆனால் தொகுப்பாளர் என்ற முறையில் மிக திருப்தியாக இருந்தேன். இதனால் முதல் தொகுப்பில் ஒரு சீர்மை இருக்கும். மேலும், 1973 வரையிலான தகவல்கள் அதில் ஓரளவுக்கு முழுமையாக இடம் பெற்றிருக்கும். அந்த நேரத்தில்தான் கராஷிமாவுடன் எனக்கு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. ஜப்பானில் உதவித் தொகையுடன் கூடிய ஆராய்ச்சிப் பணிக்கான வாய்ப்பு ஒன்று இருக்கிறதென்றும், என்னை அங்கு வர முடியுமா என்றும் கேட்டார். அதற்கு இசைந்தேன். திருமணமாகிச் சில மாதங்கள் ஆகியிருந்த நிலை. துணைவியாரோடு 1973 நவம்பரில் அங்கு செல்லும் வாய்ப்பேற்பட்டது.

**சலபதி:** அப்பொழுதுதான் சோழர் கல்வெட்டுகளில் பெயர்கள் அடைவு வேலையைத் தொடங்கினீர்களா?

ஆம். முதலாண்டு அட்டைகளில் எழுதத் தொடங்கினோம். Hole sort என்று ஒரு கார்டைப் பயன்படுத்தினோம். கணினி அதிகம் புழக்கத்திற்கு வராத காலம்


படிப்பகம்

www.padippakam.com



அது. பெரிய கணினிகள் இருந்தன. அதில் பணிபுரிவது மிகவும் கடினம். முதன் முதலில் அதை இதற்காகப் பயன்படுத்தினோம். மொத்தம் ஒன்பதாயிரத்து அறுநூறு தரவு அட்டைகள். முதலில் ஒரு மாவட்டத்தை (வட ஆர்க்காடு) மட்டும் எடுத்துக்கொண்டு செய்தோம். அது அதிகமில்லை. சுமார் ஆயிரம் அட்டைகளுக்குள்தான் இருக்கும். அவற்றைப் பிரித்து ஆய்வு செய்வது எளிதாக இருந்தது. பிறகுதான் சோழர் காலத்திய கல்வெட்டுகளில் உள்ள பெயர்கள் பற்றிய தகவல்கள் முழுமையும் இம் முறையில் தொகுத்தோம்.

**சலபதி:** முற்றிலும் புதிய முறையில் கணினி பயன்படுத்தி நீங்கள் பகுப்பாய்வு செய்தீர்கள். இதன் முடிவு என்ன? அதாவது அதற்கு முந்தைய பகுப்பாய்வுக்கும் இதற்கும் என்ன வேறுபாடு? எந்த வகையில் சோழர்காலச் சமுதாயம் பற்றிய புரிதலை மாற்றியமைத்தது, ஆழப்படுத்தியது?

டி. வி. மகாலிங்கம் போன்றவர்களும் அட்டைகளைப் பயன்படுத்தித்தான் ஆய்வு செய்தனர். ஆனால் ஒவ்வொரு முறையும் வரிசைக்கிரமமாக எல்லா அட்டைகளையும் பார்க்க வேண்டியிருக்கும். வேண்டிய தகவலை உடனடியாக எடுக்க முடியாது. hole sort கார்டுமுறை ஒரு வகையான கம்ப்யூட்டர் முறைதான், இவையும் கம்ப்யூட்டருக்காக வடிவமைக்கப்பட்ட அட்டைகள்தான். ஒரு மணிநேரம் செய்ய வேண்டிய பகுப்பாய்வை Hole Sort Machine இல் பத்து நிமிடத்திற்குள் முடித்து விடலாம். சோழநாட்டின் ஒரு பகுதியைச் சேர்ந்த கல்வெட்டுகள் பற்றிய தகவல்கள் வேண்டு மென்றால் அவற்றை சுலபத்தில் தனியே பிரித்து விடலாம். தனித் தனியாகப் பார்த்தால் *300* வகையான செய்திகள் இருக்கும். *9600* கார்டுகள், ஒவ்வொன்றிலும் ஏறத்தாழ *300* தகவல்கள் என்று மொத்தமாகப் பார்க்கு மிடத்து ஏராளமான தகவல்கள் இருந்தன. இவையெல்லா வற்றையும் மரபு வழியில் பிரித்து ஆய்வு செய்வதற்கு முடியாது. கணினி மூலம் ஆய்வு செய்யுங்கள்; நான் வேண்டு மென்றால் உதவுகிறேன் என்று தோரு மத்சுயி என்ற வங்காளத்தின் பொருளியல் வரலாற்றை ஆராய்ந்த ஜப்பா னியப் பேராசிரியர் கூறினார். முதலாண்டு ஒரு மாவட்டத்தை மட்டும்தான் ஆய்வு செய்தோம். தோக்கியோ பல்கலைக்கழகத்தில் ஒரு பெரிய கம்ப்யூட்டர் இருந்தது. ஒரு கட்டிடம் முழுக்க அடைத்துக் கொண்டிருக்கும். தோரு மத்சுயி அவ்வப் பொழுது Programme எழுதிக் கொடுப்பார். இதனால் இதுவரையிலும் நம்மிடம் செய்திகள் இருந்தாலும் இந்த வகையில் பல புதிய செய்திகளை இணைத்துப் பார்க்க முடிந்தது. கால வேறுபாட்டையும் காலத்திற்குக் காலம் செய்திகள் மாறிக்கொண்டேயிருப்பதை யும் பார்க்க முடிந்தது. இடத்திற்குஇடம் செய்திகள் மாறுவதும் புலப்பட்டது. நில உரிமைக்கும் பிராமணர் களுக்கும் நிறைய தொடர்பு இருந்ததும் இதன் மூலம் தெரிந்தது. அப்படியிருக்கும்போது பிராமணர்களுக்கும் அரசர்கள் முதலிய பிற பிரிவினருக்கும் உள்ள தொடர்பு என்ன என்பதை இவற்றிலிருக்கும் பெயர்கள் முதலியவற்றைக் கொண்டு அறிவதற்கும் இது மிகப் பயன்படுகிறது.

**சலபதி:** எழுபதுகளிலேயே வரலாற்றுத் தரவு ஆய்வுக்கு கணினியைப் பயன்படுத்தியிருக்கிறீர்கள். எனக்குத் தெரிந்து எழுபதுகளில் வரலாற்றுத் துறையில் உலக அளவில்கூடக் கம்ப்யூட்டரை யாரும் அதிகம் பயன்படுத்த வில்லை. இங்கிலாந்தின் மேட்டிமை வர்க்கம் பற்றி ஆராய்ந்த பிரின்ஸ்டன் பல்கலைப் பேராசிரியர் லாரன்ஸ் ஸ்டோன் கூட 1970களில்தான் கணினியைப் பயன்படுத்து கிறார். உங்களுடைய இந்த முறைக்கு எப்படிப்பட்ட வரவேற்பு இருந்தது? மேலும், தொண்ணூறுகளில் கணினி மிகப் பெரிய வளர்ச்சி பெறுகிறது. உங்களுடைய ஆய்வு முறைகளை அதற்கேற்றவாறு எப்படித் தகவமைத்துக் கொண்டீர்கள்?

சோழர் கல்வெட்டுப் பெயர்ச்சொல் அடைவு வெளிவந்த பொழுது பல பிரதிகள் விற்பனையாயின. எனினும் அது பெரிய அளவில் பயன்படுத்தப்பட்டது என்றோ, பெரிய விளைவு எதுவும் ஏற்பட்டது என்றோ சொல்ல முடியாது. ஏனென்றால் செய்தவர்களும் நாங்கள்தான், பயன்படுத்திக் கொள்கிறவர்களும் நாங்கள்தான்! பின்னால் இதே செய்திகளை Personal Computer இல் இட்டுத் தரவுகளாகத் தொகுத்து ஒரு தளம் உருவாக்கலாம் என்று தீர்மானித்தோம். *1990*இல்தான் இது சாத்தியமாயிற்று. பழைய முறையில் சேகரித்து வைத்திருந்த தகவல்கள் அழிந்து போயிருந் தமையால், புத்தகங்களையும் கார்டுகளையும் ஆதாரமாகக் கொண்டு மீண்டும் சேகரித்தோம். இப்போதைய தொழில் நுட்ப வளர்ச்சியினால் யார் வேண்டுமானாலும் இவற்றைப் பயன்படுத்திக்கொள்ள முடியும். தகவல் தளம் உருவாகி யிருக்கிறது. இப்படியொரு ஒருங்கிணைந்த தகவல்கள் – இடங்களின் பெயர்களாகட்டும் ஆட்களின் பெயராகட்டும் கல்வெட்டுகளைப் பற்றிய செய்திகளாகட்டும் – ஒருவருக்கு உடனடியாகச் சில தகவல்கள் வேண்டுமென்றால் அதைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும். இருபதாயிரத்துக்கு மேற்பட்ட ஆவணங்கள் அங்கே இருக்கின்றன. அவற்றில் எப்போது வேண்டுமானாலும் தேவையான மாற்றங்களைச் செய்துகொள்ளலாம். இப்பொழுது நாங்கள் உருவாக்கிக்கொண்டிருக்கிற நிலப்பட ஏட்டுக்கு இத்தகவல்கள்தான் அடிப்படை. தற்பொழுது தொல்லியல் தொடர்பான செய்திகளுக்கும் ஒரு தளம் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆக இது விரிவடைந்து கொண்டிருக்கிறது.

**தமிழ் மொழி, இலக்கியம் மற்றும் பிறதுறை தொடர்பான எந்தவொரு தகவலைப் பெறுவதற்கும் சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் இடமாகவும் தமிழ்ப் பல்கலைக்கழகம் இருந்திருக்க வேண்டும். எல்லாவகையான சுவடிகள் மற்றும் கையெழுத்துப் பிரதிகளும் இங்கு தொகுத்து வைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அப்படியில்லை.**



**சலபதி:** தஞ்சை தமிழ்ப் பல்கலைகழகத்திற்குப் பெரிய நம்பிக்கைகளோடு போனீர்களா?

ஆம். தொடக்கத்தில் கல் வெட்டியல் துறை என்றுதான் சொல்லப்பட்டது. பிறகு அதோடு அகழ்வாய்வும் சேர்த்துக் கொள்ளப்பட்டது. தொல்லியல் பேராசிரியர் என்றுதான் எனக்குப் பதவி வழங்கப்பட்டது. புலவர் செ. இராசு கல்வெட்டியல் பேராசிரியராக இருந்தார். எங்களுக்குள் நல்ல புரிதல் இருந்ததால் இருவரும் இணைந்து பல காரியங்களைச் செய்ய முடிந்தது. முதல் பத்தாண்டுகளுக்குத் துறை நன்றாகவே இருந்தது. துணைவேந்தர்களும் அதற்கு ஊக்கம் கொடுத்தார்கள். பல்கலைக்கழக நிதியுதவியும் கிடைத்தது. நாங்கள் செய்த பெரிய பணிகள் எல்லாம்



படிப்பகம்

இந்தப் பத்தாண்டுகளுக்குள் நடந்தவைதான். முக்கியமாக அகழ்வாய்வு, கல்வெட்டுகளைத் தொகுப்பது, வெளியிடுவது. புலவர் இராசு பிற்காலத்தைச் சேர்ந்த கல்வெட்டுகள் மற்றும் செப்பேடுகளை நிறையத் தொகுத்தார். தொல்லியல் அகழ்வாய்விலும் ஈடுபட்டோம்.

**சலபதி:** எங்கெல்லாம் அகழ்வாய்வு செய்தீர்கள்?

மூன்று இடங்களில் செய்தோம். ஒன்று தஞ்சாவூருக்குப் பக்கத்திலுள்ள வல்லம். முத்தரையர்களுக்கு அது ஒரு முக்கியமான ஊர். அங்கு கோட்டைமேட்டில் ஆய்வு செய்தோம். இரண்டாம் ஆய்வு கொடுமணல் என்ற ஈரோடு மாவட்டம் சென்னிமலைக்குப் பக்கத்திலுள்ள ஊர். அது சங்ககாலத்திற்கு முந்தைய ஓர் ஊர். கொடுமணலில் சுமார் நான்கு ஆண்டுகள் – வருடத்திற்கு மூன்று மாதங்கள் என்ற அளவில் –அகழ்வாய்வுப் பணியை மேற்கொண்டோம். போதிய நிதி வசதி இல்லாததால் இடையில் சிறிது தொய்வு ஏற்பட்டது. அந்தச் சந்தர்ப்பங்களில் அகழ்வாய்வுப் பணியை ஒத்திவைத்துவிட்டு மாவட்டங்கள் தோறும் சென்று கள ஆய்வுப் பணியினை மேற்கொண்டோம். எங்களுடன் இருந்த க. ராஜன் பல ஊர்களுக்கும் சென்று பல பழங்கால இடங்கள் பற்றிய விவரங்களைத் தொகுக்கும் முக்கியமான பணியைச் செய்தார். அப்பொழுது நான் தோக்கியோ மற்றும் சென்னைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சிலரோடு சேர்ந்து கடற்கரைக் கள ஆய்வுகளை மேற்கொண்டேன். பழங் காலத் துறைமுகங்கள் தொடர்பான செய்திகளைத் தொகுத்தோம். மேற்குக் கடற்கரை, கிழக்குக் கடற்கரை என இரண்டு புறங்களிலும் நான்கு ஆண்டுகளுக்கு – மாதத்திற்கு பத்துப் பதினைந்து நாட்கள் என எங்கள் ஆய்வினை மேற்கொண்டோம். பல செய்திகள் – குறிப்பாகச் சீனாவுக்கும் தென்னிந்தியாவுக்கும் இடையேயான தொடர்புகள் – எங்களுக்குக் கிடைத்தன. அதைத் தொடர்ந்து தென் கிழக்காசிய நாடுகளிலும் ஆய்வு செய்யும் திட்டம் உருவானது. இதெல்லாம் முழுவதுமாக ஜப்பானின் உதவியுடன் மேற்கொள்ளப் பட்டன. விடுப்பு அளித்ததைத் தவிரப் பல்கலைக்கழகம் வேறு எந்த உதவியும் செய்யவில்லை. அதிலும்கூட முதல் இரண்டாண்டுகளுக்குப் பிறகு விடுப்பு மறுக்கப் பட்டது. நாங்கள் சொந்த விடுப்பிலேயே சென்று வரவேண்டியிருந்தது. அதன் தொடர்ச்சியாகப் பெரியபட்டிணத்தில் அகழ்வாய்வு மேற்கொண்டோம். அங்கு கிடைத்த சில ஓடுகளைப் பற்றித் தகவல் கிடைத்தது. அவற்றை நேரில் சென்று பார்த்த பொழுது அவை பீங்கான் ஓடுகளாக இருந்தன. இவ்வகை ஓடுகள் சிலவற்றை நான் ஏற்கெனவே ஜப்பானிய அருங்காட்சியகங்களில் பார்த்திருக்கிறேன். அவற்றைப் ஒளிப்படம் எடுத்து ஜப்பானுக்கு அனுப்பினேன். அங்கிருந்த இத்துறை நிபுணர் மிக்காமி அந்த ஓடுகள் மிக முக்கியமானவை என்றும், தென்சீனாவில் சுங் அரச மரபுக் காலத்தில் வணிகத்துக்காகவே செய்யப்பட்டவை என்றும் சொன்னார். இதற்குப் பிறகுதான் அவர்களுக்கும் இவற்றில் பெரிய ஈடுபாடு ஏற்பட்டது. தென்னிந்தியாவில் இது தொடர்பாக ஒரு கள ஆய்வை மேற்கொள்ள வேண்டுமென்று முடிவு செய்தார்கள். அவர்களுடைய உதவியோடு கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.



இராமேசுவரத்திற்கு அருகில் இருக்கிற ஒரு சிறிய கிராமமான பெரியபட்டணம். பாண்டியர்கள் காலத்தில் ஒரு முக்கியமான துறைமுகமாக இருந்திருக்கிறது. கள ஆய்வுக்குப் பிறகு பெரிய பட்டணத்தைத் தேர்ந்தெடுத்து அகழ்வாய்வுகள் மேற்கொண்டோம். அவற்றில் கிடைத்த ஓடுகளை ஜப்பானில் இருந்து வந்திருந்த செராமிக் நிபுணர்கள் ஆய்வு செய்தார்கள். பதினான்காம் நூற்றாண்டு வரை இது ஒரு முக்கியமான துறைமுகமாக இருந்திருக்கிறது என்பது தெரியவந்தது. அதற்கு முன்பு ஒரு முக்கியத் துறைமுகமாக இருந்த கொற்கைக்குப் பக்கத்திலிருந்த காயல்பட்டினம் செயலற்றுப்போன நிலையில் இது துறைமுகமாக விளங்கி இருக்கிறது. அந்தத் தருணத்தில் மதுரையில் முஸ்லீம்கள் ஆட்சி சுமார் ஐம்பது ஆண்டு காலம் இருந்தது. அப்பொழுதுதான் இபின் பதுதா பல இடங்களுக்கும் சென்றுவிட்டு இங்கு வந்தார். பிறகு மதுரைக்குச் சென்றார். திரும்பிச் செல்லும் பொழுது இங்கிருந்து கப்பல் ஏறியதாகவும் ஒரு தகவல் உண்டு.

**சலபதி:** இந்த மூன்று அகழ்வாய்வு அறிக்கைகளும் இன்னும் வெளிவரவில்லை அல்லவா?

இவை பற்றிய மூன்று அறிக்கைகளும் முழுமையாக வெளிவரவில்லை. வல்லம் அகழ்வாய்வு பற்றிய அறிக்கைகள் தமிழர் நாகரிகம் என்ற தமிழ்பல்கலைக் கழக வெளியீட்டில் முழுமையாக வந்தது. பெரிய பட்டணம் பற்றியும் கொடுமணல் பற்றியும் சில கட்டுரைகள்தான் வந்துள்ளன. முழு அறிக்கையும் வரவில்லை. எல்லோருக்கும் அதைப் பற்றிச் சில தகவல்கள்தான் தெரியும்.

**சலபதி:** 1990க்குப் பிறகு தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு என்ன வாயிற்று?

அதற்குப் பிறகுதான் பல்கலைக் கழகங்களின் தரம் தாழ்ந்து வீழ்ச்சியடைகின்றது எனலாம். குறிப்பாகத் தமிழ்ப் பல்கலைக் கழகம். நிர்வாகம் சார்ந்த குறைபாடுகள் ஒருபுறம். ஒவ்வொரு முறையும் அரசு மாறும்போது தமிழ்ப்பல்கலைக்கழகத்தின் செயல்பாடுகளில் அது எதிரொலிக்கும். மற்றொன்று நிதிப் பற்றாக்குறை. அதன் காரணமாகப் பல பணியிடங்கள் நிரப்பப்படவே இல்லை.

**சலபதி:** பொதுவாகப் பல்கலைக் கழகங்கள் வீழ்ச்சியடைந்திருக்கின்றன என்று சொல்லும்பொழுது அதில் ஆசிரியர்களுக்கு எந்தப் பங்கும் இல்லையா? ஆசிரியர்கள் முறையாக வாசிக்கிறார்களா? பாடம் நடத்துகிறார்களா? என்பன போன்றவற்றுக்கும் இந்த வீழ்ச்சிக்கும் தொடர்பு உண்டா?

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் முதலில் மாணவர்கள் இல்லை. முதல் துணைவேந்தர் வ. ஐ. சுப்ரமணியம் மாணவர்களே கூடாது என்று சொல்லிவிட்டார். அகஸ்தியலிங்கம் காலத்தில்தான் மாணவர்களே சேர்க்கப்பட்டார்கள். தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் கலைக்களஞ்சியம் தொகுக்கத்

www.padippakam.com



தொடங்கிய போதுகூட முதலில் ஆசிரியர்கள் அதில் எதுவும் செய்யக்கூடாதென்று துணைவேந்தர் சொன்னார். ஒவ்வொரு ஆசிரியரும் தமக்கென்று ஒரு தனித்திட்டத்தை வகுத்துக்கொண்டு ஆய்வு மற்றும் களப் பணிகளில் ஈடுபட வேண்டுமெனவும், பிறகு அதைப் பற்றி இரண்டாண்டு மூன்றாண்டுகளில் அறிக்கை வடிவில் கொடுக்க வேண்டுமென்றும் விரும்பினார். முதல் பத்தாண்டுகள்வரை ஒவ்வொருவரும் தமது பணியினைச் சிறப்பாகவே செய்து வந்தனர் எனலாம். தொடக்கத்தில் அதிகமாக எழுதுவதே சிறப்பானதெனப் போற்றப் பட்டது. பலர் பக்கம் பக்கமாக எழுதினார்கள். ஒவ்வொரு அறிக்கையும் குறைந்தபட்சம் 500 பக்கங்கள்வரை எழுதப்பட்டது. இதன் காரணமாக ஆய்வுகளின் உண்மையான தரம் வீழ்ச்சியடையத் தொடங்கியது. தமிழ்ப் பண்பாடு, தமிழ் வரலாறு தொடர்பான ஆய்வுகளுக்காகவே இந்தப் பல்கலைக்கழகம் தொடங்கப் பட்டது. அதில் எங்களுடைய துறை இலக்கியம் சாராத பணியினை மேற்கொண்டாலும் தமிழ் வரலாறு சார்ந்த தரவுகளைத் தேடுவதில் முக்கியப் பங்காற்றியது. இதை இலக்கிய துறையினரும் செய்திருக்க வேண்டும். ஆனால் அங்கு நிலவிய சூழ்நிலை காரணமாக மற்ற இடங்களில் செய்த அதே பணியைத் தனி முக்கியத்துவம் எதுவுமில்லாமல் இங்கும் மேற்கொள்ளும் ஒரு நிலையே இருந்தது. தவிர எல்லாவகையான நூல்களையும் சேகரிக்க வேண்டும் என்பதும் ஒரு திட்டம். அதேபோல் தமிழ் மொழி, இலக்கியம் மற்றும் பிறதுறை தொடர்பான எந்தவொரு தகவலையும் பெறுவதற்கும் சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் இடமாகவும் தமிழ்ப் பல்கலைக் கழகம் இருந்திருக்க வேண்டும். எல்லாவகையான சுவடிகள் மற்றும் கையெழுத்துப் பிரதிகளும் இங்குத் தொகுத்து வைக்கப்பட்டிருக்க வேண்டும். கல்வெட்டுகள், தொல்லியல் சான்றுகள் போன்ற வரலாறு தொடர்பான தரவுகளும் முழுமையாக அங்கே இருந்திருக்க வேண்டும். இப்படி இருக்கும் பொழுது அங்கேயிருக்கும் ஆசிரியர்கள் தமது துறை தொடர்புடைய சந்தேகங்களை மற்ற துறையினரிடம் கேட்டுத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான சூழலும் வாய்ப்பும் இருந்திருக்கும். ஆனால் அப்படி நடக்கவில்லை.

எங்கள் துறையில் அதுவரை செய்யாததை நாங்கள் செய்தோம். எங்களுக்கு முன்னால் இருந்தவர்கள் சோழர் காலக் கல்வெட்டுகளை மட்டும் ஆய்வு செய்தார்கள். பிந்தைய கல்வெட்டுகளை ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளவில்லை. விஜயநகரக் கல்வெட்டுகளைக்கூடப் போகிறபோக்கில்தான் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரை சோழர் காலத்தோடு எல்லாம் முடிந்துவிட்டது. ஆகவே அதற்குப் பிந்தைய கல்வெட்டுகளைத் தொகுப்பது என்ற முடிவுக்கு நானும் புலவர் இராசு அவர்களும் வந்தோம். முதலில் தஞ்சையிலிருந்து தொடங்க முடிவுசெய்து மராட்டியர் காலக் கல்வெட்டுகளைப் புலவர் இராசு தொகுக்கத் தொடங்கினார். பிறகு பிற கல்வெட்டுகளும் தொகுக்கப்பட்டன. இப்பணியின் காரணமாகக் கி. பி. 1600க்குப் பிந்தைய கல்வெட்டுகள் குறித்த ஒரு மரியாதை இப்பொழுது உருவாகியிருக்கிறது. இதுபோன்று இன்னும் பல பகுதிகளிலும் இருக்கக்கூடிய கல்வெட்டுகளும் தொகுக்கப்பட வேண்டும். திட்டமிட்ட கூட்டுமுயற்சிக்குக் கிடைத்த வெற்றியாக இதைச் சொல்லலாம். பிற துறையினரிடையேயும் இதுபோன்ற திட்டங்கள் இருந்தன. ஆனால் கூட்டுமுயற்சி என்பது இல்லாமல் போய்விட்டது.

இன்னொரு குறிப்பிடத்தகுந்த குறைபாடு என்னவென்றால் ஜனநாயகப் பண்பு என்பதே பல்கலைக்கழகத்தில் இல்லை. துணைவேந்தர் சொல்வதைக் கேள்விகளே இல்லாமல் ஏற்றுக்கொள்ளும்பொழுது பிரச்சினைகள் இல்லை. ஆனால் அதை மறுத்தோ, முரண்பட்டோ கருத்துக்களை முன்வைக்கும்பொழுது அவர் தன்னிச்சையாக நடந்துகொள்ளத் தொடங்கினார். தமது கருத்துகளை அழுத்தமாக வலியுறுத்தும் பேராசிரியர்களைப் பல்கலைக் கழகத்தை விட்டே வெளியேற்றுவது போன்ற நடவடிக்கை

**சஞ்சய் சுப்ரமணியம் போன்றவர்கள் இலக்கிய ஆதாரங்களுக்குத் தேவைக்கதிகமான முக்கியத்துவம் அளிப்பதால் அவர்களால் கல்வெட்டுச் செய்திகள் போன்ற நம்பகமான தரவுகளை ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்கிறார் கராஷிமா. நாங்கள் பின்பற்றிய புள்ளியியல் முறையை அவர்களால் சரியாகப் புரிந்துகொள்ள முடியவில்லையோ என்று தோன்றுகிறது.**



களில் இறங்கினார். து. மூர்த்தி அவ்வாறுதான் வெளியேற்றப்பட்டார். எங்களில் சிலர் அவருக்காகப் போராடியபோதும் சாதகமான விளைவுகள் ஏற்படவில்லை.

இப்பொழுது தமிழ்ப் பல்கலைக்கழகம் திசை தெரியாத ஒரு பயணத்தை மேற்கொண்டிருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. தொடக்க நிலையில் பணிபுரிந்த அனுபவம் வாய்ந்த பேராசிரியர்களில் பலரும் ஓய்வு பெற்றுச் சென்றுவிட்டார்கள்.

**சலபதி:** உங்களுடைய ஆய்வை விஜய நகரப் பேரரசு வரையான - ஏறத்தாழக் காலனியத்திற்கு முந்தைய கால கட்டம் வரையிலான - அரசு மற்றும் சமூகக் கட்டமைப்பு குறித்த ஒரு ஆய்வு என்று சொல்லலாம். அண்மையில் சஞ்சய் சுப்ரமணியம், வேல்செரு நாராயண ராவ், ஷுல்மன் ஆகியோர் உங்கள் ஆராய்ச்சி முடிவுகளை விவாதத்திற்கு உட்படுத்தியிருக்கிறார்கள். அந்த விவாதத்தின் அடிப்படை என்ன? அவற்றின் மீதான உங்கள் எதிர்வினை எப்படிப்பட்டது?

இந்த விவாதத்தை அடிப்படையில் சஞ்சய் சுப்ரமணியம் தான் முன் வைத்திருக்கிறார். விஜயநகரப் பேரரசில் பயன்படுத்தப்பட்ட வருவாய்த்துறை சார்ந்த சொற்களை அடிப்படையாகக்கொண்டு நாங்கள் செய்த ஆராய்ச்சிகளைப் பற்றித்தான் அதிகமும் விவாதித்திருக்கிறார். கல்வெட்டுகளில் தனித்தனியாகவும் துணுக்குகளாகவும்தான் செய்திகள் இருக்கின்றன. அவற்றைப் பொருத்தி, மொத்தமாக ஆய்வு செய்வதற்கென்று சில முறைகள் கடைபிடிக்கப் பட வேண்டியிருக்கின்றன. இடம் மற்றும் காலம் சார்ந்து ஒரு தொகுப்புப் பணியை முடித்த பிறகே பகுப்பாய்வுக்குச் செல்ல முடியும். எங்களுடைய அடைவுமுறை அப்படிப் பட்டதுதான். சஞ்சய் சுப்ரமணியம் எழுப்புகிற கேள்வி என்னவென்றால் கல்வெட்டுகளில் இடம்பெற்றுள்ள செய்திகளில் பெரும்பாலானவையும் வரி மற்றும் வருவாய் சார்ந்தவை. அவற்றை வைத்துக்கொண்டு ஒரு அரசின் அமைப்பு மற்றும் செயல்பாடு பற்றிய முடிவுக்கு வர முடியுமா என்பதுதான். ஆனால் கல்வெட்டுகளில் காணப் படும் இந்தச் சொற்களைத் தொகுத்துக் கால வாரியாகச் சுமார் ஐம்பதைந்தாண்டு காலமாகப் பிரித்துக்கொண்டு தொகுத்து ஆய்வு செய்யும்போது ஒரு காலகட்டத்தின் சொற்கள் மற்றொரு கால கட்டத்தில் வழக்கொழிந்தோ, பொருள் மாறுதலுக்குட்பட்டோ வழங்குகின்றன. சில



படிப்பகம்

www.padippakam.com

புதிய சொற்களும் வருகின்றன. சோழர் காலத்தில் கடமை என்ற சொல் அடிக்கடி வருகிறது. ஆனால் விஜயநகரக் காலத்தில் அந்தச் சொல்லாட்சி மறைந்து போய், 'குத்தகை' என்ற ஒரு சொல் வருகிறது. 'ரேகை' என்பன போன்ற வேறு சொற்களும் பயன்படுத்தப்படுகின்றன. இந்த மாற்றத்தின் அடிப்படைகளை ஓரளவுக்கு ஆய்வு செய்யலாம். சொற்களில் தென்படும் மாற்றங் களுக்கும் அரசியல் மாற்றங் களுக்கும் தொடர்பு இருப்பது புரியவருகிறது. இது முதல் நிலை. இந்த மாற்றங்களுக்கான காரணி களை ஆய்வு செய்வது அடுத்த நிலை. இந்த அடிப்படையில் சொற்களை அட்டவணைப் படுத்திக்கொண்டு பிறகு காரண காரிய ஆராய்ச்சியில் ஈடு பட்டோம். சஞ்சய் சுப்ரமணியம் சற்று அவசரமாக இதைப் பார்த்திருப்பார் போலும். சொற் களின் மாறுபாடுகளில் உள்ள முக்கியத்துவத்தைச் சரிவரப் புரிந்துகொள்ளாமல் நாங்கள் தான் அவற்றிற்கு அர்த்தம் கற்பிப் பதாக அவர் கருதுகிறார். சொற் களின் மாறுபாடுகளுக்கும் அரசியல் பொருளாதாரத்திற்கும் தொடர்பு இருப்பதாக அவர் கருதவில்லை. இது புதை மணலில் இறங்குவதைப் போல முடிவும் தெளிவும் அற்றது என்று நினைக்கிறார். இந்தத் தரவுகளை வைத்துக்கொண்டு விஜயநகரப் பேரரசில் நாயக்கர் ஆதிக்கம் ஏற்பட்டது என்ற எங்களுடைய ஆய்வுமுடிவை அவர் மறுக்கிறார். பிற்காலத்தில் மதுரை, தஞ்சாவூர், செஞ்சி போன்ற நாயக்கர் அரசுகள் பற்றி ஏற்கனவே இருந்த வரலாற்றை ஆங்கிலேய மற்றும் போர்ச்சுக்கீசிய ஆவணங்களின் அடிப்படையில் நாயக்கர் களுக்கும் விஜயநகரப் பேரரசுக்கும் இடையே தொன்று தொட்டே ஒரு நெருக்கம் இருந்துவந்ததாகக் கூறுகிறார். சொற்களின் அடிப்படையில் நாங்கள் கண்டறிந்த அரசியல் பொருளாதார மாற்றங்கள் சார்ந்த ஆய்வுகளை அவர் கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை. இந்த ஆய்வே சரியில்லை என்றும் சொல்கிறார். இதற்குப் பதிலளித்து கராஷிமா எழுதிய ஒரு கட்டுரையில் சஞ்சய் சுப்ரமணியம் போன்றவர்கள் இலக்கிய ஆதாரங்களுக்குத் தேவைக்கதிக மான முக்கியத்துவம் அளிப்பதால் அவர்களால் கல்வெட்டுச் செய்திகள் போன்ற நம்பகமான தரவுகளை ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்று சற்றுக் கோபமாகவே எதிர்வினை புரிந்திருந்தார். நாங்கள் பின்பற்றிய புள்ளியியல் முறையை அவர்களால் சரியாகப் புரிந்துகொள்ள முடியவில்லையோ என்று தோன்றுகிறது. கராஷிமாவின் ஆங்கிலநடை போதிய தெளிவைத் தராமல் இருந்ததும் ஒரு காரணமாக இருக்கலாம். நிதானமாகப் படித்திருந்தால் எங்களுடைய ஆய்வு முடிவுகளை அவர் ஒத்துக்கொண்டிருப்பார். சஞ்சய் சுப்ரமணியம் இந்த விஷயத்தில் சற்று உணர்ச்சிவசப்பட்டு விட்டார் என்றுதான் சொல்ல வேண்டும்.

கல்வெட்டுக்களைத் தொகுக்கும் முறையில் நாங்கள் எந்தவிதமான விடுபடல்களுக்கும் இடம் தரவில்லை. இதற்கு முந்தைய வரலாற்று ஆசிரியர்கள் சில குறிப்பிட்ட



கல்வெட்டுகளை மட்டுமே ஆய்வுக்கு எடுத்துக்கொண்டார் கள். நாங்கள் கிடைத்த எல்லா கல்வெட்டுகளையுமே முறையாகத் தொகுத்துக்கொண்டு கால முறைப்படி ஆய்வுசெய்கிறோம். பிறகு சொற்களில் ஏற்பட்ட மாற்றங்களை ஆய்வு செய்கிறோம். சொற்களுக்கு அளிக்கிற விளக்கங் களில் வேண்டுமானால் தவறுகள் இருக்கலாம். கல்வெட்டுகளில் பல செய்திகள் வெளிப்படையாக இல்லை. நிறைய யூகங்கள் செய்ய வேண்டியிருக்கிறது. எனவே ஒவ்வொருவரும் ஒவ்வொரு விளக்கத்தை அளிப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது. யூகங்களில் தவறுகளும் நேரலாம். ஆனால் நாம் மொத்தமாகப் பரிசீலனை செய்தால் தவறுகள் குறைவதற் கான வாய்ப்புகள் உண்டு. பட்டியல் என்பது தொடக்க நிலையிலானது. அதற்கான விளக்கங்கள் இரண்டாவது நிலை. சஞ்சய் சுப்ரமணியம் பட்டியலை மட்டும் எடுத்துக்கொண்டு அதைத் தவறானது என்று விமர்சனம் செய்கிறார். விளக்கங்களை அவர் பார்க்கவில்லை. விளக்கங்கள் அவருடைய கருத்திலிருந்து மாறு படுவதாலும் அவருக்கு ஏற்புடையவையாய் இல்லாததாலும் அவர் அவற்றைப் புறக்கணித்து விடுகிறார்.

**சலபதி:** உங்களுக்கு மர்ரே எஸ். ராஜம் அவர்களுடன் எப்படித் தொடர்பு ஏற்பட்டது? அவருடைய மொத்த அகராதித் திட்டம் பற்றிச் சொல்லுங்கள். மேலும், கல்வெட்டுக் கலைச்சொல் அகராதியை எப்படி உருவாக்கினீர்கள் என்பதையும் கூறுங்கள்.

1955இலேயே மர்ரே ராஜம் தனது பணியைத் தொடங்கி விட்டார் என்று நினைக்கிறேன். பழந்தமிழ் இலக்கியங்களை எளிதாகப் புரிந்துகொள்வதற்குத் தடையாக உள்ள சந்தி களை எளிய முறையில் பிரிப்பதன் மூலம் எல்லோரும் படித்துப் புரிந்துகொள்ள முடியும் என்று நினைத்து அந்தப் பணியை மேற்கொண்டார். மர்ரே அண்டு கம்பெனி என்ற ஏல நிறுவனத்தை நடத்திவந்தார். இலக்கிய ஆர்வம் ஏற்பட்ட பிறகு அவர் தனது ஐம்பதாவது வயதில் அந்தத் தொழிலை விட்டுவிட்டார். ஓரளவுக்குப் பொருளும் சேர்த் திருந்தார். இந்தப் பணியை மேற்கொள்வதற்காக அறக் கட்டளை ஒன்றை நிறுவித் தனது சொத்துகளையெல்லாம் அதற்குக் கொடுத்து விட்டார். சந்தி பிரித்துப் பழந்தமிழ் நூல்களை வெளியிட்ட பின்னர் அகராதி வெளியிட வேண்டும் என்ற விருப்பம் அவருக்குத் தோன்றியது. தெ.பொ.மீ சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்டிருந்த அகராதிக்கு ஒரு திருத்திய விரிவுபடுத்தப்பட்ட பதிப்புக் கொண்டுவர வேண்டும் என்று விரும்பினார். வரலாற்று முறைப்படி அந்த அகராதி அமைய வேண்டும் என்றும், சொற்களுக்கான பொருள் எப்படிக் காலந்தோறும் மாறிக் கொண்டே வருகிறது என்பதையும் காட்ட வேண்டும் என்றும் விரும்பினார். Greater Oxford Dixctionary போல இருக்க வேண்டும் என்பது அவர் நோக்கம். அரசுக்கு ஒரு திட்ட வரைவையும் அளித்தார். சுமார் 15 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்பட்ட அந்தத் திட்டத்தை

www.padippakam.com



அண்ணாமலை, சென்னை, மதுரைப் பல்கலைக்கழகங்கள் சேர்ந்து செய்து முடிக்கலாம் என்றும் யோசித்தார்கள். ஆனால் உரிய ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை. பல்கலைக்கழகத்தால் செய்ய முடியவில்லை என்பது தெரிந்தபின் தானே தனது அறக்கட்டளை மூலமாக அப்பணியினைச் செய்வதற்கு ராஜம் முன்வந்தார். தெ.பொ.மீயிடம் அதற்கான அறிவுரைகளை வழங்குமாறு கேட்டுக்கொண்டார். முதலில் சொல்லடைவு ஒன்றை உருவாக்குவது என்று முடிவு செய்தார். அவருடைய முதல் நோக்கம் கி.பி. 1400 வரையிலான காலகட்டம் சார்ந்த அகராதியை உருவாக்குவதே. 1400க்குப் பிந்தைய காலகட்டத்தைச் சார்ந்த இலக்கியங்களுக்கு வேறு வகையாகச் செய்ய வேண்டும் என்று எண்ணினார். முக்கியமான பேரிலக்கியங்கள் அனைத்துக்கும் சொல்லடைவு செய்து அதற்குப்பிறகு பொருள் எழுதலாம் என முடிவு செய்தார். இதற்காக முக்கியமான இலக்கியங்களை எல்லாம் சந்தி பிரிக்கவும், சொல்லடைவு செய்யவும் கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் பணி புரிந்துகொண்டிருந்த புலவர்கள் பலரிடம் ஒப்படைத்தார். பிறகு அவற்றையெல்லாம் தொகுத்து வரிசைப்படுத்தி குறிப்புகள் எழுதப்பட்டன. 1960இல் தொடங்கி ஒரு ஏழெட்டு ஆண்டுகள்வரை இந்தப் பணி நீடித்தது. நான் அவருக்கு அறிமுகமான தருணத்தில் இந்தப் பணி கிட்டத்தட்ட முடிவுற்றிருந்தது.

1967இல் முதல்கட்டப் பணி முடிந்தது. அதற்குப் பிறகு பொருள் எழுதுவது என்பதற்காக ஒரு நான்கைந்து பேர் பணிபுரிந்தார்கள். மு. சண்முகம் பிள்ளை, கோபாலையர் போன்ற புலவர்கள் அதைப் பதிப்பிக்கும் வேலையில் இருந்தார்கள். அதன் பொருட்டு அவரது வீட்டுக்கருகிலேயே நான்கைந்து வீடுகளைக் கட்டிக் கொடுத்து அவற்றிலேயே தங்கி அப்பணியினை மேற்கொள்ளுமாறு பணிக்கப்பட்டார்கள்.

இலக்கியச் சொற்களுக்குக் காலம் சார்ந்து ஒரு தோராயமான கணக்குத்தான் சொல்லமுடியும். ஆனால் கல்வெட்டுச் சொற்களுக்குச் சரியான ஒரு காலக்கணக்கு உண்டு என்பதால் வரலாற்று ரீதியிலான ஒரு அகராதியில் கல்வெட்டுச் சொற்களையும் இணைத்துக்கொள்ள வேண்டும் என்று நினைத்தார். (இது அல்லாமல் 1400வரை இருந்த உரைகள் – வைணவ உரைகள் நிறைய இருந்தன – போன்றவற்றையும் கணக்கிலெடுத்துக்கொள்ள வேண்டும் என நினைத்தார்.) அதுவரை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மொழியியல் துறையில் இருந்த செ. வை. சண்முகம் செய்த கல்வெட்டுச் சொற்களின் அடைவு மட்டுமே இருந்தது. அந்த நேரத்தில் கல்வெட்டுகளிலிருந்து சொற்பட்டியல் மட்டுமே தயாரிக்கப்பட்டிருந்தது. அங்குப் புலவராக இருந்த சுந்தரேச வாண்டையார் என்பவர் இந்தப் பட்டியலைத் தயாரித்திருந்தார். ராஜம் தனது முயற்சிக்கு அதை அடிப்படையாகக் கொள்ள எண்ணினார். அப்பொழுது நான் டி.வி. மகாலிங்கம் தலைமையில் இயங்கிவந்த திட்டத்தில் ஆய்வுசெய்து கொண்டிருந்தேன். ராஜம் அந்தப் பட்டியலை என்னிடம் கொடுத்து அதில் ஏதாவது திருத்தம் இருந்தால் அதைக் குறிப்பிட்டுச் சொல்லச் சொன்னார். அதைப் பார்த்தபொழுது நிறைய விடுபடல்கள் தெரிந்தன. பரந்த அளவில் ஒரு அகராதியை உருவாக்குவதற்கு அது போதாது என்றும், அது சரியான தொகுப்பு அல்ல என்பதையும் நிறைய தவறுகள் உள்ளன என்பதையும் சுட்டிக் காட்டினேன். அவர் என்னையே திருத்தம் செய்துதருமாறு கேட்டுக்கொண்டார். திருத்தம் செய்வதைவிடப் புதிதாகத் தொகுப்பதே சிறந்தது என்று நான் சொன்னேன். பிறகு அடைவு ஒன்றைச் செய்யச் சொன்னார். தமிழ்நாடு மட்டுமல்லாமல் தமிழ்க் கல்வெட்டுகள் எங்கெங்கெல்லாம் உண்டோ அவையெல்லாவற்றையும் தொகுக்க எண்ணினோம். ஆந்திரா, மைசூர், இலங்கை போன்ற இடங்களைச் சேர்ந்த கல்வெட்டுகள் அவை. இவை எல்லாவற்றையும் தொகுத்துக் கொண்டு வந்தோம்.

தொகுப்பது, மேற்பார்வையிடுவது போன்ற பணிகளில் ராஜம் கொண்டிருந்த ஆர்வம் அலாதியானது. யாரையும் அலட்சியப்படுத்த மாட்டார். எனக்கு மிகுந்த ஊக்கமளித்தார். அப்பொழுதெல்லாம் இலங்கையிலிருந்து செய்திகளைக் கொண்டுவருவது மிகக் கடினமானது. அவற்றையெல்லாம் கடினமாக முயற்சிகளை மேற்கொண்டு எனக்குத் தருவித்துக் கொடுத்தார். அடைவைச் செய்வதற்கே எனக்கு மூன்று ஆண்டுகள் பிடித்தன. இரண்டு மூன்று முறை ஒப்பிட்டுப் பார்த்த பிறகு அதைத் தாள்களில் எழுதிக்கொண்டோம். எல்லாவற்றையும் பழைய முறைப்படி கையாலேயேதான் எழுதினோம்.

இந்த அடிப்படை வேலைகள் 73 – 74இல்தான் முடிந்தது. பிறகு நான் ஜப்பான் சென்றுவிட்டேன். விடுமுறை கிடைக்கும்பொழுதெல்லாம் சென்னைக்கு வந்து அவர் வீட்டில் தங்கி இந்தப் பணியைத் தொடர்ந்தேன். நான் தமிழ்ப் பல்கலைக் கழகம் வந்தபோது கிட்டத்தட்ட அந்தப் பணியை முடித்திருந்தோம். நான்கு பகுதிகளாகச் செய்திருந்தோம்.

கி.பி. 850 வரை; கி. பி. 850 –985; கி.பி. 985 – 1100; கி.பி. 1100 –1400 என நான்கு காலகட்டங்களாகப் பிரித்துக் கொண்டு, மேலும் பல தகவல்கள் கிடைத்திருந்தமையால் கி.பி. 1800 வரையிலான காலகட்டம் வரையும் எடுத்துக் கொண்டு செய்தோம். பிறகு இப்பொழுது பதிப்புப் போட்டபொழுது அதையும் இணைத்துகொண்டோம். இந்த நேரத்தில் தமிழ்ப் புலவர்களும் வெகுவாகக் குறைந்து விட்டார்கள். தொகுப்புப் பணிக்கும் சரியான ஒருவர் கிடைக்கவில்லை. கடைசி நேரத்தில் யாராவது ஒரு பதிப்பாசிரியரைத் தேடிக்கொண்டிருந்தார். யாரும் முன் வரவில்லை. அந்த நேரத்தில் தான் அவர் நோய் வாய்ப்பட்டு 1988ல் காலமானார். ஆனால் அதற்கு முன்பாகவே அந்தப் பணியில் தொய்வு ஏற்பட்டுவிட்டது.

இப்பொழுதுள்ள அறக்கட்டளை நிர்வாகிகள் மேற்கொண்ட முயற்சியால் இலக்கியச் சொல்லடைவு அகராதி வந்திருக்கிறது. கல்வெட்டுச்சொல் அகராதியை நான் முழுமையாகச் செய்திருக்கிறேன் என்று சொல்ல முடியாது. எனது இருபதாண்டுகால அனுபவத்தில் எனக்குக் கிடைத்த தகவல்கள், காலம் சார்ந்து அதில் ஏற்பட்ட மாற்றங்கள் முதலியவற்றைக் கவனத்தில் கொண்டு தயாரிக்கப்பட்ட அகராதி அது. அகராதி என்றுகூடச் சொல்ல முடியாது. கலைச் சொல்லடைவு என்றுதான் சொல்ல வேண்டும். தமிழ் – தமிழ் –ஆங்கிலம் என்று கொண்டுவர வேண்டு

**கல்வெட்டுச்சொல் அகராதியை முழுமையாகச் செய்திருக்கிறேன் என்று சொல்ல முடியாது. எனக்குக் கிடைத்த தகவல்கள், காலம் சார்ந்து அதில் ஏற்பட்ட மாற்றங்கள் முதலியவற்றைக் கவனத்தில் கொண்டு தயாரிக்கப்பட்ட அகராதி அது. அகராதி என்று கூடச் சொல்ல முடியாது. கலைச் சொல்லடைவு என்று தான் சொல்லவேண்டும்.**





படிப்பகம்

மென்றுதான் நினைத்தேன். அதற்கு நேரமில்லாத தால் மூலச்சொல்லும் அதற்கான பொருளும் உடையதாக மட்டுமே அகராதி வந்திருக்கிறது.

□

**ரவிக்குமார்: சோழர் காலம் பல விதங்களிலும் தமிழக சமூக, அரசியல் வரலாற்றில் முக்கியத் துவம் உடையது. கல்வெட்டுகளின் வழியாக நீங்கள் அதை ஈடுபாட்டுடன் கற்றிருக்கிறீர்கள். குறிப்பாக அதன் அரசியல் அமைப்புப் பற்றி... ஜனநாயக வடிவத்தின் ஒரு முன்னுதாரணமாகச் சோழர் கால அமைப்பு இருந்திருக்கிறதாகச் சிலர் நம்பு கிறார்கள். இந்திய தேசிய விடுதலைப் போராட்டக் காலத்தில் நீலகண்ட சாஸ்திரி போன்றவர்கள் அதை மிகைப்படுத்திச் சொல்லியிருப்பதை நீங்கள் சுட்டிக் காட்டியிருக்கிறீர்கள். உண்மைநிலை என்ன?**

சோழர் காலத்தில் நிலையான ஒரு பேரரசு உருவாகி யிருந்தது என்பது எல்லோருக்கும் தெரிந்ததுதான். சொல்லப்போனால் காலப் பாகுபாடுகளின்படி பழங் காலத்தின் முடிவாகவும் இடைக்காலத்தின் தொடக்க மாகவும் சோழப் பேரரசைச் சொல்லலாம். பழங்குடி கள் மற்றும் இனக்குழுக்கள் அதுவரையிலும்கூட இருந்த தாகச் சொல்லலாம். இனக்குழுக்கள் மாற்றமடைந்துவரும் நிலை ஏற்படுகிறது. ஒரு இடத்தில் நிலையாகத் தங்கி வெவ்வேறு விதமான வாழ்க்கை முறையை இனக்குழுக்கள் மேற்கொள்ளத் தொடங்கின. இனக்குழுத் தன்மை மறைந்து ஒரு புதிய தன்மை உருவாகிறது. சிறுசிறு நிலப்பகுதிகள் இணைந்து ஒரு பெரும் நிலப்பகுதியாகச் சோழப்பேரரசு உருவாகிறது. பழமையான சின்னங்கள் ஐக்கியமாகின்றன என்பதும் இதில் முக்கியமான ஒன்று. இன்னொருபுறம் பல்லவர் காலத்தில் தொடங்கிய சில அடிப் படையான சமூக மாற்றங்கள் தீவிரம் அடைகின்றன. பல்லவர் காலத்தில் வேதம் சார்ந்த மதத் திற்கு முக்கியத்துவம் அளிக்கப் பட்டது. அதன் தாக்கம் இங்கேயும் இருந்தது. பல கிராமங்களில் பிராமணர்களின் குடியேற்றம் ஏற்படத் தொடங்கியதும் வேதக் கல்வி மற்றும் வேள்விகள் செய்வதும் அதையொட்டி கோவில்களைக் கட்டுவதும் பல்லவர் காலத்தில் நடக்கிறது. அதன் தொடர்ச்சியாகவே சோழர் காலத்தை நாம் பார்க்க வேண்டும். பிராமணர் குடியேற்றத்திற்கு இவர்களும் அதிக ஊக்கம் அளிப்பவர்களாகவே இருந்தார்கள். முதல் ஒரு நூற்றாண்டுக்கு இந்தப் போக்குத் தொடர்ந்தது. பிறகு ஏற்கனவே உருவாக்கப்பட்ட குடியேற்றப் பகுதிகளை விரிவுபடுத்துவதில் அதிக அக்கறை காட்டினார்கள். பல்லவர் காலத்தில் ஏற்பட்டதுபோல பிராமணக் குடியேற்றங்களின் எண்ணிக்கை அதிக அளவில் சோழர்கள் காலத்தில் நிகழவில்லை. அதற்கு மாறாகச் சோழர்கள் கோவில்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார்கள். எண்ணற்ற சிவன் கோயில்கள் கட்டப்பட்டன. சிவ மதம் என்பது கிட்டத் தட்ட ஒரு அரசு மதமாகவே மாறிற்று. அப்பொழுதுதான் 'தமிழ் என்றால் சிவம், சிவம் என்றால் தமிழ்' என்ற ஒரு கருத்து உருவாகியிருக்க வேண்டும்.



கோயில்களைக் கட்டி வளர்ப்பதென்பது சோழர் காலத்தின் முக்கியமான ஒரு விஷயம். கோயில்கள் தனி நிறுவனங்களாக உருப்பெறுகின்றன. இதற்கு முன்பு செல்வாக்காக இருந்த பிராமணக் குடியேற்றங்கள் கோயில் சார்ந்தவையாக மாறிவிடுகின்றன. பிராமணர்களில் பலர் தர்மகர்த்தாக்களாகவும் தானத்தாரர்களாகவும் இருக்கிறார் கள். அவர்களிடம் ஏற்கனவே இருந்த நிலவுடமை மேலும் நீடிக்கின்றது. இது சோழர்கள் காலத்தில் ஏற்பட்ட மிக முக்கிய மாற்றம். அரசு நிர்வாகத்தில் முன்பு பிராமணர் களுக்கு எப்படி முக்கியத்துவம் இருந்ததோ அதே முக்கியத்துவம் இப்பொழுது கோயில்களுக்கும் வந்தது.

ஆளும் வர்க்கத்திற்கும் கோயில்களுக்கும் நிறையத் தொடர்பு ஏற்படுகிறது. இதைக் கொண்டுதான் பர்ட்டன் ஸ்டெயின் சடங்கு ரீதியான அரசமைப்பு பற்றிச் சொல்வார். உள்ளூர்த் தலைவர்கள் கோயில்கள் கட்டி அவற்றில் அரசர்களின் பெயரால் சடங்குகளைப் போட்டியிட்டு நடத்துவதன் மூலம் அரசர்களுக்கு மரியாதை செய்வது, அதே சமயத்தில் தங்களுக்கும் ஒரு மரியாதையைத் தேடிக்கொள்வது என்பதாக ஒரு அதிகாரம் செயல்படுகிறது.

**ரவி: பர்ட்டன் ஸ்டெயின் தஞ்சை உலகத்தமிழ் மாநாட்டில் ஒரு கட்டுரை வாசித்தார். அதில் அரசு உருவாக்கத்தை Community without state, Community and state, Community as state, State without Community என்று வகைப்படுத்துகிறார். இதை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா? ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் சோழ அரசை எந்த வகைப் பாட்டுக்குள் பொருத்துவீர்கள்?**

பர்ட்டன் ஸ்டெயின் கணக்குப்படிக் குழுக்களின் தாக்கம் அதிகமாக இருக்கிறது. உள்ளூர் அளவில் ஊர், சபை போன்ற அம்சங்களும் அதற்கு மேல் நாட்டார், நாடு போன்ற அலகுகளும் அதிகம் செல்வாக்கு செலுத்துபவையாய் இருக்கின்றன. கம்யூனிட்டி என்பதே இவர்கள் தான். இந்தக் கம்யூனிட்டியே அரசாகவும் இருக்கிறது. பிறகு அரசர்கள் கம்யூனிட்டிகளை ஒடுக்கி தங்கள் அதிகாரத்திற்கு உட்படுத்துகிறார்கள். பிறகு அரசுகள் குலையும் நேரத்தில் கம்யூனிட்டிகள் சுதந்திரம் பெறுகிற கட்டத்தை Community without state என்று குறிப்பிடு கிறார். முன்பு Segmentary state என்றதை வேறுவகையில் விளக்கு கிறார். அரசின் இருப்பை அல்ல, அரசின் தன்மையைத்தான் அவர் கேள்விக்குள்ளாக்குகிறார்.

அரசுக்கு எவ்வளவு அதிகாரம் இருந்தது என்பதில் அவருக்கும் மற்றவர்களுக்கும் கருத்து வேறுபாடுகள் உண்டு. அரசு என்பது தனக்கென்று அதிகாரங்களும் படைபலமும் கொண்டது. சமூகத்தின் எல்லாவிதமான நடைமுறைகளிலும் குறுக்கிடுவதாக, கட்டுப்படுத்துவதாக அரசு இருக்க முடிந்தது. ஒரு மையப் படுத்தப்பட்ட அரசின் கையில் எல்லா அதிகாரங்களும் இருந்தமையால் சமூகத்தை முழு அளவில் அது தன்


படிப்பகம்

www.padippakam.com


கட்டுப்பாட்டில் வைத்திருந்தது என்பதுதான் இதன் பொருள். அரசு சமூகத்தை மாற்ற முயன்றது, மாற்றியது. பர்ட்டன் ஸ்டெயின் அதை மறுக்கிறார். அரசனின் இருப்பிடத்தைச் சுற்றியுள்ள சில இடங்களில் மட்டுமே அரசின் நேரடி அதிகாரம் நிலவியது. மற்ற இடங்களில் உள்ளூர் தலைவர்கள்தான் அதிகார மையங்களாக இருந்தார்கள். சிற்றரசர்கள் என்று அழைக்கப்பட்ட இவர்களே உண்மையான அரசு வடிவம். அரசு என்பதே சடங்கு ரீதியான ஒன்று என்கிறார். ஆனால் ஒரு ஒருங்கிணைந்த சமூகம், அல்லது அரசு என்ற தோற்றம் எப்படி உருவானதென்றால் சடங்கு ரீதியாக அரசர்களும் சமூகக்குழுக்களும் ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்வதும் அதிகாரத்தை நிலைப்படுத்திக் கொள்வதுமான செயல்பாடுகளின் வழியாகத்தான் என்பதே அவரது கருத்து. அரசனை இவர்களும் மதிக்கிறார்கள். அரசனின் பெயரை வைத்துக் கொண்டு இவர்களும் மரியாதை தேடிக்கொள்கிறார்கள். அரசு என்பது வலிமையாக இருக்கும் வரை இப்படி நடக்கிறது. அரசின் வலிமையில் தொய்வு ஏற்படும்பொழுது அந்த இடம் மாறிவிடுகிறது. ஒன்று இவர்கள் வேறு இடத்திற்குச் சென்றுவிடுகிறார்கள் அல்லது இவர் களே தனி ஒரு அரசாக மாறிவிடுகிறார்கள். சோழர்கள் ஆட்சியைப் பொறுத்தவரை ஏறக்குறைய கி. பி. 900வரை பர்ட்டன் ஸ்டெயின் சொல்வதுபோல்தான் இருக்கிறது. அப்பொழுது அரசே சிறியதுதான். சோழநாடு என்பதே இப்போதைய தஞ்சை மாவட்டம் என்ற அளவில்தான் இருந்தது. போகப் போகத்தான் சோழநாடு விரிவடைகிறது. பத்தாம் நூற்றாண்டில் ராஜராஜசோழன் காலத்தில்தான் வெற்றிபெற்ற நாடுகளின் மீது நேரடியான அதிகாரத்தைச் செலுத்துவது அந்த நாடுகளைத் தன்னுடைய எல்லைக்குள் கொண்டு வருவது என்பன போன்ற நடைமுறைகள் தொடங்குகின்றன. ஏறத்தாழ முழுத்தமிழகமும் சோழப் பேரரசின் கீழ் வந்துவிடுகிறது. கேரளாவில் இது சாத்தியப்படவில்லை. ஆனால் பாண்டிய நாட்டிலும் சரி தொண்டை நாட்டிலும் சரி நேரடியான ஆட்சியதிகாரம் கொண்டவர்களாகவே சோழர்கள் இருந்திருக்கிறார்கள். மைசூரின் தெற்கு மாவட்டங்களில் இவர்களது நேரடியான அரசியல் அதிகாரம் இருக்கிறது. இலங்கையின் மன்னார் வளைகுடா, தென்மேற்குப் பகுதி, வடக்குப் பகுதியில் அனுராதபுரம்வரை தங்கள் ஆட்சியதிகாரத்தை அமைக்கிறார்கள். பிறகு பொலநறுவையையும் கைப்பற்றுகிறார்கள். அது இரண்டாவது தலைநகர். தனி நிர்வாகம், தனிப்படை என்று செயல்பட்ட போதிலும் அது சோழப் பேரரசின் ஒரு பகுதியாகவே இருந்து வந்திருக்கிறது. அதுபோல்தான் சோழ பாண்டியர்கள். இது பதினோராம் நூற்றாண்டு முழுவதும் சுமார் நூறாண்டுகளாக நீடித்த ஒரு நிலை. சந்தேகத்திற்கிடமின்றி இது ஒரு மையப்படுத்தப்பட்ட அரசாகவே இருந்திருக்கிறது. உள்ளூர் காரியங்களில் அரசின் தலையீடும் கண்காணிப்பும் அதிகமாகவே இருந்திருக்கின்றன. கறாரான வரிவசூல் முறையும் இருந்திருக்கிறது. பிராமண ஊர்களாக இருந்தாலும் சரி, பிராமணர் அல்லாதவர்களது ஊர்களாக இருந்தாலும் சரி, வரி சரியாகச் செலுத்தப்படாத ஊர்களில் பறிமுதல் செய்யவும் ஏலம் விடவும் தேவையான படைகளை அனுப்புகிறது அரசு. பதினொன்று பன்னிரண்டாம் நூற்றாண்டுவரைகூட இது தொடரத்தான் செய்கிறது. பிறகு சிறிது சிறிதாகப் படைத்தலைவர்களின் போக்கில் மாற்றம் வருகிறது. இவர்களுக்கு அரசு அதிகாரம், உள்ளூர்ச் செல்வாக்கு, கோயில் நிலங்களின் மீது அதிகாரம் என்ற ரீதியில் பெற்ற உரிமை ஆகியவற்றைக் கொண்டு தனி அதிகாரம் பெற்றவர்களாக, தலைவர்களாக வேரூன்றத் தொடங்குகிறார்கள். இதற்கு முன்னால் வரி வசூலிப்பதற்கென்று 'புரவுவரித் திணைக்களம்' என்ற அமைப்பு இருந்தது. பிற இடங்களில் உள்ளூர்த் தலைவர்கள் இந்தப் பணியைச் செய்பவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் முதலில் தலைவர்களாக இருந்து அதிகாரிகளாக மாறி மீண்டும் தலைவர்களாக இருப்பவர்கள். ஊர்களில் 'பாடிகாவல்' என்ற ஒரு பதவி இவர்களுக்கு அளிக்கப்படுகிறது. ஊரின் காவல் பணியை மேற்கொள்வதோடு வரிவசூலில் ஈடுபடுபவர்களாகவும் இவர்கள் இருக்கிறார்கள். வரி வசூல் செய்து, அதில் ஒரு பகுதியை அரசுக்கு கொடுப்பவர்களாக இவர்கள் வளர்ச்சியடைகிறார்கள். இந்த நடைமுறை உள்ளூரில் தாங்களாகவே ஆட்சி செலுத்துவதற்கான தூண்டுகோலாக அமைந்துவிடுகிறது. அதே சமயத்தில் அரசுக்கு வருமானமும் இல்லாமல் போய்விடுகிறது. நிலப்பகுதியும் சுருங்கிவிடுகிறது. பன்னிரண்டாம் நூற்றாண்டுக்குப் பிறகு சோழப் பேரரசின் அதிகாரம் பெரிதாக இல்லை. குறுநில அரசுகள் பல தோன்றிவிடுகின்றன. தென்னாற்காடு, வடாற்காடுபகுதிகளில் தனிஅரசுகள் தோன்றி விரிகின்றன. இந்தச் சூழலை வேண்டுமானால் Segmentary State என்று சொல்லலாம். அதாவது அதிகாரம் ஒரு மையப்படுத்தப்பட்ட அரசிடம் இல்லாமல் சிறுசிறு அமைப்புகளிடம் பிரிந்திருப்பது.



**பல்லவர் காலத்தில் வேதம்சார்ந்த மதத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. அதன் தாக்கம் இங்கேயும் இருந்தது. பல கிராமங்களில் பிராமணர்களின் குடியேற்றம் ஏற்படத் தொடங்கியதும் வேதக்கல்வி மற்றும் வேள்விகள் செய்வதும் அதையொட்டி கோவில்களைக் கட்டுவதும் பல்லவர் காலத்தில் நடக்கிறது. அதன் தொடர்ச்சியாகவே சோழர்காலத்தை நாம் பார்க்க வேண்டும்.**

**ரவி:** அந்த அரசின் ஜனநாயகத் தன்மை குறித்து . . . அது எந்த அளவு இருந்தது?


குடவோலை முறையை வைத்துக்கொண்டுதான் ஜனநாயகம் என்ற கருத்தை முன்வைத்தார்கள். தேசிய இயக்கம் வளர்ந்த நேரத்தில் இதுபோன்ற ஒரு சில கல்வெட்டுகள் கிடைத்ததுதான் இந்தக் கருத்துக்கு ஆதாரம். 1903இல் தான் உத்திரமேரூர் கல்வெட்டு கவனத்துக்கு வந்தது. வெங்கையாதான் அதைச் சொன்னவர். அதாவது தேர்தல்முறை என்ற ஒன்று இருந்தது. எல்லோரும் சேர்ந்து பொறுப்புகளுக்கான ஆட்களைத் தேர்ந்தெடுத்தனர் என்றார். அதற்குப் பின்னால் பெரும்பாலானவர்கள் தரவுகளைப் படித்துப் பார்க்காமல் அவர் சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். பின்னர் நீலகண்ட சாஸ்திரி அது ஜனநாயகமுறை என்று சொல்ல முடியாது என்று சொன்னார். மஜூம்தார், பண்டார்க்கர் போன்றவர்கள் அந்த நேரத்தில் இதற்குப் பெரிய முக்கியத்துவம் அளித்தார்கள். பிறகு அது ஒரு Myth ஆகிவிட்டது. அதைப் போக்க முடியவில்லை. ஆனால் பரிசீலித்துப் பார்த்தால் உத்திர மேரூர் ஒரு பிராமண ஊர். பெரும்பான்மையினர் பிராமண நிலக்கிழார்கள். சபை என்பதே பிராமண நிலக்கிழார்களைக் கொண்ட சபைதான். மகா சபையென்று சொன்னால் முதியோர்கள், இளைஞர்கள் என வேறுபாடு இன்றி அனைவரும் கூடுவது. ஊர் நடுவில் கூடுவார்கள். ஆனால் அதில் பெரும்பாலோர் வேடிக்கை பார்ப்பவர்களாகவே இருந்திருக்கிறார்கள். தேர்தலில்



படிப்பகம்

www.padippakam.com

ஈடுபடுபவர்களுக்கென்று சில விதிமுறைகள் இருந்திருக்கின்றன. குறிப்பிட்ட அளவு நிலம் சொந்தமாக இருக்க வேண்டும். தவிர சாஸ்திரங்களும் வேதங்களும் படித்திருக்க வேண்டும். நிலமாவது மற்றவர்களிடம் இருப்பதற்குச் சாத்தியங்களுண்டு. ஆனால் சாஸ்திரங்களையும் வேதங்களையும் பிராமணர்களைத் தவிர வேறு யாரும் படித்திருக்கமுடியாது. படிப்பதற்கு அனுமதியும் இல்லை. மானூர் கல்வெட்டிலும் இதே செய்தி வருகிறது. நன்னடத்தை, வயது போன்ற பிற தகுதிகள் குறிப்பிடப்பட்டிருந்தாலும் வேதங்களும் சாஸ்திரங்கள் படித்திருக்க வேண்டும் என்ற நிபந்தனை காரணமாக இது முழுக்க முழுக்க ஒரு சார்புத் தன்மை கொண்ட, பிராமணர்களுக்கான ஒரு தேர்தல் முறை தான் என்பது தெளிவாகிறது. ஒவ்வொருவரின் பெயரையும் ஒரு ஓலை நறுக்கில் எழுதி விடுவார்கள். பிறகு அதை ஒரு சிறுவனைக்கொண்டு வெளியே எடுத்து எல்லோருக்கும் காட்டித் தேர்ந்தெடுக்கப்பட்டவர் இன்னார் என்று அறிவிப்பார்கள். இந்த நடைமுறைகள் எல்லோரது முன்னிலையிலும் வெளிப்படையாக நடைபெறும். இதுதான் பிராமண ஊர்களில் மட்டும் நடைபெற்ற குறுகிய அடிப்படையிலான குடவோலை தேர்தல் முறை.



மற்ற ஊர்களில் அதாவது பிராமண ஊர்கள் அல்லாத ஊர்களில் தேர்தல்முறை பற்றிய பேச்சே இல்லை. வேளாண் ஊர்களில் நிலவுடைமையை அடிப்படையாகக் கொண்டு அவர்கள் சபைகளில் இடம் பெறுகிறார்கள். எல்லா ஊர்களிலும் இந்த அடிப்படை இருக்கிறது. ஊர் உடையார்கள் என்று சொல்கிறார்கள். இதுவும் நிலவுடைமையைக் குறிப்பிடுகிற ஒரு சொல்தான். பெயர்களைக் கொண்டு பார்க்கிறபோது சபையில் இடம்பெற்றிருப்பவர்கள் நெருங்கிய உறவினர்களாகவும் இருந்திருக்கிறார்கள் என்று தோன்றுகிறது. ஒரு ஊர் என்று எடுத்துக்கொண்டால் ஒரு பத்துப்பதினைந்து குடும்பத்தினரிடம் மட்டுமே நிலம் சொந்தமாக இருந்திருக்கிறது. பெரும்பாலோர் உழுகுடிகளாகத்தான் இருந்திருக்கிறார்கள்.

ஆக, ஆளும் வர்க்கத்தினர் எனப்படுவோரில் பெரும்பாலானோரும் பிராமணர்களும், வேளாளர்களுமே. ஆக இது ஒரு குறுகிய நிலையிலான அதிகாரப் பகிர்வுதான். ஜனநாயக அமைப்பு அல்ல.

**ரவி:** சாதி உருவாக்கம் என்பதைப்பற்றி நீங்கள் சுமார் நாற்பது ஊர்களின் கல்வெட்டுகளைக் கொண்டு ஆய்வு செய்திருக்கிறீர்கள். சில ஊர்களில் மட்டுமே பறையர்களுக்கென்று தனிச் சுடுகாடு இருந்திருக்கிறது. மற்ற இடங்களில் அவர்கள் சுடுகாட்டுத் தேவைக்கு என்ன செய்தார்கள்? பொதுச் சுடுகாடுகளைப் பயன்படுத்தினார்களா? நீங்களும் கராஷிமாவும் சேர்ந்து செய்த ஒரு ஆய்வில் ஒரே ஊரின் தொகுப்பில் பறைச்சேரி என்ற ஒன்றும் தீண்டாச்சேரி என்ற ஒன்றும் இருந் திருக்கிறது. ஆக தீண்டாமை உருவானது சோழர் காலத்தில்தானா? ஏனென்றால் பாகூர் கல்வெட்டை ஆய்வுசெய்த விஜய வேணுகோபால், ராஜேந்திர சோழனின் கி.பி. 1027 கால கட்டத்தைச் சேர்ந்த கல்வெட்டில் இடம்பெற்றிருக்கும் ஒரு தகவலைச் சொல்லியிருக்கிறார். ஏரியை தூர் வாரும்பொழுது தீண்டாதார் ஒழிய நீக்கி என்று வருகிறது. தீட்டு என்ற கருத்தியல் முதன்முதலில் இந்த கல்வெட்டில்தான் வெளிப்பட்டிருப்பதாகச் சொல்கிறார். அதை நாம் அப்படி எடுத்துக் கொள்ள முடியுமா?

வெளிப்படையாக வருவது இந்தக் கல்வெட்டில் தான். பக்தி இலக்கியக் காலகட்டத்திலேயே தீட்டு கருத்தியல் வந்துவிட்டது என்றுதான் தோன்றுகிறது. சோழர் காலத்தில் இன்னும் வலிமையடைந்திருக்க வேண்டும். ஒவ்வொரு ஜாதியையும் தனித்தனியாகப் பெயர் குறிப்பிட்டுச் சொல்லவில்லையென்றாலும்கூட பிராமண ஜாதி உயர்ந்த ஜாதி என்ற ஒரு எண்ணம் இருக்கிறது. பிராமண ஜாதிகளுக்குக் கீழ்ப்பட்ட ஜாதிகள் என்கிறபோது 'வெள்ளாளராதல், கணக்கராதல்' என்று ஒரு இரண்டு மூன்று ஜாதிகளின் பெயர்களைக் குறிப்பிடுகிறார்கள். ஒரு வகையான ஜாதிப் படிநிலை என்பது அந்த நேரத்திலேயே வந்துவிடுகிறது. ஒன்றிரண்டு கல்வெட்டுகளில் ஜாதி முதல்நிலையில் தென்படுவது ராஜராஜன் காலத்திலிருந்துதான். நீங்கள் சொல்லும் கல்வெட்டுகள் அதற்குச் சற்று பிறகு. 12ஆம் நூற்றாண்டில் ஜாதிகளைப் பற்றிய தகவல்கள் நிறைய இருக்கின்றன. திருவானைக்காவில் 12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சில கல்வெட்டுகளின்படி அந்தக் கோயிலுக்கு லால்குடிக்கு அருகிலிருக்கும் சில கிராமங்களிலிருந்து ஒரு நான்கைந்து பேர் தங்களுடைய நில உரிமைகளை விற்கிறார்கள். அப்பொழுது தங்களுடைய பங்கு என்று ஒன்றைச் சொல்கிறார்கள். அவர்கள் உடையார்கள் என்று சொல்லப்படுகிறார்கள். அந்த ஊரில் உள்ள நல்ல நிலங்கள், புஞ்சை நிலங்கள் இவை தவிர நத்தம் – நத்தமென்றால் ஊரின் முக்கியப் பகுதி – தவிர புலைச்சேரி என்பதையும் குறிப்பிடுகிறார்கள். இதையும் அவர்கள் விற்கிறார்கள். அப்படியானால் புலைச்சேரியும் உடையார்களுக்குச் சொந்தமானதாக இருந்திருக்கிறது என்பது தெளிவு. இரண்டு மூன்று கல்வெட்டுகளில் இது திரும்பத் திரும்ப வருகிறது. நத்தம் என்பதைத் தனியாகவும், புலைச்சேரியைத் தனியாகவும் சொல்கிறார்கள். ஜாதிய எண்ணங்கள் வலுவடைந்திருக்கின்றன என்றுதான் இதற்குப் பொருள். ஜாதி எண்ணங்கள் எப்படி இருக்கிறதென்றால், வேளாளரோ, பிராமணரோ தங்களுக்குக் கீழே இருக்கிற மற்ற தொழில் ஜாதியினரைப் பற்றிச் சொல்லும்போது பொதுவாகக் கலனை என்கிறார்கள்.

பொதுவாக நிலம் வைத்திருப்பவர்களை உயர்ந்தவர்களாகவும் மற்றவர்கள் அவர்களுக்குக் கீழ்ப்பட்டவர்களாகவும்


படிப்பகம்

www.padippakam.com


கருதும் போக்கு அப்பொழுது இருந்திருக்கிறது. வணிகர்களின் குழுக்கள் கல்வெட்டுகள் அமைக்கும்பொழுது மற்றவர்கள் அனைவரையும் சேர்த்து, 'நம்பணி செய் மக்கள்' என்று மொத்தமாகக் குறிப்பிடுகிறார்கள். தாம் பிறப்பால் உயர்ந்தவர்கள் என்ற எண்ணமும், சொத்துடைமை காரணமாக பிறர் (கம்மாளர் போன்றோர்) தங்களைச் சார்ந்திருக்க வேண்டிய நிலை இருப்பதால், அவர்களைத் தமக்குப் பணி செய்பவர்கள் என்றும் நினைக்கிறார்கள். ஆக 12ஆம் நூற்றாண்டின் கடைசியில் சாதியச் சமூகம் தெளிவாக உருப்பெற்றுவிடுகிறது. இறுக்கம் அதிகரிப்பதும் துணைச் சாதிகளின் பெருக்கமும் அதற்குப் பிந்தைய கால கட்டங்களில் நிகழ்கின்றன.

இந்த நேரத்தில்தான் ஜாதியைச் சொல்லித் திட்டுவது என்ற வழக்கம் வருகிறது. இந்த உதாரணத்தைப் பாருங்கள். வன்னியர்களிலேயே ஒட்டை வன்னிமார் என்று ஒரு பிரிவு. 'நீ புல் பறிக்கிற ஒட்டை வன்னிமாருக்கு உன் மனைவியைக் கொடுத்தவன் ஆவாய்' என்று ஒரு வசை கல்வெட்டில் காப்புரையாக இடம்பெறுகிறது. இதுபோல் ஜாதியை இழிவுபடுத்துதல் என்பதும் இருக்கிறது. சில இடங்களில் புல் பறிக்கிற பறையர்கள் என்கிறார்கள். இது நிலைபெற்றுவிடுகிறது. நம் ஜாதி, பிற ஜாதி போன்ற பாகுபாடுகள் தோன்றிவிடுகின்றன. பிற ஜாதிகள் தம்முடைய ஜாதிக்குக் கீழானது என்ற எண்ணமும் வந்துவிடுகின்றது. சோழர் காலத்தில் ஜாதி என்பது முழுமைபெற்றுவிடுகிறது. பிறகு அது விரிவடைகிறது என்று வேண்டுமானால் சொல்லலாம்.

தொழில் ஜாதிகளாக இருப்பவர்களெல்லாம் உள் ஜாதிகளாக மாறுவது என்ற ஒரு போக்கு வருகிறது. ஒரே பிரிவாக இருந்த வேளாளர்கள் பல வேளாளர்களாக உருவாகிறார்கள். படை வீரர்கள், ஆடுமாடு மேய்த்துக்கொண்டிருந்த யாதவ குலத்தைச் சேர்ந்தவர்கள் போன்ற ஒவ்வொருவரும் வேளாளர்களாக மாறுகிறார்கள். பள்ளி வேளாளர், அகம்படி வேளாளர் என்று மாறுகிறார்கள். ஏற்கனவே பாரம்பரியமான வேளாளர்களாக இருந்தவர்களுக்கும் புதிய வேளாளர்களுக்கும் சண்டை வருகிறது. வலங்கை, இடங்கை என்ற பிரிவுச்சண்டைகள் அப்பொழுது தான் துவங்குகிறது என்று நினைக்கிறேன். ஜாதிப் பூசல்கள் வளர்கின்றன. ஒரு ஜாதியினருடைய உரிமையைப் பறித்துக் கொள்ளுதல் அதாவது ஒரு ஊரில் குறிப்பிட்ட ஜாதியினருக்கென்று அரசனால் அளிக்கப்பட்டிருக்கிற உரிமைகள் தொடர்பான ஆவணங்களை அழிப்பது என்பதில்தான் இது தொடங்குகிறது. ஒரு இடத்தில் இதுபோல் வணிகர்களுக்கும் கைகோளர்களுக்குமிடையே ஒரு பிரச்சினை வருகிறது. 14ஆம் நூற்றாண்டிலிருந்து ஜாதி உரிமைகளுக்காக இப்படிச் சண்டைபோடுவதெல்லாம் வருகிறது. வலங்கை இடங்கை என்பது தொடக்கத்தில் நிலஉரிமையுள்ள மேல் நிலைக் குழுக்களின் அமைப்புகளாகவே இருக்கின்றன. போகப் போக அவர்கள் அவ்வமைப்புகளிலிருந்து விலகிவிடுகிறார்கள். பிறகு அவ்வமைப்புக்கள் உழைப்பவர்கள், உழுகுடியினர் மற்றும் கைவினைஞர்களுக்கான அமைப்பாக மாறிவிடுகின்றன. இது 15 ஆம் நூற்றாண்டில் இருந்த நிலை.

ஒரு காலத்தில் வன்னியர், அகம் படி, மறவர், கள்ளர் இவர்களெல்லாம் போர்ஜாதிகள். கள்ளர்கள் நீண்ட காலத்திற்கு முன்பாகவே போர்த் தொழிலைக் கைவிட்டு விட்டு விவசாயம் முதலிய நிலையான வாழ்க்கைக்கு வந்துவிட்டார்கள். அதைப் பற்றிப் பின்னர் வெளிப்படையாகத் தெரிய வருகிறது. அரையர்கள் என்ற பெயரை வைத்துக்கொண்டு அவர்களை புதுக்கோட்டை, தஞ்சைப் பகுதிகளில் பார்க்கலாம். மறவர்கள் ராமநாதபுரத்தில் இருக்கிறார்கள். பின்னர் 13ஆம் நூற்றாண்டில் குடிபெயர்ந்து திருநெல்வேலிப்பக்கம் போகிறார்கள். மறவர்களுக்கும் கள்ளர்களுக்கும் இடையே தகராறுகள் இருந்திருக்கின்றன. வடக்கே போனால் வன்னியர்கள். வன்னியரைப் பள்ளிகள் என்று சொல்கிறார்கள். அது தவிர நத்தமான், சுருதிமான் போன்றவர்கள். விஜயநகரப் பேரரசு காலத்தில் பள்ளிகள் பெரும்பாலான வடக்கு மாவட்டங்களில் – செங்கல்பட்டு, வட ஆர்க்காடு – நிறைந்திருக்கிறார்கள். இவர்கள் முதல் நிலையில் படைவீரர்களாகச் சேர்க்கப்பட்டார்கள். நத்தமான், சுருதிமான் போன்றோரும் படைவீரர்களாகிறார்கள். பிறகு இவர்களில் சிலர் விவசாயிகளாக மாறி 'குடிப் பள்ளி' என்று அழைக்கப்படுகிறார்கள். பலரும் சிறுசிறு விவசாயிகளாக மாறுகிறார்கள். படைத்தலைவர்களாக இருந்த சிலர் பெரும் நிலச்சொந்தக்காரர்களாக வளர்ச்சியுற்றுப் பின்னர் குறுநில மன்னர்களாக மாறுகிறார்கள். சம்புவராயர், காடவராயர் போன்றவர்கள் மற்றும் பின்னர் விஜயநகரப் பேரரசு காலத்தைச் சேர்ந்த கட்சிராயர், சம்புவராயர் என்று பலரைப் பார்க்கிறோம். பெரும்பாலானோர் கீழ் நிலையில் சாதாரண விவசாயிகளாக இருக்கிறார்கள். படை வீரர்களாகவும் இருக்கிறார்கள். படை வீரர்களாக இருக்கும்பொழுது அவர்களுக்கு வசதிகள் இருக்கின்றன. அரசாங்கத்திற்குச் சார்பாக நின்று மற்றவர்களை ஒடுக்குகிறார்கள். 1430இல் இடங்கை வலங்கை கிளர்ச்சியில் பிராமண வெள்ளாள நிலக்கிழார், விஜயநகரப் பிரதானி, பிறகு தந்திரிமார் என்ற உள்ளூர் வன்னியப் படை வீரர்கள் என்ற மூன்று பிரிவினரோடுதான் உழுகுடிகளும் கைவினைக்குடிகளும் போராடுகிறார்கள். அரசுகள் இருக்கும்வரை வீரர்கள் வசதி படைத்தவர்களாக இருக்கிறார்கள். அரசுகள் வீழ்ச்சியடையும்பொழுது அவர்களது நிலை மோசமடைகிறது. சோழர் காலத்தில் வீரர்களாக இருந்தவர்கள் கள்ளர் போன்றவர்களாக இருக்கலாம். அவர்களைப் பற்றி அதிகமான தகவல்கள் இல்லை. வலங்கை வேலைக்காரப் படைகள் என்று மொத்தமாக அவர்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார்கள் – பலர் நிலக்கிழார்களாக மாறியிருக்கிறார்கள்.

**பக்தி இலக்கியக் காலகட்டத்திலேயே தீட்டு கருத்தியல் வந்துவிட்டது என்றுதான் தோன்றுகிறது. சோழர் காலத்தில் இன்னும் வலிமையடைந்திருக்க வேண்டும். ஒரு வகையான ஜாதிப் படிநிலை என்பது அந்த நேரத்திலேயே வந்து விடுகிறது. ஒன்றிரண்டு கல்வெட்டுகளில் ஜாதி முதல்நிலையில் தென்படுவது ராஜராஜன் காலத்திலிருந்துதான்.**



கைக்கோளர்கள் ஆரம்பத்தில் நெசவுத் தொழிலில் ஈடுபட்டதற்கு ஆதாரமில்லை. கைக்கோளர்களும் அகம்படியார்களும் 12ஆம் நூற்றாண்டில்தான் நெசவுத் தொழிலில் ஈடுபடுகிறார்கள். சில குலங்கள் அதுவரையில் பரம்பரையாகச் செய்துவந்த தொழில்களை விட்டு விட்டு நிலச்சொந்தக்காரர்களாகிறார்கள். கைக்கோளர் போன்றோரும் படைவீரர்களாக இருந்த நியாயத்தார் போன்ற இரண்டு மூன்று பிரிவினரும் நெசவுத் தொழிலுக்கு வருகிறார்கள்.

**ரவி:** தாழ்த்தப்பட்டவர்களிடத்திலும் நெசவுத் தொழில் இருந்திருக்கிறதா?



படிப்பகம்

www.padippakam.com

ஆம். 'கைவினைப் பறையர்கள்' என்பவர்கள் இடங்கை – வலங்கையில் ஒரு குழுவாக இருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் ஒரு காலத்தில் இப்படி இருந்து இன்றுள்ள நிலைக்கு மாறியிருக்கிறார்கள். பின்வரும் இவர்களது நிலை ஏறக்குறைய அதேபோல்தான் இருக்கிறது. இன்று ஜாதிப் போராட்டங்கள் வருகிற போது ஒற்றுமையில்லாமல் இருப்ப தால், ஒருமுகப் படுத்தாமல் இருப்பது மாற்றமின்மைக்கு ஒரு காரணம். போர் மரபு போன்ற பழைய மரபுகளை மறந்துவிட்டு தொழில் ரீதியிலும், பொருளாதார ரீதியிலும் ஒரு வர்க்க உணர்வு வரவேண்டும். அப்போது அரசியல் ரீதியில் பல மாற்றங்கள் ஏற்படும். ஜாதிகள் என்பவை அந்த நேரத்தில் இப்படித்தான் தொழில் சார்ந்துதான் வந்திருக்கிறது. போர்வீரர்கள் சில ஜாதிகளாகவும், விவசாயம், கைவினைத் தொழில்களிலிருந்து வந்தவர்கள் சில ஜாதிகளாக வும் இருக்கிறார்கள். ஆனால் பொருளாதார ரீதியில் இவர்கள் கீழ் மத்தியத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாகவே இருக் கிறார்கள். மேல்நிலையில் இருந்தவர்களுக்குள்ளும் சில மாற்றங்கள் ஏற்படுகின்றன. 13ம் நூற்றாண்டுக்குப் பிறகு பிராமணர்கள் சில இடங்களில் மிக ஏழைகளாக மாறும் நிலையும் இருக்கிறது. தங்கள் நிலங்களை விற்கிறார்கள். அதேபோல் வேளாளர்களில் புதிய வேளாளர்கள் என்ற பிரிவினர் உருவாகிறார்கள். புதிய நிலச்சொந்தக்காரர்கள் தங்களையும் வேளாளர்களாகவே கருதிக்கொள்வதால் பல உட்பிரிவுகள் ஏற்படுகின்றன. இதில் ஏன் இவ்வளவு வேறுபாடுகள் வரவேண்டும் என்பது எனக்குப் புரியவில்லை.

**சலபதி**: தேவேந்திரகுல வேளாளர்கள் என்கிற பள்ளர்கள் பற்றிய குறிப்புகள் என்ன?

அதிகமாகச் சொல்ல முடியவில்லை. பறையர் களைப் பற்றிய தகவல்கள் சோழர்களின் கல்வெட்டு களில் பரவலாகக் கிடைக் கின்றன. ஆனால் இவர் களைப் பற்றி ஒன்றும் இல்லை. பாண்டியர்கள் கல்வெட்டுகளில் ஓரிரு குறிப்புகள் உள்ளன. குடும் பர் என்ற ஒரு சொல் வரு கிறது. குடும்பர் என்றால் உழுகுடிகளில் ஒரு குழு வினர். தஞ்சைக்குக் கிழக்கே நீடூர் என்ற இடத் தில் இருக்கும் ஒரு கல் வெட்டில் பிராமண நிலக் கிழாரிடம் உழுகுடிகள் தங்கள் குறையைச் சொல் லும்பொழுது வேளாண் உழுகுடிகளுடன், குடும்பர், கரையர் என்ற இரு வகை யினர் குறிப்பிடப்படுகிறார் கள். குடும்பர் பள்ளராக இருக்கலாம். பிற்காலத்தைச் சேர்ந்த சேதுபதி தொண் டைமான் செப்பேடுகளில் அவர்கள் கொடுத்த வரி யைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது பள்வரி என்ற சொல் வருகிறது. ஆனால் அவர்களுடைய பொருளாதார நிலையை அதிலிருந்து அறிந்துகொள்ள முடியவில்லை.



நீங்கள் தயாரித்த பெயரடைவின் பிற்பகுதியில் 'வெட்டி' என்ற ஒரு சொல் வருகிறது. அதை மேலும் விளக்க முடியுமா?

வெட்டி என்ற சொல் இந்தியா முழுவதும் இருக் கிறது. விஷ்டி என்ற சமஸ்கிருதச் சொல்லிலிருந்து இது வருகிறது. கட்டாய உழைப்பை குறிக்கும் இச்சொல், சில நேரங்களில் வரியாகவும், சில நேரங்களில் உழைப்பாகவும் இருந்திருக்கிறது. இதற்கு இணையாக வேறு சொற்களும் இருந்திருக்கின்றன. அமைஞ்சி, முட்டையாள் அல்லது முட்டாள் போன்று 'ஆள்' என்று முடிகிற சொற்கள் நிறைய இருக்கின்றன. பல்லவர்கள் காலத்திலிருந்து இது புழக்கத்திலிருக்கிறது. வரி வசூலிக்கும்போது வரிவிலக்கு அளிக்கப்படும் பிரிவினரைக் குறிப்பிடுவதற்காக இச்சொற் கள் பயன்படுத்தப்படுகின்றன. பொதுவாக தேவதான உழுகுடிகளுக்கு வரிவிலக்கு அளிக்கப்படுகிறது. உள்ளூர் உழுகுடிகள், வெட்டி முட்டையாள், சென்னீர் அமஞ்சி போன்றவற்றைச் செலுத்த வேண்டியதில்லை என்று சொல்கிறார்கள். சில இடங்களில் 'வெட்டியார்' என்ற சொல்லும் பயன்படுத்தப்படுகிறது. உழுகுடி நிலையில் இருப்பவர்களைச் சில நேரங்களில் உழுகுடிகள் என்றே குறிப்பிட்டாலும் சில இடங்களில் 'தலைவாயர்' என்ற சொல்லும் பயன்படுத்தப்படுகிறது. அதாவது கால்வாய்களில் தலை மதகுகளை பராமரிக்கும் பணியில் ஈடுபடுபவர் களைக் குறிக்கும் சொல்லாக இது வருகிறது. இத்தகைய உழைப்பையும் வெட்டி என்ற வகையிலேயே சேர்க் கிறார்கள். பின்னர் இவர்களை 'நீர்க்காணி' என்றும் அழைக்கிறார்கள். இவர்களது வாழ்க்கைச் செலவுக்காக, பிழைப்புக்காக ஊர் சார்பாகச் சிறிதளவு நிலம் ஒதுக்கப் படுகிறது. இந்த நிலத்தை வெட்டிப்பேறு அல்லது வெட்டப் பேறு என்றழைக்கிறார்கள். ஆக கட்டாய உழைப்பைச் செலுத்துபவர்கள் உழுகு டிகளாக இருப்பவர்கள் அல்லது உழுகுடிகளின் நிலையில் இருக்கிற நில மற்றவர்கள். குறிப்பாக ஊரின் நீர்ப்பாசன வசதி களைப் பராமரிப்பதற் கான உழைப்பை இவர் கள் செலுத்த வேண்டும்.

**ரவி**: சோழர் கிராமங்கள் சுயசார்புடையவையெனவும், தன்னிறைவு பெற்றவை யாய் விளங்கின எனவும் ஒரு கருத்து நிலவுகிறது. நீங்களோ உங்களுடைய ஆய்வில் சோழர் காலக் கிராமங்கள் ஒன்றுடன் ஒன்று சமூகப் பொருளா தார ரீதியில் தொடர்பு கொண்டவையாயிருந்தன எனவும், எந்தவொரு கிராமமுமே துண்டிக்கப் பட்டுத் தனித்து இயங்கிய தாகத் தகவல் இல்லை எனவும் குறிப்பிட்டிருக் கிறீர்கள். இந்த கருத்தின் அடிப்படையிலேயே கார்ல் மார்க்ஸ் இந்திய கிராம சமூகத்தை மதிப் பிட்டார் இல்லையா? இந்தக் கருத்து எப்போது உருவாயிற்று? சோழர் காலக் கிராமங்கள் உண்மையில் தன்னிறைவு பெற்றவையா?

பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் இது போன்ற ஒரு கருத்து உருவாகிறது. சார்லஸ் மெட்காஃப்


படிப்பகம்

www.padippakam.com



போன்றவர்கள்தான் முதன்முதலில் இப்படியொரு கருத்தை வெளியிடுகிறார்கள். ஆங்கில அரசின் நிர்வாகத்தோடு தொடர்பு கொண்டவர்கள் அவர்கள். பெரும்பாலான கிராமங்கள் தன்னிறைவு பெற்றவையாக இருப்பதாகவும், வரி செலுத்துவதைத் தாண்டி அரசுக்கும் அவர்களுக்கும் இடையே தொடர்பு இருந்ததாகத் தெரியவில்லையெனவும் ஒரு கருத்தை அவர்கள் வெளியிட்டார்கள். ஏற்றத் தாழ்வுகளும் கூட அதிகமாக இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். சோழர் காலக் கல்வெட்டுகளை ஆதாரமாக வைத்துக்கொண்டு கராஷிமா இதை மறுக்கிறார். ஒரே பகுதியில் சில இடங்களில் சுடுகாடு இருக்கிறது, சில இடங்களில் இல்லை. வசதி படைத்தவர்கள் வசிக்கும் நத்தம்கூடப் பெரும்பாலான இடங்களில் இருந்தாலும் சில ஊர்களில் இல்லை. கம்மாளர்கள்கூட எல்லா ஊர்களிலும் இல்லை. ஆனால் எல்லா இடங்களிலும் அவர்களுடைய உழைப்பு தேவைப்பட்டிருக்கும். உணவு உற்பத்தியில் தன்னிறைவு இருந்தாலும் இரும்பு, ஆடைகள் போன்றவை வெளியிலிருந்துதான் வந்திருக்க வேண்டும். ஆக கொடுக்கல் வாங்கல்கள் சார்ந்து ஒரு தொடர்பு இருந்திருக்கிறது. ஆனால் இத்தகைய நடைமுறை ஏற்றத் தாழ்வுகளை அதிகரிக்கத்தான் செய்கிறது. தன்னிறைவு என்று சொல்ல முடியாது. விஜயநகர அரசு காலத்தில் ஓரளவு நகரங்கள் வளர்ச்சியடைகின்றன. சோழர்கள் காலத்தில் தொழிற் குழுக்கள் அதிகம் இல்லை. ஓரிரு குடும்பங்கள் இருந்திருக்கலாம். நிறையக் கோவில்களைக் கட்டியிருந்தாலும்கூட 11ஆம் நூற்றாண்டுவரை கம்மாளர்களைப்பற்றி நமக்கு அதிகமாக ஒன்றும் தெரியவில்லை. 12ஆம் நூற்றாண்டின் இறுதியில்தான் அவர்கள் தங்களது உரிமைகளுக்காக ஒன்று கூடுகிறார்கள்.

விஜயநகர அரசு காலத்தில் நிறையத் தொழிற்பேட்டைகள் உருவாகின்றன. விஜயநகர அரசும் சரி, நாயக்கர்களின் குறுநில அரசுகளும் சரி நிறைய குடியேற்றங்களை உருவாக்குகின்றன. கைவினைக் கலைஞர்கள், உழுகுடிகள் என இருபிரிவினரையும் கொண்ட பேட்டைகள் உருவாகின்றன. இது ஓரளவுக்கு நகர்மயமாகிறது. இதற்கு முன்னால் கோயில் சார்ந்த பேட்டைகள் இருந்திருக்கின்றன.

ஆக விஜயநகரப் பேரரசு காலத்தில் சமூக முன்னேற்றம் என்பது ஏதோ ஒரு வகையில் சாத்தியப் பட்டிருக்கிறது. விவசாயம் சாராத வகையிலும் அமைந்திருக்கிறது. விவசாயம் சாராத தொழில்கள் இந்தத் தருணத்தில் வளர்ச்சியடைந்திருக்கின்றன. கைக்கோளர் போன்ற சில பிரிவினர் நல்ல வளர்ச்சி காண்கின்றனர். ஆனால் விவசாயத்தை மட்டுமே சார்ந்திருந்த சோழப் பேரரசின் பகுதிகள் வளர்ச்சியடையாமல் பின்தங்கி விடுகின்றன.

**ரவி: சோழர் காலத்தில் சிவமதம் அரசு மதமாக மாறியது என்று சொன்னீர்கள். பௌத்தம், சமணம் போன்ற மதங்களைச் சைவம் எதிர்கொண்ட விதத்தில் வன்முறை இருந்திருக்கிறது? வட இந்தியாவில் வேற்று மதங்களிலிருந்து வைதீக மதத்திற்கு மாறுவது பெரும்பாலும் அமைதியாக நடந்து முடிகிறது. கல்வெட்டுகள் இது பற்றி என்ன சொல்கின்றன?**

சமண மதம் மீது சில ஒடுக்கு முறைகள் இருந்திருக்கின்றன. குறிப்பாக பக்தி இயக்கக் காலத்தில் இது இருந்திருக்கிறது. அந்த நேரத்தில் மதுரை, புதுக்கோட்டை போன்ற தென் மாவட்டங்களில் சமண மதம் பரவலாக இருந்திருக்கிறது. அதன் எச்சங்களை இன்றும்கூடக் காணலாம். ஏழாம் நூற்றாண்டின் இறுதியில், சம்பந்தர் காலத்தில், சமணமதத்தை ஒடுக்குவது விரிவான அளவில் நடைபெறுகிறது. அது பற்றிய சில குறிப்புகள் – வெளிப்படையாக இல்லையென்றாலும் கூட – இருக்கின்றன. அதாவது சமணக் கோயில்களை சைவ, வைணவக் கோயில்களாக மாற்றுவதற்கு 7, 8 நூற்றாண்டுகளில் நடந்த முயற்சி பற்றி கே. ஆர். சீனிவாசன் போன்றவர்கள் குறிப்பிடுகிறார்கள். இதற்குப் பிறகு சமணர்களுக்கும் வைதிக மதத்தினருக்கு மிடையே நடந்த தகராறுகள் பற்றிச் சில குறிப்புகள் இருக்கின்றன. ஆனால் சோழர்கள் காலத்தில் இத்தகைய போராட்டங்கள் நடைபெற்றதற்கான சான்றுகள் இல்லை. சைவ – வைணவ மதங்களுக்கிடையே போராட்டங்கள் இருந்திருக்கின்றன. சிதம்பரத்தில் கோயிலை விட்டு வெளியேற்றுவது போன்ற சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. ஆனால் சோழர்கள் சமண பௌத்த கோயில்கள் கட்டுவதற்கு ஆதரவும் அளித்திருக்கிறார்கள். சில கோயில்களையும் கட்டியிருக்கிறார்கள். ஆனால் பெரிதாக ஆதரவு தரவில்லை.

**சமண, பௌத்த வழிபாட்டுத் தலங்களுக்கு அளிக்கப்பட்ட நிலங்கள் திரும்பப் பெறப்பட்டன என்பது தெளிவு. காலப்போக்கில் சமண பௌத்த மடாலயங்கள் இல்லாமல் போய் விட்டனவா? வேண்டுமென்றே அந்த நிலங்கள் பறிக்கப்பட்டு பிராமணர்களுக்கு வழங்கப் பட்டனவா? வேறு சான்றுகளுடன் இணைத்துப் பரிசீலிக்க வேண்டிய கேள்விகள் இவை.**




## 9/11
### சூழ்ச்சி – வீழ்ச்சி – மீட்சி
**பா. ராகவன்**

செப்டம்பர் 11, 2001 அன்று அமெரிக்காவில் உள்ள உலக வர்த்தக மையக் கட்டடங்கள் மீது அல்கொய்தா அமைப்பு நிகழ்த்திய தாக்குதலின் முழுப்பின்னணி விவரங்களை ஆதாரபூர்வமாக அலசும் நூல். இச்சம்பவத்தின் பின்னணியில் இருந்தவர்கள் யார் யார்? எப்படி இத்தனை பெரிய தாக்குதலைத் திட்டமிட்டார்கள்? எத்தனை மில்லியன் செலவு? குறிபிசகாமல் அடிக்க என்னென்ன பயிற்சிகள் மேற்கொண்டார்கள்?



தமிழில் முதல்முறையாக இத்தனை விவரங்களும் செப்டம்பர் 11 விசாரணை கமிஷன் அறிக்கையை ஆதாரமாகக் கொண்டு வெளியாகின்றன.

டெமி 1/8 அளவு. 280 பக்கங்கள். விலை ரூ. 130.

New Horizon Media Private Limited என்ற பெயருக்குப் பணவிடை/ சென்னையில் மாற்றத்தக்க காசோலை / வரைவோலை அனுப்பவும். தமிழ்நாட்டுக்குள் தபால்செலவு முற்றிலும் இலவசம். வெளிமாநில வாசகர்கள் நூலின் விலையுடன் ரூ.20 சேர்த்து அனுப்பவும். கண்டிப்பாக விபிபி கிடையாது.

**கிழக்கு பதிப்பகம்**
16. கற்பகாம்பாள் நகர், மயிலாப்பூர்,
சென்னை-4. தொலைபேசி: 52009601.
Web : www.newhorizonmedia.co.in
email : sales@newhorizonmedia.co.in




படிப்பகம்

www.padippakam.com



**ரவி: தமிழகத்தின் பல இடங்களில் புத்தச் சிலைகள் கிடைப்பதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

சோழநாட்டின் கிழக்குப்பகுதிகளில் நிறைய இடங்களில் புத்த மதம் இருந்திருக்கிறது. கடல் சார்ந்த பகுதிகளில் புத்த மதத்தினர் செல்வாக்குடன் இருந்திருக்கிறார்கள். கர்நாடகம் போன்ற பகுதிகளில் சமணர்கள் இருந்திருக்கிறார்கள். ஆனால் இவற்றிற்கான ஆதாரங்கள் கல்வெட்டுகளில் அதிகமாக இல்லை. கல்வெட்டுகள் கொடையைப் பற்றியே அதிகம் சொல்கின்றன. ராஜேந்திரன் காலத்தில் அம்மாபேட்டைக்குப் பக்கத்தில் ஒரு பெரிய பிரம்ம தேசத்தை உருவாக்குகிறார்கள். 1008 பிராமணர்களைக் கொண்டு வந்து குடியேற்றுகிறார்கள். அது ஒரு பெரிய ஊர். வறண்ட பகுதி. ஆனால் பெரிய ஏரி இருந்திருக்கிறது – அம்மா பேட்டைக்குக் கிழக்கே சாலிய மங்கலத்துக்கு அருகில் சுமார் 60 கிராமங்களின் வருவாயை அந்த பிராமணர்களுக்குத் தானமாக வழங்குகிறார்கள். இந்தக் கல்வெட்டுகளில் திறப்பான பள்ளி என்று அடிக்கடி வருகிறது. திறப்பு என்றால் ஒருவருக்குத் தானமாகக் கொடுத்த நிலத்தைத் திரும்பப்பெற்றுக் கொள்ளுதல். தானம் என்றால் இறையிலி, இறையிலியைத் திரும்பப் பெற்றால் திறப்பு. பள்ளி என்பது சமண, பௌத்த வழிபாட்டுத் தலங்களைக் குறிப்பது. அந்த வட்டாரத்திலேயே ஒரு ஏழெட்டு இடங்களில் திறப்பான பள்ளி என்று வருகிறது. ஆக சமண, பௌத்த வழிபாட்டுத் தலங்களுக்கு அளிக்கப்பட்ட நிலங்கள் திரும்பப் பெறப்பட்டன என்பது தெளிவு. ஏன் அப்படிச் செய்யப்பட்டது என்று தெரிய வில்லை. காலப்போக்கில் சமண பௌத்த மடாலயங்கள் இல்லாமல் போய்விட்டனவா? வேண்டுமென்றே அந்த நிலங்கள் பறிக்கப் பட்டு பிராமணர்களுக்கு வழங்கப்பட்டனவா? வேறு சான்றுகளுடன் இணைத்துப் பரிசீலிக்க வேண்டிய கேள்விகள் இவை.


## கலைகளுக்கான இந்திய அறக்கட்டளை

### திட்டவரைவுகள் கோரி அறிவிப்பு

**கலைகளுக்கான இந்திய அறக்கட்டளை (ஐ. எப். ஏ.) சுயேச்சையாக இயங்கும், கலைகளுக்கு மானியம் வழங்கும் ஓர் அமைப்பு. தன்னுடைய கலைகள் ஆய்வு, ஆவண ஆதிக்கத்திற்கான திட்டத்தின் கீழ் கலைகளின் செயல்பாடு மற்றும் கலைகளின் கொள்கை அடிப்படைகளை வலுப்படுத்தும் ஆய்வுகளுக்கும், மதிப்புமிக்க கலாச்சார சாதனங்களை ஒரு பொதுவான தளத்திற்குக் கொண்டு வரவும், நாவல்கள், கண்காட்சிகள், திரைப்படங்கள் மற்றும் மேடையாக்கங்களுக்கான ஆரம்பநிலை ஆய்வுகளுக்கும் ஐ. எப். ஏ. நிதியுதவி அளிக்கிறது.**

**கலைகள் ஆய்வு, ஆவண ஆதிக்கம் திட்டத்தின் கீழ் விண்ணப்பிப்பதற்கான தகுதிகளை விவரித்து ஐ. எப். ஏ. சமீபத்தில் புதிய மானியங்களுக்கான அறிவிப்பை வெளியிட்டிருக்கிறது. இத்திட்டத்தின் கீழ் ஐ. எப். ஏ.யிடம் நிதி உதவி கோரி விண்ணப்பிக்க நீங்கள் விரும்பினால் (ஆங்கிலத்திலும் மற்றும் சில இந்திய மொழிகளிலும் கிடைக்கும்) திட்டவரைவுகள் கோரும் அறிவிப்பைக் கேட்டு** (The Executive Director, India Foundation for the Arts, Tharangini, 12th Cross, Raj Mahal Vilas Extension, Bangalore 560 080, Tele/Fax: 080-236 10584 / 236 10583) **என்ற முகவரிக்கு எழுதலாம். மின்னஞ்சல்** ifabang@vsnl.com **திட்டவரைவுகள் கோரும் அறிவிப்பை** www.indiaifa.org **என்ற இணையதளத்திலும் பெறலாம்.**


**சலபதி:** நாற்பதாண்டுக் காலமாகக் கல்வெட்டியல் துறையில் நீங்கள் பணிபுரிந்துவருகிறீர்கள். இப்பொழுது நீங்கள் செய்துகொண்டிருக்கும் பணி என்ன? அடுத்து வரும் பத்தாண்டுகளில் செய்யத் திட்டமிட்டிருக்கும் பணி என்ன? ஒரு நாற்பதாண்டுக் காலத்து உழைப்பின் விளைச்சலை எவ்வகையிலேனும் வெளிப்படுத்த வேண்டியது முக்கிய மல்லவா?

உடனடியாக நான் செய்து முடிக்க எண்ணியுள்ள பணி வரலாற்றுமுறை நிலப்பட ஏடு (Historical atlas) இதுவே எனது முதல் நோக்கம். இரண்டு வகையில் இது முக்கியமானது. ஒன்று ஏற்கனவே அதற்கான தரவுகள் ஏராளமான அளவில் சேகரிக்கப் பட்டுவிட்டன. இரண்டாவதாக ....

**சலபதி:** வரலாற்று முறை ஏடு என்றால் என்ன? நீங்கள் தயாரித்துவரும் வரலாற்று முறை நிலப்பட ஏடு இர்பான் ஹபீபின் முகலாயப் பேரரசு கால வரலாற்றுமுறை நிலப்பட ஏட்டைப் போன்றதா?

காலம் மற்றும் இடம் சார்ந்து அரசியல் சமூக பண்பாட்டு வரலாற்றை நிலப்படங்களின் மூலமாக விளக்குவதைத்தான் Historical Atlas என்று சொல்கிறோம். அய்ரோப்பிய நாடுகளில் பலவற்றிலும் இதுபோன்ற வரலாற்றுமுறை நிலப்பட ஏடுகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. நிலப்படங்களைக்கொண்டு ஒவ்வொரு காலகட்டத்திலும் அரசியல், சமூகம், பண்பாடு மற்றும் இயற்கைச்சூழல் போன்றவற்றில் தொடர்ந்து ஏற்பட்டுவரும் மாறுதல்களை இது விளக்கும். ஒரு நாட்டுக்கும் மற்ற நாடுகளுக்கும் இடையேயான தொடர்புகள் எப்படியிருந்தன, இயற்கையமைப்பு அவற்றுக்கெல்லாம் எப்படிச் சாதகமாக அல்லது பாதகமாக இருந்தது, அரசுகள் எந்தெந்தக் காலகட்டத்தில் எப்படியெல்லாம் மாறிக்கொண்டிருந்தன என்பதை இந்த படங்களின் மூலமாக நாம் விளங்கிக்கொள்ள முடியும். இந்தியாவைப் பொறுத்த வரையில் இதுபோன்ற பரந்த அளவிலான ஓர் அட்லஸ் இருக்கிறது. அமெரிக்காவில் ஷ்வார்ட்ஸ் பர்க் என்பவர் Historical Atlas of South Asia என்று ஒரு வரலாற்று முறை ஏட்டைத் தயாரித்திருக்கிறார். இது தெற்காசிய நாடுகள் முழுமைக்குமானது. இர்பான் ஹபீப் மொகலாயர் காலத்துக்கென ஓர் ஏட்டைத் தயாரித்திருக்கிறார். அதில் தென்னக வரலாற்றுக்கு முக்கியத்துவம் இல்லை. தமிழகம் மொகலாயப் பேரரசின்கீழ் வந்திராததே காரணம். நாங்கள் தொகுக்கும் அட்லஸ் தமிழக வரலாற்றை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கும். இறுதியில் தென்னிந்தியா முழுமைக்குமான வரலாற்று நிலப்பட ஏட்டைத் தயாரிப்பதுதான் நோக்கம். ஆனால் நமக்கு முழுமையாகத் தெரிந்த பகுதி என்பதாலும் போதிய தரவுகள் இருப்பதாலும் இப்போதைக்குத் தமிழ் நாட்டிலிருந்து தொடங்கியிருக்கிறோம். அதற்குப் பிறகு கேரளத்திற்கு இதை விரிவுபடுத்த வேண்டும். இது கி. பி. 1600 வரையிலான காலகட்டத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கும். அதற்குப் பிந்தைய கால கட்டத்தைச் சேர்ந்த தகவல்களும் படங்களும் நிறைய இருக்கிறன. பலரும் பல விதங்களில் அவற்றைத் தொகுத்தும் இருக்கிறார்கள். ஆங்கில அரசின் ஆவணங்கள் இருக்கின்றன. எனவே இதை எளிதாகச் செய்யமுடியும். பழைய வரலாறு குறித்த செய்திகள் துண்டுதுண்டாக இருப்பதால் இதற்குக் கூட்டுமுயற்சி தேவைப்படுகிறது. நான்கைந்து நண்பர்கள் மற்றும் மாணவர்களின் ஒத்துழைப்புடன் இந்தப் பணியை மேற்கொண்டிருக்கிறோம். இரண்டு ஆண்டுகளில் இப்பணி முடிவடையக்கூடும்.

❑

எழுத்து வடிவம்: **தேவிபாரதி – சரஸ்வதி**

புகைப்படங்கள்: **பிரசன்னா**

www.padippakam.com




அனைத்து நூல்களும் வெளிவந்துவிட்டன! நூல்கள் பெற முந்துவீர்!

உலகெங்கும் வாழும் தமிழர்களுக்கு ஒளியூட்டும் நூல்கள்

# பதிப்பியல் வரலாற்றில் தமிழகம் கண்டிராத பெருமுயற்சி

## தமிழறிஞர் ந.சி. கந்தையாவின்




**66** நூல்கள்



**25** திரட்டுகளாக வருகிறது



- எம்மொழிக்குமில்லாத அகப்பொருள், புறப்பொருள் இலக்கணங்கள் நம் தமிழ்மொழியில் புதைந்து கிடக்கின்றன எனும் செய்திகளைக் கண்டு காட்டும் நூல்கள்
- தமிழ்மொழியின் தொன்மையையும் தமிழர் தம் தோற்றத்தையும் உலகறியச் செய்யும் நூல்கள். தமிழரின் நாகரிக பண்பாட்டுக் கூறுகள் உலகெங்கும் வேரோடி கிடக்கின்றன எனும் செய்திகளைத் தம் நுண்ணறிவால் ஆய்ந்தறிந்து காட்டும் நூல்கள்
- தமிழர்கள் தம் வலுக்குறைவை உணர்வதற்கும் தம் வலுவை உயிர்ப்பிப்பதற்கும் உதவும் நூல்கள்
- தமிழ்க்குலப் பெண்களின் பெருமை மலைமேலிட்ட விளக்கென திகழ்ந்தது என்பதை பாருக்கு உணர்த்தும் நூல்கள்.
- பண்டிதர்களின் மடியில் இருந்த சங்கச் செய்திகளைப் பாமரரும் படித்துணரும் நடையில் எழுதப்பட்ட நூல்கள்
- தமிழர் யார்? எதிரிகள் யார்? என்பதை இனம் காட்டும் நூல்கள்
- உலகில் முதன் முதலில் கடல் வணிகம் செய்தவர்கள் தமிழர்கள் என்பதை உள்ளடக்கிய நூல்கள்
- அகராதிக் கலைக்குக் கருவூலமாய்த் திகழும் அகராதி நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| நூல்களின் மொத்த விலை | உரு.4155 | மூன்று தவணைகளில் | |
| *ஒரே தவணை சலுகை விலை* (30.11.04க்குள்) | உரு. 2500 | முதல் தவணை(15.11.04க்குள்) | உரு. 1000 |
| | | இரண்டாம் தவணை(15.12.04க்குள்) | உரு. 1000 |
| வெளிநாட்டினருக்கு ஒரே தவணை 200 அமெரிக்க டாலர் | | மூன்றாம் தவணை(15.01.05க்குள்) | உரு. 900 |

ஒரே தவணையில் அனுப்புவோர்க்கு – பத்து நாள்களுக்குள் நூல்கள் அனுப்பி வைக்கப்படும்.
மற்றவர்க்கு மூன்று தவணையும் முடிந்தவுடன் – பத்து நாள்களுக்குள் நூல்கள் அனுப்பி வைக்கப்படும்.

*'அமிழ்தம் பதிப்பகம், சென்னை'* என்ற பெயரில் நூல்களுக்கானத் தொகையினை வரைவோலையாக / பணவிடையாக கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்புமாறு கனிவுடன் வேண்டுகிறோம். காசோலையைத் தவிர்க்க.

**தமிழ்மண் பதிப்பகம்,** 2, சிங்காரவேலர் தெரு, தியாகராயர் நகர், சென்னை – 17, தொ.பே. 55389712


www.padippakam.com

ஆதிச்சநல்லூர் அகழ்வாய்வு

# தாழிகள் தரும் தகவல்கள்

டி. எஸ். சுப்பிரமணியன்

பெருங்கற்காலத்தைவிடத் தொன்மையான நாகரிகம் தமிழகத்தில் இருந்ததற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன.





சுமார் நூறு ஆண்டுகளுக்குப் பிறகு, திருநெல்வேலி மாவட்டம் ஆதிச்சநல்லூரில் இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத் துறையின் சென்னை வட்டம் (Archeological Survey of India, Chennai Circle) இவ்வாண்டு பிப்ரவரி மாதம் மீண்டும் அகழ்வாராயச்சியைத் தொடங்கியுள்ளது. இதில் அரிய 150 முதுமக்கள் தாழிகள் (அவற்றில் பதினைந்தில் மனிதனின் முழு எலும்புக் கூடுகள் உள்ளன). பல வகையான சிவப்பு, கறுப்பு, சிவப்பு/கறுப்பு மண்பாண்டங்கள், கிண்ணங்கள், குடுவைகள், செப்பு வளையங்கள், உடைந்த இரும்பு ஈட்டியின் தலை, உடைந்த இரும்புக் கத்தி, மண்ணைப் பண்படுத்துவதற்கான இரும்புக் கருவிகள், புதிய கற்காலக் (neolithic) கருவிகள் போன்றவை அதிக அளவில் கிடைத்துள்ளன. தமிழ் பிராமி எழுத்துக்கள்போல் தோன்றும் சில பொறிப்புகளும் காணப்படுகின்றன. பல பானை ஓடுகளில் குறியீடுகளும் வரைகோடுகளும் (graffiti) காணப்படுகின்றன.

மேலும், கண்ணைக் கவரும் வகையில் ஒரு தாழி ஓட்டின் மீது கற்றையாக நெற்கதிர்கள், அவற்றில் அமர்ந்திருக்கும் ஒரு நாரை, அந்த நெற்கதிர்கள் அருகில் உயரமான, ஆடையுடுத்திய ஒரு பெண், அவள் அருகில் நீண்ட கூர்மையான கொம்புகள் உடைய ஒரு மான் மற்றும் முதலை போன்ற சித்திரங்களும் மிக மிக நேர்த்தியாகப் பொறிக்கப்பட்டுள்ளன (இதனை Motifs in Applique Design என்று கூறுவார்கள்). "முதுமக்கள் தாழிகள் கிடைக்கும் இடத்தில் இவ்வாறு பொறிப்புச் சித்திரம் தாழி ஓட்டின்மீது கிடைப்பது இதுவே முதல் முறை" என்று அகழ்வாராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

முதுமக்கள் தாழிகள், மிகத் தொன்மையான தமிழ் பிராமி எழுத்துகள், மட்கல வகைகள், இரும்பு ஈட்டிகள், இரும்புக் கருவிகள், பொறிப்பு உருவங்கள் போன்றவற்றைக் கணக்கில்கொண்டு ஆதிச்சநல்லூரை இரும்புக்

படிப்பகம்

www.padippakam.com

காலத்தைச் சேர்ந்த முதுமக்கள் தாழி இடம் என்று கூறுகிறார்கள் (Iron Age Urn _ burial site). சுமார் 2100-2500 ஆண்டுகளுக்கு முன்பே ஒரு சிறந்த தமிழர் நாகரிகம் ஆதிச்சநல்லூரில் ஓங்கி வளர்ந்திருக்க வேண்டும் என்றும் தொல்லியலாளர்கள் கருதுகிறார்கள்.

கிடைத்துள்ள தாழிகள், ஓடுகள் மட்கல வகைகள், அரிசி, உமி போன்றவற்றின் காலகட்டத்தை அறிவியல் சார்ந்த முறையில் கணிக்க அவை கரிமம் 14 (Carbon 14) சோதனை, தெர்மோலுமினெசன்ஸ் முறை (Thermo luminescence), Accelerated Mass Spectrometer முறை போன்ற சோதனைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. அவற்றின் முடிவுகள் தெரிந்ததும் காலக்கணிப்பு உறுதிபெறும்.

இவ்வாறு பல்வகையான தொல்பொருள்கள் கிடைத் துள்ளமையால் இந்த முதுமக்கள் தாழிப் பறம்பின் அருகில் மக்கள் வாழ்ந்த ஒரு பெரிய இருப்பிடம் அமைந்திருக்க வேண்டும் என்றும் கருத இடமுண்டு.

திருநெல்வேலி நகரிலிருந்து சுமார் 24 கிலோமீட்டர் தொலைவில் திருச்செந்தூருக்குச் செல்லும் வழியில் செய்துங்கநல்லூர், கருங்குளம் ஆகிய ஊர்களைத் தாண்டி ஆதிச்சநல்லூர் அமைந்துள்ளது. முதுமக்கள் தாழிகள் கிடைக்கும் மேட்டை உள்ளூர் மக்கள் ‘முது மக்கள் தாழிப் பறம்பு’ என்ற அழைக்கின்றனர். முதுமக்கள் தாழிகள் கிடைக்குமிடம் 114 ஏக்கரில் பரந்து கிடக்கிறது. தாமிரபரணியின் தெற்குக்கரையில் இது அமைந்துள்ளது. இந்த மேட்டுக்குக் கிழக்கில் ஓர் ஏரி உள்ளது. ஒரு இரயில்வே இருப்புப் பாதை ஏரியினூடே செல்கிறது. அருகில் வயல்கள். இந்த ஆதிச்சநல்லூர் இரண்டு மூன்று போகங்கள் விளை கின்றன செழிப்பான ஒரு பூமி. இந்தக் குன்றின் உச்சியில் பாண்டிய ராசா கோயில் என்று அழைக்கப் படும் மிகச் சிறிய கோவில் ஒன்றும் உள்ளது.

ஆதிச்சநல்லூரின் முக்கியத்துவத்தை முதலில் உலகிற்கு வெளிக்கொணர்ந்தவர் ஜாகர் (Dr. Jagor) என்ற ஜெர்மானியர். அவர் இங்கு முதன்முதலாக 1876இல் தாறுமாறாக அகழ்வாராய்ச்சி செய்து முழு மனித எலும்புக் கூடுகள் பலவற்றைத் தாழிகளில் கண்டுபிடித்தார். மட்கலன்கள், இரும்பினால் செய்த பொருட்கள் போன்றவற்றையும் அகழ்ந்து எடுத்தார். ஆனால் ஜாகரின் அகழ்வின் முக்கியமான நோக்கமானது ஆதிச்சநல்லூரில் தாழிகளில் கிடைத்த மனிதக் கூடுகளுக்கும், Indo-European இன மக்களுக்கும் தொடர்பு இருந்திருக்க வேண்டும்; அவர்கள் இருவரும் ஒரே இனவகையைச் சேர்ந்தவர்கள்தான் என்று புலப்படுத்து வதே. ஆதிச்சநல்லூர் மக்கள் Indo-Australoid இனத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர்களுக்கும் Indo-European இனத்தைச் சேர்ந்தவர்களுக்கும் தொடர்பு இருந்திருக்க வேண்டும் என்றும் அவர் கருதினார். இந்த எலும்புக் கூடுகள், மட்கலன்கள் போன்றவை இன்னமும் ஜெர்மனியின் பெர்லின் அருங்காட்சியகத்தில் உள்ளன.

பிறகு 1889 முதல் 1905வரை இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத் துறையின் அகழ்வராய்ச்சிக் கண்காணிப் பாளராகப் பணியாற்றிய அலெக்சாந்தர் ரீ (Alexandar Rea) ஆதிச்சநல்லூரில் முதுமக்கள் தாழிகளைப் பெரு மளவில் அகழ்ந்தெடுத்தார். இதற்கிடையில் பாரிஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த லூயி லேபிக் (M. Louis Lafiq) என்பவரும் அகழ்வாய்வை மேற்கொண்டார். அவர் நான்கு குழிகளில் பல வகை மட்கலன்கள், இரும்புப் பொருள்கள், வெண்கலப் பொருள்கள், தொங்கு விளக்குகள் போன்றவற்றை வெளிக்கொணர்ந் தார்.[1] இவற்றை இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத் துறையைச் சேர்ந்த சு. இராசவேலு மற்றும் கோ. திரு மூர்த்தி எழுதிய “தமிழ்நாட்டுத் தொல்லியல் அகழாய்வு கள்” என்ற நூலில் எழுதியுள்ளார்கள்.

அலெக்சாந்தர் ரீ மிக விரிவான அகழ்வு நடத்தினார். அவர் கண்டெடுத்த பொருள்கள் பல ஆயிரம். அவற்றை யெல்லாம் ஆய்ந்து, பிரித்து, பாகுபடுத்தி நேர்த்தியாகப் பட்டியலிட்டார். பிறகு அவற்றைச் சென்னையிலுள்ள அரசாங்க அருங்காட்சியகத்தில் ஒப்படைத்தார். இன்றைக்கும் அங்கே சென்றால் காணலாம். அலெக் சாந்தர் ரீ தனது முதல் அகழ்வாராய்ச்சியில் 1,872 தொல்பொருள்களைக் கண்டெடுத்தார். பின்பு 4,000 பொருள்களைக் கண்டுபிடித்தார். அவற்றில் முதுமக்கள் தாழிகள், பல வகையான மண்பாண்டங்கள், சில தங்க நகைகள், கல்மணி வகைகள், எலும்புகள், அம்மி, குழவி ஆகியன உண்டு. மேலும், அரிசி, நைந்து போன துணிகள், மைக்கா (Mica), பல வகைப்பட்ட ஆயுதங்கள், கருவிகள் போன்றவை இருந்தன.

எல்லா ஆயுதங்களும் கருவிகளும் இரும்பினால் செய்யப்பட்டவை; வெண்கலத்தால் செய்யப்பட்ட வையல்ல என்கிறார் ரீ.[3] ஆனால் பெரும்பாலான கலன்கள் (பாத்திரங்கள்) மண்ணால் செய்யப்பட்டவை என்றும் சில வெண்கலத்தால் செய்யப்பட்டவை என்றும் கூறுகிறார். “அரிதாகக் கிடைக்கும் இந்த வெண்கலப் பொருட்கள், மக்கள் அவற்றை ஆபரணங் களாக உபயோகப்படுத்தியதைக் காட்டுகிறது. இந்த உலோகம் மிகவும் அரிதானது; மேல்தட்டு மக்களால் உபயோகிக் கப்பட்டது” என்கிறார்.[4] “தாழிகளில் கிடைக்கப்பெற்ற தங்க நகைகள் நெற்றிச் சுட்டிகளே” என்றும் எழுதியுள்ளார். வெண்கலத்தால் கருவிகள் செய்யப்படாவிடிலும் எருமை, ஆடு, சேவல், புலி, மான், யானை முதலியவை செய்யப்பட்டிருந்தன.

ஆதிச்சநல்லூரில் தாம் கண்டெடுத்த பொருள் களைப் பற்றியும் அவற்றின் முக்கியத்துவத்தையும் பற்றியும், மிக விரிவான, பொருள் செறிந்த கட்டுரையை அலெக்சாந்தர் ரீ எழுதியுள்ளார். அக்கட்டுரை “திரு நெல்வேலி (மாவட்டத்தில்) காணப்படும் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தின் தொல்பொருட்கள் (Prehistoric Antiquities in Tirunelvelly) என்ற தலைப்பில் வந்துள்ளது. அக்கட்டுரைக்குள்ளே விரிவான ‘வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தைச் சேர்ந்த ஆதிச்சநல்லூர்’ (The Prehistoric Site at Adittanallur) என்ற பகுதியும் இடம்பெற்றுள்ளது.

அவர் அக்கட்டுரையில் ஆதிச்சநல்லூர் முதுமக்கள் தாழிப்பறம்பானது “தென்னிந்தியாவில், ஏன் இன்னும் சொல்லப்போனால், இந்தியாவிலேயே மிக விரிந்த வரலாற்றுக்கு முற்பட்ட இடம்” எனக் குறிப்பிடு கின்றார்.[2]

சென்னை அருங்காட்சியகத்தைச் சேர்ந்த தஸ்டன் (Thurston) எலும்புக் கூடுகளை ஆராய்ந்து இங்கு வாழ்ந்த மக்கள் நீண்ட தாடை உடைய இன மக்கள் எனக் கூறியுள்ளார். எலியட் ஸ்மித் என்பவர் இரண்டு



படிப்பகம்

www.padippakam.com

மண்டை ஓடுகளை ஆராய்ந்து அவை வேறுபட்ட இனத்தைச் சேர்ந்தவை என்றும் ஒன்று தொன்மையான ஆஸ்ட்ரலாயிடு இனத்தைச் சேர்ந்தது என்றும் மற்றொன்று மத்திய தரைக் கடலைச் சார்ந்த இன மக்களது என்றும் கூறுகிறார். மேலும் அவர் இம் மக்கள் ஆல்பைன் இனத்தின் ஒரு பிரிவினரான ஆர்மினிய மக்கள் எனவும் கூறுகிறார். திராவிட இனத்தின் ஒரு கலவைக் கூறாக இந்த ஆர்மினிய இனக்கூறு காணப்படுவதாகவும் சொல்கிறார். சக்கர்மேன் (Zuckerman, 1930) ஒரு மண்டையோட்டை ஆய்ந்து அது திராவிட இனத்தைச் சார்ந்தது எனக் கூறியுள்ளார். இந்தக் குறைந்த அளவு பரிசோதனை மூலம், இந்த இடத்தில் பல இன மக்கள் ஒருவரோடு ஒருவர் இணைந்தோ அல்லது அருகருகேயோ வாழ்ந்திருக்கலாம் எனத் தோன்றுகிறது.



"ஆதிச்சநல்லூரில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளின் வாயிலாக கி. மு. 1000ஆம் ஆண்டளவின் முற்பகுதியில் பெருங்கற்காலப் பண்பாட்டு மக்கள் சிறப்பாக வாழ்ந்துள்ளனர் என அறிய முடிகிறது." இவ்வாறு இராசவேலுவும், திருமூர்த்தியும் தாங்கள் இணைந்து எழுதியுள்ள 'தமிழ்நாட்டுத் தொல்லியல் அகழாய்வுகள்' என்ற நூலில் எழுதியுள்ளனர்.

இவ்விடத்தில் ஒரு முக்கியச் செய்தியைச் சிறிது நோக்க வேண்டும். இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத் துறையின் இயக்குநராகப் பணியாற்றிய கே. ஆர். ஸ்ரீனிவாசன் என்ற அறிஞர், 'தமிழ் இலக்கியத்திலும், மரபிலும் பெருங்கற்கால இடுகாடுகளும் ஈமத்தாழி இடங்களும்' என்ற மிக அருமையான கட்டுரையை ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். இதில் கி. மு. 3ஆம் நூற்றாண்டிலிருந்து கி. பி. 12ஆம் நூற்றாண்டுவரை எவ்வாறு தமிழ் இலக்கியங்களில் "முதுமக்கள் தாழி" என்ற சொற்றொடர் வருகிறது என்று விளக்குகிறார். எங்கே ஈமத்தாழிகள் இருந்தனவோ அவ்வூர் மக்கள் அவற்றை "மத மத்துக் கட்டை" என்று குறிப்பிடுகின்றனர். "முதுமக்கள் தாழி" (அதாவது முதியவர்கள் புதைக்கப்படும் தாழி) என்பது மருவி மத மத்துக் கட்டை என ஆகிவிட்டது என்றும் கூறுகிறார். முது மக்கள் தாழி என்ற பெயர்தான் கி. மு. 3ஆம் நூற்றாண்டு முதல் கி. பி. 12ஆம் நூற்றாண்டுவரை முந்தைய தமிழ் இலக்கியங்களில் வருகிறது என்கிறார். "முதுமக்கள் சாடி", "ஈமத்தாழி" அல்லது "தாழி" ஆகிய சொற்களும் பயன்படுத்தப்பட்டன. கலசக்காடு அருகில், திருக்கட்டளையில் உள்ள ஒரு கல்வெட்டில் சில நிலப்பகுதிகளை "அந்தரத் தாழி புஞ்செய்" என்று குறிப்பிடப்படுகிறது. அதாவது ஈமத்தாழிகள் புதைக்கப்பட்ட புஞ்சை நிலம் என்று பொருள். கி. பி. 7 முதல் 11ஆம் நூற்றாண்டு வரை, பல்லவர்களும் சோழர்களும் தமிழ் நாட்டை ஆண்ட பொழுது "தாழி" என்ற சொல் கற்கோவில்களின் கருவறையைக் குறித்தது என்கிறார் ஸ்ரீனிவாசன். புறநானூற்றில் பல இடங்களில் இடுகாடுகளைப் பற்றியும் ஈமத் தாழிகளைப் பற்றியும், சில இடங்களில் எரியூட்டுதல் பற்றியும் புலவர்கள் பாடியுள்ளனர். ❑

சுமார் நூறு ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத்துறையின் சென்னை வட்டம் ஆதிச்சநல்லூரில் இவ்வாண்டு (2004) மீண்டும் தனது அகழ்வாராய்ச்சியைத் தொடங்கியது. இது அகழ்வாராய்ச்சிக் கண்காணிப்பாளர் முனைவர் சத்தியமூர்த்தியின் தலைமையில் பிப்ரவரி 4 முதல் ஜூலை 15வரை இடைவிடாது நடைபெற்றது. திருமூர்த்தி, எம். நம்பிராஜன், அருண் மாலிக் பி. அறவாழி முதலனோர் அக்குழுவில் இடம்பெற்றிருந்தனர். ஆனால் அலெக்சாந்தர் ரீ நடத்திய அகழ்வின்போது கிடைத்த தொல்பொருட்கள் இப்போது கிடைத்த பொருட்களைவிட மிக அதிகம். மேலும் ரீ அகழ்வாராய்ச்சி செய்த இடம் எது என்று இப்பொழுது கண்டுபிடிக்க முடியவில்லை. ரீ கண்டெடுத்த பொருட்கள் தென்னிந்தியாவின் வரலாற்றுக் காலத்திற்கும், வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் (proto-historic) மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. இக்காலமானது எழுத்தறிவு, நாகரிகம் மிளிர்ந்த காலம். ஆனால் இலக்கியம் படைக்கப்படாத காலம். ரீ கண்டெடுத்த வெண்கலப் பொருள்கள் தமிழ் நாகரிகத்தின் தொன்மையை நிரூபிக்கின்றன. மேலும் அவர் வெண்கலத்தால் ஆன ஒரு தாய் தெய்வத்தையும் கண்டெடுத்தார். இது மிக முக்கியமான கண்டுபிடிப்பு. மேலும் ரீ பொன்னாலான நெற்றிப் பட்டயங்களையும் கண்டெடுத்தார். ஆதிச்சநல்லூரில் ஈமத்தாழிகள் இடப்பட்ட காலத்தில் தென்னிந்தியாவில் தங்கம் கிடைக்கவில்லை. எனவே இந்தத் தங்கப் பட்டயங்கள் வெளிநாடுகளிலிருந்து வந்திருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள்.

இவ்வாண்டு நடைபெற்ற அகழ்வாராய்ச்சிக்குச் சில குறிக்கோள்கள் இருந்தன. முதல் குறிக்கோள், ஆதிச்சநல்லூரில் அறிவியல் சார்ந்த முறையில் அகழ்வாராய்ச்சி நடத்துவது. முன்பு நிகழ்த்திய அகழ்வுகள், அறிவியல் சார்ந்து, முறைப்படி நடத்தப்படவில்லை (நூறு ஆண்டுகளுக்கு முன்பு அகழ்வாராய்ச்சி அவ்வளவு முன்னேற்றம் அடையவில்லை). இரண்டாம் குறிக்கோள் (முனைவர் சத்தியமூர்த்தியின் வார்த்தைகளில்): ஆதிச்சநல்லூர் முதுமக்கள் தாழி மற்றும் அதன் பொருட்களின் காலகட்டத்தையும், அதன் காலத் தொடர்ச்சியையும் (Chronology) அறிவியல் முறைமைப்படி நிறுவுவது."


படிப்பகம்

www.padippakam.com

இந்த முதுமக்கள் தாழிகள் புதைக்கப்பட்டிருக்கும் இடத்திற்கு அருகில் மக்கள் குடியிருப்பும் துவங்கி யிருக்க வேண்டும். "அந்த மக்கள் இருப்பிடத்தையும் நாங்கள் கண்டுபிடிக்க விரும்புகிறோம்." பொதுவாக, பெருங்கற்காலத்திற்குரிய (megalithic) நாகரிகம்தான் தென்னிந்தியாவின் மிகவும் தொன்மையான நாகரிகம் எனக் கருதப்படுகிறது. ஆனால் நாங்கள் ஆதிச்ச நல்லூரில் நடத்திய அகழ்வின் மூலம் பெருங்கற் காலத்தைவிடத் தொன்மையான நாகரிகம் தமிழகத்தில் இருந்ததைக் கண்டறிந்துள்ளோம்."

இவ்வாறு ஆதிச்சநல்லூர் முதுமக்கள் தாழிகள் பரவியிருக்கும் இடம் எந்தக் காலகட்டத்தைச் சேர்ந்தது என்று அறிவியில் ஊடாக நிர்ணயிக்கும் முறையில் முதலில் ஆறு குழிகள் (10 × 10 மீட்டர்) வெட்டப்பட்டன.

"நாங்கள் பத்து சென்டிமீட்டர் தோண்டியபொழுதே பல வகையான மட்கலன்களைக் கண்டெடுத்தோம். மேலும் ஆழமாகத் தோண்டியதில் மூன்று அடுக்கு களில் முதுமக்கள் தாழிகள் கிடைத்தன. இந்த மூன்று அடுக்குகள் வெவ்வேறு மட்டத்தில் இருந்தன. மிகவும் ஆழமான அடுக்கு, பத்தடி ஆழத்தில் இருந்தது. அதன் மேல் அடுக்கு 4 – 6 அடி ஆழத்தில் இருந்தது. மிக மேல் அடுக்கு 2 – 4 அடி ஆழத்தில் இருந்தது. இவற்றில் கண்டெடுத்த முதுமக்கள் தாழிகளையும் மட்கல வகைகளையும் இரும்புப் பொருட்களையும் மிகக் கவனமாக வெளிக்கொணர்ந்தோம். இந்தக் குன்றில் உள்ள பாறைகளை வெட்டிப் பிளந்து வட்டக் கிணறு கள் போல் செய்து, அதனுள் தாழிகளைச் செருகியுள் ளனர்" என்கிறார் திருமூர்த்தி.

மூன்று விதமான உயரத்தில் தாழிகளைப் புதைப்ப தற்கு அக்காலத்துத் தமிழ் மக்களுக்கு உயர்ந்த நோக்கம் இருந்தது எனத் திருமூர்த்தி கூறுகிறார். மிகவும் ஆழத்தில் உள்ள குழிகள் அக்காலச் சந்ததியினர் இறந்தால் அவர்களைத் தாழியில் இட்டுப் புதைப்பதற்காகத் தோண்டப்பட்டன. மேலே உள்ள இரண்டு அடுக்குகள் வருங்காலச் சந்ததியினருக்காக ஒதுக்கப்பட்டன. மேலும் அவர்கள் தாழிகளைப் புதைத்த இடம் ஒரு குன்று. அதில் மழை நீர் தேங்காது. அது பயிர் செய்யும் இடமும் அல்ல. இவ்வாறு நிலத்தை அவர்கள் சிக்கன மாக உபயோகித்திருக்கிறார்கள்.


கிடைத்த 150 தாழிகளில் சுமார் 50 உடையாமல் இருந்தன. 15 தாழி களில் முழு மனித எலும்புக்கூடு கள் கிடைத்தன. பல தாழிகளில் சில மனித எலும்புகள் கிடைத்தன. ஒரு தாழிக்குள் ஒரு குழந்தையின் எலும்புக்கூடு இருந்தது. ஒரு தாழி யினுள் ஒரு பெரிய எலும்புக்கூடும், ஒரு சிறிய எலும்புக்கூடும் கிடைத் தன. அவை ஒரு தாயின் எலும்புக் கூடாகவும், குழந்தையின் எலும்புக் கூடாகவும் இருக்கலாம்.

இரண்டு வகையான முதுமக்கள் தாழிகள் கிடைத்தன. ஒன்று கை யினால் செய்யப்பட்ட சொரசொரப்பான சிவப்புத் தாழி. மற்றொன்று பாதி கறுப்பும் பாதி சிவப்புமான தாழி. சிவப்பு நிறத் தாழிகள் சில கறுப்பு நிறத் தாழி களைவிடப் பெரிதாக உள்ளன. அவை தொன்மை யானவையும்கூட. கறுப்பு, சிவப்பு நிறப் பானைகள் சிறியதாக உள்ளன. அவை பிற்பட்ட காலத்தைச் சேர்ந்தவை.

சில தாழிகள் இரட்டைத் தாழியாக உள்ளன. கீழ் உள்ளே தாழியின் மீது அதே மாதிரி வனையப்பட்ட இன்னொரு தாழி கவிழ்த்து மூடப்பட்டுள்ளது. இது சங்ககாலத்தில் பாடப்பெற்ற முறையை ஒத்துள்ளது. சில தாழிகளில் அலங்காரம் செய்யப்பட்டுள்ளது. ஒரு பானையின் விளிம்பிற்குக் கீழ் வட்டமாகக் கட்டைவிரல் நகத்தின் பதிப்பு முழுவதுமாக உள்ளது. இன்னொரு தாழியின் மீது மூன்று கோடுகள் விளிம்பி லிருந்து தொடங்கிக் கீழே பரந்து ஓடுகின்றன. இந்தக் குறியீடுகள் மண்ணால் செய்யப்பட்டுத் தாழிகளின் மீது பொறிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான அலங்காரக் குறியீடுகள் வெவ்வேறு இனக் குழுக்களின் குறியீடு களாக இருக்கலாம் என்று கருதுகிறார்கள்.

ஒரு தாழிக்குள் மண்ணால் ஒரு கொம்பு ஒட்டப் பட்டுள்ளது. இவை தாழிக்குள் பொருள்களைத் தொடங்க விடுவதற்காக இருக்கலாம். ஈமத் தாழிகள் 2 அடி முதல் 4 அடிவரை விட்டம் உடையதாக உள்ளன. பொதுவாக அவை மூன்று அடி விட்டம் கொண்டவை. பல தாழிகளில் கல்லும் மண்ணும் நிரம்பியுள்ளன. காலப்போக்கில், மழையினால் சரிவுற்ற மண், கற்கள் இத்தாழிகளுக்குள் சென்று அவை விரிவடைந்து உடைந் திருக்கலாம். மேலும், புதையல் தேடிய திருடர்கள் இத்தாழிகளைத் தங்கம், வெள்ளி போன்ற பொருட்கள் கிடைக்காததால் கோபம் கொண்டு புரட்டிப் போட்டு உடைத்திருக்கலாம்.

தாழிக்குள் எவ்வாறு எலும்புக்கூடுகளை அக்கால மக்கள் இட்டனர்? அவற்றை இறந்தவர்களின் உடலுடன் கிடத்தினரா? அல்லது உடலை வேறு இடத்தில் வைத்து அதனைக் கழுகு போன்ற பறவைகள் உண்ட பின், எலும்புகளைச் சேகரித்து தாழிகளுக்குள் வைத்தனரா? ஏன் சில தாழிகளில் முழு மனித எலும்புக்கூடுகள் உள்ளன? மற்ற வற்றில் ஏன் சில எலும்புகள் மட்டும் உள்ளன? இக்கேள்வி களுக்கு இதுவரை சரியான விடை கிடைக்கவில்லை. ஈமத் தாழி களின் உள்ளே மூன்று வகையான ஈமப் பானைகள் கிடைத்துள்ளன. அவை பளபளப்பான, கறுப்பு நிறம் கொண்ட கிண்ணங்கள், குடுவைகள், பாத்திரங்கள். இந்த மட்கல வகைகள் சிறியதாக உள்ளன. இவை சடங்குக்காகப் பயன்படுத்தப்பட்டவை. இந்தச் சிறிய மட்கலன்களின் மீது மூடி கள் நேராக (கவிழ்த்து இல்லை)





படிப்பகம்

www.padippakam.com

போடப்பட்டுள்ளன. இந்த மூடிகள் மீது பல வகையான அலங்காரங்கள் உள்ளன. அவை புள்ளியாகவும் பூக்கள் போன்றும் ஜியோமிதி வடிவங்கள் போன்றும் உள்ளன. சில மூடிகளில் அடுக்குகள் கொண்ட tiered knots உள்ளன. இவை மிக நேர்த்தியாக வரையப்பட்டுள்ளன.

தாழிக்குள் இருக்கும் எல்லாச் சிறிய பானைகளும் வட்ட வடிவிலான பிரிமனையின் மேல் அமர்ந்துள்ளன. இவை செராமிக்கால் செய்யப்பட்டுள்ளன. சில தாழிகளுக்குள் இரும்புக் கருவிகள் உள்ளன. அவை இறந்தவரின் பிரத்யேகமான கருவியாக இருக்கலாம். பல தாழிகளுக்குள் நெல்லும் உமியும் உள்ளன. தாழிகளுக்கு வெளியேயும் பானைகள் நிறைந்து காணப்படுகின்றன. இந்தப் பானைகள் சற்றுப் பெரிதாக உள்ளன. அவை சிவப்பு நிறம் கொண்டவை.



இந்த மட்கல வகைகள் உருண்டை வடிவிலான பானை, பாத்திரங்கள், குடுவைகள், நடுத்தர உயரமாக உள்ள கிண்ணங்களாக உள்ளன. இவை யாவும் வட்ட வடிவிலான இருக்கையின் மேல் தாழிக்கு வெளியே உள்ளன. தாழிகளுக்கு வெளியேயும் மண்ணைப் பண்படுத்துவதற்கான இரும்புக் கருவிகள் காணப்பட்டன. இவை உடைந்தும், துருப்பிடித்தும் உள்ளன. ஈட்டி முனை, அம்பு முனை, கத்தி, வாள் போன்றவை கிடைத்தன. சில இரும்புக் கருவிகள், மரக்கட்டைக் கைப்பிடியின் கூறுகள் உள்ளன. மொத்தமாக, இவ்வாண்டு நடைபெற்ற அகழ்வாய்வில் 25 இரும்புக் கருவிகள் கண்டெடுக்கப்பட்டன. மேலும் மூன்று செப்பு வளையல்களும் கிடைத்தன. இரண்டு செப்புக் காது வளையங்களும் கண்டெடுக்கப்பட்டன. இந்த இரண்டு சிறிய செப்புக் காது வளையங்களும் ஒரு குழந்தையின் எலும்புக்கூடு இருந்த ஈமத் தாழிக்குள் இருந்தன.

மொத்தத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மட்கலன்கள், குடுவைகள், கிண்ணங்கள், சாடிகள், பானை, பாத்திரங்கள் ஆகியவை கிடைத்துள்ளன. பல ஆயிரக் கணக்கான உடைந்த பானை ஓடுகளும் கிடைத்துள்ளன. ஒரு பானை ஓட்டின் மீது மிக நேர்த்தியாகக் கயிறுபோன்ற வடிவங்கள் உள்ளன. பல பானை ஓடுகளில் கீறல் குறியீடுகள் உள்ளன. மட்கலன்களைச் சுட்ட பின் அவற்றின் வெளிப்புறத்தில் கூர்மையான ஆணி கொண்டு இவை குறியிடப்பட்டுள்ளன. சில கீறல் குறியீடுகள் ஒன்றோடொன்று வெட்டும் நேர்க்கோடுகளாக உள்ளன. இரண்டு பானை ஓடுகளில் தமிழ் பிராமி எழுத்துகள் போன்ற கீறல்கள் காணப்படுகின்றன.

ஒரு தாழியினுள் நான்கு தமிழ் பிராமி எழுத்துகள் போன்ற பொறிப்புகள் உள்ளன. சில தாழிகளுக்குள் புதிய கற்காலக் கருவிகளும் கண்டெடுக்கப்பட்டன. (புதிய கற்காலமானது மனிதன் நிலையான வாழ்க்கையை மேற்கொண்ட காலம். இக்காலத்தில் கற்கருவிகள் பளபளப்பாக, மெருகூட்டப்பவையாகக் காணப்படும். இதன் காலம் கி. மு. 800 முதல் 1000வரை என்று இராசவேலுவும், திருமூர்த்தியும் தங்கள் நூலில் கூறியுள்ளனர்.)

இந்த ஆண்டு நடந்த அகழ்வில் எந்த வெண்கலப் பொருட்களும் கிடைக்கவில்லை. தங்கத்தால் செய்த நகைகளும் கிடைக்கவில்லை. இவையிரண்டும் அலெக்சாந்தர் ரீ அகழ்வாராய்ச்சி செய்தபொழுது கண்டெடுக்கப்பட்டன. இந்த ஆண்டில் நடந்த அகழ்வாராய்ச்சியில் மிக முக்கியமான கண்டுபிடிப்பு, ஒரு தாழி ஓட்டின் மீது சுடுமண் கொண்டு செய்யப்பட்ட பெண், நெற்கதிர்கள், நாரை, மான், முதலை பொறித்த உருவங்கள்தான். இந்தப் பொறிப்பு உருவங்கள் மிக நேர்த்தியாகவும் தத்ரூபமாகவும் வரையப்பட்டு, மனதை ஈர்க்கும் வகையில் கண்கொள்ளாக் காட்சியாக உள்ளன. பெண் உருவம் உள்ளதால் இது தாய் தெய்வ வழிபாடாக இருக்கலாம் என்று அறிஞர்கள் கருதுகிறார்கள்.

தாழி ஓட்டின் மீதுள்ள இந்தப் பொறிப்பு உருவங்கள் "தென்னிந்தியாவில், இரும்புக் காலத்தைச் சேர்ந்த அகழ்வுகளில் மிக உன்னதமான கண்டுபிடிப்பு" எனத் திருமூர்த்தி கூறுகிறார். இந்தத் தாழி 3000 ஆண்டுகளுக்கும் முன்னது எனக் கருத இடமுண்டு. இச்சோதனைகளின் முடிவில் ஆதிச்சநல்லூரின் காலம் உறுதிப்படும். ❑

குறிப்புகள்:

1. தமிழ்நாட்டுத் தொல்லியல் அகழாய்வுகள். ஆசிரியர்கள் சு. இராசவேலு, கோ. திருமூர்த்தி, பண்பாட்டு வெளியீட்டகம், சென்னை, 1995.
2. Prehistoric Antiquities in Tinnelvelly - The Prehistoric Site at Adittanallur, Archaeological Report by Alexander Rea, Archaeological Survey of India, Annual Report, 1902-1903
3. Ibid
4. Ibid
5. The Megalithic Burials and Urn-Fields o f South India in the Light of Tamil Literature and Tradition by K.R. Srinivasan, Ancient India, Bulletin of the Archaeological Survey of India, November 2, 1946, Published by the Director-General, ASI, New Delhi, 1983.

டி. எஸ். சுப்ரமணியன் 'ஃபிரெண்ட்லைன்' ஆங்கில இதழின் முதுநிலைத் துணையாசிரியர்.


படிப்பகம்

www.padippakam.com




# அருகன்குப்பம் பிரம்மரிஷி

ரவிக்குமார்

பௌத்தக் கோயில்கள் இந்துக் கோயில்களாக மாற்றப்பட்டது குறித்தும், அவை கிராம தெய்வங்களாகத் தாழ்த்தப்பட்டது பற்றியும் மயிலை சீனி. வேங்கடசாமி கூறியிருக்கிறார்: "இப்போது திருமால் கோயில்கள் அவ்வவ்விடங்களில் வரதராசர் கோயில், திருவரங்கர் கோயில், வேங்கடேசர் கோயில் முதலிய வெவ்வேறு பெயர்களுடனும், சிவபெருமான் கோயில்கள் தியாகராசர் கோயில், சொக்கலிங்கர் கோயில் முதலான வெவ்வேறு பெயர்களுடனும் வழங்கப்படுவது போலவே பண்டைக் காலத்தில் பௌத்தர் கோயில்களும் புத்தருடைய பல பெயர்களில் ஒவ்வொன்றன் பெயரால், தருமராசா கோயில், சாத்தனார் கோயில், முனீஸ்வரர் கோயில் என்பன போன்ற பெயர்களுடன் வழங்கப்பட்டுவந்தன என்றும் பிற்காலத்தில் இந்து மதம் செல்வாக்குப் பெற்றபோது அவை இந்து மதக் கோயில்களாகச் செய்யப்பட்டு, இந்து மதம் தொடர்பான கதைகளுடன் இணைக்கப்பட்டு, பின்னும் நாளடைவில் இவை கிராமதேவதைக் கோயில்கள் என்னும் நிலையில் தாழ்ந்த நிலைக்குக் கொண்டு வரப்பட்டனவென்றும் தோன்றுகிறது" என்கிறார் சீனி. வேங்கடசாமி (பௌத்தமும் தமிழும் பக்கம் 179). அவரது கூற்றுக்குச் சான்று பகர்வதுபோல புத்தர் கோயில் ஒன்றை நான் கண்டேன்.

புதுச்சேரியிலிருந்து கடலூர் செல்லும் சாலையில் ஆறு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது அரியாங்குப்பம். அங்கிருந்து கிழக்கே அரிக்கன்மேட்டுக்குச் செல்லும் பாதையில் அமைந்துள்ளது பிரம்ம ரிஷி ஆலயம். புதுவை அரசின் இந்து அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள சிறிய கோயில். அங்கு பிரம்ம ரிஷி என்ற பெயரில் வழிபடப்படுவது புத்தர் சிலையாகும். அமர்ந்த கோலத்தில் தியான நிலையில் உள்ள கருங்கல்லால் ஆன புத்தர் சிலையே அங்கு பிரம்ம ரிஷி என அழைக்கப்படுகிறது. பிரம்ம ரிஷி என்ற பெயர் வந்ததன் காரணம் ஆய்வுக்குரியது. பர்மாவை பிரம்ம தேசம் எனக் குறிப்பிட்டு வந்த விவரம் பலரும் அறிந்ததே. பர்மாவிலிருந்து வந்த பௌத்தர்களால் வழிபடப்பட்ட கோயில் என்ற காரணம் கொண்டு அது பிரம்ம ரிஷி ஆலயம் என வழங்கப்பட்டிருக்கக்கூடும்.



படிப்பகம்

www.padippakam.com

கிழக்குக் கடற்கரைப் பகுதி முழுவதும் பௌத்தத்தின் செல்வாக்குக்கு உட்பட்டிருந்த உண்மையை வரலாற்றறிஞர்கள் பலரும் குறிப்பிட்டுள்ளனர். அப்பகுதிகள் நெடுகிலும் ஏராளமான புத்தர் சிலைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இப்போதும் நூற்றுக் கணக்கான சிலைகளைக் காண முடிகிறது. புதுச்சேரியும் பௌத்தம் தழைத்திருந்த பகுதியாகவே இருந்துள்ளது. அரியாங்குப்பம் என இப்போது வழங்கப்படும் ஊரின் பூர்வப் பெயர் அருகன் குப்பம் என்பதேயாகும். அருகன் என்பது புத்தரின் பெயர்களுள் ஒன்று என்பதை விளக்கத் தேவையில்லை. அரிக்கன் மேடும்கூட அருகன் மேடு என்பது மருவிவந்த பெயரே ஆகும். புதுச்சேரிப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட புத்தர் சிலைகளைப் புதுச்சேரி மியூசியத்தில் இப்போதும் காணலாம். தலைகள் துண்டிக்கப்பட்ட நிலையில் இரண்டு புத்தர் சிலைகள் அங்கு இருக்கின்றன. கிருமாம்பாக்கம் என்னும் ஊரிலிருந்து கண்டெடுக்கப்பட்டன புத்தரின் தலையொன்றும் மியூசியத்தில் உள்ளது. புதுச்சேரி யூனியன் பிரதேசத்துக்குட்பட்ட காரைக்காலில் திருநள்ளாறு என்னுமிடத்தில் 1966இல் ஒரு புத்தர் சிலை கண்டெடுக்கப்பட்டது. அப்பகுதியில் உள்ள புத்தகுடி, புத்தமங்கலம் என்னும் ஊர்களின் பெயர்களிலிருந்தும் சாத்தமங்கலம் என்று புதுவைப் பகுதியில் அமைந்துள்ள ஊரின் பெயரிலிருந்தும் இப்பகுதிகளில் பௌத்தம் எந்த அளவு பரவியிருந்தது என்பதை நாம் யூகிக்கலாம். சாத்தமங்கல மகாதேவர் என சாத்தமங்கலம் கோயிலிலிருந்த தெய்வம் அழைக்கப்பட்டதாகத் திருபுவனைக் கோயிலில் உள்ள முதலாம் ராஜாதிராஜன் காலத்திய (கி. பி. 1051) கல்வெட்டு குறிப்பிடுகிறது.



(Gazetteer of India, Union Territory of Pondicherry, Two Volumes, 1982)

அரிக்கன்மேட்டில் நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சிகள் அங்கு கி. பி. முதலாம் அல்லது இரண்டாம் நூற்றாண்டுவாக்கில் ஒரு துறைமுகம் செயல்பட்டு வந்ததையும் பத்து முதல் பன்னிரெண்டாம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதியில் சீனாவுடன் நெருக்கமான வர்த்தகத் தொடர்பு அங்கு இருந்ததையும் வெளிப்படுத்தியுள்ளன.

பிரம்ம ரிஷி ஆலயத்தில் உள்ள புத்தர் சிலையும் தமிழ்நாட்டின் பிற பகுதிகளில் காணப்படும் புத்தர் சிலைகளைப் போன்றே உள்ளது. அவை பெரும்பாலும் பத்து - பன்னிரெண்டாம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்டவையாக உள்ளன என்பதைக் கலை வரலாற்றறிஞர்கள் உறுதிப்படுத்தியுள்ள நிலையில் இந்தச் சிலையும்கூட அதே காலத்தைச் சேர்ந்ததாக இருக்க வாய்ப்புள்ளது.

லெ ழாந்தில் என்ற ஃபிரெஞ்சு நாட்டு வானியல் அறிஞர் 1769இல் இப்பகுதியில் புத்தர் சிலை ஒன்றைக் கண்டதாகக் குறிப்பிட்டுள்ளார். அவர் கண்ட சிலை இதுவாகவே இருக்கக்கூடும்.

இப்போது பிரம்ம ரிஷி கோயிலில் பூசை செய்து வருகிற அர்ச்சகரிடம் கேட்டபோது, அது சமண ரிஷி ஒருவருடைய சிலையென்றும், அந்தச் சிலையின் கீழுள்ள மண்ணை எடுத்துப் பூசினால் வயிற்று வலி முதலான நோய்கள் தீர்ந்துவிடுமென அந்தப் பகுதி மக்களிடையே ஒரு நம்பிக்கை நிலவிவருவதாகவும் தெரிவித்தார்.

அர்ச்சகர் தெரிவித்ததுபோல அங்கிருப்பது சமணர் சிலை அல்ல. தலையில் உஸ்நிஷா, உடையணிந்திருப்பதைச் சித்தரிக்கும் வடிவமைப்பு ஆகிய யாவும் அது புத்தர் என்பதையே உறுதிப்படுத்துகின்றன.

புத்தர் சிலைகளை வடிவமைப்பதற்கான விதிகளை 'மானசாரா' என்ற சிற்ப சாஸ்திர நூல் விளக்குவதாகக் கணபதி ஸ்தபதி குறிப்பிட்டுள்ளார். (Buddhism in Tamilnadu, Institute of Asian Studies, 1998) புத்தரின் முகம் அகன்று, விரிந்து இருக்க வேண்டும்; காதுகள் நீண்டிருக்க வேண்டும்; விழிகள் நீளமாக இருக்க வேண்டும்; மூக்கு எடுப்பாக இருக்க வேண்டும்; புன்னகைக்கும் பாவனையில் முகம் காணப்பட வேண்டும். தலைக்குப் பின்புறம் விருட்சம் இருப்பதுபோல அழகுபடுத்த வேண்டும். தலையில் 'உஸ்நிஷா' (அறிவுச்சுடரைச் சித்தரிக்கும் அமைப்பு) இருக்க வேண்டும் என அந்த லட்சணங்களை கணபதி ஸ்தபதி விளக்குகிறார்.

நீண்டு தொங்கும் காது இந்தியாவெங்கும் காணப்படுகிற புத்தர் சிலைகளின் பொது அம்சமாக இருப்பதைக் குறிப்பிடும் அவர் தென்தமிழ்நாட்டில் இப்படிக் காது வளர்த்துக்கொள்ளும் வழக்கம் இன்னும் நடைமுறையில் உள்ளதைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

கணபதி ஸ்பதி குறிப்பிட்டுள்ள லட்சணங்கள் யாவும் இந்தப் புத்தர் சிலையிலும் காணப்படுகின்றன.

பிரம்ம ரிஷி ஆலயத்துக்கு எதிரே ஆணும் பெண்ணுமாக இரு முழு உருவக் கருங்கல் சிலைகள் நின்ற வடிவில் காணப்படுகின்றன. "பிரம்ம ரிஷியின் பக்தர்கள்,


படிப்பகம்

www.padippakam.com



பக்தியினால் தங்களைத் தாங்களே கல்லாக்கிக்கொண்டார்கள்" என அர்ச்சகர் அவற்றுக்கு விளக்கம் தந்தார்.

அந்த இரு சிலைகளும் நேர்த்தியாகவும், துல்லியமாகவும் செதுக்கப்பட்டுள்ளன. ஆண் உருவம் மழித்த தலையில் உருத்திராட்சம் அணிந்தும் வெற்று மார்பில் உருத்திராட்ச மாலை சூடியும் இரு கைகளும் தொழுத பாவனையோடும் இருக்கின்றன. பெண் உருவமும் தொழுத கைகளோடும் உருத்திராட்சம் அணிந்தும் காணப்படுகிறது. அவற்றின் பீடத்தில் எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளன. ஆண் உருவத்தின் கீழ் "சாவிடி மணியம் அழகப்ப முதலியார்" எனவும் பெண் உருவத்தின் கீழ் "சாவடி மணியம் அழகப்ப முதலியார் பொஞ்சாதி" எனவும் பொறிக்கப்பட்டுள்ளன. எழுத்துகளின் அமைப்பு அவை சமீப காலத்தைச் சேர்ந்தவை என்பதைக் காட்டுகிறது.

அர்ச்சகர் கூறியதுபோல இந்தச் சிலைகள் பிரம்ம ரிஷியின் பக்தர்களது சிலைகளாக இருக்க வாய்ப்பில்லை. இந்த இரு சிலைகளும் சைவத் தொண்டர்களின் லட்சணங்களோடு அமைந்திருப்பது தெளிவாகத் தெரிகிறது. வழிப்போக்கர்கள் தங்கிச் செல்கிற சாவடியில் மணியமாக அழகப்ப முதலியார் இருந்திருக்கக்கூடும். அந்த சிலைகளும், பிரம்மரிஷி கோயிலும் காணப்படுகிற இடம் அழகப்ப முதலியாருக்குச் சொந்தமாயிருந்ததென்ற தகவலை எழுத்தாளர் பிரபஞ்சன் தெரிவித்தார். எனவே அந்தப் பகுதியில் எங்கோ ஓரிடத்தில் இருந்த புத்தர் கோயில் சிதைந்து அந்தச் சிலை மட்டும் அந்த இடத்துக்குக் கொண்டுவரப்பட்டு இப்போதுள்ள கோயில் கட்டப்பட்டிருக்கலாமென யூகிக்கலாம்.

புத்தர் கோயில் இப்போது மெல்ல மெல்ல இந்துக் கோயிலாக மாற்றப்பட்டுவருகிறது. இங்கே எப்படியான பூசைகளைச் செய்வது எனத் தெரியாததால் இந்துக் கோயில்களில் செய்வதுபோன்றே தீபாராதனைகளைச் செய்வதாகவும், விபூதி குங்குமம் தருவதாகவும் அர்ச்சகர் குறிப்பிட்டார். ஆனால் பௌர்ணமி நாட்களில் சிறப்புப் பூசை செய்வார்களாம். புத்தர் சிலை கருவறையில் உள்ளது. அதற்கு முன்புற மண்டபத்தில் இரு புறமும் முருகன், விநாயகர் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. மத்தியில் நந்தியொன்றும் வைக்கப்பட்டுள்ளது. என்ன செய்வதென்று தெரியாமல் இப்படி ஒரு ஏற்பாட்டினைச் செய்திருப்பதாக அர்ச்சகர் கூறினார்.

இப்படியே தொடர்ந்தால் இன்னும் சில காலத்தில் பிரம்ம ரிஷி கோயிலில் உள்ள புத்தரும் ஒரு கிராம தெய்வமென்று ஆக்கப்பட்டுவிடலாம். வயிற்றுவலி நீங்குகிறதென்ற நம்பிக்கையே ஒரு சிலரையேனும் அந்தக் கோயிலை நோக்கிச் செல்லும்படிச் செய்கிறது. அது மறைந்துபோனால் முற்றாக அந்தக் கோயில் புறக்கணிக்கப்படலாம். இதை எண்ணித்தானோ என்னவோ பிற தெய்வங்களின் சிலைகளையும் அங்கு அமைத்துள்ளனர்.



ஆகஸ்டு மாதத்தில் (2004) புதுச்சேரி நகரில் புதிதாக ஒரு புத்தர் கோயில் கட்டப்பட்டுள்ளது. திருவள்ளுவர் நகர் என்று அழைக்கப்படும் தலித் குடியிருப்புப் பகுதியில் அந்தப் புதிய கோயில் உருவாக்கப்பட்டுள்ளது. அங்குள்ள நவ பௌத்தர்கள் அதனைக் கட்டியுள்ளனர்.

அருகன் குப்பம் (அரியாங்குப்பம்) புத்தர் கோயில் குறித்துப் புதுவையில் எவருக்கும் தெரியாது. ஆரோவில் பகுதியிலும் பௌத்தர்கள் பலர் வசித்து வருகின்றனர். அவர்களுக்கோ, திருவள்ளூர் நகரில் உள்ளவர்களுக்கோ பிரம்ம ரிஷி கோயில் பற்றித் தெரிந்திருக்கவில்லை.

தொன்மை வாய்ந்த அந்தப் புத்தர் சிலையைத் தொல்லியல் ஆய்வுத் துறையினர் தமது பொறுப்பில் எடுத்துப் பாதுகாக்க வேண்டும். அதற்கு முன் அக்கோயில் இந்துமயமாவது தடுக்கப்பட வேண்டும். அரிக்கன்மேட்டின் வரலாற்றோடு நெருங்கிய தொடர்புகொண்ட அந்தச் சிலை, அங்கு நடக்கவிருக்கும் அகழ்வாராய்ச்சிகளுக்குப் பிறகு மேலும் முக்கியத்துவம் பெறக்கூடும். எனவே அதைக் காக்க வேண்டியது அரசின் கடமையாகும்.



அருகன் குப்பம் புத்தர், கிராம தெய்வமாகத் தாழ்த்தப்படுவாரா அல்லது தன் பூர்வ சிறப்பை மீண்டும் பெறுவாரா என்பதற்கான விடை தமிழ்ப் பௌத்தத்தின் எதிர்காலத்தோடு பிணைந்துள்ளது.

புகைப்படங்கள்:
**புதுவை இளவேனில்**



படிப்பகம்

www.padippakam.com




# தமிழகக் காசியலில் புதிய தடங்கள்

சு. இராஜகோபால்





தமிழகக் காசியலுக்குப் புது வரவாகியுள்ள இந்நூல், இதழியலாளரும் காசியலாளருமான இரா. கிருஷ்ணமூர்த்தியின் காசியலுடனான 25 ஆண்டுக் காலத் தொடர்பின் வெளிப்பாடாகும். நன்கு வளர்ச்சி பெற்றுள்ள இன்றைய கணிப்பொறி அச்சுக் கலையை முழுமையாகப் பயன்படுத்தி 320க்கும் மேற்பட்ட காசுகள், பதக்கங்களின் தெளிவான படங்களுடன் பார்வைப்படி வரைவுகளும் இணைந்து சிறப்புற வெளிவந்துள்ளது இந்நூல்.1

பதின்மூன்று தலைப்புகளுடன் இரு பின்னிணைப்புகளும் கொண்டுள்ள இந்நூலில் பல்லவர் வரலாறு, ஈயக் காசுகள், செப்புக் காசுகள், வெண்கலக் காசுகள், அச்சுகள், சிங்கப் பொறிப்புள்ள காசுகள், எழுத்துள்ள மகேந்திர வர்மனின் காசுகள், நரசிம்ம வர்மனுடைய காசுகள், கடல் கடந்து தாய்லாந்தில் இக்காசுகளின் செல்வாக்கு என்று பல தொகுப்புச் செய்திகள் சொல்லப்படுகின்றன. நூல் முடிந்த நிலையில் கிடைத்த காசுகள், காசுகள் தொடர்பான உலோகவியலாளரின் வேதியியல் ஆய்வு முடிவுகள் ஆகியவை பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளன.

முற்காலப் பல்லவர், சிம்ம விஷ்ணு வழிப் பல்லவர், பிற்காலப் பல்லவர் என்று பல்லவர் வரலாறு மூன்று தலைப்புகளில் சுருக்கமாகச் சொல்லப்படுகிறது. எனினும் இச்செய்திகளுக்கு உரமூட்டும் விவரக் குறிப்புகளும், சுட்டு நூல்களும், சான்றுகளும் விரிவானவை. மாணவர் மற்றும் ஆய்வாளர்களுக்குப் பெரிதும் பயன்படக்கூடியவை. தேடிச் சேர்த்துள்ள நல்லதொரு தொகுப்பாக இவை ஆசிரியரின் உழைப்பை வெளிக்காட்டுகின்றன.



இந்நூலில் பேசப்படும் காசுகள் மிகுதியும் நூலாசிரியர் சேகரிப்பில் உள்ளவை. பண்டைத் தலைநகர நகரங்களான திருக்கோயிலூர், கரூர், மதுரை ஆகியவற்றை ஒட்டி ஓடும் தென்பெண்ணை, அமராவதி, வைகை ஆகிய ஆற்றங்கரைகளில் சேகரிக்கப்பட்டவை. அருங்காட்சியகங்களில் உள்ளவை. பிறர் சேகரிப்பில் உள்ளவை, பிற நூல்களில் சொல்லப்பட்டவை ஆகியவை குறைவே. பிறர் சேகரிப்பில் இன்னும் பலவகையான பல்லவர் காசுகள் உண்டு. எனினும் ஆசிரியர் அக்காசுகள் வெளியிடப்படாமலும், நாணய வியாபாரிகளிடம் சிக்கியிருப்பதாலும் ஏற்படுகிற நடைமுறைச் சிக்கல்களால், தனக்கு கிடைத்த தரவுகள் மற்றும் தனது சேகரிப்புகளை முன்னிறுத்தி ஆய்வை நகர்த்திச் சென்றுள்ளார். முற்றிலும் நூலமைப்பு முடிந்த நிலையில் சென்னை, புதுதில்லி, கொழும்பு அருங்காட்சியகங்களிலிருந்தும் பிறர் வெளியீடுகளிலிருந்தும் கிடைத்தனவற்றைப் பிற்சேர்க்கையில் சேர்த்துள்ளார். முன்னதாக இந்நூலில் சொல்லப்பட்ட காசுகள் எல்லாம் வட்ட வடிவமாக இருக்க, பின்னிணைப்பில் சேர்த்துள்ள சென்னை அருங்காட்சியகக் காசு சதுர வடிவில் உள்ளது. இது தமிழகக் காசியல் தரவுகள் செம்மைத் தொகுப்பாக அமைந்தாலொழிய தமிழகக் காசியல் முழு வளர்ச்சியடையாது






படிப்பகம்

www.padippakam.com



என்பதையும் சொல்லப்படும் முடிவுகள் எதிர்த் திசையில் சென்றுவிடக்கூடும் என்பதையும் தெளிவாக்குகிறது.

இன்னும் இப்படிப் பலவகைக் காசுகள் வெளிப்படாமல் முடங்கிக் கிடக்கின்ற நிலையில் நூலாசிரியர் தானறிந்த மற்றும் தன்னிடமுள்ள காசுகளை வகைப்படுத்திக் காலக் கணிப்பை மேற்கொண்டுள்ளார். பல்லவர் காசு என்பதற்குப் பொதுவான அடிக்கோடாகக் காளை (நந்தி) உருவக் காசுகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. பல்லவர் செப்பேடுகளில் காணப்படும் அரசு முத்திரைகளில் எருதின் உருவம் முதன்மையிடம் பெறுவதும், நந்திக் கலம்பகத்தில் 'விடை மண் பொறி விடேல் விடுகு' என விடை பொறி பல்லவருடையதாகக் குறிக்கப்படுவதும் இக்கருதுகோளின் அடிப்படையாகக் கொள்ளலாம்.



இரா. கிருஷ்ண மூர்த்தி

எருது உருவம் உள்ள காசுகளின் மேலும் காணப்படும் பிற உருவங்களின் அடுக்கு நிகழ்வுகளை (frequency) கருத்தில் கொண்டும் உலோகத்தினைக் கொண்டும் ஆசிரியர் காசுகளின் காலப் பேரெல்லைகளைப் பகுத்துள்ளார். இக்காசுகளில் சில, உலோகவியலாளரின் வேதியியல் பகுப்பாய்வுக்கும் உட்படுத்தப்பட்டுள்ளன.

சாதவாகனரின் ஈயக் காசில் காணப்படும் வெண்ணாகம் (Vanadium) காணப்படாத குருமம் (Chromium) ஆகிய தன்மைகள் பல்லவரின் ஈயக்காசுகளிலும் இருப்பதைச் சுட்டி, இவ்வகைக் காசுகளுக்கான ஸ்பெயின் நாட்டு ஈயம், உரோமானிய நாட்டிலிருந்து தென்னிந்தியாவுக்கு இறக்குமதி செய்யப்பட்டது கி.பி 200க்கு முன்னதாக என்ற அடிப்படையில், தொடக்காலப் பல்லவரின் ஈயக் காசுகள் சாதவாகனர் ஆட்சியைத் தொடர்ந்து வெளியிடப்பட்டவை என்ற கருத்தை ஆசிரியர் முன்வைக்கிறார். சாதவாகனர்களின் வீழ்ச்சியை அடுத்து அவர்களது தென்கிழக்குக் கடற்கரைப் பகுதிகளில் தமது ஆதிக்கத்தை நிறுவிய பல்லவர்கள் தங்களது ஆதிக்க வெளிப்பாடாகத் தங்களது காசுகளை வெளியிட்டனர் என்றும் ஆசிரியர் கருதுகின்றார் (ப. 174). இதே பகுதியில் சாதவாகனர்களைப் போலவே ஈயக் காசுகளையும் – அவற்றில் தமிழ் பிராமி எழுத்துக்களைப் பொறித்து – வெளியிட்ட திண்ணனின் காசுகள் ஆண்டிப்பட்டியில் கிடைத்துள்ளன. ஏன் பல்லவர்களும் ஈயக் காசுகளில் எழுத்துப் பொறிக்கவில்லை என்ற கேள்வியை இது எழுப்புகிறது.

நூலாசிரியர் தந்துள்ள காசுகள் ஒவ்வொன்றும் ஏதோ ஒரு வகையில் ஒன்றிற்கு ஒன்று வேறுபடுபவை. ஒரே உலோகம், ஒரே உருவங்கள் என்றபோதிலும்கூட அச்சுகள் வெவ்வேறானவையாக இருந்து அவை ஒவ்வொன்றும் வேறுபடுகின்றன. எனவே காசுகளின் அச்சுமுறை ஒரு குறிப்பிட்ட இடம், ஒரு குறிப்பிட்ட அச்சு என்று நெறிப்படுத்தப்படாது அங்கங்கு தன்னிச்சையாகச் செல்வாக்குடையோரால் அச்சிடப்பட்டன எனக் கருதத் தோன்றுகிறது.

காஞ்சிபுரம் காமாட்சியம்மன் கோயில் பகுதியில் சென்னைப் பல்கலைக்கழகம் நிகழ்த்திய அகழாய்வுகளில் 11 வார்ப்புகள் கண்டு வெளிப்படுத்தப்பட்டுள்ளன. (ப. 108) இவ்வார்ப்புகளில் இரண்டு முத்திரைக் காசுகளுக்கானவை (Punch marbed). ஐந்து சாதவாகனர், மூன்று பல்லவர் காசுகளுக்கானவை. இப்படி மூன்று காலக்கட்டக் காசுகளின் வார்ப்புகள் கிடைத்துள்ளதை நூலாசிரியர் ஆறாம் நூற்றாண்டுப் போலிகள் என்று கருதுகின்றார். கி. பி. முதல் – இரண்டு நூற்றாண்டுக் காசுகள் கி. பி. ஆறாம் நூற்றாண்டிலும் தன்னிச்சையாகத் தயாரிக்கப்பட்டன என்பதைக் கருத்தில் கொண்டால் நல்லதொரு கட்டுப்பாடான பொருளாதாரம் சார்ந்த நிர்வாக அமைப்பு அக்காலகட்டங்களில் அமையவில்லை என்று கருதலாம். எடுத்துக்காட்டாக முதலாம் இராசராசனின் (கி. பி. 985 – 1014) காசுகள் ஆயிரக்கணக்கில் கிடைத்துள்ள போதிலும் அவை அனைத்திலும் ஒரு நெறிப்பட்ட ஒழுங்கினை நாம் காண்கிறோம். அவனது காலத்தில் பொருளியல் சார்ந்த நல்ல நிர்வாக அமைப்பு இருந்தது.[2]

நூலாசிரியர் வகைக்கு ஒரு காசினை இந்நூலில் தந்துள்ளார். ஒவ்வொரு காசிலும் எத்தனை காசுகள் எவ்வெவ்விடங்களில் கிடைத்துள்ளன என்பதையும் சேகரித்து வெளியிட்டால் ஒருவேளை இக்காசுகளின் அடுக்கு நிகழ்வுகளின் வாயிலாகக் காசுகளின் வெளியீட்டுப் பின்புலத்தை ஊகிக்க வாய்ப்புக் கிடைக்கலாம்.

ஆசிரியர் தொன்மையானவையாகக் கி. பி. 300க்கு முற்பட்டவையாய் எடுத்துக்கொள்ளும் ஈயக் காசுகளில் பதின்மூன்றினைத் தன் சேகரிப்பிலிருந்து எடுத்துக் காட்டுகின்றார் (பக்கம் 42 – 49). இவற்றில் நான்கு காசுகள் ஒருபுறம் மட்டும் உருவப் பொறிப்பைக் கொண்டு மறுபுறம் ஒன்றுமில்லாமல் தட்டையாகவும் உள்ளன. இதுபோலவே செம்பு, வெண்கலக் காசுகளில் சிலவும் காஞ்சிபுரம் அகழாய்வு வார்ப்புகளும் உள்ளமை இதுபோன்று முழுமை பெறாத காசுகளும் புழக்கத்தில் இருந்தனவா என்ற ஐயத்தை ஏற்படுத்துகிறது.

முற்காலப் பல்லவர் காசுகளாகக் காட்டப்படும் பிற ஈயக்காசுகளின் ஒருபுறம் எருது அல்லது எருதுடன் ஸ்ரீவஸ்தமும்[3] மறுபுறம் பல்லவர் தோற்ற வரலாற்றுப் புராணக் கதைகளில் சொல்லப்படும் தளிர் (பல்லவம்) புனிதப் பாத்திரம் (துரோணம்) ஆகியவை உள்ளன. ஒரு காசில் எருதும் மறுபுறம் ஒற்றைப் பாய்மரக் கப்பலும் உள்ளன. ஈயக் காசுகளைப் போலவே அடுத்த காலகட்டக் காசுகளாகக் கருதப்படும் செப்புக் காசுகளிலும் புனிதப் பாத்திரம் உள்ளது. ஆனால் பெரிய அளவில் உள்ளது. ஆசிரியர் அடுத்து வெண்கலக் காசுகளை வரிசைப்படுத்தித் தருகிறார். காசுகளை உருவங்களின் அடிப்படையிலும் உலோகங்களின் அடிப்படையிலும் தொகுத்துத் தருகின்ற பாங்கில் ஆசிரியரின் உழைப்பு வெளிப்படையாகத் தெரிகிறது. நூலினை மேலோட்டமாகப் புரட்டும்போதே காலவரிசையில் காசுகளின் எண்ணிக்கையும் அவற்றில் உள்ள உருவங்களின் எண்ணிக்கையும் கூடிச்செல்வதை நாம் எளிதாகக் காண முடிகிறது.



படிப்பகம்

www.padippakam.com

முன்புறம் எருதையும் அதன் மேற்பகுதியில் சிறு உருவங்களாக ஸ்ரீவஸ்தம், பிறை, சங்கு, பாம்பு ஆகிய வற்றையும் உடைய வெண்கலக் காசுகள் (எண் 54 முதல் 218 முடிய) எண்ணிக்கையில் அதிக அளவில் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. சென்னை அருங்காட்சியக விழ வெட்டிச் செப்பேட்டு முத்திரையில் இதுபோன்ற உருவங்கள் உள்ளமையைக் கொண்டு இவ்வகை வெண் கலக் காசுகளை இரண்டாம் சிம்ம வர்மனுடையவை என்றும், இவன் கி. பி. 446இல் ஆட்சிக்கு வந்தான் என்பதைக் கருத்தில் கொண்டு மேற்சொன்ன பெரும் எண்ணிக்கையிலான காசுகளை இவனுடைய காசுகள் எனவும் கணித்துள்ளார்.[4]

பன்னிரெண்டாம் தலைப்பில் எழுத்துப் பொறிப் புள்ள சுமார் 50 காசுகளை முதலாம் மகேந்திரனுடைய (கி. பி. 580 – 630) காசுகளாய்த் தருகின்றார். வம்பு, லக்ஷித, பகாபிடுகு, ஷரப, விதி$_4$, நைஹிகாமுத்ரிக:, லலிதாங்குர, வுகா, குறும்பு, த$_3$ர்ப்பவிஷ, மமய, ஸகலபாஜந, உத$_3$தி, தண்டிக்கல்ல, மஹாமேக$_4$: ஏறு, சூழி என்ற பெயர்ப் பொறிப்புகளுடன் இக்காசுகள் உள்ளன. மகேந்திர வர்மனின் திருச்சிராப்பள்ளி, பல்லாவரம் குடைவரைக் கோயில்களில் காணப்படும் பெரும்பாலான விருதுப் பெயர்கள் இவற்றில் காணப் படுகின்றன. இதுபோலவே முதலாம் நரசிம்மவர்மனின் (கி. பி. 630 – 668) விருதுப் பெயர் தாங்கிய காசுகள் சிலவும் தரப் பட்டுள்ளன. அவை ஸ்ரீப$_4$ர, ஸ்ரீநிதி என்பவை யாகும். இவ்விருதுப் பெயர்கள் சமஸ்கிருதம், தெலுங்கு மற்றும் தமிழில் உள்ளன. இரண்டாம் நரசிம்ம வர்மனுக்கும் (கி. பி. 700 – 728) இக்காசுகள் உள்ள சில விருதுப் பெயர்கள் உண்டு. எனினும் இந்நூலில் முதலாம் நரசிம்மனுக்குப் பிறகு காசுகள் பேசப்படவில்லை.


பிற்சேர்க்கையில் உள்ள சதுரக் காசில் ‘சிம்ம’ என்ற சொல் தமிழ் எழுத்தில் உள்ளதாகப் படிக்கப்பட்டு சிம்மவர்மனின் காலத்தியதாகச் சொல்லப்பட் டுள்ளது. ‘சி’ தமிழ் எழுத்தாக உள்ளது. ‘ஸி’ என்று வரவில்லை. ஆனால் ‘ம்’ என்பது தனிப்புள்ளியாக உள்ளதைத் தமிழாக எடுத்துக்கொள்ள இயலாது. அதனைச் சமஸ் கிருத அனுஸ்வரமாக எடுத்துக் கொள்ள வேண்டும். இறுதி யாக உள்ள எழுத்து தமிழ் ‘ம’ போன்று ஐயத்திற்கு இட மின்றி அமையவில்லை. கிரந்த ‘ம’ போலவும் உள்ளது. ‘மமய’ என்று வரும் (ப. 147) காசில் உள்ள ‘ம’ வுடன் ஒப்பு நோக்க லாம். எனவே எழுத்துப் பொறித்த காசுகளில் மொழி நிலையும், எழுத்து நிலையும் கலவை முறையிலேயே உள்ளன எனக் கருத வேண்டும். ‘சூழி’ என்ற சொல் சிறப்பு ‘ழ’ கரத்துடன் தமிழிலேயே இருந்தாலும் மொழி நிலை தமிழாக இல்லை என்பது வெளிப்படை.

இந்நூல் தரும் பல்லவர் காசுகளின் தன்மைகளைப் பல்லவர் கல்வெட்டுகளுடன் ஒப்பிட்டு நோக்க இயலும். இந்நூலின் பின்னெல்லையான முதலாம் நரசிம்ம பல்லவன் (கி. பி. 630 – 668) காலம்வரை கல்வெட்டுகளும் செப்பேடுகளும் மிகக் குறைவே. தொடக்க காலச் செப்பேடுகள் பிராகிருத மொழியில் பிராமி எழுத் திலும் அடுத்து சமஸ்கிருத மொழியில் தென்னிந்தியப் பிராமி எழுத்திலும் அதனை அடுத்து சமஸ்கிருதம் – தமிழ் மொழிகளில் கிரந்தம் – தமிழ் எழுத்துக்களிலும் அமைந்தவை. பிராகிருத மொழியில் சமஸ்கிருதமும் சமஸ்கிருதத்தில் தமிழும் கலந்து வருகின்றன. தமிழகத் தில் பல்லவர் கல்வெட்டுகள் சிம்ம விஷ்ணு தொடங்கிக் காணப்படுகின்றன. எனினும் அவை தொறுப்பூசல், ஊர்ப்பூசல் பற்றிய நடுகற்களும் குடைவரைக் கோயில் கள் எழுப்பப்பட்ட செய்திகள் மற்றும் மன்னர்களின் புகழ் சொல்லும் கோயிற் கல்வெட்டுகளுமேயாகும். நடுகற்களில் தமிழ் மொழி வட்டெழுத்திலும் குடைவரைக் கோயில் கல்வெட்டுகளில் வல்லம் தவிர்த்த பிற, சமஸ்கிருதம் – தமிழ் மொழியில் கிரந்தம் – மற்றும் தமிழ் எழுத்துக்களிலும் உள்ளவையே.

இந்நூலில் பேசப்படும் எழுத்துப் பொறித்த காசுகளில், கல்வெட்டுகளின் போக்கை ஒத்தே அரசர்களின் விருதுப் பெயர்கள் காணப்படுகின்றன. கல்வெட்டுகளை ஒத்து தமிழ், கிரந்த எழுத்துக்கள் காணப்பட்டபோதிலும் நடுகற்களுக்கும் குடைவரைக் கோயில்களுக்கும் உள்ள பாகுபாட்டிற்கு ஏற்பக் காசுகளில் வட்டெழுத்துக்கள் காணப்படவில்லை. சாதவாகனர்கள் (தென்) பிராமி எழுத்தைப் பயன்படுத்தியும் தமிழ் – பிராமி எழுத்தைப் பயன்படுத்தியும் இருமொழிக் காசுகளை வெளியிட்டி ருக்க, தொடக்க காலப் பல்லவர் காசுகளில் எழுத்துக்களே இல்லை. சாதவாகனர் கால வணிக நடவடிக்கைகள், பல்லவர் காலத்தில் குறைந்துபோனதாகவும் தெரிய வில்லை. காசுகளின் வகைகளும் கப்பல் உருவம் பொறித்த காசும் கடல் கடந்து தாய்லாந்தில் காணப்படும் பல்லவர் காசுகளின் செல்வாக்கும் இவற்றை உறுதிப்படுத்துகின்றன.

90 பாறைக் கல்வெட்டுகளை ஆய்வுசெய்த ஐரா வதம் மகாதேவன் அவற்றின் மொழிநிலை, பிறமொழி யான பிராகிருதத்தை ஏற்கின்ற போக்கில் பெயர்ச் சொற்களை மட்டுமே ஏற்றுள்ளது என்றும் அவ்வகை யிலும் அவை தமிழாக்கப்பட்டே ஏற்கப்பட்டன என்றும் குறிப்பிடுகிறார். இந்நிலையில் பேரா. சிவத்தம்பி[5] ஏதோ ஒரு அளவில் (மொழி சார்ந்த) நிறுவன மயமாக்கம் ஏற்பட்டிருந்ததாலேயே தமிழ் மொழிச் செல்வாக்கு வலுவுள்ள தாக இருந்திருக்க வேண்டும் என் பார். இந்நிலையில் சாதவாகனர் காசுகளில் பிராகிருதத்தோடு தமிழும், ஆண்டிப்பட்டியில் கிடைத்த திண்ணனின் காசில் தமிழும் இருக்க, பல்லவர் காசு களில் அவர்கள் பிராகிருதமும் தமிழும் தொடக்கத்தில் சேர்க்காத நிலையும், பின்னர் மகேந்திர வர்மன் காலத்தில் தமிழைச் சேர்க் கின்ற போக்கும் நிகழ்ந்திருக்குமோ எனக் கருதத் தோன்றுகிறது. மகேந்திர வர்மனின் குடைவரைக் கோயில்களில் கிரந்த எழுத்தும் சமஸ்கிருதமும் இருந்த போதிலும் விலக்காக வல்லம் குடைவரையில் தமிழ் எழுத்துள்ள தைத் தி. நா. சுப்பிரமணியன் ஒரு எழுத்து உருவாக்க முயற்சி நிகழ்ந்ததாகக் கருதுகிறார். அதோடு, தமிழ் எழுத்துக்கள் தமிழ் – பிராமி எழுத்திலிருந்து நேரடி யாகத் தோன்றாது கிரந்த எழுத்துக்களின் வழி கி. பி. 7ஆம் நூற்றாண்டில் தோற்றம் பெற்றன என்பார்.[6]

**பல்லவர் காசுகள்**
**(ஆங்கிலம்)**
**கார்நெட் பப்ளிஷர்ஸ், சென்னை;**
**பக்: 196; ரூ. 800/–**
**முதல் பதிப்பு 2004**






படிப்பகம்

www.padippakam.com



இவ்விடைவெளியில் வட்டெழுத்து, தமிழ் – பிராமியிலிருந்து தொடர்ந்து வளர்ந்து தமிழ் மொழிக்குப் பயன்பட்டுவந்தது என்பதும் தெரிகிறது.

பல்லவர் காசுகள் என்னும் இந்நூல் தமிழகக் காசியலை வளர்ச்சிப் பாதையில் திரும்பிச் செல்ல வழிவகுப்ப தோடு காசியலாரிடையே ஒருங்கிணைந்த ஒரு முயற்சி தேவை என்பதையும் காட்டுகிறது. இந்நூல் தொகுப்பில் காவேரிக் கரையில் (கும்பகோணம்) கிடைத்த காசுகள் ஒன்றிரண்டே உள்ளன. கடற்கரைப் பகுதியில் காசுகள் ஏதும் அண்மையில் சேகரிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. பல்லவர் காசுகள் பற்றித் தமிழில் வெளிவந்த மற்றொரு நூலில் சொல்லப்படும் அலரி, கடும்பிடுகு, பரம, தம, காடவ போன்ற காசுகள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை.[7] பிற்காலப் பல்லவர் கல்வெட்டுகளில் காணும், துளைப்பொன், பொன், முதலிய காசு பற்றிய சொற்கள் மட்டும் இடம்பெற்றிருக்க, பொன் மட்டும் நேரடியாகப் பயன்படுத்தப் பட்டுள்ளதோ, காசுகள் இல்லையோ என்ற ஒரு கருத்து உருவாகும் நிலையில் த$_3$ந்தி, த$_3$ந்தி: என்ற காசுகள் கிடைத்துள்ளன என்று அறிய முடிகிறது.[8] எனினும் இந்நூலில் அக்காசுகள் உத$_3$கி என்று படிக்கப்பட்டுள்ளன.

காசுகளின் அமைப்பு வகைப் பிரிப்பில் எடுத்துக் கொண்ட முயற்சியோடு அக்காசுகள் கிடைத்த இடங்கள் எண்ணிக்கை என்ற வகையில் புள்ளியியல் முறையும், காசுகள் ஆய்வில் ஒருங்கிணைந்த முயற்சியும் இனிச் சேர்க்கப்படும்போது தமிழகக் காசியல் வளர்ச்சி இன்னும் முன்னுக்கு உந்தப்படும். நாணய வியாபாரிகளால் ஏற்படுத்தப்படும் போலிகளும் இடர்ப்பாடுகளும் புறம் தள்ளப்படும்.

❑

அடிக்குறிப்புகள்:

1. எனினும் ஈயம், செம்பு, வெண்கலத்தால் ஆன இக்காசுகள் பல இடங்களில் ஒரே நிறத்தில் இருப்பது ஏமாற்றமளிக்கிறது.
2. அவனது ஆட்சிப் பரப்பு முழுதும் அளக்கப்பட்டு அதற்கேற்ப வரி விதிப்பும், வரி விலக்கும் இருந்தன. பல்லவர் பகுதியில் இருந்த 'காடி' என்ற முகத்தல் அளவு நீக்கப்பட்டுப் பிற பகுதிகளில் இருந்த 'கலம்' புகுத்தப்பட்டது.
3. ஸ்ரீவஸ்தம் – திருமரு பல்லவர் காலத்தில் சில இடங்களில் தனித்தும் (சோளிங்கர்) சில இடங்களில் சிறிய அளவில் (முன்னூர், மதுராந்தகம்) பிற தெய்வங்களுடன் இணைத்தும் காணப்படுகிறது. சோளிங்கர் ஸ்ரீவஸ்தத்தில் பல்லவர் காலக் கல்வெட்டும் உள்ளது.
4. பக்கம் 106. செப்பேட்டு முத்திரையின் படத்தையும் ஒப்பீட்டிற்காகத் தந்துள்ளார்.
5. சங்ககால வரலாறும் தமிழ் பிராமிக் கல்வெட்டுகளும் – ஐராவதம் மகாதேவனின் ஆய்வு வெளிக்கொணரும் சில முக்கிய விடயங்கள் பற்றிய ஆய்வுக் குறிப்பு – பேரா. கா. சிவத்தம்பி, குமரன் புத்தக இல்லம் கொழும்பு; சென்னை. 2004; பக். 17
6. இவர் தொடக்க காலக் கிரந்த எழுத்துக்கள் அணிவேலைப் பாடுடனும் மிகுந்த வளைவுகளுடனும் உள்ளமையைக் கருத்தில்கொண்டு இவை அன்றாடப் புழக்கத்தில் எளிதாக ஓலைகளில் எழுத முடியாதவை என்றும் கல்வெட்டுகளில் பொறிப்பதற்கு மட்டுமே இருந்திருக்க வேண்டும் என்றும் கூறுகிறார். – தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள் தொகுதி.
7. பல்லவர் காசுகள், ஆறுமுக சீதாராமன், சங்கரன்ராமன், தனலட்சுமி பதிப்பகம், தஞ்சாவூர், 2002.
8. மேலது.

■

காலச்சுவடு நாட்காட்டி 2005

12 மாதங்கள் 12 ஆளுமைகள்



மூத்த மற்றும் இளம் ஓவியர்களின் கைவண்ணத்தில்

ஜே. கிருஷ்ணமூர்த்தி
எம். எஸ். சுப்புலட்சுமி
காந்தியடிகள்
வள்ளலார்
ஜே. சி. குமரப்பா
தனபால்
சி. வை. தாமோதரனார்
பெரியார்
மௌலானா அபுல்கலாம் ஆசாத்
என். எஸ். கிருஷ்ணன்
ரவீந்திரநாத் தாகூர்
அம்பேத்கர்

ஆகிய ஆளுமைகளின் கோட்டோவியங்கள்

சிறந்த அச்சுத் தரம். நேர்த்தியான வடிவமைப்பு.

**விலை ரூ. 20**

எல்லா ஊர்களிலும் பெரிய புத்தக நிலையங்களில் கிடைக்கும்.
முகவர்கள் தங்கள் தேவை குறித்துக் கடிதம் எழுதுக.




படிப்பகம்

www.padippakam.com

# நிலவு ததும்பும் சாலைகள்

வீட்டை விட்டு வெளியேறி விடுவதெனத் தீர்மானித்தேன். அந்தக் கணத்தில், சூரியன் மேற்கு வானில் புதைந்து கொண்டிருந்த அந்த அந்தியில், சட்டென எண்ணம் தோன்றிற்று. இதற்கு முன்னும் எத்தனையோ முறை வெளியேறும் தீர்மானம் வந்திருக்கிறது. ஆனால் ஒருபோதும் முடிந்ததில்லை. ஏதாவது ஒரு சுட்டுவிரல் என் மனவெளியில் வந்து நீண்டு தன் இருப்பைப் பூதாகரமாக்கிக் காட்டி என் தீர்மானத்தைப் பொலபொலவென உதிர்த்துவிடும். ஆனால் இந்த முறை அப்படியில்லை. எதனாலும் என்னைத் தடுக்க முடியாது. வீடு எப்போதும் வீடாக இல்லை. வெறும் சுவர்கள். உள்ளிருக்கும்போது நெருங்கி நெருங்கி வந்து சுற்றிலும் சூழ்ந்து மூச்சு முட்டும்படி செய்யும் சுவர்கள். சமயத்தில் அண்ணாந்தும் பார்க்க முடியாது. கூரை முகடு மூக்கு நுனியைப் பதம் பார்க்கத் தயாராக நிற்கும். காற்று, வெளிச்சம் எல்லாம் தம் வரவை நிறுத்திக்கொண்டபின் இந்தச் சுவர்களுக்குள் வசித்துத்தான் ஆக வேண்டுமா? இதுதான் விதியென்று வெம்மையில் விதிர்த்துப் பல இரவு பகல்களில் கிடக்க நேர்ந்திருக்கிறது.

ஆனால் இப்போது அப்படியில்லை. சுவர்களின் அழுத்தம் கூடி என்னைப் பிதுக்கித் தள்ளிவிட்டது. இனி அதனுள் வலுக்கட்டாயமாக நுழைந்து சுவர்களைத் தள்ளி நிறுத்தி அதனை வீடாக்குவது இயலாத காரியம். எண்ணம் தோன்றியவுடனே வெளியேறி நடந்தேன். திசை பற்றிய இலக்கற்று வெகுநேரம் நடந்துகொண்டிருந்தேன். சட்டென உணர்வு தோன்றிய ஒரு கணத்தில், இதுவரைக்கும் நான் நடந்த பகுதிகள் அனைத்தும் ஏற்கனவே எனக்கு அறிமுகமான, எத்தனையோ முறை நடந்து திரிந்த பாதைகள் என்பதை அறிந்தேன். கால்கள் பழக்கப்



■ பெருமாள்முருகன்

www.padippakam.com



படுத்திய நாய்க்குட்டிபோல் செயல்பட்டிருக்கிறது. இதுவரைக்கும் நுழைந்திராத தெரு ஒன்றிற்குள் புகுந்தேன். மனிதர்களும் வீடுகளும் கடைகளும் நிறைந்த அந்தத் தெரு பொம்மை உலகம்போல் தோன்றிற்று. எல்லாம் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட மாதிரி இயங்கிக்கொண்டிருந்தன. அது முடிவற்ற பெருஞ்சாலையாய் விரிந்தது. எனினும் சலிப்பற்று நடந்தேன். நடக்கும்போதெல்லாம் இன்னும் என் வீடெனும் கொக்கி சட்டைக் காலரில் மெல்லிய இழையாய்ப் பதிந்திருப்பதாய் உணர்ந்தேன்.

அதிலிருந்தும் தப்பித்துச் செல்ல வேண்டும். சாலை இன்னுமொரு சாலையில் மோதி அதனோடு கலந்துபோயிற்று. அவ்விடம், ஏராளமான பேருந்துகள் நின்று செல்லும் இடமாக இருந்தது. மனிதத் தலைகள் விதவிதமாகத் தெரிந்தன. அவர்கள் கைகளில் மூட்டைகளும் பைகளும் எனச் சுமைகளைக் கொண்டிருந்தனர். அங்கே எந்தச் சுமையும் அற்றவன் நான் ஒருவனாகத்தான் இருப்பேன். ஒரு பேருந்து வந்ததும் ஐந்தாறு பேர் ஓடிப் போய் முண்டியடித்து ஏறினர். அவர்கள் மூட்டை முடிச்சுகள் ஏராளமாக வைத்திருந்தனர். ஒருவன் அவற்றை எடுத்து எடுத்துப் படியில் வைக்க இன்னொருவன் உள்ளே தள்ளிக் கொண்டிருந்தான். பொறுமையற்று ஓட்டுநர் ஒலிப்பானில் அவசரத்தைச் சொன்னார். நடத்துநர் ஏதோ கத்தினார். ஆனாலும் அவர்கள் எல்லாச் சுமைகளையும் ஏற்றிய பின்னரே பேருந்து நகர்ந்தது. எத்தனை சுமைகள். வழியெல்லாம் அவற்றைப் பாதுகாத்து, சுமந்து, ஏற்றி, இறக்கி, எங்கே கொண்டுபோய்ச் சேர்ப்பார்களோ. சேர்த்த பின்னும் சுமை விட்டுவிடுமா. அவர்களை நினைக்கப் பாவமாக இருந்தது. அந்த நிறுத்தத்தில் இன்னும் எத்தனையோ பேர். சுமைகளுடன் அவர்கள் அல்லாடுவதைப் பார்க்கப் பிடிக்கவில்லை. ஏதாவது ஒரு பேருந்து வந்தால் ஏறிக்கொள்ள வேண்டும். என்ன, அந்தப் பேருந்து கூட்டமற்று, உட்காரக் காலி இருக்கைகளுடன் வந்து நிற்க வேண்டும்.



சாலையின் இயக்கம் அச்சமூட்டுவதாக இருந்தது. அதைக் கவனிப்பதைத் தவிர்க்கப் பார்வையை வானத்தில் ஓட்டினேன். பெரிய பூதம்போல மேகமொன்று பரவிச் சென்றுகொண்டிருந்தது. சூரியன் முழுவதுமாக மறைந்துவிட்டாலும் இன்னும் வெளிச்சம் இருந்தது. விளக்குகள் எரிந்து கண் கூச ஆரம்பிக்கும் முன் ஏதாவது ஒரு காலியான பேருந்து வந்துவிட வேண்டுமெனப் பிரார்த்தித்தேன். பிரார்த்தனையின் பலனாய்க் கடவுள் ஒரு காலிப் பேருந்தை அனுப்பி வைத்தார். நடத்துநர் படியில் நின்று அழைத்தபோதும் ஒருவரும் ஏறவில்லை. சாவகாசமாக நான் ஏறப்போனேன் "எதுவரைக்கும்" என்றார் நடத்துநர், மிகுந்த பொறுப்புணர்வுடன்.

அப்போது உலகிலேயே பதில் சொல்ல முடியாத கேள்வி அதுவாகத் தோன்றிற்று எனக்கு. அவர் முகத்தைத் தவிர்த்துவிட்டு உள்ளே ஏறினேன். சிடுசிடுத்தபடி அவர் அதே கேள்வியை வலியுறுத்திக் கேட்பார் என்று எதிர்பார்த்தேன். அப்படிக் கேட்டால் சட்டெனக் கீழே இறங்கிவிட வேண்டுமெனவும் முடிவெடுத்தேன். ஆனால் அவர் எதுவும் பேசவில்லை. பேருந்தும் புறப்பட்டுவிட்டது. யாரும் ஏறவில்லை. காலியாக இருப்பதுபோலத் தோன்றினாலும் நான் நினைத்த அளவுக்குப் பேருந்து காலியாக இல்லை. குறிப்பாக ஜன்னல் ஓர இருக்கை எதுவும் காலியாக இல்லை. திருப்தியாக இல்லை என்றாலும் வேறு வழியற்று ஓர் இருக்கையில் அமர்ந்து கண்களை மூடிக்கொண்டேன்.

நடத்துநர் வந்து மெதுவாகத் தோளைத் தொட்டார். மீண்டும் பழைய கேள்வியையே கேட்டார். 'எதுவரைக்கும்?' அப்போதுதான் என் சட்டைப் பையைத் தொட்டுப் பார்த்தேன். அதனுள் நிறைய ரூபாய் நோட்டுகள் இருந்தன. அவர் கேட்ட கேள்வியையே திருப்பிக் கேட்டேன். 'எதுவரைக்கும் போவுது?' அவர் ஊர்ப் பெயரைச் சொன்னார். கடைசியாகப் பேருந்து போய் நிற்கும் ஊர் வரைக்கும் சீட்டு வாங்கிக் கொண்டேன். ஆனால் மனதுக்குள் எதுவோ விட்டுப்போயிற்று. சட்டெனப் பேருந்து வீட்டைப் போலத் தோன்ற ஆரம்பித்தது. சட்டையில் பணம் இல்லாமல் போயிருந்தால் நன்றாக இருந்திருக்கும். பேருந்துக்குள் விளக்குகள் போடப்பட்டன. டேப் ரிகார்டர் சத்தமாக ஒலித்தது. எல்லாம் வீட்டின் நினைவைப் பெருக்கின. பேருந்து சாயும்போதும் ஆடும்போதும் ஒருபக்கச் சுவர் என்மேல் விழுந்து அழுத்திக்கொள்ளும்போல் பயமாக இருந்தது. எத்தனையோ இரவுகளில் கூரை பெயர்ந்து என்மேல் பெருத்த ஓசையோடு வந்து விழுந்திருக்கிறது. அவற்றில் எல்லாம் எப்படியோ தப்பித்திருக்கிறேன். நான் தூங்கினால் என்மேல் விழுந்துவிடும் என்னும் பயத்தில் தூங்காமலே புரண்டு கிடந்த இரவுகள் பல. பேருந்தின் செவ்வகம் திரும்ப வீட்டுக்கு என்னை அழைத்துப் போய்விடுமோ என்று அஞ்சினேன்.

கண்களை இறுக மூடிக்கொண்டேன். ஜன்னல் பக்கத்து இருக்கை கிடைத்துவிட்டால் எல்லாம் சரியாகிவிடும் போலிருந்தது. ஆனால் பேருந்து எங்கும் நிற்பதாகவோ யாரும் இறங்குவதாகவோ எந்தச் சுவடும் தென்படவில்லை. மிகையான வேகமெடுத்துப் பேருந்து போய்க்கொண்டிருந்தது. அதனால்



படிப்பகம்

www.padippakam.com

உள் முழுக்கக் காற்று பரவிற்று. என்னையும் அறியாமல் தூங்கிப்போய்விட்டேன். பிசிறில்லாத நல்ல தூக்கம். திடுமெனப் பேரரவம் என்னைச் சூழ்ந்தது. சட்டென விழித்தேன். பேருந்து நின்றுகொண்டிருந்தது. பெரும் கூட்டம் முட்டிமோதி ஏறிற்று. இரண்டு மூன்று பேருந்துகளுக்கான கூட்டம் இந்த ஒன்றில் ஏற முயன்றுகொண்டிருந்தது. பதறிப்போய் இந்த இடத்திலேயே இறங்கிக்கொள்ளலாமா என்று யோசித்தேன். ஆனால் எந்தப் பக்கமும் இறங்க முடியாத நிலைமை. கால்களை உள்ளிழுத்துச் சுருக்கி ஒடுங்கினேன். கூட்டத்தைத் திணித்துக்கொண்டு பேருந்து புறப்பட்டுவிட்டது.

என்னருகில் ஒரு முக்கால் கிழவி வந்து நின்றாள். பிதுங்கிக்கொண்டிருந்த பெரிய பையைக் கையில் வைத்திருந்தாள். பையைப் பிடிக்கும்போது கம்பியை விட்டுவிடுவாள். கம்பியைப் பிடிக்கும்போது பையை விட்டுவிடுவாள். இரண்டு பக்கத்துச் சீட்டுகளிலும் போய் மோதிமோதிச் சாய்ந்தாள். பை ஒருவேளை மிகுந்த சுமை உடையது போலும். கிழவிக்கு ஸ்தூலமான உடம்புவேறு. பேருந்தின் அசைவுக்குத் தகுந்தவாறு தன்னை நிலைப்படுத்திக்கொள்ள இயல வில்லை. பையைக் கையிலும் வைத்திருக்க முடிய வில்லை. கால்களுக்கு இடையில் வைத்து நின்று கொள்ளவும் முடியவில்லை. கிழவி பெரும் அவஸ்தைப் பட்டாள். எனக்கு முதலில் சிரிப்பாக இருந்தது. இந்தக் கிழ வயதில் எதற்கு இத்தனை சுமைகள் இவளுக்கு? இந்தச் சுமைகள்தான் துயரத்திற்குக் காரணம் என்பதை அவளால் அறிய முடியுமா? சுமைகள் இல்லாவிட்டால் கிழவி ஒன்றுமற்றுப் போய்விடுவாள். அவைதான் அவளுடைய வாழ்வை அர்த்தப்படுத்தக்கூடும். இத்தனை கூட்டத்தில் சுமையோடு ஏறிப் போக வேண்டியது என்ன நிர்ப்பந்தம்? கிழவியின் இரண்டு பக்கம் நின்றவர் களும் அவளை எரிச்சலோடு திட்டலானார்கள். பத்து நிமிடம் ஆகியும் கிழவியால் நிலைப்பட முடிய வில்லை. பேருந்தில் எல்லோர் பார்வையும் அவள் மீதே இருந்தது.

என்னையும் அறியாமல் கிழவியின் கையிலிருந்த பையை வாங்கி என் காலடியில் வைத்துக்கொண் டேன். பை ரொம்பவும் கனம்தான். திடமாக ஓரிடத்தில் நிற்காதபடி பைக்குள் என்னென்னவோ பொருள்கள் இருக்கக்கூடும். இரு கால்களுக்கு இடை யில் பை சிக்கி நிற்கவில்லை. எவ்வளவு அழுத்தமாகப் பிடித்தாலும் ஒருபுறம் பிதுங்கிச் சரிந்தது. கம்பி யோடு சாய்த்துவிட்டுப் பார்த்தேன். ரொம்பவும் தொய்ந்தது. ஏதாவது கொட்டிப்போய்விட்டால் கிழவி பெருங்கஷ்டப்பட நேரலாம். பையின் இரு காதுகளையும் சேர்த்து முடி போட்டுப் பார்த்தேன். முடி ஒரு சுற்றுக்கூட வரவில்லை. விட்டதும் அவிழ்ந்து கொண்டது. கால்களை எதிர் இருக்கையின் கம்பி யில் சகஜமாக வைத்து உட்காரவும் முடியவில்லை. பையோடு வெகுநேரம் போராடி விட்டுப் பின் கீழே வைத்துக் கையிலும் பிடித்துக்கொண்டு ஒருவாறு சமாளித்தேன்.

இப்போது கிழவியைப் பார்த்தேன். அவள் இருக்கைக் கம்பியின் மேல் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டிருந்தாள். தூங்குகிறாள் போலும். அவள் சுமை முழுவதையும் என்னிடம் சுமத்திவிட்டு நிம்மதியாக இருக்கிறாள். சுமையின் அவஸ்தையை எனக்கு மாற்றிவிட்டாள். கிழவியின் நிச்சலனம் எனக்கு எரிச்சலேற்படுத்தியது. திரும்பவும் என் கட்டுப் பாடுகளைத் தாண்டி மனம் வீட்டிற்குப் போய் விட்டது. வீடு எப்போதும் என் தோளில் பாரமாக உட்கார்ந்துகொண்டிருந்தது. உள்ளிருக்கும்போது எலும்புகளை நெரிக்கும் பெரும்பாரம். முதுகு கூனியும் கால்கள் பின்னியும் சுமக்கவியலாப் பாரம். வீடு தனக்குள் இருக்கும் கனம் முழுவதையும் ஒரு சேர ஏற்றி வைத்துவிடும். வெளியே போனால் வீட்டின் பாரம் கொஞ்சம் குறைந்தது போலிருக்கும். ஆனால் குறைவதில்லை. என்னென்னவோ கொடுக்கச் சொல்லித் தன் பிடியை இறுக்கமாக்கும். நேரம் செல்லச் செல்லக் குரல்வளையில் அதன் பிடி நெரிக்கும். கிழவியின் பை வீடு என்னும் பாரமாய் என்னுள் ஏறிற்று. எதை உதறி வந்தேனோ அதன் நெருக்கடி இன்னும் தீர்ந்தபாடில்லை. எத்தனையோ விதங்களில் அது தன் இருப்பை உணர்த்திக்கொண்டே யிருக்கிறது. விரிந்த வலையின் கண்ணிகள் எவ்வளவு தூரம்வரைக்கும் நீண்டிருக்கக்கூடும்?

பையைக் கிழவியிடமே திரும்பக் கொடுத்துவிட எண்ணினேன். ஆனால் எதுவோ என்னைத் தடுத்தது. கிழவி என்னைப் பற்றி என்ன நினைப்பாள்? பேருந் துப் பயணிகள் பார்வையில் நான் எப்படிப்பட்ட வனாக உருப்பெறுவேன்? அதையெல்லாம் நினைத்து அந்த எண்ணத்தைத் தவிர்த்துக்கொண்டேன். என் விருப்பங்களை, ஆசைகளைத் தவிர்த்துக்கொள்ள இப்படி எத்தனை விதமான பிடுங்கல்கள். என் கைப்பை சுவராய் விரிந்தது. கொஞ்சம் கொஞ்சமாய் அது தன் ஆகிருதியை விரிவுபடுத்தி என்னை மூழ்கடிப்பதாய்த் தோன்றிற்று. அதற்குள் மூச்சு முட்டிக்கொண்டிருந்தபோதில், கிழவி பையைக் கேட்டாள். பேருந்து நின்றிருந்தது. ஏதோ ஒரு பெரிய நகரத்தின் நுழைவாயில் நிறுத்தம். முந்தைய ஊரில் ஏறிய கூட்டம் முழுவதும் இறங்கியது. அதற்கு முன் ஏறியவர்களும்கூடப் பலர் இறங்கினர். ஜன்னலோர இருக்கைகள் பல காலியாயின. ஆசுவாசமாய் இரண்டு இருக்கை கொண்ட பக்கம் ஜன்னலோரத் தில் போய் அமர்ந்தேன். ஜன்னலாகிய அந்தச் சதுரம் விஸ்தாரமான வெளியைக் காட்டிற்று. தலையைக் கொஞ்சம் கீழிறக்கினேன். ஏராளமான சுவரொட்டிகள் மறைத்த நீளச்சுவர் என்முன். தலையை உலுக்கிக்கொண்டு மீண்டும் பார்வையை மேலேற்றினேன். இப்போதைய வானம் வெறும் வெளியாயிருந்தது. அதன் நிர்மலம் சில கணங்கள் சந்தோசம் கொடுத்தது. அடுத்த கணம் அந்த வெளியை ஏதேனும் சிறு மேகத் துணுக்கு ஓடிவந்து நிறைத்துவிடுமோ என அஞ்சலானேன். என் அச்சம் கூடியபடி இருந்தது. மேகம் எதுவும் வரவில்லை எனினும் வரப்போகும் மேகம் மிக அருகில்தான் இருக்கிறதென்னும் பயம் நீங்கவில்லை. மனதில் அழுத்தம் கூடிற்று. ஏதாவது மேகம் வந்து சேர்ந்து விட்டால்கூட நிம்மதியாயிருக்கும் என்று தோன்றிற்று. என் உடல் இறுகித் தவித்தது. ஜன்னல் வழியாக


படிப்பகம்

www.padippakam.com

வெளியே குதித்துவிடும் எண்ணம் தீவிரமாகத் தோன்றியது.

பார்வையைச் சிரமப்பட்டுச் சாலைக்குக் கொண்டுவந்தேன். பழையபடி இயல்பு மாறிய சுவர் பட்டது. பேருந்தில் இருந்து இறங்கிய, இறங்கிக் கொண்டிருக்கும் மனித முகங்கள். சுமை கூடிய உடல்கள். அக்கூட்டத்தில் சட்டென ஒரு முகம் பொலிவோடு துலங்கிற்று. கண்கள் அந்த முகத்திலேயே நிலைத்தன. அது என்ன முகம். வசீகரத்தின் ஈர்ப்பு பொங்கிச் சுழலும் முகம். பிரகாசத்தின் நடுவே அடர்த்தியான கருமீசை மட்டும் தெளிவாகத் தெரிந்தது. உதடுகளில் கவர்ந்து விழுங்கிவிடும் மென்சிரிப்பு. அந்தச் சிரிப்பு மௌனமாக என்னை அழைத்தது. அழைப்பின் தீவிரம் கணத்திற்குக் கணம் பெருகிற்று. மறுப்பதைப் பற்றி யோசிக்கவே விடாத அழைப்பு. என் உடல் சுருண்டு ஜன்னல் வழியாக வெளியே குதித்துவிடும் போலிருந்தது. உடனே எழுந்து படிகளை நோக்கி ஓடினேன். பேருந்து புறப்பட ஆயத்தமாகிக் கொண்டிருந்தது. அது கிளம்பக் கிளம்ப இறங்கிவிட்டேன். என் கவனம் முழுக்க அந்த முகத்திலேயே இருந்தது. முகம் நோக்கி நடந்தேன். இன்னும் அழைப்பின் தொனி மாறாத சிரிப்பு அப்படியே இருந்தது.

வயதை நிர்ணயிக்க முடியாத முகம். குறிப்பான அடையாளங்களைச் சொல்லி வருணிக்க முடியாத முகம். என் துக்கங்களை எல்லாம் துடைத்தெறிந்து சமப்படுத்தும் புது மழையின் தூய்மை கொண்ட முகம். யார் அது? என் வாழ்வின் இதுவரையான கணங்கள் எதிலும் நான் சந்தித்திருக்கவில்லை. என் சுருங்கிய உலகம், என் வீடு, தெரு, ஊர் நண்பர்கள் ஆகியவற்றோடு நின்றுவிட்டது. அதற்குள் எப்போதும் இந்த முகம் வந்ததில்லை. ஏற்கனவே இந்த முகத்தைச் சந்தித்திருப்பேனென்றால் என் பாதைகள் மலர் செழிக்கும் வளம் கொண்டிருக்கக் கூடும். இத்தனை காலம் எங்கே ஒளிந்திருந்த முகம் இது?


முகத்தின் நேரடியான ஒளி கருக்க, நான் தலை குனிந்துகொண்டேன். முகத்தின் கைகள் என் தோள்களைத் தழுவின. ஆனந்தப் பரவசத்தில் பெரும் தோழமையின் அருகிருப்பை உணர்ந்தேன். அவன் எனக்கு முன்னே நடந்தான். முழு ஈடுபாட்டோடு பின் தொடர்ந்தேன். ஜனநெருக்கம் மிகுந்த வீதிகளினூடே அவன் போனான். மிக எளிதாக நான் தொடரும் படியான வேகம்கொண்ட நடை. என்னை அலைக்கழிக்கும் விருப்பமற்ற ஒரு தோழமை. சில சமயங்களில் அவனுக்கு இணையாக நானும் நடக்க முடிந்தது. அப்போது அவனுடைய பக்கவாட்டு முகம் எனக்கு மிகவும் பரிச்சயமான சாயலாக இருந்தது. எவ்வளவு தூரம் அவன் அழைத்துப் போனாலும் எங்கெங்கே அவன் சுற்றிச் சென்றாலும் எந்தத் தயக்கமுமின்றி, சிரமமுமின்றி அவனைப் பின் தொடர என்னால் இயலும். அப்படிப் பின் தொடர்வது ஒன்றுதான் எனக்கு வழி. வீட்டை விட்டு வெளியேறியதன் நோக்கம் இப்போதுதான் நிறைவடையத் தொடங்கியிருக்கிறது. எப்போதும் இல்லாத ஒரு நிம்மதி என்னுள் பரவு வதை உணர்ந்தேன். என் மனமும் உடலும் அவன் வசமாகி ஒருநிலைப்பட்டன. என்னுள் ஏதேதோ உடைவுகள் நேரத் தொடங்கின. மனதின் அழுத்தமான, கப்பென்று மூடிக்கிடந்த பெரும் கல்லொன்று மெல்லப் பெயரத் தொடங்கிற்று.

இப்போது அவன் பக்கவாட்டு முகம் எனக்குத் தெளிவாகத் தெரிந்தது. அது என்னைக் கொஞ்சம் வெட்கத்திலும் சங்கோஜத்திலும் ஆழ்த்திற்று. பார்க்கக் கூசி வேறு பக்கம் முகம் திரும்பிக்கொண்டேன். இருப்பினும் அந்த முகம் என்னை விடவில்லை. லகுவாக என் கவனத்தை வேண்டிற்று. அந்த முகத்தைத் தைரியமாக ஏறிட்டு நோக்கினேன். மிகுந்த சினேகபாவத்துடன் அது புன்னகைத்தது. எத்தனையோ வருடங்களாக என் முன் இறுகி நின்ற அந்த முகம். அதனைக் கண்டதும் எனக்குள்ளும் தோன்றும் வெறி. எல்லாம் அந்த நொடியில் விலகின. ஆண்டாண்டுகளாக மனதைக் குடைந்து கொண்டிருந்த அந்த வெற்று வைராக்கியம் பிளவுண்டு போயிற்று. நானும் மனம் குளிரச் சிரித்து என் ஆமோதிப்பைத் தெரிவித்தேன். எத்தனையோ விடுபட்ட விஷயங்களை அம்முகத்தோடு பேச ஆவல்கொண்டேன். அதற்கான திறப்பை அம்முகமே வழங்கிற்று.

அந்த முகத்திற்குரியவன் என் பிள்ளை விளையாட்டுத் தோழன். அவனும் நானும் ஒன்றாகவே பள்ளிக்கூடம் போவோம். ஒன்றாகவே திரும்புவோம். எந்த விளையாட்டென்றாலும் எனக்கு அவனிருக்க வேண்டும். அவனுக்கு நானிருக்க வேண்டும். இருவர் வீடுகளும் பக்கத்துப் பக்கத்துத் தெருக்களில். பள்ளிக் கூடத்திலும் அருகருகேதான் உட்கார்ந்துகொள்வோம். எந்த எதிர்பார்ப்புகளுமற்று மனமொன்றிய நட்பு எங்களுடையது. எட்டாம் வகுப்புவரை சிறு பிசிறுமில்லாமல் தொடர்ந்துகொண்டிருந்த எங்கள் நட்பு சிறுகாற்றில் பெருமரமென வீழ்ந்துபோயிற்று. எட்டாம் வகுப்பின் அரையாண்டுத் தேர்வு முடிந்து பள்ளி திறந்த முதல் நாள். எனக்குத் தலைமையாசிரியரிடம் இருந்து அழைப்பு வந்தது. அவர் வேறொரு வகுப்பறையின் முன் நின்றுகொண்டிருந்தார். என்னைக் கண்டதும் காதைப் பிய்த்துவிடுவதுபோலத் திருகி இழுத்து ஒரு பெஞ்சின் முன் கொண்டுபோய் நிறுத்தி 'படிடா' என்றார். டெஸ்கின் ஒரு ஓரத்தில் பேனாவால் எழுதப்பட்டிருந்த வாசகங்கள். ஆண் பெண் பிறப்புறுப்புகளின் பெயர்கள். அவை இணையும் குறியீடுகள். அதற்குரிய சொற்கள். அவற்றின் கீழே என் பெயரும் வகுப்பும். கண்கள் நிறைந்த கண்ணீரோடு தலைமையாசிரியரைப் பார்த்து மன்றாடும் குரலில் 'நானில்ல சார்... நானில்ல சார்' என்று திரும்பத் திரும்பச் சொல்லித் தலையை ஆட்டினேன். என் மன்றாட்டு வெறும் நடிப்பாக அவருக்குத் தெரிந்திருக்க வேண்டும். நான் அந்த அறையில்தான் தேர்வு எழுதினேன். ஆனால் அந்த பெஞ்சில்தானா என்பது தெரியவில்லை. பெஞ்சுகளை இப்போது வகுப்பறைக்குத் தகுந்த மாதிரி நெருக்கமாகப் போட்டிருந்தார்கள். என் பெயர் எழுதப்பட்டிருப்பது அவருக்கு முக்கியமான சான்றாகிவிட்டது. என்ன செய்வது என்று தெரியாமல் 'நானில்ல சார்... நானில்ல சார்'


படிப்பகம்

www.padippakam.com



என்று இடைவிடாமல் சொல்லிக்கொண்டிருந்தேன். ஆனால் தலைமையாசிரியர் மனம் இளகவில்லை. அந்த வகுப்பாசிரியர் என் துணைக்கு வந்தார்.

அவர் எனக்குச் சாதகமாகச் சந்தேகம் ஒன்றை எழுப்பினார். அந்த வார்த்தைகளை எழுதியவன் தன் பெயரையும் எழுதுவானா என்பதுதான் சந்தேகம். தலைமையாசிரியர் கொஞ்சம் இறங்கி வந்து அந்தக் கையெழுத்து யாருடையது எனப் பார்த்துச் சொல்லச் சொன்னார். என் வகுப்பு மாணவர்கள்தான் அங்கே தேர்வெழுதியவர்கள். முதலில் பார்த்தபோது கையெழுத்தில் என் கவனம் போகவில்லை. திரும்பவும் அதைப் பார்த்தபோது சட்டென எனக்குத் தெளிவாகிவிட்டது. அது என் நண்பனின் கையெழுத்து. என் உடல் வியர்த்துப்போயிற்று. நாக்குழறிப் பேச்சு எதுவும் வரவில்லை. அது யார் கையெழுத்து என எனக்குத் தெரியவில்லை என்பதை எப்படியோ சொன்னேன். ஆனாலும் கையெழுத்துக்குரியவனைக் கண்டுபிடித்துவிட்டார்கள். அன்றைக்கு அவன் எதிரியானான். அதன்பின் இது நாள்வரை இருவருக்கும் பேச்செதுவும் இல்லை. அவன் மிகவும் சங்கோஜி, கெட்ட வார்த்தைகள் மீதான பிரியத்தை ஏனோ அப்படி வெளிப்படுத்தி இருக்கிறான். அது சரி. என் பெயரை ஏன் எழுதி வைக்க வேண்டும்? எனக்கு இன்னும் புரியாத புதிர்.

வளர்ந்து மீசை முளைத்துப் பெரியவர்களான பின்னும் அவனை எங்காவது எதிர்ப்பட்டுப் பார்க்கையில் பழைய சம்பவமும் கோபமும் வந்து கொண்டேயிருந்தன. சின்ன ஒரு விளையாட்டுத்தனத்தை ஊதிப் பெருக்கி இன்னும் பகைமை பாராட்ட வேண்டியதில்லை என எத்தனையோ முறை சமாதானப்படுத்திக்கொண்டபோதும் அது இயன்றதில்லை. அது என்னுள் பெருந்துக்கமாகவே மண்டிப்போய்விட்டது.

அந்த நண்பனோடு கைகோர்த்து நடந்தேன். அவனோடு எவ்வளவோ பேசினேன். இருளை விரட்டிப் பிரகாசமாய் மின்னிய விளக்குகளினூடே நடந்தோம். நேரம் என்னவோ தெரியவில்லை. ஒரு திருப்பத்தைக் கடந்து வேறொரு தெருவுக்குள் நுழைந்தோம். அந்தப் பக்கவாட்டு முகத்தின் தோற்றம் மெல்ல மெல்ல மாறி என் நண்பன் மறைந்து போனான். எனினும் என் நண்பனோடு குலாவ நெஞ்சுள் வைத்திருந்த ஆசைகள் நிறைவேறிய குதூகலம் என்னுள் முகிழ்த்தது. என் மீதான சுய இரக்கப் படிவுகள் நொறுங்கிச் சிதறியதைக் கண்டேன். வெகுதூரம் அந்த நிர்மலமான முகத்தோடு நடந்தேன். களைப்பே என்னவென்று தெரியவில்லை. ஒரு இணையான நடையின்போது அந்த முகம் சிறு குழந்தை ஒன்றின் முகமாக மாறியிருந்தது. அதுவும் எனக்கு மிகவும் பரிச்சயமான முகம். மனதின் அடி ஆழத்தைத் தோண்டி எடுத்துக் கொண்டுவர வேண்டியதில்லை. என்னைக் கீழானவனாக உணர வைக்கும், அவமான உணர்வுக்குக் காரணமான முகம் அது. களங்கத்தின் கீற்றும்கூடப் படியாத பால் முகம் அது. அதனைப் பார்க்கும் தெம்பு எனக்கு வரவில்லை. ஆனால் அந்த முகம் என்னெதிரில் நின்று கலகலத்துச் சிரிக்கிறது. அந்த ஓசை செவிகளில் புகுந்து நரம்புகள் அதிர்கின்றன. மெல்ல உயர்த்திப் பார்க்கிறேன். குழப்பங்களின் சாயல் படியாத தெளிந்த முகம். அதனைக் குழந்தையாகப் பார்க்க வாய்க்காத என் கேவலத்தை எண்ணித் தலைகுனிகிறேன். அந்தச் சம்பவத்தைச் சொல்ல நாக்கூசுகிறது. எத்தனை பேர்மீது என்னென்னவோ குற்றங்களைச் சுமத்தி என்னை யோக்கியனாகக் காட்டிக்கொள்ள முயன்றிருக்கிறேன். எல்லாம் இந்த முகத்தின் முன் செல்லுபடியாவதில்லை.

அது ஒரு கருங்குழந்தை. மினுங்கி ஈர்க்கும் நெய்க் கருப்பு. என் உறுப்புக்களின் இருப்பை அறிந்து கொண்ட அந்தப் பதின்வயதில் நிகழ்ந்தது அது. உறுப்பு குறித்த விஷயங்கள் எல்லாம் மர்மங்களாகவே நீடித்தன. என் உடம்பின் ஒவ்வொரு அதிர்வும் புது விதமான ஓசை எழுப்பிற்று. இந்த உலகமே புதுக் கோணத்தில் தென்படலாயிற்று. வெட்கம் கவிய எந்த ஒன்றையும் காணலானேன். இரவுகளிலும் தனியான பகல்களிலும் உறுப்புக்கள் பூதாகரமாகி என் உடல்மொழியை உணர்த்திக் கொண்டிருந்தன. எனக்குப் புரிபடாத, நான் அறிந்து கொள்ளாத விஷயங்களின் பெருக்கம் என்முன் குவிந்து கிடந்தது. அதிலொன்றை அறிந்துகொள்ளும் ஆர்வத்தில் அந்தக் குழந்தையை அழைத்துவந்தேன். மிகச் சிறு குழந்தை அது. இன்னும் திருத்தமான


படிப்பகம்

www.padippakam.com



சொற்களைப் பேசவே வாய் திரும்பாத இளங் குழந்தை. என் வீட்டுக்கு அவ்வப்போது யாருட னாவது வந்து போகும். அதனால் பரிச்சயமுண்டு. நான் மட்டுமே தனித்திருந்த பகலில் எதற்கோ வந்தது. மிட்டாய் தருவதாய்ச் சொல்லி உள்ளே அழைத்துக் கொண்டேன். அதன்பின் அச்சத்தோடும் மிரட்சி யோடும் அழுதுகொண்டே திரும்பிப் போயிற்று. உறுப்பறியும் என் ஆர்வம் குழந்தை என்றுகூடப் பார்க்கவில்லை. என்னுள் வடுவாய்த் தேங்கிப் போன சம்பவம் அது. மகிழ்ச்சியும் உற்சாகமும் என்னுள் பெருகும்போதெல்லாம் அந்தச் சம்பவம் முன்னால் வந்து நின்று பல்லிளிக்கும். அதற்குச் சாட்சியாக இருந்த என் வீட்டின் அறைச்சுவர்தான் முதலில் என்னை விரட்டத் தொடங்கியது. அந் நியமாகிப்போய்விட்ட அந்த அறைக்குள் என்னால் இயல்பாக நடமாட முடிந்ததேயில்லை. எதையாவது எடுக்கப் போனால் வாய் திறந்த குகைபோல் என்னை அது விழுங்க வரும். தப்பித்து ஓடி வந்து விடுவேன். ஒருநாளும் அந்த அறையோடு இணக்கம் ஏற்படவில்லை. எனக்குள் மட்டுமே புதைந்து போய்விட்ட ரகசியம் இதுவென்று கருதிக்கொண்டி ருந்தேன். அக்குழந்தை வளர்ந்தாள். பெரிய வளானாள். கல்யாணமும் செய்துகொண்டாள். அவளுக்கு எல்லாம் மறந்துபோயிருக்கும் என்று எவ்வளவுதான் தேற்றிக்கொண்டாலும் அவள் எதிர்ப் படும்போது பதற்றம் கூடி எனக்கு வியர்த்துப் போகும். ஒளிந்துகொள்ள இடம் தேடிக்கொள்வேன். இன்று ஏதோ பரிகாரம் செய்துவிட்டதான திருப்தி வருகிறது.

தைரியத்தோடு அம்முகத்தை அண்ணாந்து பார்த்தேன். என்னை மன்னித்துவிட்ட அல்லது அதையே மறந்துவிட்ட வெகு இயல்பான சுபாவத் தோடு அதன் சிரிப்பு என்னுள் நிரம்பிற்று. குழந்தை யோடு கொஞ்சி விளையாடித் திரிந்தேன். குழந்தை யிடம் குழந்தை மொழிகளைப் பிதற்றிக்கொண்டு சென்றேன். குழந்தைகளின் உலகையே இழந்துவிட்ட என்னுள் ஆனந்தம் முகிழ்த்தது. எந்த முடிவுகளும் அற்று வெகுநேரம் அதன் உலகத்துள் தங்கியிருந் தேன். மின் விளக்குகளை எல்லாம் மிஞ்சி வானில் பிறைநிலா ஒளிர்ந்தது. சாலையின் வேறொரு திருப்பத்தைக் கடந்தோம். இப்போது குழந்தையின் முகம் மறைந்தது. அவன் முகம் வந்திருந்தது. அடை யாளங்கள் குழம்பி ஒளிரும் முகம். ஆனால் ஆதரவும் புகலும் தந்து அணைத்துக்கொள்ளும் இன்ப முகம்.

அவனை ஆசையோடு பின் தொடர்ந்தேன். அவன் யாராக இருந்தால் என்ன. என்னுள் சாம்பல் பூத்த கங்குகளாய்க் கிடக்கும் எண்ணங்களை எல்லாம் தன் ஆகர்ச சக்தியால் வெளிக்கொணரும் ஆற்றல் கொண்டவன். அவனிடம் ததும்பும் கருணை யில் என் தவறுகள் பொசுங்கிப்போகின்றன. நான் கொஞ்சம் கொஞ்சமாகப் புது வடிவம் எடுத்துக் கொள்கிறேன். என் வீட்டின் அந்த அறை இனி என்னை மிரட்ட முடியாது. அவனுடைய கைகளைப் பற்றிக்கொண்டேன். அவனோடு ஒட்டிக்கொண்டு உடலோடு உரசியபடி நடக்க மிக ஆசையாக இருந்தது. அவன் மறுப்பெதுவும் சொல்லவில்லை. இப்போது பெரு நகரத்தின் மையமான பகுதியில் இருப்பதாக உணர்ந்தேன். கடை வீதி அது. இடை விடாத அழைப்புக் குரல்கள். மக்கள் தேனீக்கள் போல மொய்த்துக்கொண்டிருந்தனர். அவர்களினூடே புகுந்து போவது சிரமமாக இருந்தது. எனினும் எந்தக் கூட்டத்திலும் தனித்தொளிரும் அவன் முகம். கஷ்ட மின்றிப் பின் தொடர்ந்தேன். என் மன அழுத்தங்கள் குறைந்து லேசாகிவருவதாக உணர்ந்தேன். அவன் முகம் அடுத்து என்னவாக உருப்பெறும் என்பதை அனுமானிக்க முடியவில்லை. என்னுள் தேடிப் பார்த்தேன். அலைக்கழியும் முகப் பிம்பங்களுக்குள் எதனை அவன் தேர்வு செய்யக் கூடும்? ஆவல் கூடிற்று.

அவனுக்கு இணையாக நடக்க முண்டியடித்துப் போனேன். அவன் கண் மூடியிருந்தது. சட்டென விழித்தான். வெறும் வெண்படலம். பக்க முகம் முழுவதும் இப்போது எனக்குக் காட்சியாயிற்று. இது என் இரக்கமற்ற கொடூரத்தின் சாட்சி முகமல்லவா? அந்தக் கண்கள் என்னைப் பார்க்க முடியாது என்னும் துணிவில் நன்றாக ஏறிட்டுப் பார்த்தேன். பரிதாபத்திற்குரிய முகம் அது. அதனோடான என் உறவு முடிந்தவுடன் என் வீட்டில் ஓர் அறை கூடிவிட்டது. அது எனக்கு மட்டுமே தெரியும் படியான மாய அறை. அப்படி எத்தனை அறைகள். மாயவெளியில் மிதந்துகொண்டிருக்கும் அறைகளில் ஏதாவது ஒன்று என் வீட்டுக்குள்ளும் வந்து உட் கார்ந்துகொள்ளும். பொருட்கள் கலைந்து கிடக்கும் போதுகளில் எல்லாம் அந்தக் குறிப்பிட்ட அறையின் வரவு நிகழ்ந்துவிடும். மற்ற அறைகளைப் போல அது சுருங்கி வந்து என்னை நெருக்குவதில்லை. அச்சுறுத்துவது அதன் நோக்கமில்லை. எந்த அலட்டலும் இல்லாமல் அது வெறும் காட்சியாக விரிந்து நிற்கும். நான் திரும்பும் இடமெல்லாம் எந்த மாற்றமும் இல்லாமல் அந்த அறைக் காட்சிகள். அழுத்தித் திணறடிக்கும் அறைகளைச் சமாளித்து விடலாம். மௌனமாகத் தன்னைக் காட்டிக்கொண்டு நிற்கும் இந்த அறை குற்றவுணர்வைப் பெருக்கிப் பெருக்கிச் சட்டென வெளியே விரட்டிவிடும்.

சில காலங்களுக்கு முன் நான் பார்வையற்ற ஒருவருக்கு உதவியாளனாகப் பணிபுரிந்து கொண்டி ருந்தேன். அவர் கல்லூரி மாணவர். நாளின் குறிப் பிட்ட சில மணி நேரங்களை அவருடன் செலவிட வேண்டும். அவருக்கு ஏதோ ஒரு புரவலர் பண உதவி செய்து கொண்டிருந்தார். அதில் உதவியாள ருக்கான சம்பளமும் அடங்கும். என் வேலை எளிமை யானதுதான். அவர் படித்துக்காட்டச் சொல்லும் பகுதிகளைப் படிக்க வேண்டும். எழுதச் சொல்லும் குறிப்புகளை எழுத வேண்டும். சில சமயம் நூலகங் களுக்குப் போய்க் குறிப்பிட்ட நூலை எடுத்து அதில் குறிப்பிட்ட பகுதியைப் படித்துக் குறிப்புத் தயாரித்து வர வேண்டியிருக்கும். சிலவற்றைச் சத்தமாகப் படித்து டேப் ரிகார்டரில் பதிவுசெய்ய வேண்டும். வேலைகளை மிகவும் ஆர்வமாகச் செய்தேன் ஆர்வத்தின் மிகையில் தொடக்கத்தில் எனக்கு எந்த வித்தியாசமும் தெரியவில்லை.

சில நாட்களுக்குள்ளாகவே எனக்கு எரிச்சல் ஏற் படுத்தும் காரியங்கள் பல நடந்தன. நான் போக



படிப்பகம்

www.padippakam.com

வேண்டிய நேரத்திற்கு ஐந்து நிமிடம் தாமதித்துப் போனாலோ உரிய நேரத்திற்கு முன் புறப்பட வேண்டியிருந்தாலோ அவர் ரொம்பவும் எரிச்சல் பட்டார். முகத்தை இறுக்கிக்கொண்டு வெண்ணிற விழிகளை உருட்டி உருட்டி அவர் பேசுகையில் எனக்கு அச்சமாக இருக்கும். வேலை செய்யாமல் நான் ஏமாற்றிவிடுவேன் என்னும் பயம் அவருக்கு எப்போதும் இருந்துகொண்டிருந்தது. எழுத்து வேலை கொடுத்துவிட்டால் சில நிமிடங்களுக்கு ஒருமுறை எவ்வளவு முடிந்திருக்கிறது என்னும் கேள்வியைக் கேட்பார். எழுதாமல் வெறுமனே உட்கார்ந்திருப்பேன் என்னும் சந்தேகம் அது. நூலகங்களுக்கு அனுப்பும்போது சுதந்திரமாக விடுவதில்லை. நான் போன கொஞ்ச நேரத்தில் அவரும் வந்துவிடுவார். அவர் சம்பளம் கொடுக்கும் முதலாளியாகவும் நான் ஏமாற்றும் வேலைக்காரனாகவும் அவர் எண்ணத்தில் உருவாகிவிட்டோம். கேசட்களில் பதிந்த என் குரலில் தெளிவில்லை என்றும் உச்சரிப்பு சரியில்லை என்றும் நிறையக் குறைகளைச் சொல்லிக்கொண்டேயிருந்தார். அதாவது குறை சொன்னால்தான் நான் மேலும் மேலும் கவனத்துடன் வேலை செய்வேன் என்பது அவர் எண்ணம். அவருடைய அறைக்குள் புகுந்துவிட்டால் நேரம் முடிந்துதான் வெளியே வர வேண்டும். இடையே சிறுநீருக்காகப் போனால்கூடப் பத்து நிமிடம் போய் விட்டதெனச் சிடுசிடுப்பார். சில நாள் வீம்பாக நான் கூடுதலாகப் பத்து நிமிடம் வேலை செய்து விட்டு அவருக்கு நேரத்தைச் சொல்லி வருவேன். அப்போது அசட்டுப் புன்னகை அவரிடம் விரியும்.

ஒரு நூலின் சில பகுதிகளைக் கொடுத்து கேசட்டில் பதிவுசெய்யச் சொல்லிவிட்டு அவர் வெளியே போனார். ரோஸ் பவுடரைத் தன் கறுப்பு முகத்தில் ஒரு இன்ச் அளவுக்குப் பூசிக் கொண்டு 'எப்படியிருக்கிறது?' எனக் கேட்டார். சகிக்கவில்லை. இருப்பினும் ரொம்பவும் அழகாயிருக்கிறது' என்று புகழ்ந்தேன். ஏதாவது பெண்ணைச் சந்திக்கச் செல்கிறார்போலும் என நினைத்துக்கொண்டேன். என் வேலைகள் தவிர வேறு எதையும் கேட்டுக்கொள்வதில்லை. கறுப்புக் கண்ணாடியோடு டக்டக்கென்று வெளியேறிப் போய்விட்டார்.



அன்று வெகு சுதந்திரமாகப் படித்துப் பதிவு செய்தேன். இடையிடையே தண்ணீர் குடித்தேன். சிறுநீர் கழிக்கப் போனேன். சடவாக இருந்தபோது அவர் வைத்திருந்த சில பாடல்களைப் போட்டுக் கேட்டேன். வழக்கத்தை விட அதிகமாகவே பதிவு செய்திருப்பதாகத் தோன்றியது. அவருக்காகக் காத்திருந்தேன். பதற்றத்தோடு வந்தவர் 'என்ன செய்றீங்க என்ன செய்றீங்க' என்றார். காத்திருப்பதைச் சொன்னேன் அவருக்குத் திருப்தியாயில்லை. அவர் வரும்போது என் குரல் கேட்டுக்கொண்டிருக்க வேண்டும் என்று விரும்பினார்போலும். அப்போது தான் நான் பதிவுசெய்கிறேன் என்பதை நம்பியிருப்பார். நான் பதிவு செய்த அளவில் அவருக்கு நிறைவில்லை. 'இவ்வளவுதானா' என்றார். அவர் கொடுக்கும் சம்பளத்தையும் நான் வேலை செய்வதில் உள்ள சுணக்கத்தையும் ஒப்பிட்டு ஐந்து நிமிடம் பேசினார். கேட்டுக்கொண்டிருந்தேன். உடை மாற்றிக்கொண்டு கழிப்பறைக்குச் சென்று விட்டார். இனி அங்கே வேலைக்கு வருவதில்லை என்னும் முடிவேற்பட்டது. கனன்றுகொண்டிருந்த மனம் அந்த அறையை அப்படியே விட்டுப் போகாதே என்றது. மிகுந்த கோபத்தோடு சில நிமிசங்களில் அறையைச் சூறையாடினேன். எல்லாம் கலைபட்டுப் போனது. முக்கியமாக டேப் ரிகார்டரைப் போட்டு உடைத்தேன். பொருட்கள் சிதைந்த அறைக்குள் அவர் தடுமாறும் காட்சியைக் கற்பனை செய்து ரசித்தபடி வெளியேறிப் போனேன்.

என் செயல் குற்றம் என எத்தனையோ முறை தோன்றியிருக்கிறது. ஈவு இரக்கமற்ற மொண்ணைப் பிறவியாக அந்தச் சமயத்தில் நடந்துகொண்டிருக்கிறேன். பழியைப் போல் வேறொரு குரூரம் உண்டா? நான் இருக்குமிடம் சற்றே கலைபட்ட அறையாக இருப்பினும் அந்த விடுதி அறை சட்டென அங்கே வந்து உட்கார்ந்துகொள்ளும். அதனால் எதையும் எங்கும் ஒரே இடத்தில் வைத்து அறையைக் கலைபடாமல் பார்த்துக்கொள்பவனாக மாறிப்போனேன். எவ்வளவு எச்சரிக்கையோடு இருந்தபோதும் தினந்தோறும் ஒருமுறையாவது அந்த மாய அறையைச் சந்திக்க வேண்டி நேர்ந்திருக்கிறது. இன்றைக்குத்தான் அதிலிருந்து விடுதலை. இதோ அந்தப் பார்வையற்ற முகத்தின் கனிவு என்மேல் பொழிகிறது. அதன்முன் மனதார மண்டியிட்டு என் மன்னிப்பைக் கோரினேன். என்னைப் பீடித்துத் திரிந்த மாயத்தில் இருந்து விடுபட்டாயிற்று. இதனை

**ரோஸ் பவுடரைத் தன் கறுப்பு முகத்தில் ஒரு இன்ச் அளவுக்குப் பூசிக்கொண்டு 'எப்படியிருக்கிறது?' எனக் கேட்டார். சகிக்கவில்லை. இருப்பினும் ரொம்பவும் அழகாயிருக்கிறது என்று புகழ்ந்தேன். ஏதாவது பெண்ணைச் சந்திக்கச் செல்கிறார் போலும் என நினைத்துக்கொண்டேன்.**

யெல்லாம் எனக்குச் சாத்தியப்படுத்தியவன் இதோ தன்னை யாரென்று இதுவரைக்கும் காட்டிக் கொள்ளாத இந்த ரட்சகன். அந்தச் சாலையின் நெருக்கடியில் அவனோடு என் நெருக்கம் கூடிற்று. பேருந்திலிருந்து நான் பார்க்கும்போது தெரிந்த அந்தப் பழைய முகம் வந்திருந்தது. அவன் உடல் எனக்கு இசைவான வெம்மையில் இருந்தது. மெல்ல இடையைத் தழுவிக்கொண்டு நடந்தேன். நெகிழ்வான கணங்கள்.

என்னை நீ என்னவாக்க விரும்புகிறாயோ அதுவாக நான் தயார்; என்னை முழுதாக உன்னிடம் ஒப்படைத்தாயிற்று என்று அவனுக்கு உணர்த்த


படிப்பகம்

www.padippakam.com


விரும்பினேன். அதையெல்லாம் உணர்ந்த ஞானியைப் போல் அவன் சிரித்தான் வேறொரு திருப்பம் வருமெனவும் அதில் அவன் முகம் என்னவாக மாறும் எனவும் யோசித்தேன். ஆனால் இன்னொரு திருப்பத்தில் எனக்கு அவ்வளவாக விருப்பமில்லை. இப்போதே மிகவும் இளகிக் கரைந்துகொண்டிருக்கிறேன். இனிமேலும் இந்த ஆட்டம் தொடர்ந்தால் என்ன ஆவேனோ? அவனோடு அவனிடம் அவனுக்குள் என்று விருப்பங்கள் இப்போது அவனை முன் வைத்தே தோன்றுகின்றன. என் மனநிலையை உணர்ந்தவன் போலக் கைப்பற்றிக் கடை ஒன்றிற்குள் கூட்டிச் சென்றான்.

அது மிகப் பெரிய மதுக் கடை. மேஜைகளையும் கூட்டத்தையும் பார்க்கையில் பெரிய உணவகம் போலத் தோன்றிற்று. விதவிதமான விளக்கொளிகள் கொண்ட நீண்ட கூடம். அந்தச் சூழல் ரம்மியம். என் மனநிலைக்கேற்ற இடத்தை அவன் தேர்வு செய்திருக்கிறான் என்பதில் மிகவும் சந்தோசம் கொண்டேன். அவன் எப்போது ஆர்டர் செய்தானெனத் தெரியவில்லை. உடனே மேஜை நிரம்பிற்று. பரிமாறுபவர்கள் முகம் நல்ல களையாக இருந்தது. என் நாக்கில் நீரூறச் செய்யும் வகைகள் மேஜையிலிருந்தன. தேன் நிற உயர் ரக மதுப் பாட்டிலைத் திறந்து நிறைத்தான். அவனுக்கு நிரப்பிக் கொண்டான். எனக்கு அந்த வகை மது மீது மிகப் பிரியம். தொண்டையில் குழைவுடன் இறங்கி மெல்ல மேலெடுத்துச் செல்லும் அற்புத மதுவகை அது. ஆவலோடு குடித்தேன். என் வழக்கம் எடுத்தால் ஒரே சமயத்தில் டம்ளரைக் காலி செய்து விடுவதுதான். கொறிக்கும் தீனி வகை கள் எனக்கு பிடித்தமானவை அல்ல. உண்ணும்படி இருக்க வேண்டும். அத்தகைய உணவுகளே இருந்தன. எல்லாம் என் மனதுப்படியே. குதூகலத்துடன் வாரிப் பருகி உண்டேன். பசி இப்போதுதான் ஆங்காரம் கொண்டெழுந்தது.



ஓரளவு பசியடங்கினேன். இரண்டு அல்லது மூன்று சுற்றை முடித்திருக்கக்கூடும். கண்கள் கலங்கின. அவனுக்கு என்ன விதத்தில் என் நன்றியைத் தெரிவிப்பேன்? தெய்வமாக என் வழியில் வந்திருக்கிறான். அவன் கால்களைப் பற்றிக்கொண்டு கதற மனம் எழுச்சிகொண்டது. தலையை அவனை நோக்கித் திரும்பினேன். அவன்முன் டம்ளர் நிறையப் பானம் அப்படியே இருந்தது. முதல் சுற்றையே முடிக்கவில்லையோ. ஒரு மிடறாவது வாயில் வைத்திருப்பானா தெரியவில்லை. அவன் பக்கவாட்டு முகம் மட்டுமே வெகு நேரமாக எனக்குத் தெரிந்திருந்தது. இப்போது முழு முகத்தையும் காணும் ஆவலில் பார்த் தேன். கண் நிறைய நீர் இருப்பதால் முகம் குமிழி களில் இருந்தது. தலையை உதறிக் கண்களைச் சரி செய்துகொண்டேன். போதையொன்றும் எனக்கு அவ்வளவாக இல்லை. இன்னும் இரண்டு சுற்றுக்கூட எனக்குச் சாதாரணம். எத்தனை போதையிலும் உணர்வோடு இருக்க என்னால் முடியும். இப்போது அவன் முகம் தெளிவாயிற்று. இல்லை, இது அவன் முகமில்லை. என் வீடு முழுவதும் என்முன் உட்கார்ந்திருப்பதாகச் சட்டென உணர்ந்தேன். இது என் அப்பனின் முகம். எதற்காக இந்த நேரத்தில் என் அப்பனின் முகம்?

என் அம்மா தினமும் அடிபடும் அவலம் பொறுக்க முடியாமல், என் அப்பன் குடிக்கும் இடத்திற்கே போய் அவன் வாயில் உறிஞ்சிக் கொண்டிருந்த டம்ளரைத் தட்டிவிட்டு உடைத்திருக்கிறேன். அதையெல்லாம் நினைவு படுத்தி என்னை மண்டியிடச் செய்யும் தந்திரம் இதுவா? இது வரைக்கும் கொஞ்சம் கொஞ்சமாக வீட்டுக்குத் தக்கவனாக என்னை உரு மாற்றிக் கொண்டே வந்திருக்கிறான். இப்போது முழு வீட்டையும் என்முன் நிறுத்திவிட்டான். திரும்பவும் ஒரு டம்ளரைக் காலி செய்தேன். உணவுப் பதார்த்தங்கள் எனக்கு வேண்டியிருக்கவில்லை. இவன் யார் என்னும் கேள்வி என்னுள் தீவிரமாக எழுந்தது. இதுவரைக்கும் இவன் பேசவில்லை. ஒரே ஒரு சிரிப்பை உதிர்ப்பான். அதுவும் ஒரே மாதிரியான நிலைப்பட்ட சிரிப்பு. அதிலேயே எல்லாவற்றையும் சாதித்துக்கொள்ளும் கள்ளன் இவன். உடன் எழுந்து அவன் சட்டையைப் பிடித்துக்கொண்டேன்.

'யார்டா நீ' என்னும் கேள்வியைத் திரும்பத் திரும்பக் கேட்டேன். என் குரலில் உக்கிரம் கூடி வந்தது. என்னை இவ்வளவு நேரம் குற்றவாளியாக்கி விளையாடிப் பார்த்த அவன் மீது வெறியேறிற்று. 'யோக்கிதக் கூதியாடா நீ' என்று கேட்டுச் சரமாரியாக வார்த்தைகளைப் பொழிந்தேன். பாவ மன்னிப்புக் கொடுக்க வந்துவிட்டானா பெரிய புடுங்கி? 'யார்டா உன்ன அனுப்புனது' என்றேன். மேஜையின் எதிர் எதிரில் இருந்ததால் வாகாக அவனைத் தாக்க முடியவில்லை. அளவற்ற முகமூடிகளைக் கைவசம் கொண்டிருக்கும் இந்தப் பச்சோந்தி, என் ரகசியங்களை எல்லாம் பிடுங்கிக்கொண்டு கால காலத்திற்



படிப்பகம்

www.padippakam.com



கும் என்னை அடிமையாக்கிக்கொள்ளும் தந்திரம் கொண்டது. எனக்கு முன்னால் உட்கார்ந்துகொண்டு ஒரு துளியும் குடிக்காமல் என்னையே கவனித்துக் கொண்டிருக்கிறான் என்றால் இவன் எவ்வளவு பெரிய துரோகி? நான் தடுமாறித் தவிப்பவனாகவும் அவன் ஒரு ஏளனச் சிரிப்போடு என்னையே பார்ப்பவனாகவும் இருந்தால் அது என்ன சம நிலைமை? எனக்கு நண்பன் தேவையில்லை. ரட்சகன் தேவையில்லை. தெய்வம் தேவையில்லை. எல்லாம் ஒரு துரோகக் கூட்டம். வீடு எனக்கு முன்னால் எனக்கும் தெரியாமல் அனுப்பி வைத்த துரோகி இவன்.

சட்டையை விட்டுவிட்டு மறுபடியும் ஒரு டம்ளரைக் குடித்தேன். அவனைச் சும்மா விடப்போவதில்லை. கால் கையை முறித்து முடமாக்கிப் போட வேண்டும். வேகத்தோடு 'யார்டா நீ' என்று உக்கிரமாகக் கத்தினேன். அவன் என் எதிரில் இல்லை. சுற்றிலுமிருந்த கூட்டம் அந்தரத்தோடு நான் பேசுவதாகக் கருதி என்னைக் கவனித்தது. பின் சட்டெனத் தமது வேலையில் சுருங்கிக்கொண்டது. அவனைத் தேடினேன். கடையிலிருந்து வெளியேறிக்கொண்டிருந்தான். 'டேய்' என்று கத்தியபடி அவனைத் தொடர்ந்து ஓடினேன். என்னிடம் இந்த மாற்றத்தை அவன் எதிர்பார்த்திருக்க மாட்டான். கால் நக்கிக்கொண்டு கிடப்பேன் என்று நினைத்திருப்பான்.

கூட்டத்துள் புகுந்து புகுந்து போனான். அவன் ஓடுகிறானா, நடக்கிறானா என்பதைத் தீர்மானிக்க முடியவில்லை. ஆனால் நான் ஓடினேன். எந்தப் பொந்துக்குள் ஓடி ஒளிந்தாலும் விடக் கூடாது. அவன் ஏதேதோ தெருக்களைக் கடந்து போய்க் கொண்டே இருந்தான். அவனுக்கும் எனக்கும் குறிப்பிட்ட தூரம் இருந்துகொண்டே இருந்தது. என் வலு முழுவதையும் பயன்படுத்தித் தொடர்ந்தேன். சட்டென மின் விளக்குகள் அற்ற, ஜனத்திரள் அற்ற ஒரு சாலையில் புகுந்தான். இரு புறமும் புதர்களும் மரங்களும் நிறைந்த சாலை. என்னைத் திசை திருப்பித் தப்பித்துவிட எண்ணம் கொண்டிருப்பான். நல்ல நிலவொளியில் அவன் உருவம் தெளிவாகத் தெரிந்தது.

அவன் ஓட ஓடக் கொலைவெறி என்னுள் மூண்டது. மிஞ்சியிருந்த பாட்டிலைக் கையில் எடுத்து வந்திருக்கலாம். இன்னும் கொஞ்சம் பலம் கூடியிருக்கும். நிலவு ததும்பிய சாலையில் போகிறான். விடாமல் தொடர்ந்தேன். இப்போது என்னிலிருந்து விலகி வெகு தொலைவில் போவதாக உணர்ந்தேன். எனினும் அவனை விடப்போவதில்லை. அவன் புள்ளியாய்ச் சுருங்கினான். சிறிது நேரத்தில் ஒளியில் கரைந்துபோனான். ஆனால் என்ன? அவனை நான் விடப்போவதில்லை. ஆளற்ற அந்தச் சாலையில் கரைந்த ஒளியுள் புகுந்து போய்க்கொண்டேயிருந்தேன்.

❑

ஓவியங்கள் : கோங்கிலி





ஜெயகாந்தன் 1977 முதல் 2002வரை

பல இதழ்களில் பல பொருள்கள் குறித்து எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு. செறிவான நடையும் தீர்க்கமான பார்வையும் கொண்ட கட்டுரைகள்

**எனது பார்வையில். . .**
கட்டுரைகள்
ஜெயகாந்தன்
பக். 224; விலை ரூ. 60




பிரபஞ்சன் யதார்த்தவாத எழுத்திலிருந்து விலகி எழுதிய கதைகளைக்கொண்ட தொகுப்பு. பன்முகப் பரிமாணங்களும் அர்த்தங்களும் கொண்டு விரியும் சிறுகதைகள்.

**பொன் முடிப்பு**
(சிறுகதைகள்)
பிரபஞ்சன்
பக். 272; விலை ரூ. 70

வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த படைப்பாளிகளின் சிறுகதைகள் மானுடப் பொதுமை நோக்கில் எவ்வாறு ஒன்றுபட்டிருக்கின்றன என்பதாகக் காட்டும் தொகுப்பு. பல மொழிபெயர்ப்பாளர்கள் பல தருணங்களில் மொழிபெயர்த்த கதைகள்

**சர்வதேசக் கதைகள்**
தொகுப்பு: சா. கந்தசாமி
பக். 280; விலை ரூ. 75




ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் சென்னையில் வசித்துவரும் அசோகமித்திரன் சென்னை நகரம் பற்றிய பதிவுகளை முன்வைக்கிறார். கூரிய கவனிப்புத் திறனும் அங்கதமும் கொண்ட சொற்சித்திரங்கள்.

**ஒரு பார்வையில் சென்னை நகரம்**
(கட்டுரைகள்)
அசோகமித்திரன்
பக். 160; விலை ரூ. 40




**கவிதா பப்ளிகேஷன்**

தபால் பெட்டி எண்: 6123
8, மாசிலாமணி தெரு, பாண்டிபஜார், தி. நகர், சென்னை 600 017. தொலைபேசி: 24364243

விளம்பரம்

www.padippakam.com



மதிப்புரை

## எம். கோபாலகிருஷ்ணன்




# நீலக்கடல்
## [கவிதைகள்]

**ஆர். கே.**

*வெளியீடு:*
சௌடாம்பிகை பதிப்பகம்
26/17 கு ராஜாஜி ரோடு
சேலம் – 1

பக். 72; விலை ரூ. 30/–

கடந்த சில ஆண்டுகளில் தமிழில் வெளியாகியுள்ள கவிதைத் தொகுப்புகளின் எண்ணிக்கை மலைக்க வைக்கிறது. வாசகர்களின் தேர்வைச் சிக்கலாக்கியுள்ள இத்தொகுப்புகள் தம் ஒத்த குணங்களினால் வாசிப்புச் சோர்வையும் உருவாக்கிவிடுகின்றன. இவற்றிடையே இத்தொகுப்புகளுக்கான எந்தப் பொது அம்சத்தையும் கொண்டிருக்காத சில தொகுப்புகளும் வெளியாகின்றன. 'நீலக்கடல்' தொகுப்பை அவ்வாறான ஒரு தொகுப்பாகவே இனம்காண முடிகிறது.

ஆர். கேயின் இரண்டாவது தொகுப்பான 'நீலக்கடல்' தேர்ந்தெடுக்கப்பட்ட 46 கவிதைகளைக் கொண்டவை. அவரது முதல் தொகுப்பான 'உயிர்த்திரு'வோடு ஒப்பிடும்போது அளவிலும் எண்ணிக்கையிலும் இது மிகச் சிறிய தொகுப்பே. ஆன்மிகம் சார்ந்த ஒரு பெரும் உரையாடலின் இறுக்கமான அனுபவத்தைச் சாத்தியப்படுத்தும் ஆர். கேயின் கவிதைகள் பத்திரிகைகளில் பிரசுரம் பெறாமல் நேரடியாகத் தொகுக்கப்பெற்றவை.

ஆர். கேயின் பெரும்பாலான கவிதைகளும் அவற்றின் பிரதிக்கு வெளியேயுள்ள பல்வேறு பிரபஞ்ச இயக்கங்களையும் குறித்த குறைந்தபட்ச பரிச்சயத்தை வாசகனிடம் வலியுறுத்தி நிற்பவை. ஆன்மிகத் தளத்திலான பல்வேறு உரையாடல்கள், தத்துவ விவாதங்கள், அறிவுத் தளங்களில் அலையோடும் நவீன மாற்றங்கள் என்று ஒரு விரிவான உலகியக்கத்திலிருந்து ஒளியூட்டப்பட்ட சொற்களைக் கவிதைகளில் அவர் கையாள்கிறார். அச்சொற்களை அதே ஒளியுடன் காணும்போது மட்டுமே கவிதையில் அவற்றை அர்த்தப்படுத்திக்கொண்டு முன்னகர முடியும். அவ்வாறின்றி அச்சொற்களைக் கவிதையின் வெறும் உடலாக மட்டும் காணும்போது வாசகனுக்கு ஏமாற்றமே மிஞ்சும்.

சொற்களையும் சொற்களின் பொருண்மையையும் சார்ந்து நிற்பதால் ஆர். கேயின் கவிதைகளில் தன்னிச்சையான போக்கும் எழுச்சியும் தடைபட்டிருப்பதையும் உணர முடிகிறது. தான் உத்தேசித்த ஒரு விஷயத்தைக் கவிதையாக்க முனையும்போது இயல்பான கவிதைக்கான சுதந்திரம் மறுக்கப்பட்டுக் கவிஞனின் விருப்பத்துக்கேற்ற கட்டமைப்பையே கவிதை ஏற்றுக்கொள்ள வேண்டியதாகிறது. ஆர். கேயின் கவிதைகளில் உணர நேர்கிற இந்த சுதந்திர மறுப்பு வாசக அனுபவத்தை முழுமையாக்குவதில்லை. 'தங்க ஆப்பிளும் மரண வாயிலும்', 'அருவருப்பானது தாமரை', 'ரில்கேவுக்கு', 'இரஷோமான் போன்ற கவிதைகளை உதாரணப் படுத்தலாம்.

> 'இந்த மொழி / பிரபஞ்சத்தின் ஒவ்வொரு அணுவிலும் / எழுதப்பட்டிருக்கிறது / காணாத நடன அசைவுகளில்'

என்று ஆர். கே குறிப்பிடும் 'நடன அசைவுகள்' என்ற பிரயோகத்தை வெறும் சொற்களாகக் காண நேரும் வாசகனுக்கு அவை வெறும் பாசாங்குகளாகவே மிஞ்சும். தான் விரும்பும் தளத்திலிருந்து தன் கவிதையை அணுக வேண்டும் என்று வாசகனை நிர்ப்பந்திக்கும் போக்கு ஆர். கேயின் கவிதைகளை ஓரளவு பலவீனப்படுத்துகிறது. அதோடு இவ்வாறான ஒரு கவிதைப் பாணியில் எழுதும்போது கவிதையின் எழுதப்படாத வரிகள் சாத்தியப்படுத்தும் பொருளடர்த்தியைக் குலைத்துப் போடும்படியான வரிகளைத் தவிர்ப்பது சுலபமில்லை. உதாரணமாக,

> 'உடல் உண்டவில் / வாழ்வு கோலியாத் / நான் டேவிட்தானா. / நகரும் பேனாவின் தசை நார்கள் / நகர்த்துமா உலகை / ஆர்க்கிமிடீஸின் நெம்புகோல்/ என் உள்ளங்கையில் வளருமா ?'

என்ற வரிகளைக் கவனிக்கலாம்.

நவீன கவிதையின் அடையாளங்களிலிருந்து படிமங்களும் உருவகங்களும் விலகிப்போன பின்பு சொற்களின் உள்ளார்ந்த எளிமை மட்டுமே கூட மேலான கவிதையனுபவத்தைச் சாத்தியப்படுத்துகின்றன. ஓவியப் பாடல், அழகின் விஷம், வாழ்க்கைப் பெண் போன்ற ஆர். கேயின் பிரயோகங்கள் கவிதையின் இறுக்கத்தைத் தளர்த்தி அசௌகரியப்படுத்துகின்றன.

> 'கண்ணாடித் தொட்டியே எதுவும் / குளம் / ஆறு / கடல் / எதுவாயினும்'
>
> 'இப்போது / நான் மலை / மலை கடலாக முடியாது / நான் கடல் / கடல் வானமாக இயலாது / வானமும் நான்'
>
> 'கடல் / கடவுளின் முகமென்றால் / வாசிக்கும் தாள் / உன் நெடும் பயணம் / ஒட்டுக் கேட்கும் / ஒற்றைச் செவி நான்'

போன்ற கவித்துவம் துலங்கும் வரிகளில் ஆர். கேயின் கவிதைகள் தனித்துவமிக்க ஓர் அனுபவத்தைச் சாத்தியப்படுத்துகின்றன. இவ்வரி களில் உள்ள எளிமையும், படிம உருவகமற்ற தன்மையும் கவிதையின் பொருண்மையைச் செறிவூட்டி நிற்பதை உணர முடியும்.

'குஞ்சுகள் தாங்கும் வீடு,' 'வடுகப்பட்டி தாமரைக் குளம்' போன்ற வாழ்வனுபவம் சார்ந்த கவிதைகள் இத்தொகுப்பில் தனித்து நிற்கின்றன.

'மூன்றாவதும் நான்காவதும்', 'அவன்', 'அச்சாணி நீ' போன்ற கவிதைகளில் தெரியவரும் ஆர். கேயின் கவிதை சார்ந்த எல்லைகளும் எதிர்பார்ப்புகளும் தனித்தன்மை மிக்கவை. 'நன்றி' என்ற அவரது சொல்லில் கனிந்து நிற்கும் அவரது பெருந்தன்மையும், விளிம்புகளில் கட்டிக்கொண்ட எழுதுகோலின் வழியாக ஒரு அடியில் அண்டமளக்கும் தன்னம்பிக்கையும் வியப்பளிக்கின்றன. 'ஒரு கிராமத்து அரிசி வியாபாரி' போல 'கடவுளின் நாமத்தை உச்சரித்துக்கொண்டேயிருக்கும்' கவிஞன்தான் அடைய வேண்டிய 'ஊரை'க் குறித்த தெளிவும் அதற்கான சாத்தியங்களையும் கொண்டிருந்தபோதும் அவர் புரிந்து கொண்டிருக்கும் கவிதைக்கும் அவருக்கு வாய்த்திருக்கும் கவிதைக்கு மான இடைவெளி அவரது பயணத்தை நீட்டிக்கச் செய்கிறது.

> 'இரங்கும் கைகளில் / ஏந்திய பாத்திரத்தில் / ஈயப்படுவதல்ல கிரீடம்'

என்ற ஆழ்ந்த புரிதல் இருக்கும் வரையில்

> 'முக்காலி தன் நான்காவது காலை / தேடிக் கொணர்ந்து / பொருத்திக்கொள்வதற்காய்'

அவர் காத்திருப்பதில் தவறொன்றுமில்லை. ■



படிப்பகம்

www.padippakam.com

மதிப்புரை

## இ. எஸ். எம். ஹசன் முகைதீன்



இஸ்லாம் பற்றிய பிரச்சினைகள் அஸ்கர் அலி எஞ்சினியரின் மறு பார்வையில், 'குடும்பக் கட்டுப்பாடு' ஒன்றைத் தவிரப் பிற கட்டுரைகள், மனித சமுதாயத்திற்கும் மதங்கள் சார்ந்த நம்பிக்கைகளுக்கும் இடையி லான நடைமுறைச் சிக்கல்களையும் இறை நம்பிக்கை சார்ந்து சூஃபிஸத் தையும் வலியுறுத்துவதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

பொதுவாக வாழ்க்கையின் நிச்சய மற்ற தன்மைகள் காரணமாக மனித மனம் புனிதங்களைத் தேடுகிறது. இவர்களில் அறிவுஜீவிகள் புனிதக் கோட்பாடுகளைக் குறித்துக் கேள்வி எழுப்புகிறார்கள். எல்லா மதக் கோட் பாடுகளையும் போலவே இஸ்லாமியக் கோட்பாடுகளுக்கும் நம்பிக்கைதான் அடிப்படை என்பது வெளிப்படை யானதுதான். குர்—ஆன் கண்மூடித்தன மான நம்பிக்கைகளை வலியுறுத்து வதில்லை எனப் போக்குக்காட்டி அஸ்கர் அலி விமர்சித்தாலும் உண்மை களைப் புறக்கணித்து எழுதிவிட அவர் துணியவில்லை என்பது நூலின் சிறப்பம்சம்.

சடங்கியல் ரீதியான வழிபாடுகளைக் குர்—ஆன் வலியுறுத்தவில்லையென்ப தையும் ஒரு முஸ்லிம் எத்தகைய பண்புடையவனாக இருக்க வேண்டும் என்பதையும், இப்பண்புகள் சடங்கு ஆச்சாரங்களை முதன்மைப்படுத்திய வர்களால் புறந்தள்ளப்பட்டதையும் காத்திரமாகச் சுட்டிக்காட்டுகிறார். கூடவே, அறிவுஜீவிகளுக்கு இருந்தே தீர வேண்டிய பன்முகத் தன்மை பற்றிய குழப்பத்தையும் வேதாளம் போல் சுமந்து திரிகிறார் நூல் எங்கும்.

பன்முகத் தன்மையைக் குர்—ஆன் மிகத் தெளிவாகவே பறைசாற்றுகிறது. 'நாம் ஒவ்வொரு சமூகத்தாருக்கும் ஷரீயத்தையும் ஒரு செயல் வழியை யும் அமைத்துத் தந்தோம். அல்லாஹ் நாடியிருந்தால் உங்கள் அனைவரையும் ஒரே சமூகமாகவும் ஆக்கியிருக்க முடியும். அவன் உங்களைச் சோதிப் பதற்காகத்தான் இவ்வாறு செய்தான். எனவே நன்மை செய்வதில் ஒருவரை யொருவர் முந்துவதற்கு முயற்சி செய்யுங்கள்' என்றும்.

'அல்லாஹ் மக்களில் சிலரைக் கொண்டு சிலரைத் தடுத்துக்கொண்டி ருக்காவிட்டால் மடங்கள், கிறிஸ்துவ ஆலயங்கள், யூத ஆலயங்கள், மஸ்ஜிது கள் ஆகியவை தகர்க்கப்பட்டிருக்கும்' போன்ற வசனங்கள் பிற ஆலயங்களின் இருப்பை, மானுடப் பன்முகத்

## இஸ்லாத்தின் பிரச்சினைகள் ஒரு மறுபார்வை

**அஸ்கர் அலி எஞ்சினியர்**

**தமிழில்: சு. கிருஷ்ண மூர்த்தி சிங்கராயர்**

*வெளியீடு*:
**அடையாளம்**
1204—05, இரண்டாவது தளம்
கருப்பூர் சாலை, புத்தாநத்தம் 621 310
தொலைபேசி: 04332 273444

பக். 184; விலை ரூ. 80/—

தன்மையை ஒப்புக்கொள்வதாகவே சுட்டிக்காட்டும். பிறகும் அஸ்கருக்கு ஏனிந்தக் குழப்பம் என்பது புரிய வில்லை.

இந்து மதம் ஒரு கதம்பம் எனக் கூறும் ஆசிரியர் இந்து மதம் தாராளத் தன்மையுடன் நடந்துகொள்கிறது என்கிறார். (இதை அவர் தலித், இடை நிலை இந்துக்களிடம் கேட்டு உறுதி செய்துகொள்ள வேண்டும்.)

இறை வணக்கம் என்பது நீதியான, சமத்துவமான ஒரு சமூகத்தை நிறுவு வதற்கான வழிமுறை. அங்கு ஒவ்வொரு வரும் சுதந்திரமாகவும் அச்சமின்றியும் இருப்பார்கள். எவரும் ஒடுக்குமுறை, சுரண்டல் சக்திகளுக்கு அடிமைப் பட்டவர்களாக இருக்கமாட்டார்கள். நீதி செலுத்துவது இறையன்புக்கு மிக நெருக்கமானது என்ற முற்போக்குச் சிந்தனையைக் குர்—ஆனிலிருந்து கோடிட்டுக் காட்டும் அஸ்கர், இத்தகை யவர்கள் இறை நம்பிக்கையாளர் களெனில் அடிப்படைவாதிகளாக அடையாளம் சொல்லப்படுவார்கள் என்பதைக் கூறாமல் விட்டுவிட்டார்.

காஃபிர் என்ற சொல் போலவே ஜிஹாத்தும் தவறாகவே புரிந்துகொள்ளப் பட்டிருக்கிறது. கொடுங்கோல் ஆட்சி யாளனிடம் பயமின்றி, உண்மையை நேரடியாக எடுத்துச் சொல்வதுதான் ஜிகாத் (இன்று கொடுங்கோன்மை யாளனே அதிகமாக ஜிகாத் கோஷ மிடுகிறான்). அன்றைய மக்காவின் செல்வந்தர்களால் புறந்தள்ளப்பட்ட பழங்குடியினரைப் பாதுகாத்து சமூக நீதியைப் பறைசாற்றிய நிகழ்வுகளை ஆசிரியர் வர்க்கப் போராட்டமெனச் சித்தாந்தத் தளத்திற்குக் கொண்டு சென்றாலும் உண்மைகளைப் பற்றிய அவரின் தெளிவு நூலெங்கும் விரவி யிருக்கிறது.

சூஃபிஸம் என்பது இந்து மதத்தின் கோட்பாடுகளை உள்வாங்கி நெகிழ்ச்சித் தன்மையுடன் இந்து மதத்திற்கு இணையாக இயங்கி வருகிறது என்றும் சுட்டிக் காட்டும் ஆசிரியர் குர்—ஆன் ஹதீஸ் ஆகிய வற்றின் வழியே உண்மையைத் தேட வேண்டும் என்றும் கூறி முரண் படுகிறார்.

இஸ்லாத்தில் திருமணம் என்பது இன்றைய சடங்குகள் போலல்லாது இருபுற உடன்படிக்கையை அடிப்படை யாகக் கொண்டது என்பதையும் திருமணத்தை ஓர் ஒப்பந்த அடிப் படையிலான ஏற்பாடாக்கி, அந்த ஒப்பந்தத்தின் கீழ்ப் பெண்களுக்குச் சம உரிமைகள் அளித்த முதல் மதம் அனேகமாக இஸ்லாமாகத்தானிருக் கும் என்றும் உறுதியுடன் கூறுகிறார். எனினும் இன்றைய இந்திய முஸ்லிம் களின் ஆடம்பரத் திருமணங்கள் சடங்கியல் சார்ந்தது என்று துணிந்து சொல்ல இயலாததற்கு அவர் சுமக்கும் புத்திஜீவிக் கருத்தியல் தடுமாற்றம் தான் காரணமாக இருக்க முடியும்.

அஸ்கர் அலி போன்றவர்கள் உலக ளாவிய ஒரு மதத்திற்கான ஒட்டு மொத்த அடையாளமாக ஏகத்துவத் தைப் பார்ப்பதுதான் சரியானது. தேசம், இனம், மொழி போன்ற இன்ன பிற கலாச்சாரத்தின் உட்கூறுகளுக் குள் இஸ்லாத்தைப் புகுத்தி அதன்படி வழிபடத் தொடங்கும்போது ஏகத்துவம் என்ற உலக இஸ்லாமியத் தனி அடை யாளம் சிதைந்துபோகக்கூடும். சமூகம் சார்ந்த செயல்பாட்டுக் கூட்டுத் தன்மையினை 'ஒற்றை அடையாளம்' எனும் கருதுகோளாக முன்னிறுத்திப் பார்ப்பதை வெறும் மாற்றுக் கருத்தியல் பார்வையாக மட்டுமே கருத முடியும்.

'இஸ்லாமியர்களும் குடும்பக் கட்டுப்பாடும்' பிரச்சினை, இந்துத்துவ அரசியல் மற்றும் ஊடக சக்திகளின் கையிலிருக்கும் ஆயுதங்களில் ஒன்று. இந்தக் கருத்தியல் பயங்கரவாதத் திற்கு நேரடியான பதிலைத் தருவதில் ஓர் இஸ்லாமியரின் மத ஈடுபாடு குறுக்கிடுகிறது. வாழ்க்கை நலம் கருதி ஒரே குழந்தையுடன் கு. க. செய்துகொண்ட இஸ்லாமியரிடம் கேட்டால் நிச்சயமாக அவர் கு. க. செய்ததை ஒப்புக்கொள்ளவே



படிப்பகம்

www.padippakam.com




மாட்டார். 'எனக்கு ஒரு குழந்தையென்பதுதான் இறைவனின் நாட்டம்' என்பார். இந்துத்துவப் பிரச்சாரத்திற்குத் தோதுவான இந்த இடத்தை அவர்கள் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துவருகிறார்கள். புள்ளிவிவரங்களைக்கூட அவர்கள் பொருட்படுத்துவதில்லை. மதம் அனுமதிக்கவில்லையே என்பது தான் அவர்களின் கவலை (மோடியின் தேர்தல் பிரச்சாரத்தை இங்கே நினைவுபடுத்திப் பார்க்கலாம்).

முத்தலாக் பற்றிய தன் கருத்தை அழுத்தமாகவும் நியாயமாகவும் பதிவு செய்திருக்கிறார் ஆசிரியர். இப்பதிவுகளுக்கு நீண்ட வரலாற்றுப் பின்னணியும் இருக்கிறது. ஒரே நேரத்தில் முத்தலாக் சொல்வது இஸ்லாமியக் கோட்பாடு சார்ந்ததல்ல. ஆணாதிக்கக் கருத்தியல் சார்ந்தது என்பதையும் அஸ்கர் வலியுறுத்துகிறார் இது முத்தலாக் என்ற வரத்தைச் சாபமாக மாற்றிக்கொண்டிருக்கும் இஸ்லாமியச் சமூகத்திற்கு நன்மை செய்வதாகும்.

ஒப்பீட்டளவிலும் விமர்சன ரீதியாகவும் இஸ்லாமியக் கோட்பாடுகள் குறித்த உண்மைகளைப் பேசும் அஸ்கா, பண்பாட்டுத் தளத்தில் நின்று பேசும்போது சூஃபிஸத்தை வலியுறுத்த மொழியைத் தத்துவச் சொல்லாடல்களுக்குள் கொண்டுசெல்கிறார். மொழிபெயர்ப்பாளர்கள் திறன்பட அதனை மொழிபெயர்த்துப் பிரதி சிதைவுபடாமல் தந்திருக்கிறார்கள். ■

விரும்பும் நூல் வாங்க...
தான் பிரசுரம்
தேவர் வணிக வளாக மாடியில்
5, வ. உ. சி. சாலை
அரசு மருத்துவமனை நிறுத்தம்
மன்னார்குடி 614 001.
அலுவல் நேரம்: காலை 9 - மாலை 6
ஞாயிறு விடுமுறை
க்ரியா, காலச்சுவடுமுதல் பெங்குவின், மேக்மிலன்வரை சகல நூல்களும் ஒரே இடத்தில் அஞ்சலிலும் வாங்கலாம்.
நீங்கள் மாதம் ரூ. 100க்கு குறையாமல் புத்தகம் வாங்குபவராக இருந்தால் உங்களுக்கு . . .
11% தள்ளுபடியுடன்
விளம்பரம்



# இரவில் சலனமற்றுக் கரையும் மனிதர்கள் (கவிதைகள்)

**மைதிலி**

*வெளியீடு:*
காலச்சுவடு பதிப்பகம்
669, கே. பி. சாலை
நாகர்கோவில் 629 001.
தொலை பேசி: 91 – 4652 – 278525
பக். 64; விலை ரூ. 35/–

## மகுடேசுவரன்

காலச்சுவடு பதிப்பகத்தின் வழமையான நேர்த்தி அம்சங்களுடன் பெரும்பாலும் அச்சுப் பிழைகளே இல்லாமல் வெளியாகியிருக்கும் இத்தொகுதி அறுபத்து நான்கு பக்கங்களுடையது. கவிஞரின் முதல் தொகுப்பு என்பதை அனுமானிக்க இந்தப் பக்க வரையறையே போதிய சான்றாக இருக்கிறது. வற்றலான வடிவங்களில் வெளியாவது கவிதைத் தொகுப்பின் நிச்சய விதிகளில் ஒன்று. இலக்கியத்தின் வேறு வெளிப் பாடுகள் தலையணை நூல்களாகத் தாம் தற்சமயம் காணப்படுகின்றன.

பக்க அளவுகளை முன்னிட்டும் புத்தகத் தடிமனைக் கருத்தில் கொண்டும் கவிதை வாசகன் அமைகிறான் என்பதில் உண்மையில்லை. படிக்கப் படாமலே போய்விடக்கூடிய ஆபத்திற்காகவும் அஞ்ச வேண்டியதில்லை. கவிதை வாசகன் ஏற்கனவே பிறந்திருக்கிறான். இனியும் இனிமேலும் ஆண்டாண்டு காலமும் பிறந்து கொண்டேதான் இருப்பான். ஒரு முனியின் வைராக்யத்தோடு கவிஞர்களும் செயல்பட்டுக்கொண்டே இருக்கிறார்கள். தனக்கான வாசக விழி படும்வரை கவிதை தன் நித்திய மலர்ச்சியோடு காத்திருக்க வேண்டும். அவ்வளவு தான். அத்தகைய வைராக்ய மனத்தின் வாழும் சாட்சிகளாகத் தான் இத்தொகுப்பின் ஆசிரியரையும் இன்ன பிற சமகாலக் கவிஞர்களையும் நான் காண்கிறேன்.

இலங்கைப் புங்குடு தீவில் பிறந்த மைதிலி தொண்ணூறுகளில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியான 'திசை' பத்திரிகை வழியாகக் கவிதை எழுத ஆரம்பித்தவர். இன்று சந்திப்பவர்களை நாளை காண முடியாத நிச்சயமற்ற நிலையிலும் அவநம்பிக்கையின் இடையிலும் எழுதிவந்திருக்கிறார். தொடர்ச்சியான யுத்தமும் இடப்பெயர்ச்சியும் அவரின் பெரும்பாலான கவிதைகளைத் தின்றுவிட, எஞ்சியவற்றையே தொகுப்பாக்கியிருக்கிறார். தற்சமயம் கனடாவில் வசிக்கிறார். தமிழ்மீது துடிக்கும் இதயப் பற்றுடன் இருக்கும் தமிழர்கள் தமிழல்லாத நிலங்களில் உயிர்வாழ நேர்ந்ததும், தமிழ் நிலம்வாழ் தமிழர்கள் பிக்சர் டியூபிற்குள் தம் தலையைச் செலுத்திக்கொண்டதும் நம் காலத்தின் துயர முரண்.

ஒரு புதிய தொகுப்போடும் ஒரு புதிய கவிஞரோடும் நாம் பரிச்சயம் கொள்ளும்போது அத்தொகுப்பில் இழைந்துகொண்டிருக்கும் கவிதை மனம் எத்தகையது என்பதை முதலில் அறிய வேண்டியிருக்கும். அந்த மனத்தின் குரலை நாம் கேட்டுவிடும்போது, ஏதாவது ஓர் இழை பிடிபட்டுவிடும்போது அவர் நம் மனத்தின் கதவுகளைச் கிறீச்சிடத் திறந்து எளிதில் பிரவேசித்துவிடுகிறார். நம்முள் ஒருவராகிவிட்ட அவர் கூறுபவை நம்மை உலுக்குகின்றன. அழ வைக்கின்றன. இன்புற வைக்கின்றன. இந்த இடத்தில்தான் போலிக் கவிஞனின் இருண்ட முகம் அறியப்பட்டு அறைந்து சாத்தப்படுகிறான். அவனது உரத்த குரலால் நமக்கு எவ்விதச் சுரணையும் ஏற்படுவதில்லை.

மைதிலியின் கவிதை உள்ளத்தில் துயரம் தோய்ந்த அழுகை ஒன்று ஒலித்துக்கொண்டிருக்கிறது. நமது நிம்மதியின் மீது அது மணல் துகள் மிகுந்த அலைகளை வீசிவிடுகிறது. கவிதையில் ஏதாவது ஒரு துளி நமது கண்களை உறுத்தும் எலுமிச்சைச் சாறாக இறங்கிவிடுகிறது. இறக்கி வைக்க முடியாத தலைச் சுமையாக அவருக்கே அவர் மனது கனக்கிறது.

மைதிலியின் கவிதைப் புனைவுகள் இரண்டு இடங்களுக்குள்ளேயே மீண்டும் மீண்டும் சுழன்றாடுகின்றன. ஒன்று அனுபவங்களையும் சுய வெளிப்பாடுகளையும் சொல்கிற தன்மை ஒருமை வினைமுற்றுகளின் மைதானம். மற்றது முன்னிலைப் படுத்திக் கடிந்து கொள்கிற, உத்தரவு போடுகிற, சுட்டிக் காட்டுகிற முன்னிலை ஒருமை வினைமுற்றுகளின் வெளி. இவ்விரு இடங்களையும் மீறிச் செயல்படும் கவிதைகளும் உண்டு எனினும் அவை குறைவு. நான் மையமான


படிப்பகம்

'கிறேன், கின்றேன், ஆகின்றேன்' என்பதற்கும், நீ மையமான 'கிறாய், கின்றாய், ஆகின்றாய்' என்பதற்கும் இடையில் ஒரு விஸ்தாரமான புனைவு வெளியைக் கொண்டு இயங்கியிருக்கிறார் மைதிலி.

தொகுப்பின் முதல் கவிதையேகூடத் தற்சார்பான தெளிவான சித்திரத்தை வழங்கிவிடுகிறது. நிராதரவான மனநிலை அப்படியே தூளுரையாகவும் மாறுகிறது. தூளுரை மெல்ல நிதர்சனத்தை உணர்கிறது. நிதர்சனமும் யதார்த்தமும் துயரத்தைப் பெருக்கிவிடுகிறது. அதனால்தான் மைதிலியால்

'இன்று / அருகிருந்து அணைத்து / முலைபற்றும்
கணவன் பிடியிலும் / உயிர்ப்பில்லை'

என்று எழுத முடிகிறது.

'இப்போது எஞ்சியிருப்பது / களைப்படைந்த முகம் /
குறிதேடியலையும் கண்களால் / சலிப்படைந்துபோன /
சிறுமென் இதயம்'

தன்மையில் இவ்வாறு இயங்கும் மைதிலியின் கவிதை முன்னிலையில் சுத்தமான தொனி மாற்றம் அடைகிறது. கடுஞ்சொல் கூறும் எஜமான கதியில் உத்தரவிடுகிறது. மிகுந்த வாஞ்சையுடனும் கனிவுடனும் 'நண்பனே... புல்லாங்குழலிசைக் கேட்டிருக்கிறாயா?' என்று வினவுகிறது. யாவும் ஓர் உயர்ந்த கதியை அடைந்து கவித்துவத்தின் பூரண மென்மை சாத்தியமாகிறது.

'அது / துவாரங்களுடன் மட்டுமே /
சம்பந்தப்பட்டதல்ல / ஊதுதல் அழுத்துதல் /
எல்லாவற்றுக்கும் அப்பால் / இசைத்தல் எனபது
மிக உயிர்ப்பானது / துவாரங்கள் அடைபடும்
போதெல்லாம் / துயரமாய் வழிகிறது / என் இசை'

பெண்பால் பார்வையின் விஷேசமான வெளிப்பாடு இது.

மைதிலியிடம் பொழுது மிகவும் அதிகம் புழங்குகிறது. அதிகப் புழக்கம் புழுக்கம் ஏற்படுத்தாமல் இல்லை. இரவின் மீது தீராத மயக்கம் இவருக்கு இருக்கும் போலிருக்கிறது. ஏராளமான கவிதைகளில் இரவு வர்ணனை இடம் பெற்றிருக்கிறது. இரவையும் பகலையும் மீண்டும் மீண்டும் சொல்லிப் பார்த்துக்கொண்டே இருக்கிறார்.

தொகுப்பின் சிறந்த கவிதையாக 'அந்த நாள்' என்ற கவிதையைச் சொல்வேன். மைதிலியின் மீது நம்பிக்கை கொள்ளக் காரணமாகவும் அது இருக்கிறது. ■

அரங்கம்

# உறங்காத இரவுகளில் விழித்துக்கொண்ட நினைவுகள்

**பெ. அய்யனார்**

புரிசை, கண்ணப்பத் தம்பிரான், கூத்து என்ற பெயர்களையெல்லாம் ந. முத்துச்சாமியின் 'அன்று பூட்டிய வண்டி' நூல் மூலமாகத்தான் தெரிந்துகொண்டேன். அது பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு. அப்போதிலிருந்தே புரிசைக்குச் செல்ல வேண்டுமென்ற தவிப்பு இருந்தது. தெற்குச் சீமையிலிருந்து சென்னை நகருக்குப் பணிக்கு வந்த பின்புதான் புரிசை செல்லும் வாய்ப்புக் கிட்டியது. அதுவும் கண்ணப்பத் தம்பிரான் இறந்து ஓராண்டுக்குப் பிறகு.



புரிசை துரைசாமிக் கண்ணப்பத் தம்பிரான் பரம்பரைத் தெருக்கூத்து மன்றம் அக்டோபர் 5 மற்றும் 6ஆம் தேதிகளில் புரிசையில் கண்ணப்பத் தம்பிரான் நினைவு நாடக விழாவை நடத்தியது. விழாவில் சென்னையின் நவீன நாடகக்காரர்கள், ஓவியர்கள், நாடக ஆர்வலர்கள், பல்கலைக் கழக மாணவ மாணவியர் நிறைந்திருந்தனர். கண்ணப்பத் தம்பிரான் பற்றி வெளியுலகிற்குத் தெரிவித்தவர்களில் முக்கியமானவரான வெங்கட்சாமிநாதன் நாடக விழாவைத் துவக்கிவைத்தார். துடும்பு இசை முதல் நாட்டுப்புறப் பாடல்கள்வரை உற்சாகம் கொப்பளித்தது.

சென்னைக் கலைக்குழுவின் வீதி நாடகங்கள், மேஜிக் லாண்டானின் 'மின்னல் ரவி' நாடகம், கோவில்பட்டி ராமராவ் நிகழ்த்திய, 'வாலி மோட்சம்', நாகேஸ்வர ராவ் நிகழ்த்திய, 'அனுமன் தூது', தோற்பாவைக் கூத்துகள், கருணா பிரசாத் நடித்த 'அரவான்', தியேட்டர் நிஷாவின் 'அந்திவெளி', கூத்துப் பட்டறையின் 'படுகளம்', கலைராணியின் 'வருகலாமோ', புரிசை சுப்பிரமணியத் தம்பிரானின், 'கீசக வதம்' கூத்து, புரிசை துரைசாமிக் கண்ணப்பத் தம்பிரான் பரம்பரைத் தெருக்கூத்து மன்றம் வழங்கிய 'தட்சயாகம்' என்ற புதிய கூத்தின் அரங்கேற்றம் என இரண்டு இரவு முழுக்க நிகழச்சிகள். கார்த்திகேயன் இயக்கிய 'சமர்ப்பணம்' என்ற குறும்படம் மட்டும் அறிவிக்கப்பட்டபடி திரையிடப்படவில்லை.

கிராமத்தின் சிறிய மேடையிலும் திறந்த வெளிகளிலும் நாடகங்கள் நிகழ்த்தப்பட்டன. தோற்பாவைக் கூத்து பார்க்கப் பார்க்கத் திகட்டாததாக இருந்தது. நவீன நாடகங்கள் எல்லாமே சென்னையில் நிகழ்த்தப்பட்டவை. ஆனால் திறந்த வெளியில் நடந்த நாடகங்களைக் கிராம மக்கள் பார்ப்பதற்கு இடையூறாகச் சென்னையிலிருந்து வந்த பார்வையாளர்கள் முன்பகுதியில் அமர்ந்துகொண்டார்கள். புகைப்படக்காரர்களும், வீடியோக்காரர்களும் பார்வையாளர்களை ஓயாமல் துன்புறுத்திக்கொண்டே இருந்தார்கள்.


வேலுசரவணன் பள்ளிக் குழந்தைகளை வைத்து நிகழ்த்திய நாடகமும் அவருடைய 'கடல் பூதம்' என்ற நாடகமும் பார்வையாளர்களை இறுக்கத்திலிருந்து மீட்டன.

கண்ணப்பத் தம்பிரான் பற்றிய தொகுப்பு நூல் ஒன்று இரண்டாவது நாள் வெளியிடப்பட்டது. (தொகுப்பாசிரியர்: வெளி ரங்கராஜன்) அதில் பேராசிரியர் செ. இராமானுஜம், ந. முத்துசாமி, வெங்கட் சாமிநாதன், கே. ஏ. குணசேகரன், வெளி ரங்கராஜன், சுப்பிரமணியத் தம்பிரான் ஆகியோர் கலந்துகொண்டனர்.

'படுகளம்' நாடகத்தில் திருதராஷ்டிரன் கண்கட்டை அவிழ்ப்பதுபோல் ஒரு காட்சி இடம்பெற்றபோது, பார்வையாளர் ஒருவர் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார். அமெரிக்காவில் உள்ள கிறித்தவர்களிடம் பணம் பெறும் நோக்கத்தில் இப்படி மகாபாரதக் கதையைத் திருத்துகிறார்கள் என்று குற்றம் சாட்டினார். அதைக் கேட்ட ந. முத்துசாமி கடுங்கோபம்கொண்டார், 'யாருயா அது, பாரதக் கதையைச் சொல்லுயா பார்க்கலாம்' என்று கேட்டவரைப் பார்த்துச் சொன்னார். அதையடுத்து, சிறிய பதற்றம் ஒன்று உருவாகிச் சில நிமிடங்களில் தணிந்துபோயிற்று.


இரண்டு நாட்களும் நகரவாசிகள் தங்கள் கிராமத்து நினைவுகளையும் தொன்மங்கள் குறித்த மனப்பதிவுகளையும் மீட்டுக்கொள்வதை அவர்களது பேச்சிலிருந்து உணர முடிந்தது. கிராமத்தின் வயல் பரப்புகளில் உழவு நடைபெற்றுக்கொண்டிருந்தது. கொஞ்சம் சாராய வாசனையுடன் ஒரு கிராமத்துத் திருவிழாபோல நடந்து முடிந்தது கண்ணப்பத் தம்பிரானின் முதலாண்டு நினைவு விழா. ■

# தேவதச்சன் கவிதைகள்



அதிகாலையில்
பஸ்களில் பெண்கள் தலையில் ஆட்டோக்களில்
பூக்கள் இரண்டாவதுமுறை மலர்கின்றன. அந்தத்
தோட்டத்திற்கு வெளியே நின்று கடவுள் பார்த்துக்கொண்டிருக்கிறார்
அவனுக்கு மறுக்கப்பட்ட மலர்கள் அவை
அவைகள்
எலும்புச் சிதறல் மேலும்
சடலத்தின் மேலும்
மறுமலர்ச்சி அடைந்து
மௌனத்தை இழக்கின்றன
ஆனால்
இந்த மலர்களும் இறக்கின்றன
இறந்த பிறகு,
அவைகள் மிருகங்கள்
மீண்டும் மீண்டும் தோற்கிற யுத்தத்தில், அவைகள்
ஊளையிடுகின்றன.
மூன்றாவது முறை மலர்கின்றன

❑




எனக்குத் தெரியாது
கரையில் மோதி வடியும் கடல்நீர் போல்
மாலைநேரம் வடிந்துவிடும் என்று
எனக்குத் தெரியாது
அடுப்படி எவர்சில்வர் தட்டுகளையும் அம்மாவையும்
மாடிப்படிகளையும் உயரமான வீடுகளையும்
தலைநரைக்கும் சிலைகளையும் என் காக்கிக்கலர்
அரைடவுசரையும்
அது அடித்துக்கொண்டு போகும் என்று
எனக்குத் தெரியாது போய்விட்டது
வரும் நீரிலும்
வடியும் நீரிலும்
எப்போதும் இருக்கும் நிலவைப் பார்த்து
தப்பாக நினைத்துக்கொண்டிருந்தேன்.

❑

www.padippakam.com






## இன்னொரு பகல்

தன் கழுத்தைவிட உயரமான சைக்கிளைப் பிடித்தபடி
லாகவமாய் நிற்கிறாள் சிறுமி
கேரியரில் அவள் புத்தகப்பை விழுந்துவிடுவது போல்
இருக்கிறது
மூன்றாவது பீரியட் டெஸ்ட்க்கு அவள் உதடுகள்
சூத்திரங்களை முணுமுணுத்துக்கொண்டிருந்தன
அவள்
கண்ணுக்கு அடங்காமல்
கனரக வாகனங்கள் அவளைக்
கடந்து சென்றன
வேகமாய்த் தாண்டிச் செல்லும் பஸ்ஸில் —
இன்னொரு பகலில் — போய்க்
கொண்டிருக்கும் குண்டுப்பெண்
சிறுமியின் ஷூ லேஸ்
அவிழ்ந்திருப்பதைப் பார்த்தாள்
சொல்லவிரும்பி கை அசைத்தாள்
சிறுமிக்குக் கொஞ்சம் புரிந்தது
கொஞ்சம் புரியவில்லை

❑



தலையில்லாத
ஒருபெண் கோயில் வாசலில்
நின்று கொண்டிருந்தாள்
உலகத்துக்கும் கல்லுக்கும் நடுவே
கையில் ஒரு தாமரை மலரை
வைத்திருந்தாள்
கல்தூணிலிருந்து அவள் வெளிவரும் வேளை
குறிபார்த்து அவள் தலையைக் கொய்து
விட்டார்கள்.
முதன்முதலாகக் கணவனைக் கண்டதும்
அவளது மூன்றாவது முலை மறைந்தது
கணவன் இறந்ததும் இரண்டாவது முலை கருகியது
பரதேசி ஒருவன் சொன்னான்:
அவள் தலைமேலே ஒரு பல்பை மாட்டினார்கள்
பிறகு அதைத் திருடிக்கொண்டு போய்விட்டார்கள்
மீண்டும் மூடிக்கொள்ளும் முட்டை ஒன்றைக் கடைசியாய்
கையில் வைத்திருந்தாள். அதையும் காணோம்
அவன் என்னஎன்னவோ சொல்லும் போதும்
சொல்லாத போதும் — என்
கண்களின் ஓரத்தில் தெரிகிறது
அவள் கையிலிருந்த
தாமரை அசைந்துகொண்டிருப்பது.

❑

www.padippakam.com





நிசப்தம் நிசப்தம்
அவ்வளவு நிசப்தம்
காதருகில் முதல் நரை

●


அச்சிறு மின்னல் தழலில்
மலர்ந்து விரிகிறது
லோயா மலர் ஒன்று
அம்மின்னல் ஒளியில்
தம்மைத்தானே கீறிக்கொள்கின்றன
மண்ணுள்ளிருக்கும் சீனிக்
கிழங்குகள்.
காளான்கள் துணைக் காளான்களோடு
வெளியேறுகின்றன.

●

நிசப்தம்
அவ்வளவு நிசப்தம்
ஒவ்வொரு சிறகசைவிலும்
வெவ்வேறு பறவையாக மாறும்
க்யெக் பறவை —
மலரை உரசும் போது.

❑

டீக்கடை பெஞ்சில் அமர்ந்திருந்தேன்
அருகில் இருந்த புத்தகத்தில் 33வது பக்கத்தில்
அக்னிக்குஞ்சொன்றைப் பார்த்துக்கொண்டிருந்தான் ஒருவன். அதை
ஆங்கோர் காட்டில் பொந்தில் வைக்க நினைத்தான்.
விரல்களால் குஞ்சை மெல்லத் தொட்டான்
வெந்து தணிந்தான்
முறியும் அவன் எலும்புகள் பாடின
தத்தரிகிட தித்தோம் தத்தரிகிட தித்தோம்
பாட்டு நின்றது
குஞ்சு பறந்துகொண்டிருக்கிறது
தேநீரில் மிதந்துகொண்டிருந்த
என் உதடுகளில் வந்து
தட்டி நின்றது அந்த எலும்பு.
பாடத் தெரிந்த எலும்பு.




❑



படிப்பகம்


இரண்டாவது தோசையும் பிய்ந்து விட்டது.
இருள்காலையில் டியூசன் போன மகள், இப்போ
வந்துவிடுவாள்.
அடுப்படியில், வடக்குத் திசையிலிருந்து
குயில் ஒன்று கூவுவது,
சிலதடவைகளாகக்
கேட்டுக் கொண்டிருக்கிறது.
வாஷிங் மெஷினில் தண்ணீரைத் திறந்து விட்டாள்.
அடுப்பை 'சிம்'மில் வைத்தாள்
அவள் நெற்றிப் பொட்டில் பரபரப்பின்
சிறகுகள் அசையத் தொடங்கின
தலைவாரும் சீப்பையும், எண்ணெயையும்
எடுக்கப் போனாள்.
வீட்டில் யாரும் இல்லை
நறுக்கி வைத்த காய்கறி வாசனையோடு, கலந்தது
குயிலோசையின் நறுமணம்.
திரைச்சீலையைக் கடக்கையில்
அவள் உதடுகள்
க்ஊஉஉஊஉஉ ஊஉஉ
என்று
தானே கூவுகின்றன.

❑



மௌனமாகப் பறந்து வருகிறது
இலவம் விதை.
மௌனமாகப் பறந்து செல்கின்றன
அதன் வெண்ணிற இழைகள்.
அவ் வெண்ணிற இழைகள்
ஒரு சிறு இரவை நடுவில்
தூக்கிக்கொண்டு திரிகின்றன
என்னைக் குத்தி நிற்கும் அம்புகளை அசைத்தபடி
பறந்து அதைப்
பற்ற விழைகிறேன்
சைரன்கள் ஒலித்துக்கொண்டிருக்கும்
என் நீள இரவை
அச் சின்ன இரவில்
தொலைத்து விட முடியுமா என்று.
பிறகு அது போகட்டும் என்று
விட்டு விட்டேன்
மூடிய பிறகும்
திறந்து கிடக்கும் வீடுகளில்
அவ்
வெண்ணிற வெளிச்சம்
மிதந்துகொண்டிருக்கட்டும் என்று

❑



ஓவியங்கள்: சந்தோஷ்

www.padippakam.com




பத்தி

ஒரு புத்தகம் – ஒரு பார்வை

# சாத்தானின் ஐயர்

அனந்த கிருஷ்ணன்



கோபப்படக் கூடாது என்று நான் உறுதி எடுத்துக் கொண்டிருக்கிறேன். இயன்றவரை கோபத்தை அடக்க முயற்சியும் செய்துகொண்டிருக்கிறேன். ஆனால் கோபம் அதிகமாக ஏன் வரவில்லை என எண்ணும் தருணங்கள் மூன்று. ஒன்று தொலைக்காட்சியில் நீளத் திரிந்து உழலும் தமிழ்த் தொடர்களைக்காண நேரும்போது. கடவுள் நினைத்தாலொழிய முடிக்க மாட்டோம் என்னும் பிடிவாதத்தோடு கலாச்சாரப் பாழ்வெளிகளைத் தொடர்ந்து உருவாக்கிக்கொண்டு செல்லும் இந்தத் தொடர்கள் என்னுடைய ரத்த அழுத்தத்தை அபாய அலகுகளுக்கு அப்பால் கொண்டு செல்லத் தவறுவதில்லை.

இரண்டாம் தருணம், பழந்தமிழ் இலக்கி யத்தில் அறிவியற் கூற்றுகள் ஆங்காங்கே பதிக்கப்பட்டிருக் கின்றன எனத் தமிழ் 'அறிஞர்கள்' பேசுவதைக் கேட்கும் போது அல்லது அப்படிப்பட்ட பேச்சுகளின் பதிவுகளைப் படிக்கும் போது. 'கிழிந்தது ககன முட்டை கீழும் மேலும்' என்ற கம்பனின் கூற்று ஹாம்பிளின் பிரபஞ்ச விரிவாக்கக் (expanding universe) கொள்கையை அன்றே கம்பன் சொன்னதைக் குறிக்கும் என்று ஒருவர் கூறியதாக ஒரு தமிழ் இதழில் சமீபத்தில் படித்தேன். ஹாம்பிள் என்பவர் யாரென்று எனக்குத் தெரியவில்லை. ஹாயிலாக இருக் கலாம். ஆனால் பிரபஞ்சம் எவ்வாறு பிறந்தது என்பது பற்றிய ஆராய்ச்சியில் தங்கள் வாழ் நாளைச் செலவிட்ட, செலவிட்டுக் கொண்டுள்ள அறிஞர் களின் உழைப்பை எள்ளல் செய்யும் கூற்று இது. கம்பனையும் எள்ளல் செய்வது. மூன்றாம் தருணம், தொலைக் காட்சியில் தங்களது மருத்துவத் 'திறமை'களை விளம்பரம் செய்துகொள்ளும் போலிகளின் நிகழ்ச் சியைக் காணும்போது. நாம் நமது மொழி, கலாச்சாரம், மதம் மீது கொண்டிருக்கும் அதே மதிப்பையும் மரியாதையையும் இவற்றைச் சார்ந்து உருவாக்கப்பட்டதாக நம்பப்படும் மருத்துவ முறைகள் மீதும் வைத்தி ருப்போம் என்னும் அசையாத நம்பிக்கையுடன் இவர்கள் இயங்கு கிறார்கள். இவர்கள் நம்பிக்கை வீண் போகவில்லை என்பதற்கு இவர்களது நிகழ்ச்சிகளில் வரும் பலியாடுகளே சாட்சி.

தமிழ்த் தொலைக்காட்சித் தொடர்கள் தமிழனின் தனிச் சொத்து. பட்டிமன்றங்கள் மாதிரி. இதற்கு மேல் கீழே போக முடியாது என்று நாம் எண்ணிக் கொண்டிருக்கும் போது 'இல்லை இதோ பார்' என்று பாதாளங்களின் ஆழங்களைக் குடைந்து கொண்டிருக் கும் இத் தொடர்களுக்கு நிகர் இவையே. கை சோதிடம், நாடி சோதிடம், எண் சோதிடம், பெயர் சோதிடம், கல் சோதிடம், கிளி சோதிடம், வாஸ்து எனப் பல ஏமாற்று வழிகளில் விரும்பிச் செல்பவர்கள் அதிகமாக இருப்பதும் தமிழ் நாட்டில்தான்.

ஆனால் நம்மில் சிலர் கம்பனையும் வள்ளுவனை யும் நோபல் பரிசு பெறத்தகுந்த விஞ்ஞானிகள், அத்துவைதக் கொள்கைதான் குவாண்டம் இயற்பிய லின் வித்து எனக் கூறிக்கொண்டிருப்பது போல மற்றைய நாடுகளிலும் பலர் சொல்லிக்கொண்டிருக் கிறார்கள். பிரமிடுகள் சொல்லொண்ணா ரகசியங் களை அடக்கி வைத்திருக்கின்றன, கிறிஸ்து கடைசி யாக அருந்திய கோப்பையில் தண்ணீர் குடித்தால் மரணத்தை வெல்லலாம், நாஸ்ட்ரடாமஸ் உலகில் நடக்க இருப்பதையெல்லாம் தனது புத்தகத்தில் சொல்லிவிட்டான் என்பதையெல்லாம் நம்புபவர் களின் எண்ணிக்கை ஒன்றும் குறைவு அல்ல. இதே போன்று மாற்று மருத்துவங்களை நம்புபவர்களின்




படிப்பகம்

www.padippakam.com

எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டே வருகிறது. இவர்கள் அனைவருக்கும் பதில் சொல்லும் விதமாக அமைந்திருப்பது இப் பத்தியின் புத்தகம்.

"நான் நீங்கள் அரிஸ்டாடிலை விட அறிவுமிக்கவன் என்று கூற வில்லை. மாறாக, அரிஸ்டாடில் போல அறிவு படைத்தவன் இது வரை உலகில் பிறக்கவில்லை என்று நான் நினைக்கிறேன். ஆனால் அரிஸ்டாடில் இன்றைய அறிவியல் வகுப்பறை ஒன்றில் நுழைந்தால் அங்குக் கற்பிக்கப்படுவது பற்றி அவனுக்கு ஒன்றும் புரியாது. காரணம் பயன்படுத்தப்படும் கலைச் சொற்கள் அல்ல. அறிவியல் வளர்ச்சி யின் திரள் விளைவுதான் (cumulative effect)."




**அறிவியல் சந்தேகிக்கச் சொல்கிறது; சான்றுகள் கேட்கிறது. எனவே அறிவியலும் மதமும் ஒருங்கிணைந்து செயல்பட வாய்ப்பே இல்லை என்கிறார் டாக்கின்ஸ்.**

இது ரிச்சர்ட் டாக்கின்ஸ் கூறியது. நைரோபியில் பிறந்த டாக்கின்ஸ் ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் விலங்கியல் துறையில் பணியாற்றி யவர். அறிவியல் பற்றி – குறிப்பாக மரபணுக்கள் பற்றி – புகழ்பெற்ற பல நூல்களை எழுதியிருக்கும் இவரது சமீபத்திய புத்தகத்தின் பெயர் 'A Devil's Chaplain'. இது இவரது கட்டுரைகள் சிலவற்றின் தொகுப்பு.

இப்புத்தகத்தின் தலைப்பு டார்வின் தனது நண்ப ருக்கு 1856இல் எழுதிய கடிதத்திலிருந்து எடுக்கப் பட்டது.

'What a book a devil's chaplain might write on the clumsy, wasteful, blundering low and horridly cruel works of nature.' இது இயற்கைத் தேர்வின் (natural selection) வழிமுறைகளைப் பற்றி அவர் சொல்வது. ஆண்டவன் கருணை மிக்கவன் என்னும் கூற்றைக் கேள்விக்கு உள்ளாக்குவது. இந்தப் புத்தகத்தின் பல கட்டு ரைகள் டார்வினைச் சார்ந்தவை. டாக்கின்ஸுக்கும் மற்றொரு புகழ் பெற்ற அறிஞரான மறைந்த ஸ்டீபன் ஜே கௌல்டுக்கும் நடந்த டார்வினின் பரிணாம தத்துவம் பற்றிய விவாதம் பற்றியவை. மற்ற கட்டுரைகள் மனிதன் உலகையும் மதங்களையும் நம்பிக்கைகளையும் நோக்கும் பார்வைகளில் அறிவியல் ஏற்படுத்தியிருக்கும் மாற்றங் களைப் பற்றிப் பேசுபவை. நமது பத்தி இந்தக் கட்டுரை களைப் பற்றியது.

'எது உண்மை?' என்ற கட்டுரையில் அவர் அறிவியல் நிறுவு உண்மை என்பது மற்றைய 'உண்மை' களான பெண்ணிய உண்மை, இந்து உண்மை, இஸ்லாமிய உண்மை போன்ற பல உண்மைகளில் ஒன்று என்று வாதிடுவது எவ்வளவு தவறானது என்பதை நிறுவுகிறார். அறிவியல் அடிப் படையில் கண்டுபிடிக்கப்பட்ட பொருள்களைப் பயன்படுத்திக் கொண்டே மற்ற உண்மைகளைப் உயர்த்திப்பிடிப் பவர்களின் இரட்டை நிலையை அவர் இவ்வாறு கூறுகிறார்: Show me a cultural relativist at 3,000 feet I shall show you a hypocrite. If you are flying to an international congress, . . . the reason you will probably get there is that a lot of western scientifically trained engineers have got the sums right.

நாம் இதுவரை அறிந்தது அதிகம் இல்லை, நமக்கு இன்று தெரிந்ததை விட இயற்கையின் உண்மைகள் பல எதிர்காலத்தில் பொதிந்திருக்கின்றன என்பதையே இன்றைய இயற்பியலும் அறிவுறுத்துகிறது என்று சொல்லும் இவர், இதைக் கொண்டு போலிகள் உயர்த்திப் பிடிப்பவை உண்மைகள் என்று வாதிடுவது அறிவுடைமை யாகாது என்கிறார்.

'துகிலுரியப்பட்ட பின்நவீனத் துவம்' – இந்தக் கட்டுரை நமது இலக்கியவாதிகள் கட்டாயம் படிக்க வேண்டியது. பல ஆழ்ந்த கருத்து களைச் சொல்வதற்குத் தனிமொழி தேவை, அந்த மொழியை அனை வரும் புரிந்துகொள்வது கடினம் என்பது சரியே எனக் கூறும் டாக்கின்ஸ் இதனாலேயே சொல்லு வதற்குப் புதிதாக ஒன்றும் இல்லாத தால் சொல்லவந்ததைப் புரியாத வார்த்தைகளில் பொதிந்துவைப்பது நேர்மையாகாது எனவும் கூறுகிறார். பல பின்நவீனத்துவவாதிகள் செய்வது இதுதான். நமது தமிழறிஞர்கள் பழந் தமிழுக்கும் அறிவியலுக்கும் இராட்சத மணம் செய்து வைத் தால் பிறக்கும் அபத்தங்களைப் போல, இவர்கள் அறிவியல் கூற்றுகளைப் பின்நவீனத்துவப் பார்வை யில் நோக்கினால் பிறக்கும் அபத்தங்களில் சில வற்றை டாக்கின்ஸ் பட்டியல் இடுகிறார். உதாரண மாக இது: Irigary argues that $E = mc^2$ is a 'sexed' equation. Why? Because it privileges the speed of light over other speeds that are vitally necessary to us.

*'பின் நவீனத்துவ உருவாக்கி'* (Post Modernism Generator) என்னும் தலைப்பைக் கொண்ட ஒரு வலை முகவரி – www.elsewhere.org/cgi-bin/postmodern. ந்த்ரூ புல்ஹாக் என்பவரால் நிரலாக்கம் செய்யப் பட்டது. இங்குச் சென்றால் உங்களுக்குத் தேவை யான பின்நவீனத்துவக் கட்டுரையை அது தற்போக்கு முறையில் (random) ஆக்கிக் கொடுக்கும். ஆசிரியருக்கு அது அறுநூறு வார்த்தைகளைக் கொண்ட கட்டு ரையை அது ஆக்கிக் கொடுத்தது. கட்டுரையின் பெயர் – Capitalist theory and sub-textual paradigm of context. எழுதியவர்கள் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த இரு பேராசிரியர்கள். இல்லாத பேராசிரியர்கள். டாக்கின்ஸ் கூறுகிறார்:

Poetic justice there, for it was Cambridge who saw fit to give Jacques Derrida a honorary degree.

தமிழர்கள் சோதிட முறைகளின் மீது கொண்டுள்ள மாறாக் காதலைப் பற்றி முன்னே குறிப்பிட்டேன். இதற்குக் காரணங்கள் என்ன? கணினியைப் பிடித்து ஆட்டும் நச்சு நிரல்கள் (viruses) போன்று நமது அறிவைப் பிடித்து ஆட்டும் நச்சு நிரல்களும் உள்ளன.


படிப்பகம்

www.padippakam.com



'To describe religion as mind viruses is sometimes described as contemptuous and hostile. It is both. I am often asked why I am opposed to organized religion. My first response is that I am not exactly friendly towards disorganized religion either. As a lover of truth, I am suspicious of strongly held beliefs that are unsubstantiated by evidence.'

மரபணுக்கள்போல மனித அறிவுக்குள் கலாச் சாரம், மதம் சார்ந்த தனிமங்கள் இயங்குகின்றன என்கிறார் டாக்கின்ஸ். அவற்றை 'மீம்' (meme) என்று குறிப்பிடுகிறார். அவை மரபணுக்கள்போல, கணினி யின் நச்சு நிரல்கள் போல, தம்மையே இரட்டைப் படுத்திக் கொண்டு விரைவாகப் பரவும் தன்மை யுடையன. இவையே மனிதனை நம்பக் கூடாத பல வற்றை நம்பச் செய்கின்றன. மீம் என்பது இன்னும் புனைகொள்கை (hypothesis) நிலையிலேயே இருக்கி றது என்று கூறும் ஆசிரியர் மனித அறிவின் வளர்ச்சி பற்றிய ஆய்வுகளுக்கு இந்தக் கொள்கை ஒரு முக்கியக் கருவியாக விளங்கலாம் என்கிறார்.

'பாம்பு எண்ணெய்' என்ற கட்டுரை ஜான் டயமண்ட் என்பவர் எழுதிய, அவர் இறப்பிற்குப் பின் வெளியிடப்பட்ட புத்தகத்தைப் பற்றியது. மாற்று மருத்துவம் என்னும் பெயரின் உலவும் பித்தலாட்டங் களைக் கடுமையாக விமரிசிப்பது. ஜான் டயமண்ட் மாற்று மருந்துகளைத் தேடி அலைந்து ஏமாறிய அநுபவங்களைத் தனது நூலில் குறிப்பிடுகிறார். மருத்துவங்களில் இரண்டு வகைகள் தான் உண்டு. ஒன்று வியாதியைப் பெரும்பாலும் குணப்படுத்தக் கூடிய மருத்துவம். மற்றது பெரும் பாலும் குணப்படுத்த முடியாத மருத்துவம். மரணத்தின் விளிம்பில் நின்று கொண்டிருப்பவர்களின் மனவுளைச்சலை, திட மின்மையை, பயன்படுத்திப் பணம் சேர்க்கும் வேலை யையே பல மாற்று மருத்துவ முறைகள் செய்து கொண்டிருக்கின்றன என்கிறார் ஆசிரியர்.

அலோபதி மருந்துகள் எவ்வாறு அறிமுகப் படுத்தப்படுகின்றன? குறைந்தது ஆயிரம் பிணியா ளர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அவர்கள் தன்னிச் சையாகப் பரிசோதனைக்குத் தங்களை ஆட்படுத்திக் கொள்ள அனுமதி அளிக்கிறார்கள். அவர்களில் பாதிப் பேருக்கு, அறிமுகப்படுத்த வேண்டிய மருந்தும், மீதிப் பேருக்கு வெறும் சக்கரை சேர்ந்த மருந்தும் (placebo) கொடுக்கப்படுகின்றது. தனக்கு எந்த மருந்து கொடுக்கப் படுகிறது என்பது மருந்து உட்கொள்பவருக்குத் தெரியாது. குறிப்பிட்ட மருந்தளவு உட்கொண்டதும் பிணியாளர்கள் சோதனை செய்யப்பட்டு மருந்தின் விளைவு புள்ளியியல் முறையில் நிர்ணயிக்கப்படுகிறது. மருந்தால் பயன் உள்ளது என்பதை அறுதியிட்ட பிறகே அது சந்தைக்கு வருகிறது. இந்த முறையை மாற்று மருத்துவங்கள் பின்பற்றுவதில்லை. வாய்மொழி மூலமாகவும் மனிதனின் அடிமனப் பயங்களைச் சுரண்டியே இவை வளருகின்றன.

ஹோமியோபதியின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்று முக்கிய மருந்தின் செறிவு ஒரு கலவையில் குறையக் குறைய அதன் குணப்படுத்தும் வீரியம் அதிகரிக்கிறது என்பது. இந்தக் கொள்கையைச் சாடும் டாக்கின்ஸ் இது வேதியியலுக்கு எதிரானது என்கிறார். ஹோமியோபதி மருத்துவர்கள் இந்தக் கொள்கை வேதியியலுக்குப் புறம்பாக இருக்கலாம். ஆனால் இயற்பியலின் - இதுவரை கண்டுபிடிக்கப் படாத - கொள்கை ஒன்றின் மூலமாக மருந்தின் வீரியம் பிணியைக் குணப்படுத்த உதவுகிறது என்கிறார்கள். இந்த வாதத்தின் வலுவின்மையைச் சுட்டிக்காட்டும் டாக்கின்ஸ், இந்தக் கொள்கையைக் கண்டுபிடிக்கும் விஞ்ஞானிக்கு மருத்துவத்தில் மட்டும் அல்ல, இயற்பியலிலும் நோபல் பரிசு உறுதி என்கிறார்.

'பேரொருங்கு' (The great convergence) என்னும் கட்டுரை மதமும் அறிவியலும் இணைந்து இயங்க முடியுமா என்பதைப் பற்றியது. அறிவியல் 'எப்படி' (how) எனும் கேள்விக்குப் பதில் அளிக்கலாம், ஆனால் (why) எனும் கேள்விக்கு என்றைக்கும் பதில் அளிக்க முடியாது என்னும் கூற்றுக்கு ஆசிரியர் மதமும் ஏன் என்ற கேள்விக்குச் சரியாகப் பதில் தரவில்லை என்கிறார். மாறாக, கேள்வி கேட்காமல் நம்பத்தான் வேண்டும் என்று மதம் வற்புறுத்துகிறது. உதாரண மாக, 1950ஆம் ஆண்டு போப்பாண்டவர் தனது நம்பிக்கை ஆணை ஒன்றின் மூலம் (article of faith) கன்னி மேரியின் உடல் சுவர்க்கம் சென்று அதனுடைய ஆத்மாவுடன் சேர்ந்துகொண்டது என்று அறிவித்தார். இதை நம்பா மல் ரோமன் கத்தோலிக்கராக இருப்பது சாத்தியம் இல்லை. அறிவியல் எதையும் சந்தேகிக்கச் சொல்கிறது; எதற்கும் சான்றுகள் கேட்கிறது. எனவே அறிவியலும் மதமும் ஒருங்கிணைந்து செயல்பட வாய்ப்பே இல்லை என்கிறார் டாக்கின்ஸ்.

இந்தப் புத்தகத்தின் கடைசிக் கட்டுரை டாக்கின்ஸ் தன் மகளுக்கு - அவளுக்குப் பத்து வயது ஆனபோது - எழுதிய கடிதம். அஞ்சலில் சேர்க்கபடாத கடிதம். தமிழில் மொழிபெயர்க்கப்பட வேண்டிய கடிதம்.

நாம் எதையும் நம்புவதற்கு மூன்று காரணங்கள் இருக்கின்றன. முதல் காரணம் நமது மரபு. இரண்டாவது நம்மீது செலுத்தப்படும் அதிகாரம். மூன்றாவது தன்னுணர்வு - revelation - அதாவது கடவுள் வழிபாட்டின் மூலமாகவோ அல்லது கனவி லேயோ வந்து நம்பு என்று சொல்வது. இம்மூன்று காரணங்களும் நம்புவதற்குப் போதாதவை எனக் கூறும் டாக்கின்ஸ், ஒரு குழந்தை எதையும் நம்புவதற் குச் சான்றுகள் கேட்க வேண்டும், கொடுத்த சான்றுகள் வலுவானதாக இருந்தால் ஒழிய நம்புவதற்கு மிகவும் யோசிக்க வேண்டும் என்கிறார்.

இந்தப் புத்தகத்தைப் பற்றிப் பல விமரிசனங்கள் வந்திருக்கிருக்கின்றன. அவற்றில் எனக்குப் பிடித்தது இது:

நான் படித்த போதனைப் புத்தகங்களில் சிறந்த போதனைப் புத்தகம் இது. எங்களுக்குப் போதித்துக் கொண்டே இருங்கள். ரெவெரண்ட் டாக்கின்ஸ் அவர்களே, உங்கள்மேல் எறியப்படுபவற்றைப் பொருட் படுத்தாதீர்கள்.

விமரிசனம் எழுதியவரின் பெயர் ரிச்சர்ட் ஹாலவே. எடின்பரோ நகரத்தின் பிஷப்.

*A Devil's Chaplain*, Richard Dawkins, Phoenix, UK, 2004.

●



படிப்பகம்

# கேள்விகள் விசாரணைகள்

பா. வெங்கடேசன்




05.09.2004 அன்று சிவகாசி பாரதி இலக்கியச் சங்கத்தின் சார்பாகக் கவிஞர் திலகபாமாவால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செப்டம்பர் மாத இலக்கியச் சந்திப்பில் சிறுபத்திரிகைப் படைப்பாளிகள், கல்வித்துறை சார்ந்தவர்கள், வாசகர்கள் என்று சுமார் முப்பது பேர் கலந்து கொண்டார்கள். காலை 11 மணி யளவில் துவங்கிய சந்திப்பிற்குக் கவிஞர் பிரம்மராஜன் சிறப்புரையாளராக அழைக்கப்பட்டிருந்தார்.

வரவேற்புரையுடன் சமீபத்திய இலக்கியப் போக்குகள் பற்றிய தனது மனப் பதிவையும் சொல்லி திலகபாமா கூட்டத்தைத் துவக்கிவைத்தார். இலக்கியம் வலியுறுத்தும் மனிதம் மற்றும் சமூகப் பொறுப்புணர்வு முதலானவை படைப்பாளிகளிடமிருந்து சமீப காலங்களில் விலகிச் சென்றுகொண்டிருக்கிறதென்றும், எழுதப்படுகின்ற எழுத்தை விட வாழுகின்ற வாழ்க்கையைத்தான் மிகச் சிறந்த கவிதையாகத்தான் நினைப்பதாகவும் அவர் கூறினார். பேசப்படாத விஷயங்கள், சொல்லப் படாத மொழி, பரிசோதனைக் குட்படுத் தப்படாத உத்திகள் என்னும் போலியான தீர்மானங்களோடு போலியான இலக்கியத்தை இன்று உற்பத்திப் பொருளாய் இலக்கியம் செய்பவர்கள் ஆதிக்க மனோபாவத்துடன் நிகழ்த்தி வருகின்றனர் என்பதும், நவீனவாதி யல்ல என்று நிராகரித்து விடக் கூடு மென்கிற பயத்திலேயே ஆயிரம் கேள்விகளுக்குட்படுத்த வேண்டிய படைப்பை மற்றவர்களுடன் சேர்ந்து சிலாகிக்கும் நிர்பந்தத்தில் நாமும் இருக்கிறோம் என்பதும் அவருடைய் அங்கலாய்ப்பாய் இருந்தன.

எழுபதுகளிலிருந்து துவங்கிய தனது இலக்கியப் பயணத்தைப் பற்றிய நினை வுகளையும் *மீட்சி* இதழ் மீதான மன மற்றும் ஆவண ரீதியிலான பதிவுகளையும் பிரம்மராஜன் பகிர்ந்து கொண்டார். *மீட்சி* எவ்விதமான அரசியலுமில்லாமல் பத்தாண்டுகளில் 35 இதழ்கள் வெளி வந்திருக்கிறது, எனக்குள்ளாக நான் கவிஞன் மட்டு மல்ல, ஒரு சாஸ்திரிய இசை ரசிகன், மொழிபெயர்ப்பாளன், புதிய விஷயங்களைத் தமிழுக்கு அறிமுகப்படுத்த வேண்டு மென்கிற அக்கறையுள்ளவன், நவீனத்துவம் பின்நவீனத்துவம் என்பதெல்லாம் தமிழில் அதிகம் புரிந்து கொள்ளப்படாமலேயே புழங்குவதைப் பார்க்க வருத்தமாக இருக்கிறது. மானரிசம் என்கிற அர்த்தத்தைத்தரக் கூடிய Body language என்கிற, அறுபது களில் சுய முன்னேற்ற நூல்களில் பிரபலமாகப் புழங்கிய வார்த்தை இன்றைக்கு இலக்கியத்தில் ஒரு technical useஆகப் பயன் படுத்தப் படுகிறது. பின்நவீனத்துவத்தை நாம் எப்படிப் புரிந்துகொண்டிருக்கிறோ மென்றால் பிரதியை வெறுமனே கலைத்துப் போட்டு எழுதுவதென்று. Discipline இல்லாமல் எழுதுவது எழுதுகிறவனுக்கு வசதியென்று. ஆனால் discipline பின்நவீனத் துவத்தில்தான் கூடுதலாகத் தேவைப் படுகிறது. உடல் ஆரோக்கியம் தேவையில்லையென்று சொல்கிற படைப் பாளிகள் இருக்கிறார்கள். ஆனால் discipline ரொம்ப முக்கியம். இலக்கியம் என்பது ஒரு வார்த்தை வஸ்து. ஒரு பொருளைப் பற்றிச் சொல்வதைவிடப் பொருளுக்குள்ளேயே வார்த்தையைப் போட்டுவிட முடியுமானால் அவர்தான் பெரிய கவிஞர். இதைச் செய்தவர் தமிழில் அதிகம் மொழிபெயர்க்கப்படாத ரெய்னர் மரியா ரில்கே.

பிரம்மராஜனைத் தொடர்ந்து அப்பாஸ், தான் எழுதி வந்திருந்த சிறிய கட்டுரையை அமைதியாக வாசித்தார். (என்ன அராஜகம்!) கவிதை ஒரு சலசலக்கும் மரம், அது எந்த திசையையும் சுட்டிக் காட்டுவதில்லை என்று துவங்கிய அக்கட்டுரை கவிதை எப்படி இருக்கும் எப்படி உருவாகிறது என்பதை விடவும் ஒரு நவீனப் பிரக்ஞையை எப்படி வளர்த்தெடுப்பது என்பது முக்கியமான விஷயமாக இருக்கிறது எனத் தொடர்ந்தது. வணிகமொழி விளம்பர உத்திகளுக்காக நவீன மொழிப் பரப்பையே அழித்துக் கொண்டிருக்கிறதென்று கவலைப்பட்டது. நவீன கவிதை வாசிப்புத்தளத்தில் எதைச் சொல்கிறது அல்லது எதையாவது சொல்கிறதா என்கிற நிலையிலிருந்து முன்னேறி, மொழித் தளத்தில் உருவாகும் இயங்கியல் போக்கிலேயே ஓர் அனுபவம் விரிந்த தளத்தைச் சாதிக்கக் கூடிய சுதந்திரத்தைப் பெற்றிருக்கிறது என்று குதூகலித்தது. கவிதை எப்போதும் முன் வரலாறு கொண்டதாக இருக்கிற தென்று அனுமானித்தது. எதிர்காலத் தின் அனுபவங்களை அழுத்தமாக எதிர்கொள்வதும் இனிவரும் தமிழ்க் கலையாக இருக்குமென்று முடிந்தது.

இலக்கியத்தில் மாஸ்டர் குரல் இனிச் சாத்தியமில்லையென்று 80 களில் பேச ஆரம்பித்த நாம் பேசிப் பேசியே வகைமைகளை அழித்து விட்டோ மென்று தோன்றுகிறதென்று தன் பேச்சைத் துவக்கிய பா. வெங்கடேசன், உரை நடைக்கும் கவிதைக்கும் வடிவம் சம்பந்தப்படாத, அனுபவம் சார்ந்த வித்தியாசம் இருக்கிறது என்றார். கவிதை அனுபவம் வார்த்தை சார்ந்தது, ஆனால் உரைநடை வெறும் வார்த்தைகள் மூலமாக அனுபவத்தைச் சாதிக்க முடியாது. வார்த்தையின் அர்த்த இணைவு அங்கே முக்கியம். இன்று கதைகள் கவித்துவமான வார்த்தைகளால் எழுதப்படுகின்றன. அது நன்றாகவும் இருக்கிறது, ஆனால் பிரதியின் முடிவில் கதை என்கிற ஒன்று மட்டும் கிடைக்காமலே போய்விடுகிறது. கவித்துவமான வார்த்தைகளை இடாமலேயே அற்புதமான கதையைச் சிருஷ்டிக்க முடியும். அதற்கான ஒரு பரந்ததளத்தை நம் கற்பனை சென்று அடையவே இல்லை.

அடுத்து *யாதுமாகி* இதழின் ஆசிரியர் லெனா குமார் பேசினார். நமது வாழ்க்கை, நமது சிந்தனை எதுவுமே நேர்கோட்டில் இயங்காத போது கவிதைக்கு மட்டும் அர்த்தம் தேவையா, அர்த்தம் இல்லாமல்தான் அது இருக்கட்டுமே, ஒரு கவிதை புரிய

www.padippakam.com


வேண்டு மென்கிற அவசியமில்லை, அது உணரப்பட வேண்டும், அது என்னுடைய கவிதையாக மாற வேண்டும், அப்பொழுதுதான் அது என்னுள் நிற்கிறது என்றார் குமார்.

கூட்டத்திற்கு வரவியலாமல்போன வைகைச்செல்வி அனுப்பி வைத்திருந்த கட்டுரை. பெண்ணியம் பேச வருகிறவர்கள் முதலில் பெண்ணியம் என்றால் என்ன என்பதைப் புரிந்து வைத்திருக்க வேண்டும். sex என்பதற்கும் gender என்பதற்கும் பெரிய வித்தியாசம் இருக்கிறது என்பதைச் சொற்களின் பின்னால் பயணிக்கிற கவிஞர்கள் சரியாகப் புரிந்துகொள்ளவில்லையென்றே தோன்றுகிறது. தான் நினைக்கும் வக்கிர உணர்வினைப் பெண் பாத்திரத்தில் ஏற்றி இதுவே பெண்ணின் ஏக்கம், உணர்வு என்று சொல்வது பொய். பாலுறுப்புகளை நமது பெண் கவிஞர்கள் அதுவும் ஓர் உறுப்புத்தானே என்று எழுதப்போய் இன்று பெண் கவிஞர்களை இணைய இதழ்களில் ஒருவர் கவர்ச்சிகாட்டும் நடிகைகளோடு ஒப்பிடும் துரதிஷ்டம் நிகழ்ந்திருக்கிறது என்றார்.

அடுத்து ரெங்கநாயகி. பெண்களை விட ஆண்கள்தான் பெண் உடல் மொழியை அதிகமாக உபயோகிக்கிறார்கள், பெண் என்கிறவள் அவள் உடல் சார்ந்த உபாதைகளையும் உணர்வுகளையும் சொல்வது ஒன்றும் தமிழுக்குப் புதிதல்ல, வேதகாலப் பெண்டிர்கள், ஆண்டாள், ஆனால் ஆண்டாளின் வார்த்தைக்கு ஓர் உன்னதம் இருக்கிறது. உயிர் இருக்கிறது, இதைத்தான் இப்போது திடுக்குற வைத்தல் என்கிற பேரில் எழுதுகிறார்கள், கலாச்சார அதிர்வு கொடுப்பதாகச் சொல்லிக் கொள்கிறார்கள், நிச்சயமாக இல்லை.

பிரம்மராஜன். உறுப்புகளைக் குறிப்பிடுகிற வேலை கவிதைக்கு இல்லை, அது anatomyக்குத்தான், பெண் உடல் மொழி என்றெல்லாம் ஒன்று கிடையாது, கவித்துவத்தைச் சிதைக்கு மளவிற்கு உடல் உறுப்புகள் பற்றிச் சொல்வதில் எங்குக் கவிதை வருகிறது என்றார்.

தேவேந்திர பூபதி தனது சுருக்கமான பேச்சில் ஒரு பிரதி தனக்கு முரணான பிரதியாக இருக்கக் கூடாது, செக்ஸ் என்பது இருபாலினம் பற்றின விஷயமே கிடையாது, அது கால நேர வர்த்தமானங்களால் தீர்மானிக்கப்படுகிற அன்னியோன்யமான உறவு, இன்று பெண் எழுத்தாளர்களால் உபயோகிக்கப்படுகிற வார்த்தைகள் எல்லாமே ஆண்களால் ஏற்கனவே பிரயோகிக்கப்பட்ட வார்த்தைகள், பெண்களுக்கான பிரச்சினைகளை பெண்மொழி பேசுவதாகச் சொல்கின்ற கவிதைகள் இதுவரை அப்படி ஓர் அணுகலை மேற்கொள்ள வேயில்லை, உலக இலக்கியத்தில் அரசியல் சார்ந்த கலகக் குரல் பெண்களிடமிருந்துதான் ஆரம்பமாகியிருக்கிறது, தமிழ்ச் சூழலில் அது சாத்தியமாகவில்லை என்றார்.

இடையில் புகுந்த திலகபாமா சற்று உணர்ச்சிவசப்பட்டவராக, பெண்கள் அரசியல் எழுதவேயில்லை என்று சொல்வது தவறு, பெண் உடல் மொழியைப் பேசும் கவிதைகளையே பொருட்படுத்தி அவற்றை ஏற்கவும் எதிர்க்கவுமாக இருக்கிறவர்கள் இதற்கு மாற்றாக எழுதிக்கொண்டிருக்கிற பெண் கவிஞர்களை அடையாளம் காட்டுவதில்லை, இவர்களைக் குற்றம் சொல்வதன் மூலம் ஒட்டுமொத்த பெண் கவிஞர்களையும் நிராகரித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று உரக்க (நியாயமாகவும்) குறைப்பட்டுக் கொண்டார்.

பல கேள்விகளையும் விசாரணைகளையும் படைப்பாளிகளும் வாசகர்களும் இணைந்து பரிமாறிக் கொண்டார்கள். நவீன இலக்கியத்தின் போக்குகள் குறித்த அக்கறையையும் குறையையும் மூத்த மற்றும் இளைய தலைமுறையினர் இருவருமே காத்திரமான முறையில் பதிவு செய்து கொண்ட குறிப்பிடத்தக்க நிகழ்வாக இது அமைந்தது. இந்தப் பதிவை எழுதுவதற்காகத் திலகபாமா அனுப்பியிருந்த குறிப்புக் கற்றையின் இறுதியில் மேற்குறிப்பிட்டவர்களுடன் ஜெகன்னாதன், நடராஜன், பொ.நா. கமலா, ஆகியோரும் தங்களது கருத்து களைப் பகிர்ந்துகொண்டார்களென்று ஒருவரி குறிப்பிடப்பட்டிருந்தது. இவர்களுடைய பேச்சுகளும் சற்று நீளமென்றா லும் (நான் நிரம்ப நேரம் எடுத்துக்கொள்கிறேனா என்று இவர்களில் ஒருவர் மேடையில் சம்பிரதாயமாகக் கேட்ட கேள்விக்குப் பிரம்மராஜன் நிர்தாட்சண்யமாக ஆமாம் என்றார்) சிந்திப்பதற்குரியவையாகவே இருந்தன. வழக்கம் போலச் சிறு பத்திரிகை எழுத்தாளர்களைப் பொருட்படுத்தியே இந்தப் பதிவுக்குறிப்பும் அமைந்து போனதில் எனக்கு வருத்தம் தான். பொ.நா. கமலா கல்வித்துறை சார்ந்தவர் என்பது என் ஊகம். அவருடைய பேச்சுச் சில சிறுபத்திரிகை அறிவு ஜீவிகளின் இலக்கிய அபிப்பிராயங்களை விடலைத்தனமாகக் காட்டு மளவிற்குச் செறிவு கொண்டதாயிருந்தது. ■

## காலச்சுவடு அறக்கட்டளை நடத்திய
## கவிதை மற்றும் ஓவியப் போட்டி முடிவுகள்

இளம் ஓவியர்கள் மற்றும் கவிஞர்களுக்காகக் காலச்சுவடு அறக்கட்டளையின் சார்பில் நடத்தப்பட்ட போட்டிகளுக்கு வந்த கவிதைகள் மற்றும் ஓவியங்களின் முதல்கட்டத் தேர்வு காலச்சுவடு ஆசிரியர் குழுவினரால் செய்யப்பட்டது. சிறந்ததாகத் தேர்வுபெற்ற 25 கவிதைகளும் 46 ஓவியங்களும் நடுவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. அவர்களது மதிப்பீடுகளின் அடிப்படையில் சிறந்த மூன்று கவிதைகள், ஓவியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. கவிதைகளுக்கு ஆனந்த், பிரம்மராஜன், கனிமொழி ஆகியோரும் ஓவியங்களுக்கு டிராட்ஸ்கி மருதுவும் நடுவர்களாக இருந்தார்கள்.

| | | |
|---|---|---|
| **கவிதை** | **முதல் பரிசு:** | **ஜே. ராஜேஷ், விருதுநகர் 626 601** |
| | **இரண்டாம் பரிசு:** | **உமா மஹேஸ்வரி, ஆண்டிப்பட்டி 625 512** |
| | **மூன்றாம் பரிசு:** | **சிவகுமார், ஆத்தூர் 636 141** |
| **ஓவியம்** | **முதல் பரிசு:** | **ரா. ராஜ்குமார், பொள்ளாச்சி 642 001** |
| | **இரண்டாம் பரிசு:** | **ஷாராஜ், கேரளம் 678 557** |
| | **மூன்றாம் பரிசு:** | **கு. கவிமணி, துரையூர் 621 012** |

போட்டி குறித்த இதர விவரங்கள், தேர்வுபெற்ற விதம், சிறந்த கவிதைகள் மற்றும் ஓவியங்கள் ஆகியவை அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும். இந்த ஆண்டின் இறுதியில் கோவையில் நடைபெறவிருக்கும் காலச்சுவடு நூல் வெளியீட்டு அரங்கில் பரிசு வழங்கப்படும். போட்டி கலந்துகொண்டவர்களுக்கு எங்கள் நன்றியும் வாழ்த்துக்களும்.

**– ஆசிரியர் குழு**


படிப்பகம்

www.padippakam.com





ரவிக்குமார்

ழாக் தெரிதா (1930 – 2004)

# மூடுண்ட சொற்கள்

மா மார்க்சியத்துக்குப் பிறகான சிந்தனையாளர்களுள் முக்கியமானவராகக் கருதப்பட்டவர்; கட்டுடைப்பு(?) என்ற தனது சிந்தனாமுறையால் தத்துவ உலகில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியவர்; ஒரே நேரத்தில் உலகெங்கும் போற்றவும் தூற்றவும்பட்டவர்; ஐம்பதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியவர். ழாக் தெரிதா தனது எழுபத்து நான்காவது வயதில் புற்றுநோயின் காரணமாக மரணமடைந்தார்.

அல்ஜீரியாவில் எல் பயார் என்னுமிடத்தில் 1930 ஜூலை 15ஆம் தேதி தெரிதா பிறந்தார். யூத இனத்தைச் சேர்ந்தவர் என்ற காரணத்தால் பத்து வயதில் ஃப்ரெஞ்ச் பள்ளியிலிருந்து நீக்கப் பட்டு, பின்னர் யூதப் பள்ளியில் படித்த தெரிதா, 1952இல் பாரீசில் மேற்படிப் பைத் தொடர்ந்தார் (Ecole Normale Superieure) அங்குத் தன்னைப் போலவே அல்ஜீரியாவைச் சேர்ந்தவரான அல் தூஸரை அவர் சந்தித்தார். அவர் எழுதிய முதல் ஆய்வுக் கட்டுரையைப் படித்த அல்தூஸர், அது மிகவும் சிக்கலானதாக இருந்ததால், அப்போது அங்கே பேராசிரியராகப் பணியாற்றிக்கொண்டிருந்த மிஷெயில் ஃபூக்கோவிடம் படிக்கத் தந்தார். அவருக்கு அந்தக் கட்டுரை பிடித்திருந்தது என்றபோதிலும் தேர்வுக் குழுவினர் அதை மதிப்பிட்டபோது அந்தத் தேர்வில் தெரிதா தோல்வியடைந்ததாக அறிவிக்கப்பட்டது.

ஹார்வர்டில் ஒரு ஆண்டைக் (1956 – 57) கழித்த தெரிதா அதன் பின்னர் ராணுவத்தில் சேர்ந்து ஆசிரியராகப் பணியாற்றினார். 1960இல் பாரீசுக்குத் திரும்பி சோர்போன் பல்கலைக்கழகத்தில் (Sorbonne) ழீன் வாலிடம் (Jean wall) உதவியாளராகச் சேர்ந்தார். 1962இல் வெளிவந்த அவரது நூல் (Introduction to the Origin & Geometry by Hussell) பலரது கவனத்தையும் ஈர்த்தது. 1963இல் அவர் தனது முன்னாள் ஆசிரியரும், சக சிந்தனையாளருமான ஃபூக்கோ வின் புகழ்பெற்ற நூலினை (Madness and Civilization) விமர்சித்து ஆற்றிய உரை ஃப்ரான்சுக்கு அப்பாலும் அவரது புகழைப் பரவச் செய்தது. தெரிதாவின் விமர்சனத்துக்கு ஏறத்தாழப் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு (1972) பதில் எழுதிய ஃபூக்கோ, தெரிதாவின் கட்டுடைப்பு என்பது மரபையும் அதிகாரத்தையும் மீட்டெடுப்பதாக உள்ளது என அதில் விமர்சித்தார் (Didies Eribon - Michel Foucault, 1991).

தெரிதாவின் புகழ் ஃப்ரான்ஸை விடவும் அமெரிக்காவில் வேகமாகப் பரவியது. கட்டுடைப்பு என்பது இலக்கிய விமர்சனத்தில் மட்டுமின்றி கட்டிடக் கலையிலும்கூட அங்கே பயன்படுத்தப்பட்டது. ஜப்பானில் இருந்த ஆய்வாளர்கள் சிலர் தெரிதாவின் அணுகுமுறை ஏற்கனவே தமது தத்துவ மரபில் இருப்பதாகக் கூறினர். இந்தியாவிலும் இப்படியான குரல்கள் ஒலித்துக்கொண்டிருக்கின்றன. தமிழில் அதை எதிரொலித்தவர் தமிழவன். அவருடைய Of Grammatology நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த காயத்ரி சக்கரவாத்தி ஸ்பிவக், சசூரின் மொழியியல் கோட்பாட்டை சமஸ்கிருத மரபில் அடையாளம் கண்டு தெரிவித்த கருத்துகளும்கூட இந்த வகையானதே. கட்டுடைப்பைப் பின்பற்றிய விமர்சகர்கள் பலரும் அதை ஒரு இலக்கியக் கோட்பாடக மட்டுமே சுருக்கினார்கள். பிரதியின் அர்த்த சாத்தியங்களைத் திறந்துவிட்ட தெரிதாவின் அணுகுமுறையைப் பயன்படுத்துவதாகச் சொல்லி ஆசிரியர்மீது குற்றம் சுமத்திய கேலிக்கூத்துகளும் நடந்துகொண்டுதான் இருக்கின்றன. தெரிதாவின் விமர்சன முறையும் அவரது சீடர்களின் விமர்சன முறையும் எவ்வாறு வேறுபடுகிறது என்பதைக் கண்டுகொள்ள காயத்ரி சக்கரவாத்தி ஸ்பிவக், மஹாஸ்வேதாதேவியின் தனதாயினி என்னும் கதையைக் கட்டுடைத்து எழுதிய கட்டுரையை தெரிதாவின் ஏதேனும் ஒரு பிரதியோடு ஒப்பிட்டுப் பார்த்துக்கொள்ளலாம்.

"ஜப்பானில் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் தோன்றிய ஜென் சிந்தனைகளை ஒத்தவையாகப் பின் – அமைப்பியல், கட்டுடைப்பு ஆகியவை இருப்பதாக ஏராளமான கட்டுரைகள் ஜப்பானில் எழுதப்பட்டு வருகின்றன. சீனாவிலும் இப்படிப் பேசப்படுகிறது. இப்படிச் சொல்லப்படுபவை ஏற்கத் தக்கவையாகவும், தேவையற்றவையாகவும் ஒரே நேரத்தில் எனக்குத் தோன்றுகின்றன. நான் 'கட்டுடைப்பு' என்பது பற்றிக் கூறுகிற விஷயங்கள் போலவே பிற சிந்தனைகளிலும் நிகழ்ந்திருப்பதாக அவர்கள் கூறு கிறார்கள். அதைக் கேட்கும் போது சுவாரஸ்யமாகவும் வேடிக்கையாகவும் இருக்கிறது." என்று தெரிதா குறிப் பிட்டார். (Onto - Theology of National Humanism).

கட்டுடைப்பு என்பதற்கு இதுதான் விளக்கம் என தெரிதா ஒருபோதும் தெரிவித்ததில்லை. எல்லாப் பிரதிகளுக்கும் பல்வேறு அர்த்த அடுக்குகள் உள்ளன. முடிவற்ற வியாக்கியானங்களுக்கு வழிவிட்டுத் திறந்திருக்கிறது பிரதி என்பதுதான் கட்டுடைப்பின் அடிப்படை எனச் சிலர் விளக்குகின்றனர். ஆனால் தெரிதாவோ எந்த விளக்கத்தையும் ஏற்றுக்கொண்டதில்லை. "Deconstruction என்பதற்கு அவ்வளவாக மோசமில்லாத ஒரு விளக்கமாக, 'சாத்தியமாகாததன் அனுபவம்' என்பதைக் கூறுலாம்" என தெரிதா ஒருமுறை தெரிவித்தார். அந்த விளக்கம் மேலும் அதிகமான குழப்பத்தையே ஏற்படுத்தியது.

தெரிதாவைப் பற்றிய விமர்சனங்கள் பெரும்பாலும் அவரைப் புரிந்துகொள்ள முடியாத கோபத்தில் செய்யப்பட்டவைதான். அவரது விமர்சகர்கள் கூறுவதுபோல அவர் அவநம்பிக்கை கொண்டவரோ, ஆதிக்கத்துக்குத் துணைபோனவரோ அல்ல, அல்ஜீரியா அகதிகளின் உரிமைகளுக்காகவும் நிற வெறிக்கு எதிராகவும் போராடியவர். செக்கோஸ்லோவேக்கியாவில் அரசு உத்தரவை மீறி அங்கு அரசு எதிர்ப்பாளர்கள் ஏற்பாடு செய்திருந்த கருத்தரங்கில் கலந்துகொண்டு பேசியதற்காகக் கைதுசெய்யப்பட்டவர்(1981).

ஸ்டாலினிசத்துக்கு எதிரானவராகத் தன்னை அடையாளப்படுத்திக்கொண்ட தெரிதா, ஜனநாயகபூர்வமான இடது சாரிச் சிந்தனைகளுக்குத் தான் எப்போதும் விசுவாசமாக இருக்கவே விரும்பினார். (Politics and Friendship) "மார்க்ஸை வெறுமனே ஹெகலின் தொடர்ச்சி


படிப்பகம்

www.padippakam.com



எனப் பார்க்க முடியாது. ஆனால் இது வரை ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவை விட அதிகமாக அவரிடம் ஹெகலின் தாக்கம் உள்ளது" எனக் குறிப்பிட்ட தெரிதா, மார்க்ஸிடம் காணப்பட்ட ஹெகலியத் தாக்கத்தின் அடிப்படையில் மார்க்ஸின் படைப்புகளை இரண்டு கட்டங்களாகப் பிரித்து அல்தூஸரின் அணுகுமுறையையும் நிராகரித்தார்.

அல்தூஸருக்கும் அவருக்குமான உறவு பற்றி மைக்கேல் ஸ்ப்ரிங்கருக்கு அவர் அளித்த நீண்ட பேட்டி (Politics and Friendship) மார்க்சியத்துக்கும் அவருக்குமான தொடர்பையும் தெளிவுபடுத்துவதாக உள்ளது. 1993 இல் மார்க்சியம் குறித்து அவர் ஆற்றிய சொற்பொழிவுகள் நூலாக்கப்பட்ட போது (Specters of Marx - The State of the Debt, the work of Mourning and the New International, Routledge 1994) அதைத் தென்–ஆப்பிரிக்காவில் நிறவெறிக்கு எதிரான போராட்டத்தில் கொலை செய்யப்பட்ட கம்யூனிஸ்ட் போராளியான க்ரிஸ்ஹானிக்குச் சமர்ப்பணம் செய்தார்.

புதிய உலக ஒழுங்கின் அபாயம் குறித்தும் ஜனநாயகத்தின் முக்கியத்துவம் குறித்தும் அவர் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார். புதிய உலக ஒழுங்கின் கொள்ளை நோய்களாக வேலையின்மை, அகதிகளாக விரட்டப்படுதல், பொருளாதாரப் போட்டி, சுதந்திரச் சந்தையின் முரண்பாடுகளைக் கட்டுப்படுத்த இயலாமை, அயல்நாடுகளில் பெற்ற கடன்களின் சுமை, ராணுவத் தளவாட உற்பத்தி மற்றும் அதன் வர்த்தகம், அணுஆயுதங்களின் பரவல், இனங்களுக்கிடையிலான போர்கள் என்பவை உள்ளிட்ட பத்து அபாயங்களை அவர் சுட்டிக்காட்டினார். (Specters of Marx , பக்கம் 81 – 83)

தெரிதாவின் கருத்துக்களை ஏற்றுக் கொள்ள மறுப்பவர்கள்கூட ஒரு சொல்லின் வழக்கமான பொருளைப் புறக்கணித்து அதன் வேறொரு அர்த்தத்தின் வழியாக அந்தச் சொல்லைத் திறந்து புதியதொரு விளக்கத்தை அவர் முன்வைப்பதில் வெளிப்படும் படைப்புக் குணத்தை வியக்கவே செய்வார்கள்.

தனக்குக் கிடைத்த புகழில் மயங்கி விடாமல் அதிலிருந்து பிரக்ஞைபூர்வமாக விலகிநின்ற தெரிதா தான் எழுதிய பிரதிகள் தவிர தன்னைப் பற்றி வேறெதுவும் அச்சில் வரக் கூடாது எனப் பிடிவாதமாக மறுத்துவந்தார். 1979வரை தன்னைப் புகைப்படம் எடுப்பதற்குக் கூட அவர் அனுமதிக்கவில்லை (2002 இல்தான் அவரைப் பற்றி ஒரு விவரணப்படம் எடுக்க அனுமதித்தார்). "இந்த வரவேற்பு, புகழ் நல்லது மட்டுமல்ல, கெட்டதும்கூட. இது உங்களை சிறைப்படுத்திவிடும்... அதனால்தான் நான் சில சமயங்களில் 'அது நான் அல்ல, அது நான் சொன்னது அல்ல' என்று மறுக்க வேண்டியதாகிறது.' என்று குறிப்பிட்ட தெரிதா, தன்னை அறிவுஜீவி என அழைப்பதைக்கூட ஏற்றுக்கொள்ளவில்லை.

"நான் ஓர் அறிவுஜீவி அல்ல. தனிப்பட்ட வாழ்க்கைக்கு அப்பால் அறிவுஜீவி வாழ்க்கையொன்றைக் கொண்ட நபராக நான் இருக்க வில்லை. எனது வாழ்வில் நடந்த சம்பவங்கள் அறிவுஜீவித்தனமானவை அல்ல. என் நூல்கள்கூட அறிவுஜீவித்தனம் இல்லாத சம்பவங்களிலிருந்தே உருவானவை" என்றார் அவர். (Criticism in Society, Methueu 1987)

புனைவு இலக்கியம் படைப்பதே தனது உள்ளார்ந்த விருப்பம் எனக் குறிப்பிட்ட தெரிதா, இலக்கியத்தை வந்தடைவதற்கான சுற்றுவழியாகவே தத்துவத்தைக் கண்டார்.

"சிலவேளை நான் அந்த இடத்துக்கு வந்து சேராமல் போகலாம். ஆனால் அங்கு போய்ச் சேர வேண்டும் என்பது தான் இளமைக் காலத்திலிருந்து என் ஆசை. எழுத்துப் பற்றிய பிரச்சினைப் பாடுகள், அது பற்றிய தத்துவ ரீதியான தேடல்கள் யாவும் 'இலக்கியம் என்றால் என்ன?' என்ற கேள்விக்கான சுற்றுவழிகள்தாம். 'இலக்கியம் என்றால் என்ன?' என்ற இந்தக் கேள்வியும்கூட இலக்கியத்தைப் படைப்பதற்கான ஒரு இடைவழிதான். Of Grammatology நூலில் எழுத்து என்பது என்ன என்று நான் சிந்திக்க முயன்றபோது நான் எதையோ நெருங்கிக்கொண்டிருப்பதுபோல ஓர் உணர்வு ஏற்பட்டது." என தெரிதா விவரிக்கிறார். (Criticism in Society) இதை ஏற்றுக்கொண்டதால்தானோ என்னவோ இந்த ஆண்டு இலக்கியத்துக்கான நோபல் பரிசு அவருக்கு வழங்கப்படலாம் என்று பேசப்பட்டது.

1992இல் கேம்ப்ரிட்ஜ் பல்கலைக் கழகம் அவருக்குக் கௌரவ டாக்டர் பட்டத்தை வழங்க முடிவு செய்தபோது அதற்குப் பெருமளவில் எதிர்ப்புக் கிளம்பியது. ஆனால் வாக்கெடுப்பு நடத்தப்பட்டு அவருக்கு டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது. கடைசிவரையில் கல்வி போதிக்கும் பணியைச் செய்துகொண்டிருந்த தெரிதா, ஒரே சமயத்தில் இரண்டு காரியங்களைச் செய்ய வேண்டியுள்ளது என்றார். "கல்வி பயிற்றுவிக்கும்போது ஒருவரைத் தயார் செய்ய வேண்டியுள்ளது. அவர்களுக்கு ஒரு வேலை வாய்ப்பை உருவாக்க வேண்டியுள்ளது. அதே நேரத்தில் ஒரு விஷயம் தொழிலாக மாறுவதில் உள்ள ஆபத்து குறித்த பிரக்ஞையையும் அவர்களுக்கு உருவாக்க வேண்டியுள்ளது" என்றார்.

எவ்வளவோ மறுத்தபோதிலும் அவரது சிந்தனைகள் இன்று கோட்பாடுகளாக மாற்றப்பட்டுவிட்டன. அதுபோலவே அவரது பிம்பமும் நித்தியத்துவம் பெற்றுவிடக்கூடும்.

இனி, தெரிதா, தெரிதாவை மறுத்தபடி உயிர்த்திருப்பார். ■

## ஒடுக்குமுறைக்கு எதிராக

பெண் கவிதைமொழி தனது தனித்துவமான அடையாளத்தை உருவாக்கிக்கொண்டு ஆற்றலுடன் இயங்கிவரும் தருணம் இது. புதிய தலைமுறைப் பெண் கவிஞர்களின் கவிதைகள் பெண்மை குறித்த மரபு சார்ந்த பார்வையிலிருந்து முற்றாக வேறுபட்டவை. ஆண் மையவாதக் கருத்தியல் பரிந்துரைக்கும் நல்லெண்ணம் சார்ந்த பெண்ணிலைவாதத்தை அவை பதற்றமில்லாமல் கடந்து செல்கின்றன; மரபின் பெயரால் திணிக்கப்படும் வாழ்வியல் ஒழுக்கங்களை உறுத்தலில்லாமல் மீறுகின்றன; பெண்ணின் உடல் மற்றும் மனம் சார்ந்த வேட்கைகளை, தேடல்களை வெளிப்படையாகப் பகிர்ந்து கொள்கின்றன.

கருணையை வேண்டும் தீராத புகார்களிலிருந்தும் கண்ணீரிலிருந்தும் விடுபட்டுச் சுதந்திரமாக இயங்கத் தொடங்கியிருக்கும் பெண் படைப்புமொழி, சூழலில் பெரும் பதற்றத்தை உருவாக்கியிருக்கிறது. மரபின் பெயராலும், மதிப்பீடுகளின் பெயராலும் கடுமையாகக் கண்டிக்கப்படுகிறது. ஆபாசம், ஒழுக்கக்கேடு என இன்றைய பெண் கவிதைகளையும், பெண் கவிஞர்களையும் சித்தரிக்க முயலும் விவாதங்களுக்கு ஊடகங்கள் தொடர்ந்து ஊக்கமளித்துவருகின்றன.

பெண் படைப்புகளின் தாக்கம் குறித்து மட்டுமல்லாமல் அவற்றின் மீதான அவதூறுகள் குறித்தும் விரிவாகவும் நுட்பமாகவும் பரிசிலிக்கக் காலச்சுவடு விரும்புகிறது. இம்முயற்சியின் தொடக்கப்புள்ளியாக வரும் நவம்பர் 21 இல் சென்னையில் ஒரு கூட்டத்தை நடத்தவிருக்கிறது. முக்கியமான பல ஆளுமைகள் கலந்துகொள்ளும் இக்கூட்டத்திற்கு ஒத்துழைப்பு நல்குமாறு வாசகர்கள், எழுத்தாளர்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

ஆசிரியர் குழு.



படிப்பகம்

அஞ்சலி

# உலகு தழுவிய மனிதாபிமானி

**அசோகமித்திரன்**

நவீனத் தமிழ்ப் படைப்பிலக்கியத்தில் பல இரட்டையர் இருந்திருக்கிறார்கள். இந்தியாவின் ஆங்கிலப் படைப்பிலக்கியத்தில் மூவர் எனச் சுமார் எழுபது ஆண்டுகளாக அறியப்பட்டவர்களில் இரண்டாமவரான முல்க் ராஜ் ஆனந்த் செப்டம்பர் 28ஆம் தேதி மும்பைக்குச் சற்றுக் கிழக்கேயுள்ள புனேயில் காலமானார். வயது 99. ஆர். கே. நாராயண் மூன்றாண்டுகள் முன்பு அவருடைய 94வது வயதில் மறைந்தார். மூன்றாமவர் ராஜா ராவ் வரும் நவம்பர் 6ஆம் தேதி 96வது பிறந்தநாள் கொண்டாடுவார்.

மூவருக்கும் ஆரம்பச் சூழ்நிலை விசேஷ உற்சாகம் தருவதாக இருந்ததில்லை. ஆனால் மூவருமே ஆங்கிலத்தில் 'சர்வைவார்ஸ்' என்று குறிப்பிடப்படும் தோல்வியேற்காத மன உறுதி



முல்க் ராஜ் ஆனந்த்
(1905 – 2004)

படைத்தவர்கள். முல்க் ராஜ் ஆனந்தின் குடும்பப் பின்னணி முறையாகக் கல்வி கற்பதையே சாதனை எனக் கருதக்கூடியது. பரம்பரையாகப் பித்தளைப் பாத்திரம் செய்யும் தொழிலில் ஈடுபட்டவர்கள். அவருடைய தகப்பனார் பட்டாளத்தில் பணி புரிந்ததால் முல்க் ராஜ் ஆனந்த் கல்வி பயில முடிந்தது. அவருடைய சொந்த முயற்சியில் இங்கிலாந்து சென்று 25 வயதுக்குள் முனைவர் பட்டம் பெற முடிந்தது.

முல்க் ராஜ் ஆனந்த், ராஜா ராவ் இருவருக்கும் இளமைப் பருவத்தில் அயல்நாட்டில் வசிக்க நேர்ந்தது ஆங்கிலத்தில் எழுதுவதற்கு உந்துதல் தந்திருக்க வேண்டும். டி. எஸ். எலியட் நடத்திய 'கிரைட்டீரியன்' பத்திரிகையிலேயே முல்க் ராஜ் ஆனந்துக்கு இடம் கிட்டியுள்ளது. அவருடைய ஆதர்ச எழுத்தாளர்களில் ஜார்ஜ் ஆர்வெல்லும் ஒருவர். இரண்டாம் உலக யுத்தத்துக்கு ஒத்திகை என்று நடந்த 1936 –ஸ்பெயின் உள்நாட்டுப் போரில் ஜார்ஜ் ஆர்வெல்லுடன் முல்க் ராஜ் ஆனந்தும் பங்கு பெற்றதாகத் தெரிகிறது. இருவரும் சர்வதேச அணியில் சேராமல் கம்யூனிஸ்ட் அணி என்பதில் சேர்ந்திருக்க வேண்டும். அந்த அனுபவம் ஜார்ஜ் ஆர்வெல்லைக் கம்யூனிச இயக்கத்தை விமர்சிப்பவராக மாற்றியது. முல்க் ராஜ் ஆனந்தின் உலகம் தழுவிய மனிதாபிமானம் நல்ல வேளையாகப் பாதிக்கப்படவில்லை.

இன்று நினைத்துப் பார்க்கும்போது ஒரு விஷயம் தெளிவாகிறது. மூவரில் நாராயணனின் இளமைப் பருவம், பள்ளியனுபவம், சிறு சிறு ஆசை நிராசைகள், உறவினர்கள், நண்பர்கள், வாழ்ந்த காலம், சூழ்நிலை, சூழ்நிலை மாற்றம் – இவை எல்லாவற்றைப் பற்றியும் இன்று நமக்கு ஏராளமான தகவல்கள் கிடைத்துள்ளன. பேட்டி, கருத்தரங்கு, சொற்பொழிவு, நேர்காணல் என்பவற்றைக் கடைசிவரை தவிர்த்த நாராயண் எந்த மனத்திரையுமின்றி அவருடைய வாழ்க்கையைத் தெரிவித்திருக்கிறார். முல்க் ராஜ் ஆனந்தும் சம்பிரதாயமான சுயசரிதையை விரிவாக எழுதத்தான் திட்டமிட்டிருந்திருக்கிறார். சில பகுதிகள் எழுதப்பட்டிருக்கின்றன. ஆனால் இன்றும் நிறைய இடைவெளிகளை ஊகிக்கத்தான் முடிகிறது. இந்த நிலை ராஜா ராவுக்கும் பொருந்தும்.

முல்க் ராஜ் ஆனந்துடைய ஒடுக்கப்பட்டோர் சார்பு, ஜார்ஜ் ஆர்வெல்லையும் மீறி இருந்திருக்கிறது. இன்று அதிகம் நினைவுகூரப்படும் அவரது நாவல்களாகிய 'தீண்டப்படாதவன்', 'கூலி' இரண்டுமே தீவிரத்தன்மை கொண்டவை. ஒடுக்கப்பட்டோருடன் அவரால் பூரணமாக ஒன்றிப்போக முடிந்திருக்கிறது. அவருக்கும் ராஜா ராவுக்கும் ஓர் ஒற்றுமை, இருவரின் முதல் நாவல்களும் அன்று இந்தியா மீது மிகுந்த ஆர்வம் கொண்டவர் என அறியப்பட்ட எழுத்தாளர் ஈ. எம். ஃபார்ஸ்டர் அறிமுகக் கட்டுரைகள் எழுதியிருக்கிறார். 'இரண்டு இலைகளும் மொட்டும்' 1937இல் வெளிவந்தபோது வரிசையாக மூன்றாண்டுகளில் மூன்று மகத்தான நாவல்களை எழுதியவரானார் முல்க் ராஜ் ஆனந்த். இலக்கிய ரீதியில் திருப்தியளித்ததோடு அந்த நாவல்கள் அன்றும் இன்றும் மிகவும் தேவைப்படும் அக்கறைகளை வெளிப்படுத்தின. மகாத்மா காந்தியின் தாக்கம் முல்க் ராஜ் ஆனந்தை அவருடைய இலக்கியப் போக்கை நிர்ணயிக்கச் செய்தது. இந்தியர்களைப் பொறுத்தவரை ஆங்கில மொழி அதிகாரம், செல்வம், மிகையான செல்வாக்கு ஆகியவையுடனேயே நினைக்கப்பட்ட நாட்களிலேயே வாழ்க்கையின் அடித்தளத்தில் இருந்தவர்களைக் கதை மாந்தராக்கியது அவருடைய குறிப்பிடத்தக்க சாதனை.

ஒரு கதை அவருடையதுதான் என்று தெரியாமல் நான் சிறுவயதில் படித்துப் பிரமித்திருக்கிறேன். பல எழுத்தாளர்களின் சிறுகதைகளைக் கொண்டிருந்த அந்தத் தடிமனான புத்தகத்தில் கதையின் தலைப்பு 'அம்மா, அம்மா' எனக் கண்டிருந்தது. வெகு நாட்கள் கழித்துத்தான் அக்கதை 'தொலைந்து போன குழந்தை' என முல்க் ராஜ் ஆனந்தின் சிறுகதைத் தொகுப்பிலிருந்து தெரிந்தது.

முல்க் ராஜ் ஆனந்த் என் மனதில் ஒரு மிகப் பெரிய, முக்கியமான எழுத்தாளராகத் தோற்றம்கொண்டிருந்தபோது அவரைச் சந்திக்கவும் வாய்ப்புக் கிடைத்தது. அதற்குக் க. நா. சுப்பிரமணியத்துக்கு நன்றி தெரிவிக்க வேண்டும். "உங்களுடைய படைப்புகளில் மிகச் சிறந்தது எம். ஏ. முடித்த இளைஞனுக்கு இறுதி அஞ்சலி" என்று கூறினேன். அந்த மாநாட்டில் அவர் கசப்புத் தோன்றப் பேசினார். உண்மையில் அதற்குச் சில மாதங்கள் முன்பு வெளிவந்திருந்த 'காதலித்தவனின் ஒப்புமூலம்' என்ற நூலை அரங்கத்திலும் மேடையிலும் ஒருவர் தவறாது பாராட்டி வியந்தார்கள். அதற்கு அடுத்த ஆண்டும் அவரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது. அந்த மாநாட்டுக்காகப் பிரதமர் இந்திரா காந்தி அரை மணி நேரம் ஒதுக்கியிருந்தார். மாநாட்டுக்கு வந்தவர் ஒருவர் ஒரு பாதையில் ஓரமாக அவருடைய காரை நிறுத்திவிட்டு உள்ளே சென்றிருந்தார். அது 'நெருக்கடி' காலம். நான்கு இரகசியக் காவல்

www.padippakam.com



துறையினர் அந்தக் காரைத் தூக்கிச் சென்றுவிட்டார்கள். கூட்டம் முடிந்து காரைத் தேடியவர் அது நூறு மீட்டருக் கப்பால் நன்கு பராமரிக்கப்பட்ட புல்வெளியில் நிற்பதைப் பார்த்தார். அந்தப் புல்வெளியில் கார் இருந்ததற்கு என்ன தண்டனை கிடைக்குமோ எனப் பயந்துகொண்டே காரை அணுகினார்.

அந்த மாநாட்டில் முல்க் ராஜ் ஆனந்த் பதிப்பாளர்களைக் கடுமை யாகத் தாக்கினார். ஆர். கே. நாராயணும் ஆரம்பத்தில் அவருடைய கையெழுத்துப் பிரதிக் கட்டைத் தூக்கிக்கொண்டு நிறையவே அலைந்திருக்கிறார். கிர ஹாம் கிரீனுக்கு நாராயண் புனைகதை பிடித்துப்போனாலும் நாராயணுடைய புத்தகங்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு பதிப்பாளரால்தான் வெளிவந்தன. அவர் யாரையும் கசப்புடன் நினைத்த தில்லை.

நெருக்கடி நிலைக் காலத்தில் முல்க் ராஜ் ஆனந்த் உட்படப் பல எழுத்தாளர்கள் நடந்துகொண்ட விதம் அதிகம் அலசப்படவில்லை. அதற்கு வாய்ப்பு இல்லாமல் இந்திரா காந்தியே மீண்டும் பதவிக்கு வந்துவிட்டார். அப்புறம் அவருடைய மகன்கள், மருமகள், பேரன் எனச் செல்வாக்கு மையம் நீடித்துவருகிறது. பதினொரு ஆண்டுகள் தீவாந்திரச் சிறைத் தண்ட னையைக் கை, கால், கழுத்து விலங்கிடப்பட்டுத் தனிக் கொட் டடியில் அனுபவித்த ஒருவரின் மன்னிப்புக் கடிதங்கள் பெரிதாகிப் போய்விட்டன.

முல்க் ராஜ் ஆனந்தை இன்னும் இரு முறை சாவகாசமாகச் சந்தித்துப் பழக வாய்ப்புக் கிடைத்தது. வள்ளத் தோல் நூறாண்டு விழா மூன்று நாட்கள் எர்ணாகுளத்தில் நடந்தது. அந்த விழாவின்போது ஒரு மாலை முல்க் ராஜ் ஆனந்த் என்னைத் தேடி வந்தார். ஒரு பிரபல தமிழ் எழுத்தாளரின் நாவலைக் குறிப்பிட்டு அதை ஆங்கிலத் தில் மொழிபெயர்த்துத் தர வேண்டும் என்றார். என்னுடைய ஆங்கிலத் தேர்ச்சியில் எனக்குத் தயக்கம். மேலும் அந்த எழுத்தாளரின் நாவல் கள் 1940களின் இந்திப் படங்கள்போல இருந்ததாக என் கணிப்பு. என் இயலாமையைத் தெரிவித்தேன். முல்க் ராஜ் ஆனந்துக்கு அது மகிழ்ச்சி யளிக்கவில்லை.

அதன் பிறகு இன்னொரு முறை நானும் அவரும் ஒரு வாரச் சுற்றுப் பயணக் கோஷ்டியில் இருந்தோம். அவர் என்னிடம் ஒரு வார்த்தை பேச வில்லை. அவர் படைப்புகளை நன்கு படித்திருந்த டடர் ரைமன்ஷனடர் என்ற பேராசிரியர்தான் என்னுடைய நாவலின் முதல் அத்தியாயத்தை ஜெர்மன் மொழியில் மொழிபெயர்த்திருந்தார்.

முல்க் ராஜ் ஆனந்த் என்னைவிட இருபத்தாறு வயது பெரியவர். பல இயக்கங்களில் அவர் இந்தியர்களுக்கு முன்னோடியாக இருந்திருக்கிறார். அவர் 1998இல் வெளியிட்ட சிறுகதைத் தொகுப்பில் ஒவ்வொரு கதையையும் ஒருவருக்கு அர்ப்பணித்திருப்பார். 'திங்ஸ் ஹாவ் எ வே ஆஃப் வொர்க் கிங் அவுட்' என்ற அந்தத் தொகுப்பே மிகவும் சிறப்பாக இருக்கும். அதற்கு மதிப்புரை எழுதும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அந்தரங்கபூர்வமாக என் பாராட்டையும் மரியாதையும் தெரிவிக்க அச்சந்தர்ப்பம் பயன்பட்டது.

முல்க் ராஜ் ஆனந்த் ஆங்கிலத்தில் எழுதினாலும் அவருக்கும் உருது – இந்தியில் எழுதிய பிரேம் சந்துக்கும் ஒற்றுமை உண்டு. ஏழ்மையிலும் மனித கண்ணியம் என்பது இருவருக்கும் ஆதார சுருதியாக இருந்திருக்கிறது. முல்க் ராஜ் ஆனந்த் பற்றிப் பேசிய போது ஒருவர் ஜெயகாந்தனையும் குறிப்பிட்டார்.

பிரேம் சந்த் ஆங்கிலத்தில் எழுதி யிருந்தால் இன்றை விடப் பல மடங்கு புகழ் பெற்றவராக விளங்கியிருக்கலாம். ஆனால் அவர் படைப்புடன் ஒன்றிப் போகும் வாசகர்களைப் பெற்றிருக்க முடியாது. முல்க் ராஜ் ஆனந்தின் சமகாலத்தவர்களான கிஷன் சா்தர், பீஷ்ம் சஹானி, ராஜேந்திர சிங் பேடி போன்றவர்கள் கொண்டிருந்த தீவிர வாசகர்கள், முல்க் ராஜ் ஆனந்துக்கு அவருடைய படைப்பு மூலம் கிடைத்தி ருக்க வாய்ப்பில்லை. ரைமன்ஷ னைடர்கூட முல்க் ராஜ் ஆனந்தின் படைப்புகளை ஒரு பாடத்தை அணுகுவது போலத்தான் உறவு கொண்டிருந்ததாகத் தோன்றியது. இந்திய அனுபவத்தை ஆங்கிலம் மூலம் உணர்த்துவதில் உள்ள தடை, குறைகளுடன்தான் முல்க் ராஜ் ஆனந்தின் வெற்றியும் இருந்திருக்கிறது.

அவருடைய புகழ்பெற்ற நாவல் களை இன்று படிப்போருக்கு எத்தகைய அனுபவம் கிட்டும்? இன்று இந்தியா வின் புதிர்களில் பல அயல் நாட்டின ருக்கும் தீர்க்கப்பட்டிருக்கும். புறத் தகவல்கள் பல இந்தியர்களை விட அவர்கள் நன்கு அறிந்திருக்க வாய்ப்பு இருக்கிறது. 'எம். ஏ. முடித்த இளைஞன்' கதை அநேகமாக எல்லாருக்கும் அந்தரங்க உணர்வு தரும். அதே போலத் தான் 'திங்ஸ் ஹாவ் ய வே ஆஃப் வொர்க்கிங் அவுட்'. அதில் சில பகுதிகள் அவரால் முதலில் பஞ்சாபி மொழியில் படைக்கப்பட்டுப் பின்னர் ஆங்கிலமாக்கம் செய்யப் பட்டவை. உண்மையில் அவருடைய நாவல்களை விடச் சிறுகதைகள் சிறப்பாக உள்ளன.

என்னதான் முதியோர்கள் தினம் என்று கொண்டாடத் தொடங்கியிருந் தாலும் ஒவ்வொரு நபருக்கும் முதுமை எதையெதையோ விளைவித்துவிடு கிறது. எழுத்தாளனின் நிலையும் பிரத்யேகமானதுதான். அறுபது எழுபது வயதிலேயே கட்டமைப்பு இழந்துவிடு வோர் உண்டு. தொண்ணூறு வயதென் பது பிரத்யேக நிலையை நீட்டிப்பது. நானறிந்து கடைசிவரை மலர்ந்த முகத்தோடு மறைந்த எழுத்தாளர்கள் மிகச் சிலர். மாஸ்தி வெங்கடேச ஐயங்காரையும் ஆர்.கே. நாராயணும் கசப்புத் தோன்ற முடிவை நெருங்கிய தாக நினைக்க முடியாது. முல்க் ராஜ் ஆனந்துக்கும் அத்தகைய முடிவே இருந்திருக்க வேண்டும். ■

பதிவுகள்

## இந்திய நாடக அரங்கம்: ஆங்கில நூல் வெளியீட்டு விழா

ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழக அச்சகம் இந்திய நாடகத்துறையின் உத்திகள், வடிவங்கள் மற்றும் ஆளுமை கள் பற்றிய ஒரு நூலை "The Oxford Companion to Indian Theatre" எனும் பெயரில் வெளியிட்டுள்ளது. இந்நூலின் வெளியீட்டு விழா 7–10–2004 அன்று சென்னை பிரிட்டிஷ் கலாச்சார மையமான பிரிட்டிஷ் கவுன்சிலில் நடைபெற்றது.

நாடகம் தொடர்பானவர்களுக்கும் நாடக ஆர்வலர்களுக்கும் உதவும் முக்கியமான நூல் இது. "நாடக மேடை என்பது முக்கியமானது. இன்று திரைப்படத் துறையில் நாடக அனுபவ முள்ளவர்களின் திறமையை நன்கு உணர முடிகிறது. அப்படியான நாடக அனுபவத்தை எனக்குத் தந்தவர் தி. க. சண்முகம் அவர்கள். அவரைப் பற்றிய தகவல்களும் இந்த நூலில் உள்ளது" என நூல் வெளியீட்டில் பேசிய கமல்ஹாசன் குறிப்பிட்டார்.

இரண்டாயிரம் ஆண்டுக் கால நாடக வரலாற்றை உள்ளடக்கிய இந்நூலில் கிராமபுற மற்றும் நகர்சார் நாடக வடிவங் கள் இடம் பெற்றுள்ளன. 270 பாடங்கள், 750 குறிப்புகள், 22 மொழிகள் சார்ந்து எழுதப்பட்டுள்ள இந்நூலை ஜாதவ்பூர் பல்கலையின் ஆங்கிலப் பேராசிரியர் ஆனந்த லால் தொகுத்துள்ளார்.

வெங்கட் சாமிநாதன், வீ. அரசு, சி. அண்ணாமலை, பத்மா (அ. மங்கை) ஆகியோர் தமிழ் நாடகங்கள் குறித்த கட்டுரைகளை எழுதியுள்ளனர்.

விழாவின் சிறப்பு நிகழ்வாக மரபு முதல் நவீனம் வரை வெவ்வேறு வடிவங்கள் சார்ந்த நாடகங்களின் சில பகுதிகள் நடித்துக் காண்பிக் கப்பட்டன. அச்சு மற்றும் காட்சி ஊடகங்கள் தமிழ்நூல் வெளியீட்டு விழாக்களில் காட்டாத அக்கறையை இந்த ஆங்கில நூல் வெளியீட்டு விழாவிற்குக் காட்டின.

**பெ. அய்யனார்**



படிப்பகம்

www.padippakam.com

எதிர்வினை

# நேர்காணலில் கோணல் பற்றி

இ. அண்ணாமலை

காலச்சுவடுக்காகச் சலபதி நடத்திய என்னுடைய நேர்காணலில், என்னைத் தமிழறிந்தவனாக முன்னிறுத்திக் கேட்ட கேள்விகளோடு மொழியியல் அறிந்தவனாகவும் நினைத்துக் கேள்விகள் கேட்டிருக்கலாம் என்ற ஆதங்கத்தை ராமகிருஷ்ணனுடைய எதிர்வினை வெளிப்படுத்துகிறது. இந்த ஆதங்கம், அவரை நேர்காணலின் பார்வையாளனாக இருக்கவிடாத கோபமாக வெளிவந்திருக்கிறது. இவருடைய ஆதங்கம் மற்றவர்களுக்கும் இருக்கலாம். மொழிகளின் அழிவு, மொழிகளின் பல்வகைமைக்கு வந்துள்ள ஆபத்து ஆகியவை பற்றித் தமிழ் வாசகர்களுக்கு முதன்மையான அக்கறை இல்லை என்று சொல்வது சலபதி தன்முனைப்பாகத் தன் தனிப்பட்ட கருத்தைத் தமிழ் வாசகர்மீது ஏற்றுவதாகும். இன்று உலகத்தின் பல மொழிகளை எதிர்நோக்கியிருக்கும் இந்தப் பிரச்சினைகளுக்கும் தமிழின் எதிர்காலத்துக்கும் தொடர்பில்லை என்று சொல்வது வெள்ளம் வரும்போது கண்ணை மூடிக் கொள்வது போன்றது.

சலபதி, ராமகிருஷ்ணன் போன்ற வாசகர்களின் ஏமாற்றத்தை இரு தனி மனிதர்களின் உறவுசார்ந்த பிரச்சினையாகப் பார்ப்பது கோணலான பார்வை. அது மொழி பற்றிய ஒரு பிரச்சினையை அண்ணாமலை பற்றிய பிரச்சினையாக மாற்றிவிட்டது. சலபதியுடைய சமூக வரலாற்று ஆய்வு முறையில், பொது வாழ்வு மனிதர்களின் தனிப்பட்ட உறவுகள், சறுக்கல்கள் மைய இடம் பெறுகின்றன. அவை சமூக விளைவை ஏற்படுத்துகின்றன என்ற கொள்கையின் அடிப்படையில் அவர் ஆய்வில் முக்கிய இடம் பெறுகின்றன. இதை அவர் தேர்ந்தெடுத்துக் கொண்ட ஓர் ஆய்வு முறை என்று எடுத்துக்கொண்டாலும் அவற்றைப் பொது அரங்கில் சொல்லும்போது தக்க சான்றுகளை முன்வைக்க வேண்டும். "சிலர் சொல்கிறார்கள்" என்பது மட்டுமே சான்றாகாது. திரு. வி. கவின் நலம் பாராட்டும் எழுத்தானாலும் ரவீந்திரனின் குறை காணும் எழுத்தானாலும் அவை தனி மனிதர்களின் அபிப்பிராயங்கள். அந்த அபிப்பிராயங்களை உருவாக்கிக்கொள்ள அவர்களிடம் என்ன ஆதாரங்கள் உள்ளன என்று கண்டுபிடித்துச் சொல்ல வேண்டியது ஆராய்ச்சியாளனின் கடமை. ஆதாரம் தராதவரை, நான்குபேர் சொல்லும் ஒரு செய்தி அதனாலேயே உண்மையாகி விடாது. சந்தையில் அடித்தாலும் ஆய்வு என்ற நீதிமன்றத்தில் சாட்சியம் வேண்டும். கட்டைப் பஞ்சாயத்துக்குத் தேவை இல்லாமல் இருக்கலாம்.

செப்டம்பர் 19 ஆம் தேதியன்று, அமெரிக்காவில் மில்ஃபோர்டு என்ற ஊரில் திரு. ராஜாராமின் வீட்டில் அவருடைய நண்பர்களுடன் கலந்துரையாடிய போது சுந்தர ராமசாமி, எழுதியவரின் அடையாளம் தெரியாமலேயே திண்ணை இணையவிதழ் செய்திகளை வெளியிட்டிருக்கிறது, எந்த விஷயத்தையும் பிரசுரிக்கும்போது அந்த விஷயத்தைச் சொல்கின்றவர் அதற்கான ஆதாரத்தையும் தருகிறாரா என்று கவனிக்க வேண்டியது பத்திரிகை உலகின் தர்மம். விஷயம் குற்றச்சாட்டு என்றால் ஆதாரம் வலுவானதாக இருக்கவேண்டும். இந்தத் தர்மத்தை முகமற்றுக் கருத்துப் பரிவர்த்தனை செய்யும் இணைய விதழ்கள் பின்பற்ற வேண்டும் என்றார். மனித உரிமையை மதிக்கும் இந்தத் தருமத்தைச் சிறுபத்திரிகைகள் பின்பற்ற வேண்டும் என்று தனித்துச் சொல்ல வேண்டியதில்லை. ஊரறிந்தவர்களைப் பற்றி ஆதாரமில்லாமல் குற்றச்சாட்டுக்களை எழுதுவது, வணிகப் பத்திரிகைகளில் வெளியிடும் கிசுகிசுக்களைப் போன்று, மற்றவர்களுடைய வாழ்க்கையில் உள்விவகாரங்களைத் தெரிந்து கொள்ள ஆசைப்படும் வாசகர்களுக்குத் தீனி போடுவதுதான். சாவித் துவாரத்தின் வழியே அடுத்த வீட்டுக்குள் நடப்பதைப் பார்க்கும் மனப்போக்குத்தான்.

தெ. பொ. மீ., மு. வ. என்ற இருவரின் சாதிச் சார்பு பற்றிய கேள்வி – பதிலை வெளியிட்டதில் காலச்சுவடு ஆசிரியர் குழுவுக்கும் பொறுப்பு உண்டு. என்னுடைய நேர்காணலில் சில பகுதிகளை வெட்டியெறிந்த ஆசிரியர் குழு, அவற்றில் ஒன்றுக்குப் பதில் இந்தக் கேள்வி – பதிலை வெட்டியிருக்கலாம். நேர்காணலின் போதே "இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல விரும்பவில்லை" என்று சொல்லிவிடலாம் என்று ஒரு கணம் நினைத்தேன். அதனால் கேள்வி மட்டும் வாசகர் மனதில் நின்று நிஜமாகி விடும் அபாயத்தை உணர்ந்ததால் பதில் சொன்னேன்.

சலபதி நான் இந்தப் பிரச்சினையில் "பட்டுக்கொள்ள விரும்பாததால்" மேற்கொண்டு தொடரவில்லை என்கிறார். நல்ல காலம். என்னுடைய தயக்கத்துக்குக் காரணம் இரண்டு. ஒன்று 'அண்ணாமலை சொல்கிறார்' என்பது மட்டுமே சொன்ன விஷயம் உண்மை என்றோ பொய் என்றோ காட்ட ஒரு வாக்கு ஆகிவிடக் கூடாது என்ற எண்ணம். பேராசிரியர்களின் சாதிச் சார்பு பற்றிக் காட்ட என்னிடம் ஆதாரம் இல்லை. மற்றொரு காரணம், சாதிச் சார்பு எப்படித் தமிழாய்வைப் பாதித்தது என்று எனக்குப் புரியவில்லை. இன்றைய தமிழாய்வின் நலிவுக்கு இரண்டு பேராசிரியர்களின் உதவியால் கல்வி நிறுவனங்களில் தமிழாசிரியர் ஆனவர்கள் காரணம் என்று ஆதாரத்தோடு காட்டும் எந்த ஆய்வும் எனக்குத் தெரியவில்லை. இது ஒரு கருதுகோள் என்றால், ஓர் ஆய்வு மாணவன் இந்தக் கேள்வியை எடுத்துக்கொண்டு, தரவுகள் சேர்த்து, கருதுகோள் சரி அல்லது தவறு அல்லது இருக்கலாம் என்று நிறுவ வேண்டும். தனி மனிதர்களின் வாக்குகளைச் சேர்த்து மட்டும் அவன் ஒரு முடிவுக்கு வர முடியாது. தமிழாய்வின் நலிவிற்குத் தனி மனிதர்களின் செயல்களைவிடத் தமிழ்நாட்டின் அரசியல், சமூகச் சூழல் முக்கியமான காரணம் என்பது என் கருத்து.

ராமகிருஷ்ணனின் எதிர்வினையைச் சலபதி தனிநபர் கோணத்தில் பார்ப்பதால், அவருடைய பதிலில், பின்னணி ஒன்றும் தெரியாமலேயே க்ரியாவின் மீது ஒரு குற்றச்சாட்டை ஆதாரமின்றிச் சுமத்துகிறார். அந்த நிறுவனத்தின் சில வெளியீடுகளைக் கொச்சைப்படுத்துகிறார். இன்றைய தமிழின் சமூகக் கூறுகள் பற்றி, நான் எழுதி ஆங்கிலத்தில் வெளியிட்டிருக்கும் கட்டுரைகளின் தொகுப்பை க்ரியா வெளியிடுவதற்குமுன் 'திருத்தித் தருகிறேன்' என்று சொல்லி நான் தான் வேறு வேலைகளால் இன்னும் கொடுக்காமல் வைத்திருக் கிறேன். அவர் அலுக்காமல் என்னைக் கேட்டுக்கொண்டேயிருக்கிறார். "இந்த ஆண்டு முடிவதற்குள் தருகிறேன்" என்று சொல்லியிருக்கிறேன்.

நேர்காணலின் தன்மையையும் நோக்கத்தையும் அமைப்பையும் பற்றிய ஓர் ஆரோக்கியமான விவாதம், ராமகிருஷ்ணன் – அண்ணாமலை என்ற இரண்டு நபரின் உறவு பற்றிய கணிப்பாக இறங்கிவிட்டது. இதை நான் சலபதியிடம் எதிர்பார்க்கவில்லை. நான் சாமியுமல்ல, ஜோதியுமல்ல, மற்றவர்கள் நெருங்காமல் இருப்பதற்கு; ராமகிருஷ்ணன் பூசாரியுமல்ல, திரை போட்டு மறைப்பதற்கு. இருவரும் தமிழின் மீது அக்கறை கொண்ட இரண்டு மனிதர்கள். தமிழ் மொழியின் நடப்புப் பற்றியும், தேவை பற்றியும் இருவருடைய பல கருத்துகள் ஒத்திருப்பதால் சேர்ந்து சில காரியங்களைச் செய்கிறோம். இது ஒருவரிடமிருந்து ஒருவர் இலாபம் பெறுகிற விஷயமல்ல.


படிப்பகம்

www.padippakam.com





தமிழ்நாட்டில் எந்த அரசியல் சர்ச்சையிலும் எதிர்க்கட்சி எதிரிக் கட்சியாவது கண்கூடு. தமிழ்நாட்டின் அறிவுஜீவிகளின் முகமாகத் தங்களைக் காட்டிக்கொள்ளும் சிறு பத்திரிகைகளில் எதிர்வினையை எதிரிவினையாகப் பாவிப்பது தமிழர்களுக்குத் தலைகுனிவு. ■

### விளக்கம்

பேராசிரியர் இ. அண்ணாமலையை ஆ.இரா. வேங்கடாசலபதி பேட்டி கண்டு பதிவுசெய்தது ஜூலை 2003இல். நேர்காணல் பிரசுரமானது ஜூலை 2004 இல். இடைப்பட்ட ஓராண்டுக் காலத்தில் சலபதியும் அண்ணாமலையும் பலமுறை மின்னஞ்சல் மூலம் இந்நேர்காணல் குறித்துக் கலந்துரையாடியிருக்கிறார்கள். நேர்காணல் படியினை அண்ணாமலைக்கு அனுப்பிவைத்தோம். அதில் அவர் ஏராளமான வரிகளைச் சேர்த்தும் பல திருத்தங்களைக் குறிப்பிட்டும் அனுப்பினார். அந்த வரிகள் மற்றும் திருத்தங்களுடன்தான் நேர்காணல் வெளியாயிற்று. அண்ணாமலை தற்போது தெரிவித்துள்ள எதிர்மறையான கருத்து எதையும் இந்த ஓராண்டுக் காலத்தில் எந்தத் தருணத்திலும் தெரிவிக்கவில்லை. க்ரியா ராமகிருஷ்ணன் மற்றும் க்ரியாவில் பணி புரியும் ஆசைத்தம்பி ஆகியோரின் பார்வையில் பட்ட குறைகள் தற்போதுதான் அவர் கண்ணிலும் படுகின்றன. ஒப்புதலுக்காக அனுப்பிய போது அவருக்கு எதுவுமே தவறாகப் படவில்லை. ஞானோதயம் யாருக்கும் எப்போதும் வரலாம். ஆனால் ஒரு பிரதியைப் பிரசுரிக்கும்போது இத்தகைய ஞானோதயங்களை ஊகித்து எடிட் செய்யும் சோதிடத் திறன் எங்களுக்கு இல்லை என்பதை ஒப்புக்கொள்கிறோம்.

பேராசிரியரின் ஆளுமை, பங்களிப்பு, கருத்துலகம் ஆகியவற்றை விரிவான முறையில் வெளிப்படுத்திய நேர்காணலில் இட நெருக்கடி காரணமாக நீக்கப்பட்ட சில பத்திகள் குறித்துக் காலம் கடந்து கோபத்தை வெளிப்படுத்தும் பேராசிரியர் நேர்காணல் குறித்த காலச்சுவடின் பொறுப்பையும் நினைவுபடுத்துகிறார். தான் வெளியிடும் ஒவ்வொரு வரிக்குமான பொறுப்பை உணர்ந்தே காலச்சுவடு செயல்பட்டுவருகிறது. 15 மாதங்களுக்கு முன்பு பதிவுசெய்யப்பட்ட, ஐந்து மாதங்களுக்கு முன்பு அவர் கவனமாகப் பரிசீலித்து, வெளியிட அனுமதித்த தனது நேர்காணலுக்கு இப்போது பொறுப்பேற்க மறுப்பது பேராசிரியர்தான். தனது நூல் பிரதியை க்ரியாவிடம் பிரசுரத்திற்கு கொடுத்திருப்பதாகப் பல ஆண்டுகளாக அண்ணாமலை தன்னிடம் கூறிவருவதாகச் சலபதி தெரிவிக்கிறார். ராமகிருஷ்ணனின் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் அண்ணாமலையின் கடிதம் இத்தகவலை மறுக்கும்போது வருத்தப்படுவதைத் தவிர வேறு வழியில்லை.

ஆசிரியர் குழு

## பெரியார் – 125



'காலச்சுவடு' செப்டம்பர் இதழ் பெரியார் – 125 மணவாசமுள்ள மலர்களைக் கொண்டுள்ளது. பெரியாரின் பன்முகத் தொண்டுக்குக் காலச்சுவடு சூட்டியுள்ள மலர்மாலை! இயக்கங்கள் சாராத படைப்பாளிகள் பார்வையில் பெரியாரைக் காண முடிகிறது. பாராட்டுகள்.

பெரியாரைப் பற்றி ஏழுபேர் ரோஜா, மல்லிகை, முல்லை, பாரிஜாதம் என மணமுள்ள மலர்களைச் சூட்டியுள்ளனர். ஆனால் எட்டாவது ஆள் (சூரிய குமாரன்?) பெரியாருக்கு எருக்க மாலையைச் சூட்டியுள்ளார். எருக்கம் பூவும் ஒரு பூதானே என்று கொள்வோம்.

அந்த எட்டாவது ஆள், பெரியாரின் ஆளுமையைச் சிதைத்து, தன் வழிபடு நாயகரைத் தூக்கிப் பிடிக்கவே தொடர்ந்து முயன்றுவருகிறார்.

பெரியார் மட்டும் இந்த மண்ணில் பிறந்து தன் பங்களிப்பைச் செய்யாமல் இருந்திருந்தால், இன்று பெரியாரைக் கேவலப்படுத்த நினைக்கிறவர்களின் கைகளில் பேனா இருந்திருக்காது! அவர்களின் குலத்தொழில் கருவிகள் தான் இருந்திருக்கும் என்பதை மறந்துவிடுகிறார்கள்!

அந்த எட்டாவது ஆள் ஒரு வக்ர புத்தியுள்ளவரோ? 'காலச்சுவடு' ஆகஸ்டு 2004 இதழில் பாப்லோ நெருடாவைப் பற்றி எழுதவந்தவர், அவர் ஒரு காமுகன், கழிவறை கழுவ வந்த பெண்ணைக் கூடக் கற்பழித்தார் என்று, நெருடாவின் நூற்றாண்டு விழாச் சிந்தனையில் அவரைக் கேவலப்படுத்தியுள்ளார்.

இப்போது, பெரியாரின் அரும் பணிகளையெல்லாம் விட்டுவிட்டு, அவர் நிர்வாண சங்க உறுப்பினர்களோடு நிற்கும் படத்தை வெளியிட்டுள்ளார். இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால், தன் வழிபடு நாயகரைத் தவிர, மற்றவர்களையெல்லாம் கேவலப்படுத்துவதே அவருடைய இயல்பாகும்.

கன்றுகளை அவிழ்த்துவிட்டால் புல் மேயப் போகும்! பன்றிகளை அவிழ்த்துவிட்டால் மலம் தின்னத்தானே போகும்!

அது பன்றியின் தவறல்ல; நல்ல தீனியைக் கொடுத்து நல்வழிப்படுத்துவோம்!

'முகம்' மாமணி
சென்னை 600 078

விதவைப் பெண்கள் அனுபவிக்கும் கொடுமைகளைக் கண்டு கொதித்தெழுந்து பெரியார் தெரிவித்த பல கருத்துக்களில் ஒன்றை மட்டும் மேற்கோள் காட்டி அவரைக் கொச்சைப்படுத்த முயலும் கட்டுரையாசிரியரைக் கண்டு பரிதாபம்தான் ஏற்படுகிறது.

தந்தையின் உயிர் பிரியும் தறுவாயிலும் மனைவியுடன் சிற்றின்பம் நுகரத் துடித்த இளைய மகாத்மாவின் நடத்தையைக் கொண்டே அவரைக் காமாந்தகாரர் என்று முடிவுகட்டும் அரைவேக்காட்டுத்தனம்தான் பெரியாரின் முற்பகுதி வாழ்வில் அவரே ஒத்துக்கொண்டு வெளியிட்ட காவிரியாற்று மணல் சம்பங்களின் அடிப்படையில் அவரைப் பற்றிய கருத்தை உருவாக்க முயல்வதில் தெரிகிறது.

'குடும்பம், சொத்துடைமை, அரசு' பற்றி நீண்ட காலக் கண்ணோட்டத்துடன் மார்க்சியவாதிகள் கூறிய கருத்துகள் போன்றதே பெரியார் திருமணம் பற்றிக் கூறிய கருத்துகளுமாகும். அம்பேத்கர் போன்ற மாபெரும் மனிதர்களின் வாழ்வின் பிற்பகுதியில் அவரது தனிவாழ்வில் நடந்தவற்றை இன்னும்கூடப் பலரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டும்.

ஐ. செயராமன்
மதுரை 625 010



படிப்பகம்

www.padippakam.com



மக்கள் இன்று விமர்சிப்பவராக இருந்தாலும், விரும்புவராக இருந்தாலும் பெரியார் இன்று உலகில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளார். இதை அவரின் 125ஆம் பிறந்த நாளில் வரும் பத்திரிகைகள் பறைசாற்றுகின்றன. அவற்றில் சிந்தனையாளன், காலச்சுவடு போன்ற பத்திரிகைகளையும் குறிப்பிடலாம்.

பெரியார் கொள்கைகளை வென்றெடுக்கும் நாளே நம் விடுதலைநாள் என்று சிந்தனையாளன் பத்திரிகை பாராட்டுகிறது. பொதுவான திருமணம் தொடர்பாகவும், பெண்கள் தொடர்பாகவும், பெரியார் வெளியிட்ட கருத்துகளைக் குடியரசு, விடுதலை போன்ற நாளேடுகளில் இருந்து திரட்டிப் பெண்ணுரிமை குறித்த பெரியாரின் கருத்துக்கள் போலியானவை அவர் பிழையானவர் என்று சுட்டிக்காட்டிக் காலச்சுவடு பத்திரிகை கட்டுரை வெளியிடுகிறது. அந்த விவாதத்திற்கு விளக்கம் தர வேண்டியது பெரியாரின் சீடர்கள் ஒவ்வொருவரின் கடமையாகும்.

முதல் மனைவியான நாகம்மை, பெரியாருக்குத் திருமணத்திற்குப் பின்னரே பழகியவர். எனவே பொதுநலனில் அவரின் ஒத்துழைப்பு பின்னர்தான் தெரியவருகிறது. ஆனால் இரண்டாவது மனைவியான மணியம்மை பொதுவாழ்வில் பழகியதற்குப் பின்பு விரும்பி மறுமணம் செய்யப்பட்டவர்.

இதை வைத்துப் பார்க்கும்போது தன் தாயார் இறந்தபோது அவர் மகிழ்ந்ததற்குக் காரணம் அவர் சொல்லாமலே தெளிவாகத் தெரிகிறது. எங்கே மீண்டும் தனக்கு நாகம்மை போல் மனைவி கிடைத்துவிடுவாரோ என்று, ஒரு முறை பாலில் சூடுபட்ட பூனை மீண்டும் பாலைக் கண்டு பயப்படுவதைப்போல் பயத்தில் வந்த மகிழ்ச்சி அது. எனவே அதைக் காரணம் காட்டி அவர் எப்படி மறுமணம் செய்து கொண்டார் என்பது வியப்பானது.

". . . பெண்களின் விடிவிற்கும் பெரியாரை முன்னிறுத்துபவர்கள் பெண்களுக்கு மட்டுமல்ல ஒட்டுமொத்த சமூகத்துக்கும் கேடு விளைவிக்கிறார்கள் என்றே கூறத் தோன்றுகிறது." எனப் பெரியாரைப் பற்றி எங்கெல்லாமோ சுற்றிவந்து கடைசியில் பெண்ணுரிமை பிரச்சினையில் பெரியாரை முன்னிறுத்துபவர்களை சாடி முடித்திருக்கிறார் ரவிக்குமார்.

பெரியார் மீது இத்தனை கணைகளைத் தொடுத்த அவரிடம் ஒரே ஒரு கேள்வி. புத்த மதத்தைத் தோற்றுவித்தவர் புத்தர். அவருக்குப் பின்னால் எத்தனையோ புத்த பிட்சுக்கள் உள்ளனர். அந்த புத்த பிட்சுக்கள் கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற பெருங் குற்றங்களிலும் ஈடுபட்டுள்ளனர். அப்படி என்றால் புத்தரின் கருத்துகள் உண்மையான கடப்பாட்டிலிருந்து பிறந்தவையல்ல என்ற முடிவுக்கு வந்துவிட முடியுமா?

**மு. பெரியார் பேரன்**
நெய்வேலி 607 803

ரவிக்குமார் கட்டுரையின் முக்கிய அம்சங்கள்:

(1) பெரியாரின் போதனைக்கும் அவரது வாழ்க்கைக்குமான இடைவெளி பாரதூரமானது. விதவைகள் பிரச்சினையை வெறும் பாலுணர்வு பிரச்சினையாகப் பார்த்தது போலவே, அவரது பெண்ணுரிமை தொடர்பான கருத்துகளும் பெரிதும் அதிர்ச்சி மதிப்புக்காக உதிர்க்கப்பட்டவை.

(2) பெரியார் அயலகத்தில் நிர்வாண சங்கத்துடன் கொண்ட ஈடுபாடு என்பது அவரது மைனர் கால காவிரி யாற்றங்கரைத் திருவிளையாடல்களின் ஞாபகங்களின் எச்சங்கள்.

விதவைகள் பிரச்சினையைப் பெரியார் அளவுக்குப் படிக்காத மக்களிடம் கொண்டு சென்ற இன்னொரு தலைவர் இந்தியாவில் இல்லை – அம்பேத்கர் உள்பட. சில தலைவர்கள் சட்டம் இயற்ற அதிகார வர்க்கத்திடம் போராடினர். சிலர் புத்தகம் எழுதினர். சிலர் அறிவாளிகளிடத்தில், வைதிகர்களிடத்தில் பேசினர். பெரியார்தான் நாகர்கோயிலிலும், குற்றாலத்திலும் போய்ப் படிக்காத மக்களிடம் பேசினார். விதவைப் பிரச்சினையை மதப் பிரச்சினையாக, மூடநம்பிக்கையாக, சமூக ஒழுக்கம் சார்ந்த பிரச்சினையாகப் பார்த்தார். மொத்தத்தில் சமூகப் பிரச்சினையாகப் பார்த்தார். பேசிவிட்டு, நகத்தைக் கடித்துக்கொண்டு போய்விடவில்லை. மாற்றுவது, எப்படியும் மாற்றுவது. அதுதான் அவர் வேலை. விதவைகளை, விதவைகளாகவே கட்டிக் காக்கும் இந்து மதத்தைச் சொறிகல்லால் அடித்து நொறுக்கினார்.

பெரியாரின் போதனைகளுக்கும், அவருடைய அந்தரங்க வாழ்க்கைக்குமான இடைவெளி மிகக் குறுகியது. ஆனால் அது வெளிப்படையானது. கொஞ்சம்கூட ஈவிரக்கமில்லாமல், தற்சார்பற்ற சுய பரிசீலனைக்கு உள்ளானது அது. வருத்தத்தோடும், வெட்கத்தோடும், சில சமயம் அவமானத்தோடும் அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது. இவற்றிலிருந்தும் செய்தியைப் பிரித்தெடுக்க முடிகிற ஒப்புதல் வாக்குமூலங்கள் இவை. லட்சியங்களுக்கும் நிகழ்கால யதார்த்தங்களுக்குமான இடைவெளி அது. புரட்சிகரத் தனி மனிதனாலும் கடக்க முடியாத வெளி அது. போதனைக் கான தேவையின் நியாயத்தை வலி யுறுத்தும் யதார்த்த சாட்சியாகும் வெளி அது. நடுரோட்டில் மனிதர்கள் இயங்கக் கூடாது என்று சொல்பவன், நடுரோட்டில் நின்றுதான் அதைச் சொல்ல வேண்டியிருக்கிறது. பெரியார், நடுரோட்டில் நிற்க வேண்டியிருக்கிறதே என்று வெட்கத்தோடு ஒப்புக்கொண்டவர். லட்சிய நிறைவேற்றத்திற்குத் துணையாகும் விலகல் இது.

சிறந்த நாவல் வரிசை – 7
இடையர்களின் வாழ்க்கை



**கீதாரி**
சு. தமிழ்ச்செல்வி

விலை ரூ. 70

மனிதகுலத்தின் நெடிய வரலாறெங்கும் காணக் கிடைக்கும் தீராத அலைச்சலும் மனக்கொதிப்பும் வாழ்தலுக்கான வேட்கையும் இயற்கை தன்னுள் வைத்திருக்கும் உயிர்களுக்கான ஆறுதலும் இப்புனைவின் பரப்பெங்கும் உக்கிரம் கொண்டுள்ளன.

**மருதா**
226 (188), பாரதி சாலை,
ராயப்பேட்டை, சென்னை 600 014.

விளம்பரம்

நிர்வாண சங்க ஈடுபாட்டைப் பற்றிய ரவிக்குமாரின் கருத்து ஆபாசமானது. 1950களில் 'நாயக்கரின் லீலைகள்' என்று ஒரு ஆபாசமான புத்தகம் வந்தது. அதுபோல்தான் இதுவும். கேள்விகளுக்குப் பதில் சொல்லலாம்; சந்தேகங்களுக்கு விளக்கம் தரலாம்; நிராகரிப்புகளைத் திரஸ்கரிக்கலாம்; தூற்றல்களை மௌனத்தால் எதிர் கொள்ளலாம்; உள் நோக்கம் கற்பிப்பதை மறுக்கலாம்; அவதூறுகளைச் சட்டத்தாலோ, சாமர்த்தியத்தாலோ சமாளிக்கலாம் ஆனால் ஆபாசங்களை என்ன செய்வது?

தலித்துகளுக்கு எதிராகப் பிற்படுத்தப்பட்டவரை நிறுத்தும் அரசியல் முயற்சியில் அறிவுஜீவிகள் சிலர் சில காலமாக ஈடுபட்டு வருகிறார்கள். அதில் இதுவுமொன்று. காலச்சுவடு, ரவிக்குமாரைப் பயன் படுத்திக்கொள்கிறது என்றொரு குற்றச்சாட்டு உள்ளது. ரவிக்குமார் காலச்சுவட்டைப் பயன்படுத்திக்கொண்டுள்ளார். காலச்சுவடு அதைத் தவிர்த்திருக்கலாம்.

**பழ. அதியமான்**
சென்னை 600 004

ராஜ் கௌதமனின் கருத்துரைக்கான எனது எதிர்வினை:

www.padippakam.com



சீனம் தனது மண்ணுக்கும் மரபுக்கும் ஏற்ற விதத்தில் மார்க்சியத்தை மாவோயிசமாக்கிப் புரட்சிகரமான மாற்றங்களைச் சாதித்த மாதிரி, இங்கே சாதிய இந்தியச் சமூகத்தை மாற்றுவதற்கு ஏற்ற விதத்தில் மார்க்சியத்தைச் செயல்படுத்தப் பெரியாரியம் சீரிய பணியாற்ற முடியும் என்பது காலங்கடந்து புரிந்தது என்று ராஜ்கௌதமன் எழுதியுள்ளார். இது, பொதுவுடையாளர்களின் செயல்பாடுகள் மீதான விமர்சனமாகவே எமக்குத் தெரிகிறது. சீனச் சூழல் பற்றி விவரிக்க வேண்டிய அவசியம் இப்பொழுது தேவையில்லாததால் பெரியார் இயங்கிய இந்தியாவைப் பற்றி அல்லது தமிழகத்தைப் பற்றி யோசித்தபொழுது ராஜ் கௌதமன் மார்க்சியத்திற்கும் ஒடுக்கப்பட்ட, உழைக்கும் மக்களுக்கும் துரோகமிழைக்க முயல்கிறார் எனத் தோன்றுகிறது.

தமிழ்நாட்டில் உள்ள பெரும்பான்மை விவசாய உற்பத்தி நிலங்கள் சென்ற நூற்றாண்டின் துவக்கத்திலிருந்தே, பிராமண, வேளாள, இடைச் சாதியினரிடம்தான் இருந்து வருகின்றன. நிலவுடைமைச் சுரண்டல், சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் தலித் மக்கள் பெரும்பான்மையினராக உள்ள விவசாயத் தொழிலாளர் மீதுதான் மையம் கொண்டிருந்தது. சாணிப்பால், சவுக்கடிகளை எதிர்த்துப் பொதுவுடமையாளர்கள் போரடியபோது பிராமண நிலச்சுவான்தார்களுக்கு இணையான ஒடுக்கு முறையைத்தான், வேளாள இடைநிலை நிலச்சுவான்தார்கள் கட்டவிழ்த்து விட்டார்கள். கூடுதலாக ஒருபடி நெல்லை விவசாயத் தொழிலாளர்கள் கேட்டதற்கு வெண்மணியில் 44 உயிர்களை வேக வைத்தவர்கள் யார்? அதனைக் கண்டு பெரியார் மௌனமாக இருந்தது ஏன் என்ற கேள்விக்கு இதுவரையிலும் பதிலில்லை.

ஆங்கில ஆட்சி, விளிம்பு நிலை மக்களின் சுதந்திர வேட்கையைத் தணிப்பதற்காகக் கொண்டுவந்த குற்றப் பரம்பரைச் சட்டத்தை எதிர்த்துப் பெரியார் போராடாமல் மௌனம் சாதித்ததற்கான (இதில், தலித், பழங்குடியினர், அடக்கம்) காரணம் இதுவரையிலும் கூறப்படவில்லை. மாறாக, குற்றப் பரம்பரைச் சட்டத்தை எதிர்த்துப் பொதுவுடைமையாளர்கள் போராடினார்கள் என்பது வரலாற்று உண்மை.

தமிழகத்தில் தொழில் துறையில் வளர்ந்து வந்து கொண்டிருந்த இடை நிலைச் சாதியினரின் (செட்டியார், நாடார், கவுண்டர், நாயுடு) தொழிற்சாலைகளில், தொழிலாளர்களுக்கான கோரிக்கைகளுக்காகப் பொதுவுடைமையாளர்கள் போராடியபொழுது திராவிடக் கழகங்களும் பெரியாரும் யாருடைய நலனில் அக்கறை கொண்டவர்களாக விளங்கினார்கள்?

பெரியார் மேற்கூறிய சமூகத்தைச் சேர்ந்த முதலாளிகளை ஆதரித்துத் தமிழ்நாட்டில் ஒடுக்கப்பட்ட உழைக்கும் மக்களுக்குச் சமூக – பொருளாதார, அரசியல் விடுதலையைப் பெறுவதற்கு முயற்சி செய்தாரா? இல்லை. மாறாக, அவர்களின் பிரதிநிதியாகத்தான் பெரியார் செயல்பட்டார். ஏகாதிபத்திய ஆதரவு, நிலச்சுவான்தார்களுக்கு ஆதரவு, தமிழ்த் தேசிய முதலாளிகளுக்கு ஆதரவு. இவ்வகை ஆதரவற்ற, பெரியார் ஒருபோதும் தமிழகத்தில் சுயத்தோடு இயங்கவில்லை. அவர் கூறிய பொது உரிமையும்கூட தமிழ்த் தேசிய மூலதன சக்திகளுக்கும். ஆதிக்க நிலவேந்தர்களுக்கும்தான். ஒருபோதும் மூலதனத்திற்கு எதிரான போராட்டத்திற்கும் மார்க்சீயத்திற்கும் சமூக மாற்றத்திற்கும், பெரியாரியம் உதவாது என்பதை நிகழ்காலம் நிரூபித்துவருவதைத் திட்டமிட்டு மூடிமறைத்து வக்காலத்து வாங்குகிறார் ராஜ் கௌதமன்.

ரவி சேகரன்
மதுரை 625 006.

பெரியார் குறித்த விவாதக் கருத்துகளுக்கான எதிர்வினை அடுத்த இதழில் வெளியாகும்.
ஆசிரியர் குழு.

இனிய உதயம்
மாத நாவல்
தமிழில் முதல் முயற்சி
3-ஆம் ஆண்டில் உதயத்தின் வெற்றிப் பயணம்!
பிறமொழி. பிறநாட்டு இலக்கியங்களைத் தமிழுக்குக் கொண்டுவரும் பாரதியின் கனவை நனவாக்கும் இலக்கியப் பணி!

ஒவ்வொரு மாதமும் தலைசிறந்த இலக்கியத் தரம்வாய்ந்த பிறமொழி நாவல்!
மற்றும்
- சாதனை படைத்த இலக்கியவாதிகளின் சூடு பறக்கும் விரிவான பேட்டி...
- கவிதைகள்
- காரசாரமான விமர்சனங்கள்

விவரங்களுக்கு
சாருபிரபா பப்ளிகேஷன்ஸ்,
105, ஜானி ஜான்கான் சாலை,
இராயப்பேட்டை, சென்னை-600 014.
தொலைபேசி : 28484242, 28487858
விளம்பரம்



படிப்பகம்

# சாகித்திய அக்காதெமி

CELEBRATING FIFTY YEARS (1954-2004)

குணா காம்ப்ளக்ஸ், மெயின் பில்டிங், இரண்டாவது தளம், (பின்புறம்), 443 (ப.எண்.304), அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை 600 018. *தொலைபேசி: 24354815 / 24311741*

## பிற நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | பிளேட்டோவின் குடியரசு | 200 |
| 2. | இரவீந்திரர் கட்டுரைத் திரட்டு தொகுதி – I | 280 |
| 3. | இரவீந்திரர் கட்டுரைத் திரட்டு தொகுதி – II | 220 |
| 4. | இரவீந்திரர் குழந்தை இலக்கியம் | 70 |
| 5. | விவேகானந்தர் | 60 |
| 6. | மகாகவி பாரதியார் கட்டுரைகள் | 100 |
| 7. | வான்மீகி | 25 |
| 8. | ஜீவானந்தம் | 80 |
| 9. | கோட்யா | 50 |
| 10. | தமிழ் பக்தி இலக்கியம் | 165 |

## நாவல்கள் மற்றும் தொகுப்புகள்

| | | |
|---|---|---|
| 1. | இன்றைய இந்திய இலக்கியம் | 240 |
| 2. | கயிறு – பாகம் I | 240 |
| | " II | 200 |
| | " III | 200 |
| 3. | சேரி | 200 |
| 4. | செம்மீன் | 120 |
| 5. | இரண்டாம் இடம் | 140 |
| 6. | அக்கினி சாட்சி | 60 |
| 7. | கபீர் அருள் வாக்கு | 65 |
| 8. | இராமலிங்க வள்ளலாரின் அருட்பா அமுதம் | 110 |
| 9. | வெட்டவெளி வார்த்தைகள் | 50 |
| 10. | தத்வமஸி | 200 |
| 11. | பருவம் | 350 |
| 12. | யுகத்தின் முடிவில் | 100 |
| 13. | கன்னட தலித் இலக்கியம் | 90 |
| 14. | வாழ்க்கைப் போராட்டம் | 90 |
| 15. | மணி மகேஷ் | 70 |
| 16. | ஒரு கிராமத்தின் கதை | 350 |
| 17. | நில அதிர்வுமானிகளே நன்றி | 250 |
| 18. | அற்றது பற்று | 65 |
| 19. | சதுரங்கக் குதிரைகள் | 220 |
| 20. | உதிரும் இலைகளின் ஓசை | 180 |
| 21. | இரண்டு படி | 50 |
| 22. | மக்கள் குரல் | 75 |
| 23. | ஒரு புதிய கதை | 100 |
| 24. | போராட்டம் | 150 |
| 25. | தமஸ் | 150 |
| 26. | இதயவிழிகள் | 140 |

## சிறுகதைகள்

| | | |
|---|---|---|
| 1. | கு. அழகிரிசாமி கதைகள் | 275 |
| 2. | சிறுகதைக் களஞ்சியம் | 100 |
| 3. | தமிழ்ச் சிறுகதைகள் | 80 |
| 4. | நவீன தமிழச் சிறுகதைகள் | 120 |
| 5. | ஹிந்திச் சிறுகதைத் தொகுப்பு | 180 |
| 6. | ஹிந்திச் சிறுகதைகள் | 100 |
| 7. | குஜராத்திச் சிறுதைகள் | 80 |
| 8. | மலையாளச் சிறுதைகள் | 70 |
| 9. | தெலுங்குச் சிறுதைகள் | 240 |
| 10. | பிரேம் சந்தின் சிறந்த சிறுகதைகள் I | 50 |
| 11. | தற்கால இந்தியச் சிறுகதைகள் பாகம் I | 50 |
| | " II | 110 |
| | " III | 90 |

## இந்திய இலக்கியச் சிற்பிகள் – ஒவ்வொன்றும் விலை: ரூ. 25/–

1. தேவநேயப்பாவாணர்
2. அறிஞர் அண்ணா
3. மு. வரதராசனார்
4. நா. பார்த்தசாரதி
5. தொல்காப்பியர்
6. அவ்வையார்
7. விவேகானந்தர்
8. மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை
9. மறைமலை அடிகள்
10. கி. வா. ஜ.
11. திரு. வி. க.
12. பட்டுக்கோட்டை
13. வ. சுப. மாணிக்கம்
14. பெரியாழ்வார்
15. நாவலர் சோமசுந்தர பாரதியார்
16. ஜாகிர் உசைன்
17. ச. து. சு. யோகியார்
18. தூரன்
19. அகிலன்
20. வ. வே. சு. ஐயர்
21. எஸ். இராதாகிருஷ்ணன்
22. அம்பேத்கர்
23. பாரதியார்
24. நாமக்கல் கவிஞர்
25. தமிழ்த்தாத்தா உ. வே. சா.
26. கல்கி
27. விந்தன்
28. நா. வானமாமலை
29. சோ. ம. லெ.
30. உமறுப்புலவர்
31. செய்குத்தம்பிப் பாவலர்
32. வை. மு. கோதைநாயகி அம்மாள்
33. ந. பிச்சமூர்த்தி
34. கா. சுப்பிரமணிய பிள்ளை
35. ஜீவா
36. நாரண துரைக்கண்ணன்
37. உடுமலை நாராயணகவி
38. வான்மீகி
39. ஜெகசிற்பியன்
40. கோபாலகிருஷ்ண பாரதியார்
41. காரைக்கால் அம்மையார்
42. செய்குத்தம்பி பாவலர் ரூ. 25
43. குலசேகராழ்வார்
44. அ. மாதவையா
45. க. நா. சு.
46. மகாகவி ஸ்ரீ ஸ்ரீ
47. நம்மாழ்வார்
48. செ. ப. நரசிம்மலுநாயுடு

| | |
|---|---|
| குரு நானக் | ரூ. 15/– |
| வள்ளத்தோள் | ரூ. 15/– |
| டி.கே.சி | ரூ. 15 |
| புதுமைப்பித்தன் | ரூ. 15/– |
| வ.ரா. | ரூ. 15/– |
| கு.ப.ரா | ரூ. 15/– |
| தெ.பொ.மீ. | ரூ. 45/– |
| ஜீவானந்தம் | ரூ. 80/– |
| காளிதாசர் | ரூ. 90/– |
| தாகூர் | ரூ. 65/– |
| புரட்சிக்காரன் | ரூ. 60/– |

**புத்தக விலையை M.O. செய்தால் எங்கள் செலவில் புத்தகங்களை அனுப்புவோம். நேரில் வந்தால் 10% தள்ளுபடி. விற்பனையாளர்களுக்குச் சலுகைகள் உண்டு**

விளம்பரம்

www.padippakam.com





# லால்குடியின் 75ஆம் வயலின்

பிரம்மராஜன்



**வ**யலின் இசைக் கலைஞர் லால்குடி ஜி. ஜெயராமனுக்கு இப்போது 75 வயதாகிறது. செப்டம்பர் மாதம் 17ஆம் தேதி 1930ஆம் ஆண்டு ஸ்ரீ கோபால ஐய்யரின் மகனாகப் பிறந்தார். லால்குடி ஜி. ஜெயராமன் அவர்களை நேரில் பார்த்து நிதானமாகச் சில வார்த்தைகள் பேசும் வாய்ப்பு 1998ஆம் ஆண்டு ஒரு புத்தக வெளியீட்டு விழாவின்போது வாய்த்தது. அவரிடம் ஒரு ஆட்டோகிராஃப்கூட வாங்கினேன். நான் லால்குடியின் இசையைக் கேட்கத் தொடங்கிய வருடம் 1982 என்று நினைக்கிறேன். பெரும்பாலும் சென்னையிலிருந்து விலகி தூரத்தில் குறுநகரத்தில் வசிப்பதால் நேரடிக் கச்சேரி கேட்கும் வாய்ப்பு எனக்குக் குறைவு. தொடக்கத்தில் எல்.பி. ரெக்கார்டுகள் மூலமாகவும் பிறகு கேஸட் டேப்புகள் வழியாகவும் இப்போது சி.டிக்கள் வழியாகவும் அவருடைய சங்கீதத்தைக் கேட்கிறேன்.

மேற்கத்திய இசைக் கருவியான வயலினைக் கர்நாடக சங்கீதத் திற்குத் தகுந்தவாறு வாசிக்கும் முறையை மாற்றியமைத்து ஏறத்தாழ நம்மூர்க் கருவியைப் போல நாம் புழங்கிவருகிறோம். ஒரு கச்சேரியின் பிரதான பாடகருக்கான பக்க வாத்தியமாக (அ) துணை இசைக் கருவியாக இருந்த வயலின் 60களுக்குப் பிறகு கச்சேரியின் பிரதான வாத்தியமாக மாறியது. அப்படி மாற்றியவர்களில் மிக முக்கியமானவர்களில் ஒருவர் லால்குடி ஜெயராமன். இவருக்குச் சமமாக வயலின் இசையில் சாதனை படைத்தவர்கள் என்று சொல்லக்கூடிய இன்னும் இருவர் எம்.எஸ். கோபாலகிருஷ்ணன் மற்றும் டி.என். கிருஷ்ணன்.

லால்குடி பல மூத்த குரலிசைக் கலைஞர்களுக்கும் (அரியக்குடி ராமானுஜ ஐயங்கார், முசிறி சுப்பிரமணிய அய்யர், ஜி.என். பாலசுப்பிரமணியன், மதுரை மணி அய்யர், சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை, எம்.டி. ராமநாதன், மதுரை சோமு, ராம்நாட் கிருஷ்ணன்) புல்லாங்குழல் இசைக் கலைஞர்களுக்கும் (டி. ஆர். மஹாலிங்கம். என். ரமணி) வீணை இசைக் கலைஞர் களுக்கும் (ஏமனி சங்கர சாஸ்திரி, மைசூர் தொரைசாமி ஐயங்கார், எஸ். பாலச்சந்தர்) பக்கவாத்தியம் வாசித்திருக்கிறார். ஆனால் பெண் குரலிசைக் கலைஞர்களுக்கு அவர் வாசிக்க வில்லை. பெண் குரலின் ஸ்தாயிக்கேற்ப வயலின் ஸ்ருதி சேர்க்கப்படும்போது வயலினுக்கே உரிய இனிமைச் செழுமையை இழந்துவிடுவதாக அவர் கருதியது இதற்கான காரணமாக இருக்க முடியும்.

சாகித்யம் கர்நாடக இசையில் மையப்பங்கு வகிப்பதாலும் மேலதிகமாகக் கச்சேரியே இசைப் பிரதியைச் சார்ந்திருப் பதாலும் ஒரு குரலிசைக் கலைஞர் குறிப்பிட்ட ராகத்திற் கான பாடல் (அ) கீர்த்தனையைக் கற்காது காதில் விழுந்த ஸ்வரங்களை வைத்து இசையை நிகழ்த்து கின்றனர். ஆனால் லால்குடி அப்படிப் பட்டவரல்லர். அவர் வாசிக்கும் எல்லா இசைப் பிரதிகளையும் குரலில் அவரால் பாட முடிந்த பிறகே அவர் அதை வாத்தி யத்தில் வாசிக்கிறார். தொடக்கத்தில் பாடக ராகக் கச்சேரிகள் செய்திருக்கிறார். அவரு டைய வயலின் வார்த்தைகளை ஸ்பஷ்டமாக உச்சரிக்கும் திறன் மிக்கது. எடுத்துக்காட்டாக, 'தீராத விளையாட்டுப் பிள்ளை' என்ற ராக மாலிகையின் இரண்டாவது வரி மீண்டும் வாசிக்கப்படும் சமயம் இதை அவதானிக் கலாம். குரலிசையின் பாணியைப் பின் பற்றிக் கருவி இசையில் வாசிப்பதை ஹிந்துஸ் தானியில் 'காயகி' என்கிறார்கள். அது போன்ற ஒரு சொல்லாக்கம் கர்நாடக இசையில் புழக்கத்தில் இல்லை. ஜெய ராமனின் வாசிப்புப் பாணியில் பாதி குரல் அம்சமும் பாதி வாத்திய அம்சமும் இருப்பதாக இசை விமர்சகர் டாக்டர் என். ராமநாதன் குறிப்பிட்டுள்ளார்.

ஜெயராமன் இசைப் படைப்பாளராக வும் பரிணமித்திருக்கிறார். குறிப்பிடத்தக்க 'தில்லானாக்கள்' மற்றும் 'வர்ணங்கள்' போன்ற இசை உருக்களை எழுதியிருக்கிறார். வர்ணங்கள் கச்சேரியின் தொடக்கத்திலும் தில்லானாக்கள் இறுதியிலும் பாடப்படுகின் றன. 29 தில்லானாக்களையும் 13 தான வர்ணங்களையும் 3 பத வர்ணங்களையும் எழுதியிருக்கிறார். வசந்தா ராகத்தில்



படிப்பகம்

www.padippakam.com



ஜெயராமன் எழுதிய முதல் 'தில்லானா' ஜி. என்.பியின் முழு ஆமோதிப்பைப் பெற்றது. அவர் ஒரு சிறந்த குருவும்கூட. அவரது சகோதரி ஸ்ரீமதிக்கும் மகன் கிருஷ்ணனுக்கும் மகள் விஜிக்கும் வயலின் கற்றுக்கொடுத்திருக்கிறார். பல இசைப் பள்ளிகளுக்கு ஆலோசனைகள் அளிக்கிறார்.

**அவருடைய வயலின் வார்த்தைகளை ஸ்பஷ்டமாக உச்சரிக்கும் திறன் மிக்கது. எடுத்துக்காட்டாக 'தீராத விளையாட்டுப் பிள்ளை' என்ற ராகமாலிகையின் இரண்டாவது வரி மீண்டும் வாசிக்கப்படும் சமயம் இதை அவதானிக்கலாம்.**

ஜெயராமனின் வயலின் கச்சேரியை 'ஸோலோ' இசைக் கச்சேரி என்று வரையறுக்க முடியாதென்பவர்கள் உண்டு. தொடக்கத்தில் ஜெயராமன் தன் சகோதரி ஸ்ரீமதியுடன் சேர்ந்து வாசித்தார். அவரது இக்கட்டத்திய இசை கூடுதலாக எனக்கு நிறைவளிப்பதாக இருந்தது. (ராம கதா என்று தொடங்கும் மத்யமாவதி, நாதலோலுடைய (கல்யாண வசந்தம்), திலங் (தில்லானா), பிறகு அவர் மகன் ஜி.ஜே.ஆர். கிருஷ்ணன் மற்றும் மகள் விஜயலஷ்மி ஆகியோருடன் வாசித்தார். பிறகு அவர் தன் புதல்வர் ஜி.ஜே.ஆர். கிருஷ்ணனைச் சேர்த்துக்கொண்டு பல கச்சேரிகளில் வாசித்திருக்கிறார். மேக்னா சவுண்ட் 1994இல் வெளியிட்ட ஒரு சி. டி கேட்டபோது அவர் தன் புதல்வரை அனுசரித்து மொத்தமான இசையனுபவத்தில் அவரது பங்கின் அழுத்தத்தைக் குறைத்துவிட்டாரோ என்ற மனப்பதிவு ஏற்பட்டது.

தீவிர இசை ரசிகரல்லாதோரும் அணுகும் விதமாக The Dance of Sound என்ற பெயரில் 1978ஆம் ஆண்டு ஓர் இசைத்தட்டு வெளிவந்தது. அவர் சொந்தமாய் எழுதிய தில்லானாக்களை The Dance of Sound என்ற பெயரில் ஓர் இசைக் குழுவுடன் இணைந்து வாசித்தார். 'தில்லானா' என்கிற இசை வடிவம் ஒரு நாட்டிய அரங்கேற்றத்தின்போது பாடப்படும் இன்றியமையாத இசை. கச்சேரியைப் பொருத்தவரை அது 'லேசான' அயிட்டமாகக் கருதப்பட்டுக் கடைசியில் பாடப்படும். ஆனால் அவற்றைப் பிரதானப்படுத்தியது 8 தில்லானாக்கள் கொண்ட ஜெயராமனின் இந்த இசைத்தட்டு. அவற்றை இன்றைக்குக் கேட்டாலும் மனதில் மாயங்களை நிகழ்த்தும் திறன்கொண்டவை. இந்த எட்டில் எனக்குப் பிரியமானவை மோகன கல்யாணி, தேஷ், துவிஜாவந்தி மற்றும் பஹாடி. இத்தில்லானாக்களின் கடினமான தாளப் பிரயோகம் மற்றும் ஸ்வரங்களைக் கையாளும் முறை தேர்ச்சி மிக்கவை. ஆரம்ப காலப் பயிற்சியாளனுக்கு இவை சிரமம் தரக்கூடியவை. என்றாலும் ஒரு கூர்ந்த ரசிகனுக்குக் கலை ஞானத்தின் வேறு அனுபவச் சாளரங்களைத் திறந்து விடக் கூடியவை. 'ஆர்க்கெஸ்ட்ராவை' அவர் தன் துணைக்குச் சேர்த்துக்கொண்டது பற்றி அப்போது சில முணுமுணுத்த விமர்சனங்கள் இருந்தன — தீவிர இசையை அவர் நீர்த்துப்போக அனுமதித்து விட்டதாக. ஆனால் ஜெயராமனின் 'தில்லானாக்களை' கேட்ட அனுபவத்தின் விளைவாய்க் கர்நாடக இசை ரசிகர்களாக மாறியவர்கள் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் இருக்கக்கூடும். இது தவிர 1970இல் வெளிவந்த ஒரு எல்.பியில் அவரே எழுதிய 'திலங்' தில்லானா இடம் பெற்றது.

1983இல் வெளிவந்த South Meets North (An enchanting hour with Lalgudi G. Jayaraman & Ustad Amjad Ali Khan) என்ற இசைத் தட்டின் வழியாக உஸ்தாத் அம்ஜத் அலிகானுடன் சேர்ந்து கர்நாடக இசையின் வயலினையும் ஹிந்துஸ்தானி இசையின் சரோடையும் கேட்க வழி வகுத்தார் லால்குடி. 1 மணி நேரத்திற்கான அந்த இசைத் தட்டில் மால்கோன்ஸும் (ஹிந்தோளம்) பூபாலியும் (மோஹனம்) இடம் பெற்றுள்ளன. வேலூர் ராமபத்ரன் மிருதங்கமும் ஷாபட் அகமத் கான் தப்லாவும் வாசித்திருக்கின்றனர். ஹிந்துஸ்தானி பாரம்பரியத்தில் இருந்த இரு ராகங்களும் இரவு நேரத்திற்குரியவை. 'ஜுகல் பந்தி' என்றழைக்கப்படும் இந்த 'இசை சந்திப்பில்' இரண்டு கலைஞர்களும் ஒரு ராகத்தில் தளம் அமைத்துக் கொண்டு தத்தமது பாணியில் தனிப்பட்ட திசையில் பயணப்பட்டு இறுதியில் ஒன்றிணைகிறார்கள். வடக்கும் தெற்கும் இதில் இணைகின்றன. ஆனால் பிணைவதில்லை. மூல அர்த்தப்படி 'ஒரு ஜோடியைப் பிணைப்பது' தான் ஜுகல்பந்தி.

ஒரு எல்.பியின் 20 நிமிடப் பக்கத்தில் பல சிறிய துக்கடாக்களைக் கேட்டுக்கொண்டிருந்த காலத்தில் விரிவான ஆலாபனைகளும் ஸ்வரப் பிரஸ்தாரங்களும் கொண்ட இந்த இசைத்தட்டு, கேட்பவனின் நிறைவை நீட்டிக்கக் கூடியதாய் அமைந்தது. ஹெச்.எம். வி. கம்பெனி இந்த இசைத்தட்டின் ஒரு பக்கத்தை வழக்கமான 20 நிமிடத்திற்கு மாறாக 30 நிமிடத்திற்குப் பதிவுசெய்திருந்தது. அன்றைக்கு அது பெரிய விஷயம். ஹிந்துஸ்தானி இசை குறித்து ஜெயராமன் கொண்டிருந்த விசாலமான அணுகுமுறையே இப்படிப்பட்ட ஓர் இசை சந்திப்பு சாத்தியமாகக் காரணமாக இருந்தது. ஹிந்துஸ்தானியில் பல வேறுபட்ட இசைக் கருவிகளுக்கிடையிலான ஜுகல் பந்திகள் சாத்தியமாகியுள்ளன. நான் கேட்டு அனுபவித்த முதல் ஜுகல்பந்தி அனுபவம் ஷிவ்குமார் ஷர்மாவும் (சந்தூர்) ஹரிபிரஸாத் சௌராஸியாவும் (புல்லாங்குழல்) இணைந்து கொடுத்த ஒரு எல்.பியைக் கேட்டதுதான்.

ஹிந்துஸ்தானி இசைக் கலைஞர்கள் அளவுக்கு கர்நாடக இசைக் கலைஞர்களின் 'வாய்ஸ் கல்ச்சர்' இல்லை என்ற கருத்தும் ஜெயராமனுக்கு உண்டு. இசைக்கான மரியாதையைவிடப் பக்திக்கான மரியாதை கர்நாடக சங்கீதத்தில் அதிகம் உண்டென்ற கருத்தும் கொண்டவர் அவர். அதிகமும் பிரதியுடன் பிணைக்கப்பட்டுள்ள கர்நாடக சங்கீதத்தின் நிலைமையை விமர்சனம் செய்பவராகவுமிருக்கிறார். பக்தியிலிருந்து விடுதலையடைந்தால்தான் கர்நாடக சங்கீதம் நவீனமாக முடியும் என்று தமிழவன் குறிப்பிட்டதையும் இங்கே நினைவுபடுத்திக்கொள்வது தவறில்லை. ■

Edited and published by S. R. Sundaram (Kannan) for Kalachuvadu Pathippagam, 669 K. P. Road, Nagercoil 629 001
and printed by M. Biju at Print Point Offset Press, 103 Sahotharar Street, Nagercoil 629 002

படிப்பகம்

www.padippakam.com





படிப்பகம்

Registered Newspaper
No: TN/KK Dn/12/2004 - 2006
Date of Publication Every month on 26th & 29th
ISSN 0972 - 8260 Kalachuvadu

www.padippakam.com

Regd with the Registrar of Newspaper
for India under No. 42764/88 Kalachuvadu




படிப்பகம்